தமிழ்நாடு அரசு
**மாநில திட்டக் குழு**

# தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25

தமிழ்நாடு அரசு
**மாநில திட்டக் குழு**

# தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25

**ஜெ.ஜெயரஞ்சன்**
செயல் துணைத் தலைவர்

**மாநிலத் திட்டக் குழு**
**எழிலகம், சேப்பாக்கம்,**
**சென்னை – 600 005.**

# முன்னுரை

தமிழ்நாட்டின் முதலாவது பொருளாதார ஆய்வறிக்கையான (2024-25) இந்த ஆவணம், நம் மாநிலப் பொருளாதார நிலை குறித்த விவரங்களை வழங்குவதன் வாயிலாகவும், அண்மைக் காலங்களில் ஏற்பட்ட வளர்ச்சிகளை விவரிப்பதன் வாயிலாகவும் அரசுக் கொள்கையில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்திட உதவுவதுடன், எதிர்காலத்துக்கான கொள்கைகளை வகுப்பதற்குப் பரிந்துரைகளையும் வழங்குகிறது.

மே 2021இல் ஆட்சிப் பொறுப்பேற்ற புதிய அரசு, 2020 மற்றும் 2021ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பெருந்தொற்றுத் தாக்குதலுக்கும் புயல், வெள்ளம் போன்ற தொடர்ச்சியான இயற்கைப் பேரிடர்களுக்கும் இடையில் மாநிலத்தை உயர் பொருளாதார வளர்ச்சிப் பாதையில் வெற்றிகரமாகக் கொண்டுசென்றுள்ளது. தமிழ்நாட்டுக்கு வர வேண்டிய நிதி வளங்களைப் பகிர்ந்துகொள்ளாமல் இருந்ததோடு மட்டுமின்றி நீட், புதிய கல்விக் கொள்கை 2020, கடன்களுக்கான நிதி வரம்புகள் உள்ளிட்ட பல்வேறு கொள்கைரீதியிலான அழுத்தங்களின் வழியே நம்முடைய வளர்ச்சியைக் கட்டுப்படுத்திவரும் ஒன்றிய அரசு, தமிழ்நாட்டுக்கு முறையான ஒத்துழைப்பு நல்கவில்லை.

தமிழ்நாடு அடைந்திருக்கும் பொருளாதார வளர்ச்சியானது இந்தியாவின் எந்த மாநிலமும் வியக்கத்தக்கது. தமிழ்நாட்டின் சமூக நலத்திட்டங்கள் ஏனைய மாநிலங்கள் பின்பற்றுவதற்கான முன்மாதிரிகளாகவும் திகழ்கின்றன. 'சமூகநீதியுடன் கூடிய வளர்ச்சி' என்பதுதான் தமிழ்நாட்டின் வளர்ச்சிக் கொள்கை எனலாம். தமிழ்நாட்டில் ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக இந்த அணுகுமுறை பின்பற்றப்படுகிறது. இது தொடர்ந்து மிகச் சிறந்த பலன்களைத் தருகிறது, எதிர்காலத்திலும் தொடர்ந்து பலனளிக்கும்.

தமிழ்நாடு அரசின் பொருளாதார ஆய்வறிக்கை 2024-25, கடந்த ஐந்து ஆண்டுகளில் பல்வேறு துறைகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார மேம்பாடு குறித்த கண்ணோட்டத்தை வழங்குகிறது. தமிழ்நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி மிகத் தெளிவாகத் தெரிந்தாலும், பல்வேறு துறைகள் மாறுபட்ட விகிதங்களில் விரிவடைந்திருக்கின்றன. சமூகத் துறை மீது அதிக கவனம்செலுத்தி பொது நிதியில் குறிப்பிடத்தக்க அளவை ஒதுக்கியிருப்பது, வளர்ச்சிக் கொள்கையின் அடிப்படைத் தூணாக இருக்கும் சமூகநீதி மீது மாநில அரசு கொண்டிருக்கும் உறுதிப்பாட்டை எடுத்துரைக்கிறது.

தமிழ்நாடு அரசின் 2024-25க்கான பொருளாதார ஆய்வறிக்கையானது தமிழ்நாடு கவனம் செலுத்த வேண்டிய பிரச்சினைகள், குறைக்கப்பட வேண்டிய வளர்ச்சி இடைவெளிகள் ஆகியவை குறித்தும் பட்டியலிடத் தவறவில்லை.

இது தமிழ்நாட்டின் பொருளாதார நிலை குறித்து நன்கு ஆராயப்பட்டு, தெளிவாகத் தொகுக்கப்பட்ட அறிக்கையாகும். இது பொருளாதாரத் தகவல்களின் கருவூலமாகவும், வளமான பகுப்பாய்வுகளைக் கொண்டதாகவும் உள்ளது. இந்த அறிக்கை உருவாக்கத்தில் பங்கெடுத்தவர்களின் மிகச் சிறந்த பணிக்காக நான் அவர்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். இந்த ஆய்வறிக்கையைத் தமிழ்நாட்டு மக்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்.

செயல் துணைத் தலைவர்
மாநிலத் திட்டக் குழு

## நன்றி

தமிழ்நாடு பொருளாதார ஆய்வறிக்கை 2024-25
ஆவணத்தை உருவாக்குவதில் மிகப் பெரும் பங்களித்த
முனைவர் கே.ஆர்.சண்முகம் (ஆலோசகர், நிதித்துறை),
சி.ஏ.ரிஷப், இ.ஆ.ப., (துணைச் செயலர், நிதித்துறை),
சி.விவேக் & அட்ரிஷூ போர்டோலாய் (CEGIS),
முனைவர் ஏ.அம்மையப்பன் & பி.சுஜிதா (தமிழ்நாடு
முதலமைச்சரின் புத்தாய்வுத் திட்டம்)
ஆகியோருக்கு நன்றி.

தமிழ் மொழிபெயர்ப்புக்குப் பங்களித்த
தமிழ் இணையக் கல்விக்கழகத்தின்
இணை இயக்குநர் ரெ.கோமகன்,
உதவி இயக்குநர் செல்வ புவியரசன்,
உள்ளடக்க மேலாண்மை வல்லுநர்கள்
எம்.ரமேஷ், ந.செல்லப்பா, த.ராஜன்,
ஊடகவியலாளர் முகம்மது ரியாஸ் ஆகியோருக்கும்,
இந்த ஆவணத்தைச் சிறப்புற வடிவமைத்த
பார் கிரியேட்டிவ் நிறுவனத்துக்கும் நன்றி.

# முக்கிய அம்சங்கள்

1. 2024-25இல், பொருளாதார வளர்ச்சிப் போக்கைப் பாதிக்கும் உலக அளவிலான சவால்களை, தமிழ்நாட்டுப் பொருளாதாரம் அதன் உள்ளார்ந்த ஆற்றலுடன் எதிர்கொண்டது. பெருந்தொற்றோடு சர்வதேச அரசியல் பதற்றங்களும் தீவிரமான தட்பவெப்ப மாற்றங்களும் உலகளாவிய சந்தை வாய்ப்புகளைப் பாதித்ததுடன் எரிசக்தி, உணவுத் துறை ஆகியவற்றில் நெருக்கடிகளை விளைவித்தன. 2023இல் உலகப் பொருளாதாரம் 3.33% உண்மை வளர்ச்சி நிலையை அடைந்தது. இந்தியப் பொருளாதாரம் 2022-23இல் 7.61%, 2023-24இல் 9.19%, 2024-25இல் 6.48% வளர்ச்சியை எட்டியது. ஒருங்கிணைந்த கொள்கை முடிவுகளின் வலுவான அடித்தளத்தோடு, தமிழ்நாடு குறிப்பிடத்தக்க அளவில் பொருளாதார வளர்ச்சியில் மீண்டெழுந்துள்ளது; 2021-22இலிருந்தே 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து எட்டிவருகிறது. 2024-25இலும் 8% அல்லது அதற்கு மேலான வளர்ச்சி விகிதத்தைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2. தமிழ்நாட்டின் முற்போக்கான சமூகநலக் கொள்கைகளும், வலுவான உள்கட்டமைப்பு வசதிகளும், பெரும் எண்ணிக்கையிலான திறன்மிகு தொழிலாளர்களும் இம்மாநிலத்தை மேம்பட்ட பொருளாதார வளர்ச்சிப்பாதையில் இடம்பெறச் செய்துள்ளனர். இந்தியாவின் நிலப்பரப்பில் 4%, நாட்டின் மக்கள்தொகையில் 6% மட்டுமே கொண்டிருக்கும் தமிழ்நாடு, 2023-24ஆம் ஆண்டில் தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் (ஜிடிபி) 9.21% பங்களித்துள்ளது. 2023-24இல் மாநில உள்நாட்டு உற்பத்தியானது (ஜிஎஸ்டிபி) நடப்பு விலையில் ரூ.27.22 லட்சம் கோடியை எட்டியுள்ளது; பெயரளவு வளர்ச்சி விகிதம் 13.71% ஆகவும், உண்மையான வளர்ச்சி விகிதம் 8.33% ஆகவும் உள்ளது.

3. மோட்டார் வாகனங்கள், வாகன உதிரிபாகங்கள், ஜவுளி, தோல்பொருள்கள் ஆகியவற்றின் முக்கிய ஏற்றுமதியாளராக விளங்குவதால், மாநிலப் பொருளாதாரமானது உலகளாவிய சந்தை நிலைகளையொட்டியே அமைந்துள்ளது; இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிப் போக்குகளைக் காட்டிலும் உலகளாவிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையே பெரிதும் சார்ந்திருப்பதை அது எடுத்துக்காட்டுகிறது.

4. தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியானது தொடர்ந்து பல ஆண்டுகளாகத் தேசிய சராசரியைவிடவும் அதிகமாகவே இருந்து வருகிறது. 2022-23இல் ரூ.2.78 லட்சமாக இருந்தது; இது தேசிய சராசரியான ரூ.1.69 லட்சத்தைக் காட்டிலும் 1.64 மடங்கு அதிகமானதாகும். இதன் காரணமாக, தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு நான்காம் இடம் வகிக்கிறது. மாநிலத்தின் தனி நபர் வருமானம் குறிப்பிடத்தக்க அளவில் தேசிய சராசரியைவிட மேலே உள்ளது.

5. பெருநகரமொன்றை மட்டும் மையமாகக் கொண்டு இயங்கும் மகாராஷ்டிரம், கர்நாடகம், மேற்கு வங்காளம் போன்ற மாநிலங்களைப் போலன்றி, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது மாநிலம் முழுவதுமுள்ள நகர்ப்புர மையங்களில் பரவலாக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திருப்பூர், திருச்சிராப்பள்ளி, சேலம் போன்ற நகரங்கள் மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்குவதோடு நகர்ப்புர-ஊரக இடைவெளிகளைக் குறைக்கவும் உதவுகின்றன.

6. 2023-24இல், சேவைத் துறை (மூன்றாம் நிலை) யானது மாநிலத்தின் மொத்த மாநில உற்பத்தி மதிப்புக்கூட்டலில் (ஜிஎஸ்விஏ) 53.63% பங்களித்தது; அதற்கடுத்து இரண்டாம் நிலைத் துறை (33.37%), முதன்மைத் துறை (13%) பங்களித்துள்ளன. வளர்ந்த பொருளாதாரங்களைப் போலவே, மாநிலத்தின் இரண்டாம் நிலைத் துறையின் பங்கு 5% அளவில் அதிகரித்தால், வேலைவாய்ப்புகள் மேலும் அதிகரிக்கும்.

7. அதிகம் தொழில்மயமாக்கப்பட்ட, நகரமயமாக்கப்பட்ட பொருளாதாரமான தமிழ்நாடு, 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை எட்டுவதை இலக்காகக் கொண்டுள்ளது. தற்போதைய ஆற்றலுடன், காலநிலை மாற்றம், மக்கள்தொகை மாற்றங்கள், தொழில்நுட்பச் சீர்குலைவு, மாறிவரும் வேலைவாய்ப்புச் சூழல்கள் போன்ற சவால்களை வியூகம் சார்ந்த திட்டமிடல் வாயிலாக வெற்றிகரமாக எதிர்கொண்டு தமிழ்நாடு இந்த இலக்கை எட்டும். மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் வளர்ச்சியைப் பரவலாக்குவதற்குக் கிராமப்புறத் தொழில்முனைவோரை வளர்த்தெடுப்பதில் தமிழ்நாடு கவனம் செலுத்த வேண்டும். இளைஞர்களின் திறன்களை மேம்படுத்துதல், வேலையில் பெண்கள் பங்கேற்பதை ஊக்குவித்தல், வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள் உள்பட உயர்மதிப்பு உற்பத்தி மற்றும் சேவைகளை ஊக்குவித்தல் ஆகியவற்றோடு தமிழ்நாடு அதன் மக்கள்தொகை சார்ந்த அனுகூலங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் (ஐடிஇஎஸ்), தளவாடங்கள் மற்றும் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் போன்ற துறைகளை விரிவுபடுத்துவதற்கான வணிகச் சூழலை உருவாக்கி, குறைகடத்தி (செமிகண்டக்டர்) மற்றும் மேம்பட்ட மின்னணுவியல் துறைக்கான கொள்கைகளுடன் தமிழ்நாடு ஏற்கெனவே இந்த வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியுள்ளது நம்பிக்கை அளிக்கிறது.

8. புவிசார் அரசியல் பதற்றங்கள் காரணமாகவும், காலநிலை மாற்றம் காரணமாகவும் உலகளாவிய பணவீக்கம் அதிகரித்து, 2022இல் 8.6% ஆகவும், 2023இல் 6.7% ஆகவும் இருந்தது. இந்தியாவின் சில்லறை வர்த்தகப் பணவீக்கம் 2022-23இல் 6.7% ஆகவும், 2023-24இல் 5.4% ஆகவும் இருந்ததோடு 2024-25இல் (ஜனவரி 2025 வரை) 4.9% ஆக உள்ளது. தமிழ்நாட்டிலும் அதைப் போலவே 2022-23இல் 6% என்றிருந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கம், 2023-24இல் 5.4% ஆகவும், 2024-25இல் (ஜனவரி 2025இல்) 4.8% ஆகவும் குறைந்துள்ளது. 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவின் பணவீக்கமான 4.85% ஐவிடத் தமிழ்நாட்டின் சராசரிப் பணவீக்கம் 5.7% என அதிகமாக இருந்தபோதும், 2021-22 முதல் மாநிலத்தின் சில்லறை வர்த்தகப் பணவீக்கம் கணிசமாகக் குறைந்துவருகிறது. குறிப்பாக, 2023-24இல் 20 முக்கிய இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு 8ஆவது குறைந்த சில்லறை வர்த்தகப் பணவீக்கத்தைக் கொண்டிருந்தது.

9. தமிழ்நாட்டில் 2019-20இல் 6% என்றிருந்த நகர்ப்புறப் பணவீக்கம் 2024-25இல் 4.5% ஆகக் குறைந்துள்ளது (ஜனவரி 2025 வரை); கிராமப்புறப் பணவீக்கம் 5.4% ஆக அப்படியே உள்ளது. இப்படியாக, கிராமப்புறப் பணவீக்கம் மாநிலத்தின் ஒட்டுமொத்தப் பணவீக்கத்தையும் இயக்குகிறது. உணவு மற்றும் பல்வகைப் பொருள்கள் கிராமப்புறப் பணவீக்கத்துக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை வழங்குகின்றன.

10. பணவீக்கம் பெரும்பாலும் பணவியல் தொடர்பான நிகழ்வுதான் என்றாலும், மக்களின் வாங்கும் சக்தியைப் படிப்படியாக அது குறைத்துவிடுவதால் மக்கள்மீது தாக்கத்தை ஏற்படுத்துகிறது. குறிப்பிட்ட தானியங்கள், பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், மின்சாரம் ஆகியவற்றை மானிய விலையில் வழங்குவதன் வாயிலாகவும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் போன்ற திட்டங்கள் வாயிலாகப் பொருளாதார ஆதரவு வழங்குவதன் மூலமும் மக்களின் வாங்கும் சக்தியை அதிகரிக்கத் தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்கிறது.

11. தமிழ்நாட்டின் விவசாயம் பெரும்பாலும் பருவமழையை நம்பித்தான் நடைபெறுகிறது. விவசாயம் ரூ.1.5 லட்சம் கோடி (ஜிஎஸ்விஏவில் 6%) பங்களித்து, ஐந்தாவது பெரிய துறையாகத் திகழ்கிறது. மொத்தப் பயிரிடப்பட்ட பரப்பளவில், நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, கேழ்வரகு, தினை வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்கள் 62% ஆகவும், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி போன்ற உணவு தானியமல்லாத பயிர்கள் 38% ஆகவும் உள்ளன. பயிர்ப் பரப்பில் நெல் தொடர்ந்து முதன்மை நிலை வகித்துவருகிறது. 2019-20இல் மொத்தப் பயிர்ப் பரப்பில் 32.1% ஆக இருந்த நெல்லின் பங்கு 2023-24இல் 34.4% ஆக அதிகரித்துள்ளது.

12. வேளாண் புள்ளிவிவரங்கள் ஒரு கண்ணோட்டம் (2024) அறிக்கையின்படி, தமிழ்நாடு எண்ணெய் வித்துகள், நிலக்கடலை, கரும்பு உற்பத்தித்திறனில் முதலிடத்திலும், மக்காச்சோள உற்பத்தித்திறனில் இரண்டாம் இடத்திலும், நெல் உற்பத்தித்திறனில் மூன்றாம் இடத்திலும் உள்ளது. வணிக விவசாய விரிவாக்கம், தமிழ்நாட்டின் முதன்மைப் பயிர்களின் உற்பத்தித்திறன் அதிகரிப்பு ஆகியவை

ரசாயன உரங்களையும் நிலத்தடிநீரையும் அதிகமாகப் பயன்படுத்துவதன் வாயிலாக எட்டப்படுகின்றன. மாநிலத்தின் உர நுகர்வு 2019-20இல் 9.65 லட்சம் மெட்ரிக் டன்னிலிருந்து 2023-24இல் 10.68 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. விவசாய மின் நுகர்வு 13,811 மில்லியன் யூனிட்டிலிருந்து 17,957 மில்லியன் யூனிட்டாக அதிகரித்துள்ளது.

13. தமிழக விவசாயிகளுக்கு ஆதரவு தரும் முக்கியமான அமைப்பாக விவசாயக் கடன் திகழ்கிறது. பட்டியலிடப்பட்ட வணிக வங்கிகள் வாயிலாக வழங்கப்படும் கடன் 2019-20இல் ரூ.1.83 லட்சம் கோடியிலிருந்து 2023-24இல் ரூ.3.58 லட்சம் கோடியாக அதிகரித்து, வணிக வங்கிகள் வழங்கும் விவசாயக் கடனில் தமிழ்நாடு முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது. தற்போதைய சந்தை விலையுடன், நெல்லுக்கு ரூ.105 (ஒரு குவிண்டாலுக்கு), கரும்புக்கு ரூ.215 (ஒரு டன்னுக்கு) கூடுதல் ஊக்கத்தொகையாகத் தமிழ்நாடு அரசு வழங்குகிறது. எதிர்பாராத இயற்கைப் பேரிடர்களால் பயிரிழப்பு ஏற்பட்டால், வேளாண் காப்பீட்டுத் திட்டமானது விவசாயிகளுக்கு நிதியுதவி அளித்துப் பாதுகாக்கிறது. வேளாண் வணிகத்தையும் உற்பத்திப் பொருள்களைப் பாதுகாப்பதையும் எளிதாக்கும் விதமாக, 284 ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைகள், 525 சேமிப்புக் கிட்டங்கிகள், 395 பரிவர்த்தனைக் கொட்டகைகள், 421 உலர்த்தும் இடங்கள், 863 வணிகக் கடைகள்,268 குளிர்பதனக் கிடங்குகள் என 19,856 மெட்ரிக் டன் அளவில் மொத்தக் கொள்ளளவைத் தமிழ்நாடு கொண்டுள்ளது.

14. பழங்கள், காய்கறிகள், தோட்டப் பயிர்கள், அலங்காரச் செடிகள், மருத்துவப் பயிர்கள் ஆகியவற்றுக்கான தேவை அதிகரித்துவருவதால், தமிழ்நாட்டில் விவசாய வளர்ச்சியின் முக்கிய உந்துசக்தியாகத் தோட்டக்கலைத் துறை மாறியுள்ளது. தோட்டக்கலைப் பயிர்களுக்கான மொத்தப் பரப்பளவு 2023-24இல் 16.3 லட்சம் ஹெக்டேர் அளவை எட்டியது. மாநிலத்தில் ஏராளமான கால்நடைகள், கோழி வளங்கள் உள்ளன. இவை, சிறு குறு விவசாயிகளுக்கும் நிலமற்ற தொழிலாளர்களுக்கும் முக்கியமான வாழ்வாதாரமாகத் திகழ்கின்றன. 2023-24இல் கால்நடைத் துறையின் மொத்த மாநில மதிப்புக்கூட்டல் (ஜிஎஸ்விஏ) ரூ.1.35 லட்சம் கோடியாக இருந்தது. இது, தமிழ்நாட்டின் மொத்த ஜிஎஸ்விஏவில் 5.41% பங்களித்துள்ளது. இந்தியாவின் முட்டை உற்பத்தியில் தமிழ்நாடு இரண்டாம் இடத்திலும், இறைச்சி உற்பத்தியில் ஆறாம் இடத்திலும் உள்ளது. மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பு ஜிஎஸ்விஏவுக்கு 1%க்கும் குறைவான பங்களிப்பை அளிக்கும்வேளையில், தமிழ்நாடு 1.34 லட்சம் டன் மீன் பொருள்களை ஏற்றுமதிசெய்து, 2023-24இல் ரூ.6,854 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியது.

15. நிலத்தடிநீர் பற்றாக்குறை, காலநிலை மாற்றம் போன்ற சவால்களைத் தமிழ்நாடு சமாளித்தால் விவசாயத்திலும் அது சார்ந்த துறைகளிலும் விரைவான வளர்ச்சியை அடைய முடியும். காலநிலைக்கேற்ற செயல்பாடுகள், இயந்திரமயமாக்கல், அறுவடைக்குப் பிந்தைய மதிப்புக் கூட்டல் ஆகியவை இந்தத் துறைகளில் வருமானத்தைக் கணிசமாக உயர்த்தும்.

16. தமிழ்நாடு மிகச் சிறந்த தொழில்துறை ஆற்றல் மையமாக உள்ளது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை 11.90% பங்களிக்கிறது. தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் நாட்டில் முன்னணியில் உள்ளது. உத்யம் (Udyam) இல் பதிவுசெய்யப்பட்ட 35.56 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுடன் (MSMEs), தமிழ்நாடு 2023-24இல் தேசிய அளவில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது. 'இந்தியாவின் டெட்ராய்ட்' என்றழைக்கப்படும் இம்மாநிலத்தில், மோட்டார் வாகனங்கள் மற்றும் வாகன உதிரிபாகங்களை உற்பத்திசெய்யும் 1,500 தொழிற்சாலைகள் உள்ளன. மேலும் ஜவுளி, தோல் பொருள்கள், மின்னணு உற்பத்தி ஆகியவற்றுக்கான முதன்மை மையமாகவும் தமிழ்நாடு திகழ்கிறது. மோட்டார் வாகன உற்பத்தி, ஆடைகள், தோல் பொருள்கள் ஆகியவற்றில் மாநிலம் முதலிடத்தில் உள்ளது. ஜவுளி, இயந்திரங்கள், மின்னணுத் தயாரிப்புகளில் இரண்டாம் இடத்தில் உள்ளது. பொறியியல்சார் உற்பத்திப் பொருள்கள், மின்னணுப் பொருள்கள், ஆயத்த ஆடைகள், பருத்தி நூல், கைத்தறிப் பொருள்கள், தோல் பொருள்கள் ஆகியவற்றை ஏற்றுமதி செய்வதிலும் இந்திய அளவில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. 2023-24இல், தமிழ்நாட்டின் மொத்தத் தொழிலாளர்களில் 33.31% (15.97% உற்பத்தி, 17.2% கட்டுமானம்) தொழில்துறை நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

17. 2021-22 மற்றும் 2023-24க்கு இடையில், உற்பத்தித் துறை 8.33% ஆகவும், கட்டுமானத் துறை 9.03% ஆகவும் வளர்ச்சியடைந்தது. போக்குவரத்து உபகரணங்கள், ரப்பர் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள், மோட்டார் வாகனங்கள், டிராக்டர்கள், ரசாயனங்கள் உள்படப் பல்வேறு துணைத் துறைகள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.

18. 2024ஆம் ஆண்டில் உலக முதலீட்டாளர் மாநாடு வெற்றிகரமாக நடத்தப்பட்டு ரூ.6.64 லட்சம் கோடி முதலீடுகள் ஈர்க்கப்பட்டுள்ளன. இதன் மூலம் 14.55 லட்சம் வேலைவாய்ப்புகள் உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. தொழில்வளர்ச்சியைத் தக்கவைப்பதற்கு, தமிழ்நாடு தனது பணியாளர்களுக்குத் தொழில்துறை 4.0 தொழில்நுட்பங்கள் சார்ந்து மறுதிறன் பயிற்சிகள் அளிக்க வேண்டும்.

19. 2019-20 முதல் 2023-24 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் தொழில்துறைக்கு வர்த்தக வங்கிகள் அளித்துள்ள கடன் ரூ.2.5 லட்சம் கோடியிலிருந்து ரூ.3.01 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அந்நிய நேரடி முதலீடு ரூ.5,909 கோடியிலிருந்து ரூ.20,157 கோடியாக அதிகரித்துள்ளது.

20. தமிழ்நாட்டின் சேவைத் துறையானது வர்த்தகம், பழுதுபார்ப்பு, ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள், போக்குவரத்து, சேமிப்பகம், தகவல் தொடர்பு, நிதிச் சேவைகள், மனை வணிகம் (ரியல் எஸ்டேட்) மற்றும் பல துறைகளை உள்ளடக்கியது. தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், கல்வி, சுகாதாரம், நிதி, சுற்றுலா, விருந்தோம்பல் மற்றும் பொழுதுபோக்குத் தொழில்கள் ஆகியவற்றில் தமிழ்நாடு சிறந்து விளங்குகிறது. விரைவான நகரமயமாக்கலால், போக்குவரத்து, வீட்டு வசதி, சுகாதாரம், அடிப்படை வசதிகள் ஆகிய உள்கட்டமைப்பு சேவைகளுக்கான தேவையானது அதிகரிக்கிறது. 2023-24ஆம் ஆண்டில், தமிழ்நாட்டின் நகர்ப்புரப் பணியாளர்களில் 54.63% பேர் சேவைத் துறையில் பணிபுரிந்தனர். இது தேசிய சராசரியான 58.07%க்கு அருகில் உள்ளது. இவர்களில் 16.28% பேர் வர்த்தகம் மற்றும் மோட்டார் வாகனப் பழுதுபார்ப்புப் பணிகளிலும், 7.53% பேர் போக்குவரத்து மற்றும் சேமிப்பகங்களிலும், 6.28% பேர் தகவல் தொடர்புத் துறையிலும், 5% பேர் கல்வித் துறையிலும், 4.86% பேர் தங்குமிடம் மற்றும் உணவு சேவைகளிலும், 2.84% பேர் நிதி மற்றும் காப்பீட்டு சேவைகளிலும், 11.84% பேர் இதர சேவைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

21. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு சேவைத்துறையானது வலுவாக மீண்டெழுந்துள்ளது. 2021-22 மற்றும் 2023-24க்கு இடையிலான காலகட்டத்தில் இத்துறை 7.97% வளர்ந்துள்ளமைக்கு, மனை வணிகத் (ரியல் எஸ்டேட் ) துறை (9.41%), வர்த்தகம், பழுதுபார்ப்பு, ஹோட்டல்கள், உணவகங்கள் (7.98%), போக்குவரத்து மற்றும் சேமிப்பகங்கள் (7.67%) ஆகியவற்றின் வளர்ச்சியே காரணமாகும்.

22. தமிழ்நாட்டின் கடன்-வைப்பு விகிதம் (சிடிஆர்) இந்தியாவின் மூன்று முன்னணி மாநிலங்களில் ஒன்றாக விளங்குகிறது. இது தமிழ்நாட்டின் உயர் பொருளாதாரச் செயல்பாட்டைப் பிரதிபலிக்கிறது. 2019-20ஆம் ஆண்டில் 109.2% ஆக இருந்த சிடிஆர் 2023-24இல் 117.7% ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவின் சிடிஆர் இதே காலகட்டத்தில் 76.5%இலிருந்து 79.6% ஆக உயர்ந்துள்ளது. பட்டியலிடப்பட்ட வர்த்தக வங்கிகள் சேவைத்துறைக்கு வழங்கிய கடன் அளவு 2019இல் ரூ.2.86 லட்சம் கோடியாக இருந்தது. இது 2023-24ஆம் ஆண்டில் ரூ.4.46 லட்சம் கோடியாக அதிகரித்துள்ளது.

23. வங்கிக் கட்டமைப்பைப் பொறுத்த அளவில் 24,390 தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்களைக் கொண்டு நாட்டிலேயே முன்னணி மாநிலமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. டிஜிட்டல் வங்கி சேவை மற்றும் யுபிஐ பரிவர்த்தனை ஆகியவற்றின் எழுச்சி மாநிலத்தின் நிதிப் பரிவர்த்தனை முறைகளைப் பெரிதும் மாற்றியுள்ளது. இது விரைவான, தடையற்ற பரிவர்த்தனைகளை உறுதிசெய்ததுடன் ஊரக மற்றும் நகர்ப்புரப் பகுதிகளில் நிதி உள்ளாக்கத்துக்கும் வழிவகுக்கிறது.

24. பொருளாதார வளர்ச்சிக்கும் சமூக நிலைத்தன்மைக்கும் வேலைவாய்ப்பு உருவாக்கம் மிக முக்கியக் காரணியாகும். 2019-20ஆம் ஆண்டில் 15 முதல் 59 வயதுடைய தனிநபர்களுக்கான தமிழ்நாட்டின் தொழிலாளர் பங்கேற்பு விகிதமானது அகில இந்திய சராசரியான 56.9% உடன் ஒப்பிடும்போது, 63.3% ஆக இருந்தது. 2023-24இல் இது 64.6% ஆக உயர்ந்து தேசிய சராசரியான 64.3%ஐக் கடந்துள்ளது.

25. பல்வேறு சமூகக் குறியீடுகளில், முதல் மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு உள்ளது. இது சமூக முன்னேற்றக் குறியீடு (எஸ்பிஐ) மற்றும் உயர்கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதம் (ஜிஇஆர்) ஆகியவற்றில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. மேலும், குறைவான குழந்தை இறப்பு விகிதம், குறைவான பிறப்பு விகிதம், குறைந்த வறுமை நிலைகள் ஆகியவற்றில் இரண்டாவது இடத்தில் உள்ளது. நீடித்த வளர்ச்சி இலக்குகள் (எஸ்டிஜி) குறியீட்டிலும் சுகாதாரக் குறியீட்டிலும் மூன்றாமிடத்தில் உள்ளது.

26. சமூகத் துறைக்கான செலவினங்களைத் தமிழ்நாடு அரசு தொடர்ந்து அதிகரித்து வந்துள்ளது. 2019-20இல் ரூ.79,859 கோடியாக இருந்த ஒதுக்கீடு, 2023-24ஆம் ஆண்டில் ரூ.1.16 லட்சம் கோடியாக

அதிகரிக்கப்பட்டுள்ளது. முக்கியமான முன்னெடுப்பாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டமானது மாணவர்களின் வருகை அதிகரிப்பு மற்றும் ஊட்டச்சத்தை உறுதிசெய்துள்ளது. அதைப் போலவே மகளிர் மேம்பாட்டுக்கெனக் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணத் திட்டம் உள்ளிட்ட முன்னெடுப்புகளையும் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ளது.

27. 2005-06 முதல் 2022-23 வரையான காலத்தில் தமிழ்நாட்டின் வறுமை நிலை (ஹெச்சிஆர்) 36.54%இலிருந்து வெறும் 1.43% என வெகுவாகக் குறைந்துள்ளது. அதே வேளையில், அகில இந்திய அளவில் வறுமை நிலை 55.34%இலிருந்து 11.28% ஆகக் குறைந்துள்ளது. 2023-24இல் முக்கியமான மாநிலங்களில் ஊரகப் பகுதிகள் மற்றும் நகர்ப்புரங்களில் சராசரி தனி நபர் நுகர்வுச் செலவில் தமிழ்நாடு நான்காவது இடத்தைப் பிடித்தது. தனிநபர் ஆண்டு வருமானத்தில் நான்காவது இடத்தைத் தக்கவைத்துக்கொண்டது.

28. இந்தியாவிலேயே அதிகக் கல்வியறிவு பெற்ற மாநிலங்களில் ஒன்றாகத் திகழும் தமிழ்நாடு, தொடக்கக் கல்வி, உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இலவசக் கல்வி, விலையில்லாப் பாட நூல்கள், கல்வி உபகரணங்கள், மிதி வண்டிகள் விநியோகம், மதிய உணவுத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்கள் மாணவர்கள் ஈடுபாட்டுடன் தொடர்ந்து வகுப்புகளுக்குச் செல்வதை உறுதிசெய்கின்றன. தற்போது மாநிலம் முழுவதும் உள்ள 58,722 பள்ளிகளில் 1.29 கோடி மாணவர்கள் பதிவுசெய்துள்ளனர். இது நாட்டின் மொத்த மாணவர் சேர்க்கையில் 5.24% ஆகும். தமிழ்நாட்டின் தொடக்கப் பள்ளிகளில் மொத்த மாணவர் பதிவு (ஜிஇஆர்) விகிதம் 98.4% ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 97.5% ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 82.9% ஆகவும் உள்ள நிலையில், தேசிய அளவில் இந்த விகிதம் முறையே 91.7%, 77.4% மற்றும் 56.2% ஆக உள்ளது. தமிழ்நாட்டில் தொடக்க மற்றும் உயர்நிலைக் கல்வியில் ஆசிரியர் - மாணவர் விகிதம் தேசிய சராசரியைவிட அதிகமாக உள்ளது. நிதி ஆயோக் வெளியிட்ட அறிக்கையின்படி பள்ளிக் கல்வித் தரநிலைக் குறியீட்டில் கேரளாவுக்கு (82.2%) அடுத்த நிலையில் தமிழ்நாடு (73.4%) உள்ளது. மேல்நிலைக் கல்வியைத் தொடர முடியாமல் இடைநிற்றல் வீதம் தமிழ்நாட்டில் 4.5% ஆக உள்ள நிலையில், தேசிய சராசரி 12.6% ஆக உள்ளது.

29. நாட்டிலுள்ள சிறந்த 50 ஆராய்ச்சி நிறுவனங்களில் மூன்று நிறுவனங்களைக் கொண்டு உயர் கல்வியிலும் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படுகிறது. மேலும், தேசிய அளவில் சிறந்த 100 பல்கலைக்கழகங்களில் 8 மாநிலப் பல்கலைக்கழகங்களும் சிறந்த 100 கல்லூரிகளில் நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் இடம்பெற்றுள்ளன. மாநிலத்தில் உள்ள பல பல்கலைக்கழகங்கள் என்ஏஏசி அங்கீகாரத்தில் உயர்ந்த தர வரிசையைப் (ஏ++/ஏ+/ஏ) பெற்றுள்ளன. இந்தியாவிலே அதிக எண்ணிக்கையிலான தொழில்நுட்ப நிறுவனங்களைக் (506 பொறியியல் கல்லூரி, 492 பல்தொழில்நுட்பப் பயிலகங்கள்) கொண்டு, உற்பத்தித் துறைக்கும் சேவைத் துறைக்கும் அதிக திறன்மிகு பணியாளர்கள் கிடைப்பதை உறுதிசெய்கிறது.

30. ஐந்தாவது தேசியக் குடும்ப நல சுகாதாரக் கணக்கெடுப்பின்படி பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் மாநிலம் சிறப்பாகச் செயல்படுகிறது. வாழ்நாள் எதிர்பார்ப்பில் முக்கிய மாநிலங்களில் மூன்றாம் இடம் வகிக்கிறது. மருத்துவச் சுற்றுலாவுக்கு உகந்த இடமாகவும் வளர்ந்துள்ளது. 2023-24ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் சுகாதார உள்கட்டமைப்பானது, 8,713 துணை சுகாதார நிலையங்கள், 2,336 ஆரம்ப சுகாதார நிலையங்கள், 372 அரசுப் பொது மருத்துவமனைகள், 36 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

31. கல்வித் துறையில் அனைத்து நிலைகளிலும் மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்ததிலும் பொது சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்தியதிலும் வெற்றிகரமாக விளங்கும் தமிழ்நாடு, புதிய சுகாதாரத் திட்டங்கள், மேம்படுத்தப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் வாயிலாக வயது முதிர்ந்தவர்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்குத் தீர்வு காண வேண்டும்.

32. தமிழ்நாடு கவனம்கொள்ள வேண்டிய ஒன்றாகக் காலநிலை மாற்றம் உருவெடுத்துள்ளது. அண்மைய ஆண்டுகளில் பெரும்புயல்கள் (2016இல் வர்தா, 2017இல் ஒக்கி, 2018இல் கஜா, 2023இல் மிக்சாங் மற்றும் 2024இல் ஃபெங்கல்) மற்றும் வெள்ளம் (குறிப்பாக 2015 மற்றும் 2017) உள்ளிட்ட தீவிர வானிலை நிகழ்வுகளை மாநிலம் அதிகம் அனுபவித்துள்ளது. ஒரு நூற்றாண்டுக்கு +0.68 டிகிரி செல்சியஸ்

அதிகரிப்புடன் சராசரி வெப்பநிலை மாற்றத்தில் மேல்நோக்கிய நிலை காணப்படுவதோடு, மாநிலத்தில் மழைப் பொழிவு குறைந்துள்ளதும் தெரியவந்துள்ளது. அண்ணா பல்கலைக்கழகத்தின் கால நிலை ஆய்வு நிலையத்தின் அறிக்கை, வட கிழக்குக் கடலோரப் பகுதிகள் தீவிர வானிலை நிகழ்வுகளால் மிகவும் பாதிக்கப்படக்கூடியவை எனவும், வடகிழக்குப் பருவமழையின்போது, பெருவெள்ளம், சூறாவளி, கடல் மட்டம் உயர்வு, நீண்ட நாள்களுக்கு நீர் தேங்குவதால் விவசாயத்தில் ஏற்படும் கடும் சேதம் போன்ற பாதிப்புகளை எதிர்கொள்கிறது எனவும் குறிப்பிட்டுள்ளது. அடர்ந்த காடுகள் காரணமாகக் கரியமில வாயு குறைவாக வெளிப்படுவதால் ஒப்பீட்டளவில் மேற்குத் தொடர்ச்சி மலைகள் குறைந்த பாதிப்பை எதிர்கொள்கின்றன. அதே வேளையில் கிழக்குத் தொடர்ச்சி மலைகள் பாதிப்புக்குள்ளாவதால் வறட்சி அதிகரித்து, விவசாய உற்பத்தியைப் பாதிக்கிறது.

33. தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவை உருவாக்கியுள்ள தமிழ்நாடு அரசு, காலநிலை மாறுபாடுகளின் பாதிப்புகளிலிருந்து பாதுகாத்துக்கொள்ள முன்கூட்டியே தயாராகும் அணுகுமுறையைக் கையிலெடுத்துள்ளது. 2023-30ஆம் ஆண்டுக்கான தமிழ்நாடு காலநிலை மாற்றச் செயல் திட்டத்தை உருவாக்கியுள்ளதோடு காலநிலை மாறுபாடுகளை எதிர்கொள்ள ரூ.1,000 கோடி பசுமை நிதியமும் உருவாக்கப்பட்டுள்ளது. நிதி ஆயோக்கின் எஸ்டிஜி 13 (காலநிலைச் செயல்பாடு) குறியீடு 2023-24 அறிக்கையில் தமிழ்நாடு 81 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளதாகத் தெரிவித்துள்ளது. தேசிய சராசரியான 67ஐவிட இது அதிகமான அளவில் உள்ளது.

34. தமிழ்நாடு அதன் 2023-30 செயல்திட்டத்தின் வாயிலாகக் காலநிலை சவால்களை எதிர்கொள்ளத் தயாராக உள்ளது. கரியமில உமிழ்வுக் குறைப்பு, நீடித்த வேளாண்மை, சிறப்பான நீர் மேலாண்மை உள்ளிட்ட நடவடிக்கைகளில் கவனம் செலுத்துகிறது. நகர்ப்புர வெள்ளங்கள், வெப்ப அலைகள், மற்றும் பல்லுயிர் இழப்பு ஆகியவற்றை எதிர்கொள்ளப் பசுமை உள்கட்டமைப்பும் கடலோரச் சுற்றுச் சூழல் பாதுகாப்பும் தேவைப்படுகின்றன.

35. தமிழ்நாட்டின் நடுத்தரக் கால வெற்றியானது அதன் உழைக்கும் வயதினரை முடுக்கிவிடுவதையும் நீடித்த வளர்ச்சி குறித்த கவனத்துடன் கூடிய உட்கட்டமைப்பு வசதிகளையுமே சார்ந்துள்ளது. காலநிலை மாற்றங்களுக்குத் தீர்வு காணவும், தொழிலாளர்களின் தேவை-விநியோகச் சமநிலையின்மையினைச் சரிசெய்யவும் புதுமையான மற்றும் ஒருங்கிணைந்த கொள்கைகளை வகுத்துச் செயல்படுத்துவதன் மூலம் இந்தியப் பொருளாதாரப் பரப்பில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்க முடியும்.

# பொருளடக்கம்


| பொருளாதார நிலை | 21 |
|---|---|
| 1.1 அறிமுகம் | 21 |
| 1.2 உலகப் பொருளாதாரம் | 23 |
| 1.3 இந்தியப் பொருளாதாரம் – சுருக்கமான மதிப்பீடு | 24 |
| 1.4 தமிழ்நாட்டின் பொருளாதாரம் | 27 |
| 1.5 துறைவாரியான வளர்ச்சியும் பங்களிப்பும் | 28 |
| 1.6 தனிநபர் வருமானம் – மாநிலங்களிடையே ஒப்பீடு | 32 |
| 1.7 பிராந்திய வளர்ச்சி | 35 |
| 1.8 தமிழ்நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டம் – 2024-25 | 38 |
| 1.9 முடிவுரை | 38 |
| **விலைகள் மற்றும் பணவீக்கம்** | **41** |
| 2.1 அறிமுகம் | 41 |
| 2.2 தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம் | 42 |
| 2.3 குழுவாரியான பணவீக்கம் | 47 |
| 2.4 அடிப்படைப் பணவீக்கம் | 48 |
| 2.5 தமிழ்நாட்டில் உணவு & இதர பணவீக்கம் (%) | 49 |
| 2.6 முடிவுரை | 52 |
| **வேளாண்மை** | **53** |
| 3.1 அறிமுகம் | 53 |
| 3.2 நிலப் பயன்பாட்டு முறை | 54 |
| 3.3 நீர் இருப்பு | 54 |
| 3.4 வேதி உரங்கள் மற்றும் மின் நுகர்வு | 56 |

| | |
|---|---|
| 3.5 சாகுபடி முறை | 57 |
| 3.6 முக்கியப் பயிர்களின் உற்பத்தியும் உற்பத்தித் திறனும் | 57 |
| 3.7 உழவர்களுக்கு நிதியுதவி: கடன் வசதி, சந்தை ஆதரவு, பயிர்க் காப்பீடு | 59 |
| 3.8 வேளாண்மை இயந்திரமயமாக்கல் | 61 |
| 3.9 அங்கக வேளாண்மை | 62 |
| 3.10 தோட்டக்கலை | 63 |
| 3.11 வேளாண்சார் செயல்பாடுகள் | 63 |
| 3.12 முடிவுரை | 65 |
| **தொழில் துறை** | **67** |
| 4.1 அறிமுகம் | 67 |
| 4.2 தொழில் வளர்ச்சியும் அதன் கூறுகளும் | 69 |
| 4.3 உற்பத்தித் துறையின் செயல்திறன் | 69 |
| 4.4 விற்பனைப் பொருள்கள் ஏற்றுமதி | 74 |
| 4.5 தொழில் துறைக்கான கடன் வசதிகள் | 75 |
| 4.6 அந்நிய நேரடி முதலீடும் தனியார் நிறுவன முதலீடும் | 76 |
| 4.7 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் | 78 |
| 4.8 சுரங்கத் தொழில் | 78 |
| 4.9 முடிவுரை | 80 |
| **சேவைகள்** | **81** |
| 5.1 அறிமுகம் | 81 |
| 5.2 சேவைகள் மற்றும் அதன் துணைத் துறைகளின் வளர்ச்சி | 82 |
| 5.3 போக்குவரத்து | 82 |
| 5.4 வாகனங்கள் பதிவு | 87 |
| 5.5 மென்பொருள் ஏற்றுமதி | 89 |
| 5.6 ஆற்றல் | 89 |
| 5.7 சுற்றுலா | 92 |
| 5.8 வங்கிச் சேவைகள் | 93 |
| 5.9 மனை வணிகம் | 95 |
| 5.10 சேவை சார்ந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் | 96 |
| 5.11 சேவைகள் துறைக்கான கடன் | 97 |
| 5.12 முடிவுரை | 98 |

| | |
|---|---|
| **வேலைவாய்ப்பு** | **99** |
| 6.1 அறிமுகம் | 99 |
| 6.2 தற்போதைய வேலைவாய்ப்புச் சூழல் | 100 |
| 6.3 வேலையின்மை | 103 |
| 6.4 இளைஞர்களின் வேலைவாய்ப்பு நிலவரம் | 104 |
| 6.5 தொழிற்சாலை வேலைவாய்ப்பு | 107 |
| 6.6 ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவனத்தில் (EPFO) பதிவு | 109 |
| 6.7 மக்கள்தொகை சாளரம் | 110 |
| 6.8 முடிவுரை | 111 |
| **சமூகத் துறை** | **113** |
| 7.1 அறிமுகம் | 113 |
| 7.2 சமூக சேவைகளில் செலவினப் போக்குகள் | 114 |
| 7.3 வறுமை | 114 |
| 7.4 குடும்ப நுகர்வுச் செலவினம் | 116 |
| 7.5 கல்வி | 117 |
| 7.6 சுகாதாரம் | 124 |
| 7.7 மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடுகள் | 131 |
| 7.8 முடிவுரை | 134 |
| **காலநிலை மாற்றம்** | **135** |
| 8.1 அறிமுகம் | 135 |
| 8.2 வனம் மற்றும் மரப் பரப்பு | 136 |
| 8.3 காலநிலை மாற்றத்தின் தாக்கம் | 137 |
| 8.4 மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடு | 143 |
| 8.5 முடிவுரை | 146 |
| **நடுத்தரக்கால வளர்ச்சிக் கண்ணோட்டம்** | **149** |
| 9.1 அறிமுகம் | 149 |
| 9.2 தனிநபர் வருமானம் | 149 |
| 9.3 மக்கள்தொகை ஈவு | 150 |
| 9.4 ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்துக்கான பாதை | 150 |
| 9.5 வேளாண்மை | 150 |
| 9.6 தொழில் துறை | 151 |

| | |
|---|---|
| 9.7 சேவைகள் துறை | 152 |
| 9.8 சமூகத் துறை | 153 |
| 9.9 காலநிலை மாற்றம் | 154 |
| 9.10 வேலைவாய்ப்பு | 155 |
| 9.11 உலகளாவிய/தேசியச் சூழ்நிலையும் தமிழ்நாட்டில் அதன் தாக்கங்களும் | 156 |
| 9.12 முடிவுரை | 158 |
| **பின்னிணைப்பு** | **159** |
| தமிழ்நாடு மாநிலப் பொருளாதாரத்தின் பரிணாமம் | 159 |
| பொருளாதாரங்களுக்கு இடையிலான தொடர்பு | 160 |

# அட்டவணை


| அ. எண். | அட்டவணை | பக்க எண். |
|---|---|---|
| 1.1 | துணைத் துறைகளின் சராசரி வளர்ச்சி விகிதம் - 2005-06 முதல் 2011-12 வரை & 2012-13 முதல் 2023-24 வரை | 30 |
| 1.2 | தமிழ்நாட்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (%) துறைவாரியான பங்களிப்பு (2011-12 விலைகளில்) | 32 |
| 2.1 | குழுவாரியான y-o-y பணவீக்கம்: தமிழ்நாடு & இந்தியா | 47 |
| 2.2 | தமிழ்நாட்டில் உணவு பணவீக்கத்தின் கூறுகள் | 50 |
| 3.1 | பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்து திறந்துவிடப்பட்ட நீர் - டிஎம்சியில்* | 55 |
| 3.2 | தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் விளைச்சல் (2023-24) | 63 |
| 4.1 | தமிழ்நாட்டில் தொழில் துறைத் துணைக்குழுக்களின் மொத்த மதிப்புக் கூட்டல்: 2019-20 முதல் 2022-23 வரையிலான வளர்ச்சி மற்றும் சராசரிப் பங்கு | 74 |
| 4.2 | தமிழ்நாட்டில் வங்கிகள்/நிதி நிறுவனங்களால் நிதி வழங்கப்பட்ட திட்டங்கள் | 77 |
| 4.3 | தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு உருவாக்கம் | 78 |
| 4.4 | தமிழ்நாட்டில் கனிம உற்பத்தி | 79 |
| 5.1 | கையாளப்பட்ட சரக்குகளும் தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்குள் நுழைந்த கப்பல்களும் | 86 |
| 5.2 | அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகளின் வைப்பு மற்றும் கடன் | 93 |
| 5.3 | முதல் 6 மாநிலங்களில் கடன்-வைப்பு விகிதம் | 94 |
| 5.4 | பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் | 96 |
| 6.1 | தமிழ்நாடு, இந்தியாவில் வகை வாரியான வேலைவாய்ப்பு நிலை (2023-24) | 102 |
| 6.2 | தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் தொழில்துறைப் பணிகளில் பணியாற்றுபவர்கள்- துறைகள் வாரியாக (2023-24) | 103 |

| | | |
|---|---|---|
| 6.3 | கல்விநிலை அடிப்படையிலான வேலையின்மை விகிதம் தமிழ்நாடு & இந்தியா (2023-24) | 104 |
| 7.1 | தமிழ்நாட்டில் சமூகச் சேவை செலவினங்களின் போக்குகள் (ரூ.கோடி) | 114 |
| 7.2 | 2023-24இல் பள்ளிகளில் மொத்தச் சேர்க்கை | 118 |
| 7.3 | 2023-24இல் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (%) | 118 |
| 7.4 | கல்லூரிகள் எண்ணிக்கையும் மாணவர்கள் சேர்க்கையும் (2024-25) | 122 |
| 7.5 | கல்லூரிகள் எண்ணிக்கையும் மாணவர்கள் சேர்க்கையும் (2024-25) | 125 |
| 7.6 | தமிழ்நாட்டுக் குழந்தைகளின் (0-60 மாதங்கள்) ஊட்டச்சத்து நிலை | 129 |


## பெட்டிச்செய்தி


| பெ. எண். | பெட்டிச்செய்தி | பக்க எண். |
|---|---|---|
| 6.1 | தமிழ்நாடு நகர்ப்புற வேலைவாய்ப்புத் திட்டம் | 105 |
| 7.1 | தமிழ்நாடு அரசின் இல்லம் தேடிக் கல்வித் திட்டம்: பொதுக் கல்வியில் புத்தாக்கம் | 120 |
| 7.2 | புதுமைப்பெண் திட்டம் | 124 |
| 7.3 | மக்களைத் தேடி மருத்துவம் | 127 |
| 7.4 | முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் வெற்றி: குழந்தைகளைப் பேணிக்காத்தல் | 130 |


## விளக்கப்படம்


| வி. எண். | விளக்கப்படம் | பக்க எண். |
|---|---|---|
| 1.1 | உலகப் பொருளாதார வளர்ச்சி (%) | 24 |
| 1.2 | இந்தியப் பொருளாதார வளர்ச்சி (%) | 25 |
| 1.3 | இந்தியாவில் துறைசார் வளர்ச்சி (%) | 25 |
| 1.4 | இந்தியாவில் CPI பணவீக்கம் (%) | 26 |
| 1.5 | பொருளாதார வளர்ச்சி (%): தமிழ்நாடு – இந்தியா | 27 |

| | | |
|---|---|---|
| 1.6 | தமிழ்நாட்டில் துறைவாரியான வளர்ச்சி (%) | 29 |
| 1.7 | இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் தனிநபர் வருமானம் – ரூபாயில் (2022-23) | 32 |
| 1.8 | முதன்மை இந்திய மாநிலங்களின் சராசரி உண்மைப் பொருளாதார வளர்ச்சி (%) | 33 |
| 1.9 | தென் மாநிலங்களில் தனிநபர் வருமான ஒப்பீடு (1983-84 முதல் 2023-24 வரை) | 34 |
| 1.10 | வளர்ச்சி மண்டலங்களும் மாவட்டங்களும் | 36 |
| 1.11 | தமிழ்நாட்டில் மாவட்டவாரியான தனிநபர் வருமானம் (ரூ. நடப்பு விலையில்) (2022-23) | 37 |
| 1.12 | மின்னாற்றல் தேவை (மில்லியன் கிலோவாட் மணிநேர அலகில்) | 38 |
| 2.1 | தமிழ்நாடு Vs இந்தியா நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம் (%) | 43 |
| 2.2 | இந்தியாவின் முதன்மை மாநிலங்களில் சில்லறைப் பணவீக்கம் 2023-24 (%) | 43 |
| 2.3 | நகர்ப்புர நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம் (%) தமிழ்நாடு Vs இந்தியா | 44 |
| 2.4 | கிராமப்புற நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம் (%) தமிழ்நாடு Vs இந்தியா | 44 |
| 2.5 | நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தொகுப்பில் இடம்பெறும் பொருள்கள் (இந்தியா மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில்) | 45 |
| 2.6 | நுகர்வோர் விலைக் குறியீட்டெண் ஊரகத் தொகுப்பு *(இந்தியா மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில்) | 46 |
| 2.7 | மாநிலவாரியான அன்றாட சராசரி ஊதியம் | 46 |
| 2.8 | தமிழ்நாடு & இந்தியாவில் அடிப்படைப் பணவீக்கம் (%) | 49 |
| 2.9 | தமிழ்நாட்டில் இதர இனங்களின் பணவீக்கம் (%) | 51 |
| 3.1 | தமிழ்நாட்டில் நிலப் பயன்பாட்டு முறை (2023-24) | 54 |
| 3.2 | ஆண்டு மழைப்பொழிவு (மிமீ)* | 55 |
| 3.3 | வேதி உரங்கள் மற்றும் மின்நுகர்வு | 56 |
| 3.4 | தமிழ்நாட்டில் முக்கியப் பயிர்களின் உற்பத்தித்திறன் (கிகி/ஹெக்டேர்) | 58 |
| 3.5 | தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தித்திறன் (கிகி/ஹெக்டேர்) | 59 |
| 3.6 | தமிழ்நாடு வேளாண்மைக்கு வணிக வங்கிகள் அளித்த கடன் | 60 |
| 3.7 | பயிர்க் காப்பீட்டுப் பரவல் | 61 |
| 3.8 | தமிழ்நாட்டில் அங்கக வேளாண்மை | 62 |

| | | |
|---|---|---|
| 3.9 | தமிழ்நாட்டில் இறைச்சி, முட்டை, பால் உற்பத்தி | 64 |
| 3.10 | தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி | 65 |
| 4.1 | தொழில் துறை மொத்த மாநில மதிப்புக் கூட்டல் பங்களிப்பு (2023-24) | 68 |
| 4.2 | தொழில் துறையின் ஆண்டு வளர்ச்சியும் அதன் கூறுகளும் (தமிழ்நாடு, இந்தியா) | 69 |
| 4.3 | தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை வளர்ச்சி | 70 |
| 4.4 | தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையின் முதன்மைக் கூறுகள் | 70 |
| 4.5 | தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையின் கட்டமைப்பு விகிதங்கள் | 71 |
| 4.6 | ஒன்றுபடுத்தப்படாத உற்பத்தித் துறைத் தொழில்களின் விகிதங்கள் (2021-22 முதல் 2023-24 வரை) | 73 |
| 4.7 | தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளின் மதிப்பு | 74 |
| 4.8 | தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனைப் பொருள்களின் ஏற்றுமதி மில்லியன் டாலரில் (2023-24) | 75 |
| 4.9 | தொழில் துறை நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் வழங்கிய கடன் | 76 |
| 4.10 | தமிழ்நாட்டுக்கு அந்நிய நேரடி முதலீடு | 76 |
| 4.11 | 2023-24இல் வங்கிகள்/நிதி நிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் (ரூ.10 கோடிக்கும் அதிகமாக) – மாநிலவாரியாக | 77 |
| 4.12 | தமிழ்நாட்டில் கனிம வளங்களிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய் | 79 |
| 5.1 | தமிழ்நாடு அரசுப் பேருந்துகளில் அன்றாடம் பயணிப்பவர்களின் எண்ணிக்கை | 83 |
| 5.2 | போக்குவரத்து மூலம் ஏற்றிச்செல்லப்பட்ட சரக்குகளின் மதிப்பு | 83 |
| 5.3 | தமிழ்நாட்டில் விமானப் பயணிகளும் சரக்குப் போக்குவரத்தும் | 84 |
| 5.4 | தமிழ்நாட்டு விமான நிலையங்கள் வாயிலாகக் கிடைத்த வருவாய் | 85 |
| 5.5 | தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் கையாளப்பட்ட சரக்குகள் | 86 |
| 5.6 | தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் | 87 |
| 5.7 | போக்குவரத்து வாகனங்களின் பதிவு | 88 |
| 5.8 | போக்குவரத்து அல்லாத வாகனங்களின் பதிவு | 88 |
| 5.9 | தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி | 89 |
| 5.10 | புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் மூலங்களின் மின் நிறுவுதிறன் (மெகாவாட்) | 90 |
| 5.11 | தமிழ்நாட்டில் தனிநபருக்குக் கிடைக்கும் மின்சாரம் | 90 |
| 5.12 | 2023-24இல் இந்தியாவின் முதன்மை மாநிலங்களில் தனிநபருக்கான மின்சாரம் | 91 |

| | | |
|---|---|---|
| 5.13 | தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் நுகர்வு | 91 |
| 5.14 | தமிழ்நாட்டில் சமையல் எரிவாயு நுகர்வோர் | 92 |
| 5.15 | தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை | 92 |
| 5.16 | 1 லட்சம் மக்கள்தொகைக்கான வணிக வங்கிகளின் எண்ணிக்கை | 94 |
| 5.17 | வணிக வங்கிகளின் தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்கள் – 2024இல் மாநிலவாரியாக | 95 |
| 5.18 | தமிழ்நாட்டிலுள்ள சேவைகள் சார்ந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை | 96 |
| 5.19 | தமிழ்நாட்டில் சேவைத் துறை நிறுவனங்களுக்கு வங்கிகள் வழங்கியுள்ள கடன் | 97 |
| 5.20 | 2023-24இல் தமிழ்நாட்டில் சேவைசார்ந்த துணைத் துறைகளுக்கு வழங்கப்பட்ட கடன் | 97 |
| 6.1 | தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (%)* | 100 |
| 6.2 | ஆண்கள் மற்றும் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (%) | 101 |
| 6.3 | தமிழ்நாடு, இந்தியாவில் வேலையின்மை விகிதம் (%) | 103 |
| 6.4 | தமிழ்நாடு, இந்திய இளைஞர்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம், வேலைவாய்ப்பின்மை விகிதம், தொழிலாளர் மக்கள்தொகை விகிதம் | 106 |
| 6.5 | அமைப்புசார் உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்புப் போக்குகள் | 107 |
| 6.6 | ஒரு தொழிற்சாலையில் வேலைவாய்ப்புப் போக்குகள் | 108 |
| 6.7 | ஊரகங்களில் 2023-24 ஆம் ஆண்டுக்கான மாநில வாரியான சராசரி அன்றாட ஊதியம் | 108 |
| 6.8 | தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகளில் முதன்மை மாநிலங்களின் பங்கு (2022-23) | 109 |
| 6.9 | மாநிலங்களுக்கு இடையேயான ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவன உறுப்பினர் ஒப்பீடு | 110 |
| 6.10 | பணிபுரியும் வயதுள்ள மக்கள்தொகை வீதம் | 111 |
| 7.1 | வறுமை நிலை விகிதம் (பல்பரிமாண வறுமை நிலையிலுள்ள மக்கள்தொகை விகிதம்) | 115 |
| 7.2 | 2022-23இல் மாநில அளவிலான வறுமை நிலை விகிதம் | 115 |
| 7.3 | சராசரி மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினம் | 116 |
| 7.4 | மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினம் (ரூபாயில்) – ஊரகப் பகுதி & நகர்ப்புரம் | 117 |
| 7.5 | மாணவர்-ஆசிரியர் விகிதம் (2023-24) | 119 |
| 7.6 | உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம் | 121 |

| | | |
|---|---|---|
| 7.7 | 2021-22இல் உயர்கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதம் | 122 |
| 7.8 | 2016-20இல் ஆயுள்காலம் | 125 |
| 7.9 | முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை | 128 |
| 7.10 | ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் திட்டப் பயனாளிகள் | 129 |
| 7.11 | நிதி ஆயோக்கின் சுகாதாரக் குறியீடு (2019-20) | 131 |
| 7.12 | சமூக முன்னேற்றக் குறியீடு (2022) | 132 |
| 7.13 | தமிழ்நாடு மற்றும் இந்தியா – மனித மேம்பாட்டுக் குறியீடு (2019 முதல்) | 132 |
| 7.14 | முதன்மை மாநிலங்களின் மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI) (2022) | 133 |
| 7.15 | 2019 முதல் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டு மதிப்பு | 133 |
| 7.16 | முதன்மை இந்திய மாநிலங்களுக்கான நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டு மதிப்பு (2023-24) | 134 |
| 8.1 | தமிழ்நாட்டின் வனப் பரப்பு | 136 |
| 8.2 | தமிழ்நாட்டில் மரப் பரப்பு | 137 |
| 8.3 | தமிழ்நாடு முழுவதும் (1901 முதல் 2023 வரை) வருடாந்திர அதிகபட்ச, குறைந்தபட்ச மற்றும் சராசரி நில மேற்பரப்பு காற்று வெப்பநிலை மாறுபாடுகள் | 138 |
| 8.4 | 2023இல் மாதாந்திர வெப்பநிலை மாறுபாடுகள் | 138 |
| 8.5 | தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழை மற்றும் வருடாந்திர மழைப்பொழிவின் சதவீதம் (1901 முதல் 2023) | 139 |
| 8.6 | ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2024 வரை மாதாந்திர மழைப்பொழிவு (மிமீ) | 140 |
| 8.7 | தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்கான காற்றின் தரக் குறியீடு | 141 |
| 8.8 | 2023இல் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்கான காற்றுத் தரக் குறியீடு | 142 |
| 8.9 | தமிழ்நாடு மாவட்டங்களின் காலநிலைப் பாதிப்பு | 144 |
| 8.10 | மாநில எரிசக்தி மற்றும் காலநிலைக் குறியீடு | 145 |
| 8.11 | நீடித்த வளர்ச்சி இலக்கு-13 குறியீட்டில் மதிப்பெண்கள் (காலநிலை நடவடிக்கை) 2023-24 | 145 |

அத்தியாயம் 1

# பொருளாதார நிலை

## 1.1 அறிமுகம்

1.1 இந்தியாவில் பெரிய பொருளாதாரங்களைக் கொண்ட மாநிலங்கள் வரிசையில் இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. இதற்கு, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை ஊக்குவிக்கும் விதமாக மாநிலம் கொண்டிருக்கும் வலுவான உட்கட்டமைப்பும் முற்போக்கான வளர்ச்சிக் கொள்கைகளும் முக்கியக் காரணங்களாகும். புதுமையான மக்கள் நலத் திட்டங்களைத் தொடர்ச்சியாகச் செயல்படுத்துவதில் முன்னோடியாகத் திகழ்ந்துவரும் தமிழ்நாடு பல்வேறு துறைகளிலும் கணிசமான வளர்ச்சியை எட்டியுள்ளது. தமிழ்நாட்டின் பொருளாதார நிலை குறித்த அறிமுகத்தை இந்த அத்தியாயம் அளிக்கிறது.

1.2 இந்தியாவின் மொத்த நிலப்பரப்பில் 4%, மொத்த மக்கள்தொகையில் 6% மட்டுமே கொண்டுள்ள தமிழ்நாடு 2023-24 நிதியாண்டில் நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியில் (GDP) 9.21% பங்களித்துள்ளது[1]. 2023-24 நிதியாண்டில் மாநிலத்தின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி (GSDP) நடப்பு விலையில் ஏறத்தாழ ரூ.27.22 லட்சம் கோடியாக உள்ளது. இது 2022-23 மாநிலம் எட்டிய வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 13.71 சதவீத வளர்ச்சியாகும். இதே காலகட்டத்தில் உண்மைப் பொருளாதார வளர்ச்சி 8.23 சதவீதமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டிருந்தது. 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதார வளர்ச்சியை எட்ட தமிழ்நாடு இலக்கு நிர்ணயித்துள்ளது.

1.3 தொழில் துறையின் ஆற்றல் மையமாகத் தமிழ்நாடு விளங்குகிறது. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தித்துறையில் 11.9% தமிழ்நாடு பங்களிக்கிறது. நாட்டிலேயே மிக அதிக எண்ணிக்கையிலான தொழிற்சாலைகள் இங்குள்ளன. 2022-23 நிலவரப்படி தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 39,700. ஏற்றுமதித் தயார்நிலைக் குறியீட்டிலும் (2022) மாநிலம் முதலிடம் பிடித்துள்ளது. 2023இல் கடன் வைப்பு விகிதத்தில் (CDR) 117.7% உடன் மூன்றாமிடத்தில் உள்ளது. தனிநபர் வருமானம் அதிகமுள்ள மாநிலங்கள் வரிசையில் நான்காம் இடத்தில் உள்ளது (2023-24இல் ரூ.3.15 லட்சம்)[2]. புத்தொழில்களுக்கான சூழமைவு அதிகமுள்ள மாநிலங்கள் வரிசையில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதால் 2022இல் 'சிறப்பாகச் செயல்படும்' மாநிலங்களுக்கான விருதை வென்றுள்ளது.

1.4 மொத்த மாநில மதிப்புக் கூட்டலில் (GSVA) 2023-24இல் சேவைத்துறை 53.63% பங்களிப்புடன் முன்னிலை வகிக்கிறது. இரண்டாம் நிலைத் துறை 33.37% பங்களிப்புடனும், முதன்மைத் துறை 13% பங்களிப்புடனும் அடுத்தடுத்த இடங்களில் உள்ளன. இந்தியாவிலேயே அதிக அளவிலான தொழில்நுட்ப மையங்கள் தமிழ்நாட்டில் உள்ளன. 2023-24 கணக்கீட்டின்படி இங்கு 506 பொறியியல் கல்லூரிகளும், 492 பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளும் உள்ளன. இவை உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளுக்குத் தேவையான திறன்மிகு பணியாளர்கள் கிடைப்பதை உறுதிசெய்கின்றன.[3]

---

*[1] உலகத் தரவரிசையில் 47ஆம் இடத்தில் உள்ள செக் குடியரசு (பெயரளவில்), அர்ஜென்டினா (வாங்கும் திறன்) ஆகியவற்றுக்கு இணையாகத் தமிழ்நாட்டின் பொருளாதாரம் உள்ளது.*

*[2] வர்த்தகம் மற்றும் தொழில் துறை அமைச்சகம் 2023இல் வெளியிட்ட சரக்குப் பெயர்ச்சிமைக் குறியீட்டு விளக்கப்படத்தின்படி (Logistics Index Chart) 'சாதனையாளர்கள்' என வகைப்படுத்தப்பட்ட 13 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் தமிழ்நாடும் ஒன்று. இது ஏற்றுமதி அதிகரிப்பிலும் பொருளாதார வளர்ச்சியிலும் பங்களிக்கும் திறம்பட்ட சரக்குப் பெயர்ச்சிமைச் சேவைகளை எடுத்துக்காட்டுகிறது.*

*[3] நாட்டின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது சார்ந்த சேவைத் துறைக்குத் தேவையான மனித வளங்களில் 50%க்கும் அதிகமாகத் தமிழ்நாட்டிலிருந்து பெறப்படுவதாக மதிப்பீடு குறிப்பிடுகிறது*

1.5 இந்தியாவின் டெட்ராய்ட் என்றழைக்கப்படும் தமிழ்நாட்டில் 1,500க்கும் அதிகமான வாகனங்கள் மற்றும் உதிரிபாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. முன்னணி ஜவுளி மையமாகவும், இந்தியாவின் தோல் மற்றும் தோல் பொருள்கள் ஏற்றுமதி, மின்னணுப் பொருள் உற்பத்தியில் முன்னணியிலும் உள்ளது. சரக்குப் போக்குவரத்தில் முதன்மை மையமாகவும், மருத்துவச் சுற்றுலாவுக்கு உகந்த இடமாகவும் தமிழ்நாடு உருவெடுத்துள்ளது.

1.6 அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி, சமூக நலன் ஆகியவை தமிழ்நாடு அரசின் முதன்மைச் செயல்திட்டங்களாகும். கல்விக்கும் சுகாதாரத்துக்கும் இங்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. இந்தியாவிலேயே நகர்மயமாதலில் (2024இல் 54.13%) கேரளத்தை அடுத்து தமிழ்நாடு உள்ளது. குறைவான சிசு மரண விகிதம் 13, சிசுப் பிறப்பு விகிதம் 13.8, பல்பரிமாண ஏழ்மை நிலையிலுள்ள மக்கள் 1.43% (2022-23) என்ற அளவில் குறிப்பிடத்தக்க வகையில் சமூக வளர்ச்சியடைந்த மாநிலமாக உள்ளது[4]. அதிக ஆயுட்காலத்தில் (73.2 ஆண்டுகள்) மூன்றாமிடத்திலும், எழுத்தறிவில் நான்காமிடத்திலும் (2011 நிலவரப்படி 80.09%) உள்ளது. நாட்டிலேயே உயர்கல்விக்கான ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதம் (GER) தமிழ்நாட்டில் 47% ஆக உள்ளது. இது தேசிய சராசரியான 28.4%ஐவிட குறிப்பிடத்தக்க வகையில் அதிகம். பெண்களின் உயர்கல்வி ஒட்டுமொத்தச் சேர்க்கை விகிதத்தில் தேசிய சராசரி 28.5% என்றிருக்கும் நிலையில், தமிழ்நாடு 47.3%ஐ எட்டி மூன்றாம் இடத்தில் உள்ளது. முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மூவலூர் ராமாமிர்தம் அம்மையார் புதுமைப்பெண் திட்டம், மகளிர் விடியல் பயணத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முன்னோடி நலத் திட்டங்களைத் தமிழ்நாடு அரசு அறிமுகப்படுத்திச் செயல்படுத்திவருகிறது. இத்தகைய நலத்திட்டங்கள் அனைத்தும் பிற மாநிலங்கள் பின்பற்றுவதற்கான முன்னோடித் திட்டங்களாக அமைந்துள்ளன.

1.7 ஒருங்கிணைந்த வளர்ச்சிக் கொள்கைகள் வலுவாகக் கட்டமைக்கப்பட்டிருப்பதால் தமிழ்நாடு மிகவும் இக்கட்டான சூழலையும் திறம்பட எதிர்கொண்டு குறிப்பிடத்தக்கப் பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளது. 2012-13 முதல் 2023-24 வரை மாநிலத்தின் சராசரி வளர்ச்சியானது தேசிய சராசரியான 6.1%ஐக் கடந்து 6.37% என்ற அளவை எட்டியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் (2022-23 முதல் 2023-24 வரை) இந்த வளர்ச்சி வேகம் அதிகரித்திருப்பதால் மாநிலத்தின் சராசரி வளர்ச்சி 8.18%ஐ எட்டியுள்ளது. தமிழ்நாடு 2030க்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக உயர வேண்டும் என்ற உயரிய இலக்கை நிர்ணயித்து, அதை எட்டுவதற்கான வலுவான பொருளாதாரக் கட்டமைப்பையும் நிலையான வளர்ச்சிக்கான திட்டமிட்ட அணுகுமுறையையும் கொண்டுள்ளது.

1.8 2024-25க்கான பொருளாதார ஆய்வறிக்கை தமிழ்நாட்டின் பொருளாதார நிலையை விரிவாக ஆராய்ந்துள்ளது. இதில் முக்கியத் துறைகளான வேளாண்மை, தொழில்கள் மற்றும் சேவைத் துறைகள் மிக நுட்பமாக ஆராயப்பட்டுள்ளன. பணவீக்கத்தின் போக்கு, வேலைவாய்ப்பு, குறிப்பிட்ட சமூகத் துறைகளின் குறியீடுகள் ஆகியவற்றை நடுத்தரக் கால வளர்ச்சி நோக்கிலிருந்து ஆய்வறிக்கை தீவிரமாக ஆராய்ந்துள்ளது. மேற்குறிப்பிட்ட துறைகளின் சவால்களை விளக்கி, அவற்றின் தாக்கங்களைப் பல்வேறு அத்தியாயங்களில் பகுப்பாய்வு செய்துள்ளது. மேலும், அரசின் கொள்கைகளையும் அவற்றின் செயல்திறனையும் மதிப்பீடு செய்வதோடு 2024-25 மற்றும் 2025-26க்கான வளர்ச்சி வாய்ப்புகளையும் பட்டியலிட்டுள்ளது. குறுகியகாலச் சவால்களை எதிர்கொள்வதற்கான தீர்வுகளை வழங்குவதோடு, நிலையான பொருளாதார வளர்ச்சிக்கான வழிமுறைகளையும் இந்த ஆய்வறிக்கை பரிந்துரைக்கிறது.

---

[4] *ஆதாரம்: மக்கள்தொகைக் கணிப்பு குறித்த தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை, ஜூலை 2020; மாதிரிப் பதிவு அமைப்பு (Sample Registration System) வெளியீடு, மே 2022; இந்தியாவில் 2005-06இல் பல்பரிமாண வறுமை – நிதி ஆயோக்கின் ஆய்வேடு.*

## 1.2 உலகப் பொருளாதாரம்

1.9 வளர்ச்சியே மேம்பாட்டுக்கும் செழுமைக்குமான அடித்தளம். உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின்படி (World Economic Outlook - WEO) 2011 முதல் 2019 வரையான காலகட்டத்தில் உலகப் பொருளாதார வளர்ச்சி சராசரியாக 3.48% என்றிருந்தது. கொரோனா பெருந்தொற்றுக் காரணமாக 2020இல் வளர்ச்சி விகிதம் -2.69% எனச் சரிந்தது. இதிலிருந்து மீண்டு 2023இல் உலகப் பொருளாதார வளர்ச்சி 3.3% என்ற நிலையை எட்டியது. உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் அக்டோபர் 2024, ஜனவரி 2025 விவரங்கள், சிறப்பான செயல்பாடுகள் காரணமாகப் பல்வேறு நாடுகளில் பொருளாதார வளர்ச்சி விகிதம் அண்மை ஆண்டுகளில் அதிகரித்துள்ளதைச் சுட்டிக்காட்டியுள்ளன. பெருந்தொற்றுடன், புவிசார் அரசியல் பதற்றங்களும், காலநிலை மாறுபாடும் சேர்ந்து உலக அளவில் விநியோகச் சங்கிலியைப் பாதித்து எரிசக்தி, உணவுத் துறைகளில் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன. வளர்ந்த நாடுகள் பொருளாதாரச் சரிவிலிருந்து மீண்டு அவற்றின் செயல்திறனும் பணவீக்கமும் பெருந்தொற்றுக்கு முந்தைய காலத்துக்குத் திரும்பியிருந்தாலும், பெரும்பாலான வளர்ந்துவரும் நாடுகள் உற்பத்தியில் பெரும் இடைவெளிகள், தொடர்ந்து நிலவும் பணவீக்கம் உள்ளிட்ட குறிப்பிடத்தக்க சவால்களைத் தொடர்ந்து எதிர்கொண்டுவருகின்றன. உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பு இப்பிரச்சினைகளை மேலும் மோசமடையச் செய்துள்ளது. இதனால், உலக அளவில் பணவீக்கம் அதிகரித்து 2022இல் 8.6% என்றானது, 2023இல் 6.7% ஆகவும், 2024இல் ஓரளவு குறைந்து 5.9% என்ற அளவிலும் உள்ளது.


1.10 இத்தகைய சவால்கள் நிலவியபோதும், 2024இல் சுழற்சி சமநிலையின்மை குறையத் தொடங்கியதன் காரணமாக, முக்கிய நாடுகளில் உற்பத்தித் திறனுடன் பொருளாதார நடவடிக்கைகள் பொருந்திப்போயின. உலக அளவில் பணவீக்கமின்மை குறைந்திருக்கும் நிலையிலும், பெரும்பாலான பொருளாதாரங்களில் சேவைத்துறைப் பணவீக்கம் மிக அதிகமாகவே காணப்பட்டது — குறிப்பாக, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இந்நிலை நீடித்தது. வட்டி விகித உயர்வு போன்ற நடவடிக்கைகளைக் கையாண்டு மத்திய வங்கிகள் மிகுந்த எச்சரிக்கையுடன் பணவியல் கொள்கைகளை அணுகும் போக்கானது உலகளாவிய பணவியல் கொள்கையில் அதிகரித்துவரும் விலகல் தன்மையினை உணர்த்துகிறது. இது, குறிப்பாக அதிக அளவில் கடனைத் திருப்பிச்செலுத்த வேண்டியிருக்கும் நாடுகளின் பொது நிதிகளில அழுத்தத்தைக் கூட்டுகிறது. 2024இல் புதிய அரசுகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, கொள்கை மாற்றங்களுக்கான எதிர்பார்ப்புகள் அதிகரித்துள்ள நிலையில், பொருளாதாரக் கொள்கை வகுப்பில் நிச்சயமற்ற சூழல் — குறிப்பாக, வர்த்தகம் மற்றும் நிதித் துறைகளில் — அதிகரித்துள்ளது.

1.11 உலகப் பொருளாதாரம் 2024இல் 3.2%, 2025இல் 3.3% (விளக்கப்படம் 1.1) வளர்ச்சிபெறும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. அதேசமயம் பணவீக்கம் 2024இல் 4.5%, 2025இல் 3.6% குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. 2022இல் பன்னாட்டுச் சந்தையில் 96.36 அமெரிக்க டாலராக இருந்த ஒரு பீப்பாய் கச்சா எண்ணெய் விலையானது 2023இல் 80.60 டாலராகக் குறைந்து, 2024இல் 70 டாலருக்கும் கீழாகக் குறைந்தது. 2025, 2026 ஆண்டுகளில் இது மேலும் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது[5]. 2022இல் 5.7% ஆக இருந்த சரக்கு மற்றும் சேவைகளின் ஏற்றுமதி வளர்ச்சியானது 2023இல் 0.84% எனக் குறைந்த அளவிலேயே இருந்தது. இது 2024ஆம் ஆண்டில் 3.1% ஆகவும், 2025ஆம் ஆண்டில் 3.4% என்ற அளவுக்கு உயரும் என்று கணிக்கப்படுகிறது. குறைந்த பணவீக்கம் மற்றும் வட்டி விகிதங்கள், அமெரிக்காவிலும் வளர்ந்துவரும் நாடுகளிலும் நிலவும் சாதகமான வர்த்தகச் சூழல், குறைந்துவரும் சர்வதேச புவிசார் அரசியல் பதற்றங்கள் போன்றவை இந்த மீட்சிக்கு வழிவகுத்துள்ளன.

*[5] ஈரானின் எண்ணெய் உற்பத்திப் பகுதிகளைத் தவிர்த்து ராணுவத் தளங்களை மட்டும் குறிவைத்து இஸ்ரேல் பதிலடித் தாக்குதலை நடத்தியதால், சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விலையில் கடும் சரிவு ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது. அதிக அளவிலான அளிப்பும் நுகர்வு குறைந்ததும் — குறிப்பாக சீனாவில் — கச்சா எண்ணெய் விலைக் குறைவு தொடர்வதற்கு முக்கியக் காரணமாகும்.*

1.12 நாடுகளின் வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (UNCTAD) உலக முதலீட்டு அறிக்கை 2024இன்படி, சர்வதேச வர்த்தக மற்றும் புவிசார் அரசியல் நெருக்கடிகள் காரணமாக ஏற்பட்ட உலகப் பொருளாதார மந்தநிலையால் உலகளாவிய அந்நிய நேரடி முதலீடு (FDI) 2022இல் 1.356 டிரில்லியன் அமெரிக்க டாலரிலிருந்து, 2023இல் 1.332 டிரில்லியன் அமெரிக்க டாலராகக் குறைந்து, 1.8% அளவுக்கு வீழ்ந்துள்ளது.

**விளக்கப்படம் 1.1: உலகப் பொருளாதார வளர்ச்சி (%)**





*ஆதாரம் (அடிப்படைத் தரவு): உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின் தரவுத் தொகுப்பு.*

## 1.3 இந்தியப் பொருளாதாரம் – சுருக்கமான மதிப்பீடு

1.13 மக்களின் வாங்கும் திறன் அடிப்படையில் உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக இந்தியா விளங்குவதோடு சர்வதேச அளவில் விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்டும் நாடுகளில் ஒன்றாகவும் திகழ்கிறது. 2047க்குள் வளர்ச்சியடைந்த நாடாகும் உயரிய இலக்கைக் கொண்ட இந்தியப் பொருளாதாரம் 2012-13 முதல் 2024-25 வரையான காலத்தில் (2011-12 விலைகளின் அடிப்படையில்) சராசரியாக 6.1% வளர்ச்சி கண்டுள்ளது. இது, 2005-06 முதல் 2011-12 (விளக்கப்படம் 1.2) வரையான காலத்தில் எட்டப்பட்ட சராசரி வளர்ச்சியான 6.9% உடன் ஒப்பிடப்படுகிறது. குறிப்பாக, கடந்த 4 ஆண்டுகளில் சராசரி வளர்ச்சி விகிதம் 8.2% ஆக அதிகரித்துள்ளது. மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் 2024-25இல் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி 6.5% ஆக இருக்கும் எனக் கணித்துள்ள நிலையில் உலகப் பொருளாதாரத் கண்ணோட்ட அறிக்கையும் 2025-26இல் 6.5% அளவுக்கு வளர்ச்சி இருக்கும் எனக் கணித்துள்ளது[6].

*[6] உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத்தின்படி, தொழில் துறை நடவடிக்கைகளில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் கடுமையான சரிவு ஏற்பட்டதன் காரணமாக இந்தியாவின் வளர்ச்சி கணிக்கப்பட்டதைவிடக் குறைந்துள்ளது. 2026-27 முதல் 2029-30 வரை ஆண்டுக்கு 6.5% வளர்ச்சி எட்டப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.*


**விளக்கப்படம் 1.2: இந்தியப் பொருளாதார வளர்ச்சி (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

1.14 விளக்கப்படம் 1.3இல் காட்டப்பட்டுள்ள துறைசார் வளர்ச்சிப் போக்குகள் 2012-13 மற்றும் 2024-25ஆம் ஆண்டுகளுக்கிடையிலான காலகட்டத்தில் சேவைத்துறை (மூன்றாம் நிலை) சராசரியாக 7.01% என்ற அளவுக்கு விரிவடைந்த அதேசமயம் இரண்டாம் நிலைத் துறை 5.83% வளர்ச்சியை எட்டியது. இருப்பினும், முதன்மைத் துறை மிக மெதுவாக 3.68% வளர்ச்சியையே எட்டியது. கோவிட்-19 பெருந்தொற்றுக்குப் பிறகு இரண்டாம் நிலை மற்றும் சேவைத் துறைகளின் வளர்ச்சி வேகமெடுத்தது. கடந்த நான்கு ஆண்டுகளில் மூன்றாம் நிலை, இரண்டாம் நிலை மற்றும் முதன்மைத் துறைகள் முறையே 8.94%, 8.08% மற்றும் 4.48% வளர்ச்சியை எட்டியுள்ளன. பெருந்தொற்றுக்குப் பிறகு தேவை அதிகரித்ததன் காரணமாக தொழில் மற்றும் சேவைத் துறை நடவடிக்கைகள் விரிவடைந்தன.

**விளக்கப்படம் 1.3: இந்தியாவில் துறைசார் வளர்ச்சி (%)**





*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

1.15 இந்தியாவின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்களிப்பு விகிதங்களும் காலப்போக்கில் மாறிவிட்டன. 2011-12இல் 20.18% ஆக இருந்த முதன்மைத் துறையின் பங்களிப்பு 2024-25இல் 15.0% ஆகச் சரிந்துவிட்டது. இதேபோல இரண்டாம் நிலைத் துறையின் பங்களிப்பு 27.17%இலிருந்து 26.2% ஆகச் சரிந்துவிட்டது[7]. மாறாக, மூன்றாம் நிலைத் துறையின் பங்களிப்பு 45.55%இலிருந்து 50.3% ஆக அதிகரித்துள்ளது. வளர்ச்சியடைந்த பொருளாதாரம் என்ற இலக்கை எட்ட வேண்டுமெனில், இந்தியா தனது தொழில் துறையை வலுப்படுத்த வேண்டும். குறிப்பாக, வேலைவாய்ப்பு உருவாக்கத்திலும், தொழில் துறை மொத்த உள்நாட்டு உற்பத்தி உயர்விலும் முக்கியப் பங்குவகிக்கும் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க வேண்டும்.

1.16 2012-13 மற்றும் 2023-24 இடையிலான காலகட்டத்தில் இந்தியாவின் நுகர்வோர் விலைக் குறியீடு (CPI) அடிப்படையிலான பணவீக்கம் சராசரியாக 5.84%. இது, இந்தியாவின் பணவியல் கொள்கை வரம்பான 4% (ஏற்பளவு வரம்பான ±2%)-ஐவிட அதிகமாகும். இருப்பினும், 2022-23இல் 6.65% ஆக இருந்த பணவீக்கம் 2023-24இல் 5.38% ஆகக் குறைந்தது (விளக்கப்படம் 1.4). இந்திய ரிசர்வ் வங்கி 2024-25இல் பணவீக்கம் 4.5% ஆக நிலைபெறும் எனக் கணித்துள்ளது. பிப்ரவரி 7, 2025இல் நடைபெற்ற பணவியல் கொள்கைக் கூட்டத்தில் ரெப்போ விகிதத்தை (ரிசர்வ் வங்கியிடமிருந்து வர்த்தக வங்கிகள் வாங்கும் கடன்களுக்கான வட்டிவிகிதம்) ரிசர்வ் வங்கி 25 புள்ளிகள் குறைத்து 6.25% ஆக நிர்ணயித்தது. ஏறக்குறைய 5 ஆண்டுகளுக்குப் பிறகான முதலாவது வட்டிக் குறைப்பு நடவடிக்கையான இது, செப்டம்பருடன் முடிவடைந்த காலாண்டில் நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 5.4% ஆகச் சரிந்ததை அடுத்து, மந்த நிலையைப் போக்கிப் பொருளாதார வளர்ச்சியை முடுக்கிவிடும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டது.

**விளக்கப்படம் 1.4: இந்தியாவில் CPI பணவீக்கம் (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): இந்தியப் பொருளியல் புள்ளிவிவரக் கையேடு, இந்திய ரிசர்வ் வங்கி.*

[7] *மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உற்பத்திப் பொருள்கள் மீதான நிகர வரிகளும் அடங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. 2024-25இல் அதன் பங்கு 9.71%.*


1.17 ஐக்கிய நாடுகளின் வர்த்தக மற்றும் மேம்பாட்டு அமைப்பின் உலக முதலீட்டு அறிக்கை 2024இன்படி, இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடு 2020இல் 64.07 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது. இது 2021இல் பெருந்தொற்று காரணமாக 44.76 பில்லியன் அமெரிக்க டாலராகக் குறைந்துவிட்டது. 2022இல் இது பகுதியளவு மீட்சியடைந்து 49.38 பில்லியன் டாலரானது என்றாலும், 2023இல் மீண்டும் சரிவைச் சந்தித்து 28.16 பில்லியன் டாலராகக் குறைந்தது. உலகப் பொருளாதாரக் கண்ணோட்டத் தரவுகளின்படி (அக்டோபர் 2024) சரக்கு மற்றும் சேவைத் துறையில் இந்தியாவின் ஏற்றுமதி வளர்ச்சியானது 2022இல் 9.77% ஆக இருந்தது 2023இல் 0.38% ஆகக் கடும் சரிவைச் சந்தித்தது. இதிலிருந்து மீண்டு 2024இல் 3.5% வளர்ச்சியையும் 2025இல் 4.07% வளர்ச்சியையும் எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

1.18 2017-18இல் ரூ.64.45 ஆக இருந்த அமெரிக்க டாலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பு அண்மை மாதங்களில் ரூ.87 ஆகக் குறைந்து பெரும் சரிவைச் சந்தித்தது. நாணய மதிப்புக் குறைவானது ஏற்றுமதியைக் காட்டிலும் இறக்குமதி — குறிப்பாக, எண்ணெய் இறக்குமதி — அதிவேகத்தில் அதிகரித்ததால் ஏற்பட்ட வர்த்தகப் பற்றாக்குறை காரணமாக ஏற்பட்டதாகும்.

## 1.4 தமிழ்நாட்டின் பொருளாதாரம்

1.19 தமிழ்நாட்டின் பொருளாதாரம் கடந்த சில ஆண்டுகளாகக் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுவருகிறது (இணைப்பு 1, பெட்டிச்செய்தி 1.1). 2012-13 முதல் 2023-24 (2011-12 தொடர்ச்சி) வரையான காலத்தில் மாநிலத்தின் சராசரி வளர்ச்சி 6.37%, இது தேசிய சராசரியான 6.1%ஐவிட சற்றே (0.3 சதவீதப் புள்ளிகள்) அதிகம் (விளக்கப்படம் 1.5). 2012-13இலிருந்து இந்தியாவும் தமிழ்நாடும் வளர்ச்சிப் பாதையில் ஏற்ற இறக்கங்களைச் சந்தித்துள்ளன. பல்வேறு முதன்மை மாநிலங்களிலும் இத்தகைய போக்கைக் காண முடிகிறது. .

**விளக்கப்படம் 1.5: பொருளாதார வளர்ச்சி (%): தமிழ்நாடு – இந்தியா**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சக இணையதளம்*

1.20 2020இலிருந்து உலகப் பொருளாதாரம் மூன்று முக்கிய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது: (i) கோவிட்-19 பெருந்தொற்று, (ii) ரஷ்யா – உக்ரைன் பூசல், (iii) முன்னேறிய நாடுகள் பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த வட்டி விகிதத்தை உயர்த்தியது. இவை இந்தியா, தமிழ்நாடு உட்பட உலக அளவில் பொருளாதாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன. பெருந்தொற்றுக் காலமான 2020-21இல் இந்தியப் பொருளாதாரம் -5.78% சரிவைச் சந்தித்த நிலையிலும், தமிழ்நாட்டின் பொருளாதாரம் 0.07% வளர்ச்சியைப் பதிவுசெய்தது. 2021-22 காலகட்டத்தில் தமிழ்நாட்டின் பொருளாதாரம் மீட்சியடைந்து 7.89% வளர்ச்சியை எட்டியது. இந்தக் காலகட்டத்தில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் 9.69% ஆக இருந்தது. முந்தைய ஆண்டை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சியைக் கணிப்பதே இந்த வேறுபாட்டிற்குக் காரணமாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக, தமிழ்நாட்டுப் பொருளாதாரம் 8.18% என்ற சராசரி விகிதத்தில் வளர்ந்துள்ளது.

1.21 சூழந்தன்மை கொண்ட தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியானது, குறிப்பாகப் பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகு, இந்தியப் பொருளாதாரத்தைக் காட்டிலும் உலகளாவிய ஏற்ற இறக்கங்களைத் தாங்கி மீண்டிருப்பதைக் காட்டுகிறது. பொது நலனுக்கும் பொருளாதார நிலைத்தன்மைக்கும் இடையே ஒரு நுட்பமான சமநிலையைப் பேணிப் பெருந்தொற்றைச் சிறப்பாகக் கையாண்ட விதம் இந்த நெகிழ்வுத் தன்மைக்குக் காரணம். வாகனங்கள், ஜவுளி, தோல் பொருள்கள், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பொருள்களைப் பெருமளவில் உற்பத்திசெய்து, உள்நாட்டு மற்றும் பன்னாட்டுச் சந்தைகளுக்கு அளிக்கிறது. இதனால், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் போக்கானது, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிப் போக்கைக் காட்டிலும் சர்வதேசப் பொருளாதாரப் போக்குகளுடன் பொருந்திப்போகிறது (பின்னிணைப்பு – 1, பெட்டிச் செய்தி 1.2).[8]


## 1.5 துறைவாரியான வளர்ச்சியும் பங்களிப்பும்


### (i) துறைவாரியான வளர்ச்சி


1.22 கட்டமைப்புரீதியாக, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிப் போக்குகள் பிற தொழில்மயமான மாநிலங்களுடனும் இந்தியாவின் ஒட்டுமொத்தப் பொருளாதாரப் போக்குகளுடனும் ஒத்திருக்கின்றன. இருப்பினும், பெருந்தொற்று காரணமாக 2021-22ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி -5.78% என்று சரிந்த நிலையிலும் நேர்மறையான வளர்ச்சியைப் பதிவுசெய்த வெகுசில மாநிலங்களுள் தமிழ்நாடும் ஒன்று. வாழை, தேங்காய், கிராம்பு சாகுபடியில் தமிழ்நாடு முதலிடம் வகிப்பதுடன், கரும்பு, பருத்தி, மஞ்சள், சோளம், நிலக்கடலை மற்றும் எண்ணெய் வித்துகள் உற்பத்தியிலும் முன்னணி வகிக்கிறது. அரிசி உற்பத்தியில் மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், பஞ்சாப் மாநிலங்களுக்கு அடுத்தபடியாக நான்காவது இடத்தில் உள்ளது. வேளாண் பயிர்கள், கால்நடைகள், காடுகள் மற்றும் மரம் வெட்டுதல், மீன்பிடித்தல் மற்றும் மீன்வளர்ப்பு, கனிமச் சுரங்கம் மற்றும் திறந்தவெளி அகழ்வு ஆகியவற்றை உள்ளடக்கிய தமிழ்நாட்டின் முதன்மைத் துறையானது, 2012-13 முதல் 2023-24 வரை சராசரியாக 4.80% வளர்ச்சியடைந்துள்ளது (விளக்கப்படம் 1.6). 2005-06 முதல் 2011-12 வரையில் எட்டப்பட்ட 6.05% சராசரி வளர்ச்சியுடன் ஒப்பிடும்போது முதன்மைத் துறைகளின் வளர்ச்சி குறைவாகவே உள்ளது (அட்டவணை 1.1). முதன்மைத் துறையில் வேளாண் பயிர் வளர்ப்பிலும், மீன்பிடித்தலிலும் வளர்ச்சி குறைந்துள்ள நிலையில், கால்நடை வளர்ப்பு, காடுகள் மற்றும் சுரங்கங்கள் துறை வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளன.

*[8] தமிழ்நாட்டின் உண்மைப் பொருளாதார வளர்ச்சி வரிசைத் தொடருக்கும் (2005-06 முதல் 2023-24 வரை) உலகப் பொருளாதார வளர்ச்சி வரிசைத் தொடருக்கும் இடையிலான இயைபு 0.76, இந்தியப் பொருளாதார வளர்ச்சி வரிசைத் தொடருடனான இயைபு 0.68. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் உலகப் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையிலான வலுவான நேர்விகிதத் தொடர்பை வளர்ச்சிப் பின்னடைவுப் பகுப்பாய்வும் உறுதிப்படுத்துகிறது.*

**விளக்கப்படம் 1.6: தமிழ்நாட்டில் துறைவாரியான வளர்ச்சி (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

1.23 உற்பத்தித் துறை, மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல் மற்றும் கட்டுமானத் துறைகளை உள்ளடக்கிய இரண்டாம் நிலைத் துறையானது 2012-13 முதல் 2023-24 வரையில் சராசரியாக 6.3% வளர்ச்சி கண்டுள்ளது. இருப்பினும், கடந்த மூன்று ஆண்டுகளில் ஆண்டுக்கு 8.65% என்ற அளவில் விரைவான வளர்ச்சியை எட்டியுள்ளது. இது மாநிலத்தின் பொருளாதார நடவடிக்கைகளில் ஏற்பட்ட முன்னேற்றத்தைக் குறிக்கிறது (விளக்கப்படம் 1.6). குறிப்பாக, 2005-06 முதல் 2011-12 வரையில் 10.09% என்ற சிறப்பான சராசரி வளர்ச்சி விகிதத்தைப் பதிவுசெய்தது (அட்டவணை 1.1)[9].

**அட்டவணை 1.1: துணைத் துறைகளின் சராசரி வளர்ச்சி விகிதம் - 2005-06 முதல் 2011-12 வரை & 2012-13 முதல் 2023-24 வரை**

| துணைத் துறைகள் | 2005-06 முதல் 2011-12 வரை (1) | 2012-13 முதல் 2023-24 வரை (2) | 2012-13 முதல் 2020-21 வரை | 2021-22 முதல் 2023-24 வரை |
|---|---|---|---|---|
| விவசாயம் | 6.4 | 2.43 | 1.36 | 5.65 |
| கால்நடைகள் | 6.4 | 9.56 | 11.58 | 3.49 |
| காடுகள், மரம் வெட்டுதல் | 2.3 | 5.06 | 8.61 | -5.58 |
| மீன்பிடித்தல், மீன் வளர்ப்பு | 8.26 | 3.2 | 2.68 | 4.77 |
| கனிமச் சுரங்கம் மற்றும் திறந்தவெளி அகழ்வு | 3.49 | 8.7 | 3.35 | 24.75 |
| **முதன்மைத் துறை** | **6.05** | **4.8** | **4.87** | **4.57** |
| உற்பத்தித் துறை | 10.86 | 7.1 | 6.69 | 8.33 |
| மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல் முதலியவை | -3.09 | 4.62 | 2.07 | 12.26 |
| கட்டுமானம் | 11.64 | 5.21 | 3.93 | 9.03 |
| **இரண்டாம் நிலைத் துறை** | **10.09** | **6.31** | **5.52** | **8.65** |
| வர்த்தகம், தங்கும் விடுதிகள், உணவகங்கள் | 10.03 | 6.19 | 5.59 | 7.98 |
| போக்குவரத்து, கிட்டங்கி, தகவல்தொடர்பு உள்ளிட்டவை | 12.33 | 3.00 | 1.44 | 7.67 |
| நிதிச் சேவைகள் | 13.04 | 6.39 | 6.95 | 4.69 |
| மனை வணிகம், தொழில்முறைச் சேவைகள் உள்ளிட்டவை | 13.26 | 7.39 | 6.72 | 9.41 |
| பொது நிர்வாகம் | 7.39 | 3.17 | 2.31 | 5.74 |
| பிற சேவைகள் | 10.53 | 8.24 | 8.14 | 8.52 |
| **மூன்றாம் நிலைத் துறை** | **11.28** | **6.25** | **5.67** | **7.97** |
| அடிப்படை விலையில் மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டல் | | 6.04 | 5.45 | 7.81 |
| பொருள்கள் மீதான வரிகள் & மானியங்கள் | | 9.65 | 9.43 | 10.36 |
| **மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி** | **10.3** | **6.37** | **5.80** | **8.08** |

*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

*[9] இந்த வளர்ச்சி விகிதங்களின் துல்லியத் தன்மை மாறுபட்டது. 2011-12 முதல் 2023-24 வரை இரண்டாம் நிலைத் துறையின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (2011-12 விலையில்) ரூ.2.52 லட்சம் கோடியிலிருந்து ரூ.5.19 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது (ரூ. 2.66 லட்சம் கோடி அதிகம்). 2004-05 முதல் 2011-12 வரை இரண்டாம் நிலைத் துறையின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி ரூ.62,713 கோடியாக மட்டுமே அதிகரித்தது.*

1.24 2005-06 முதல் 2011-12 வரை 11.3% ஆக இருந்த மூன்றாம் நிலைத் துறைகளின் சராசரி வளர்ச்சி விகிதம் 2012-13 முதல் 2023-24 வரை 6.25% ஆகக் குறைந்திருப்பதை வளர்ச்சிப் போக்குகளின் பகுப்பாய்வு எடுத்துக்காட்டுகிறது[10]. குறிப்பாக, இந்தத் துறையானது 2022-23இல் 8.3% வளர்ச்சியையும், 2023-24இல் 9.25% வளர்ச்சியையும் எட்டி வலுவான நிலைக்கு மீண்டிருக்கிறது (விளக்கப்படம் 1.6).

1.25 முதன்மை மற்றும் இரண்டாம் நிலைத் துறையின் வளர்ச்சிப் போக்குகள், ஒப்பீட்டளவில் சேவைகள் துறையின் இயல்பான வளர்ச்சிப் போக்கைக் காட்டிலும் அதிக ஏற்றங்களைக் கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. தொழிலாளர் கணக்கெடுப்பின்படி (2023-24), மாநிலத்தில் ஏறக்குறைய 44% தொழிலாளர்கள் வேளாண்மையிலும் உற்பத்தித் துறையிலும் ஈடுபட்டுள்ளனர். முதன்மைத் துறையிலும் இரண்டாம் நிலைத் துறையிலும் நிலையான வளர்ச்சியை உறுதிசெய்ய வேண்டியது, மாநிலத்தின் நிலைத்த பொருளாதார வளர்ச்சிக்கு அவசியமானதாகும். மேலும், 2012-13இலிருந்து குறைந்துவரும் சேவைத் துறையின் வளர்ச்சி வேகம் மீண்டும் விரைவான வளர்ச்சியை நோக்கி முடுக்கிவிடப்பட வேண்டியது — கடந்த இரண்டாண்டுகளில் மீண்டுவந்துள்ள வளர்ச்சியையும் சேர்த்து — டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக வளர வேண்டும் என்ற மாநிலத்தின் லட்சிய இலக்கை அடைவதற்கும் மிகவும் அவசியமாகும்.

1.26 இரண்டாம் நிலைத் துறைகளில் உற்பத்தி, கட்டுமானம் ஆகியவற்றின் சராசரி வளர்ச்சி 2012-13 முதல் 2020-21 வரை குறைந்துள்ளது (அட்டவணை 1.1). இருப்பினும், இந்தத் துணைத் துறைகளின் வளர்ச்சி விகிதம் கடந்த மூன்று ஆண்டுகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. உற்பத்தித் துறையையும் வேலைவாய்ப்பு உருவாக்கத்தையும் மேலும் ஊக்குவிக்க, மாநில அரசு 'புதிய தொழில் கொள்கை 2021'ஐ அறிமுகப்படுத்தியது. மூன்றாம் நிலைத் துறையில், 2012-13 முதல் 2020-21 வரை அனைத்துத் துணைத் துறைகளின் சராசரி வளர்ச்சியும் குறைந்துள்ளது. குறிப்பாகப் போக்குவரத்து, கிட்டங்கி, தகவல்தொடர்பு, வர்த்தகம், தங்குமிடங்கள் மற்றும் உணவகங்கள், பொது நிர்வாகம், நிதிச் சேவைகள் ஆகிய துறைகளில் சரிவு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இவற்றில் பல்வேறு துறைகளின் வளர்ச்சி விகிதம் 2021-22 முதல் மீண்டுவருகிறது. இது விரைவில் இரட்டை இலக்க வளர்ச்சிக்குத் திரும்புவதற்கான நம்பிக்கையை அளிக்கிறது.

### (ii) மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் அமைப்புமுறை

1.27 மற்ற பெரிய மாநிலங்களைப் போலவே, தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் அமைப்புமுறையும் பங்களிப்பு விகிதங்களும் முதன்மைத் துறை அல்லாத பிற துறைகளை நோக்கி மாறிவருவதோடு, மனித மேம்பாடு மற்றும் வாழ்வாதாரக் குறியீடுகளில் வலுவாக விளங்கவும் உதவுகின்றன. தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (2011-12 விலையில்) முதன்மைத் துறையின் பங்கு 2011-12இல் 12.11% ஆக இருந்த நிலையில், 2023-24 இல் 9.93% ஆகக் குறைந்தது (அட்டவணை 1.2)

*[10] சேவைத்துறையின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதங்கள் காலந்தோறும் குறிப்பிடத்தக்க மாறுபாடுகளைக் காட்டுகின்றன. 2011-12 முதல் 2023-24 வரை சேவைத்துறையின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (2011-12 விலையில்) ரூ.3.5 லட்சம் கோடியிலிருந்து ரூ.7.21 லட்சம் கோடியாக உயர்ந்தது (ரூ.3.71 லட்சம் கோடி அதிகம்). 2004-05 முதல் 2011-12 வரையான காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் சேவைத்துறையின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (2004-05 விலையில்) ரூ.1.39 லட்சம் கோடி மட்டுமே அதிகரித்தது. அண்மைக் காலத்தில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் சேவைத்துறையின் பங்களிப்பு விரிவடைந்திருப்பதால், இதன் சராசரி வளர்ச்சி மிகவும் அதிகமாக உள்ளது.*

**அட்டவணை 1.2: தமிழ்நாட்டில் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (%) துறைவாரியான பங்களிப்பு (2011-12 விலைகளில்)**

| துறைகள் | 2011-12 | 2012-13 | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 | 2018-19 | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| முதன்மை | 12.11 | 10.24 | 11.09 | 11.26 | 10.84 | 10.02 | 10.32 | 10.28 | 10.62 | 10.97 | 10.86 | 10.35 | 9.93 |
| இரண்டாம் நிலை | 33.56 | 34.12 | 32.27 | 30.39 | 32.47 | 33.37 | 33.43 | 33.60 | 32.76 | 32.49 | 32.99 | 33.29 | 33.00 |
| மூன்றாம் நிலை | 46.55 | 47.21 | 47.80 | 49.52 | 47.54 | 47.23 | 46.37 | 45.79 | 46.26 | 46.05 | 45.40 | 45.47 | 45.90 |
| வரிகள்-மானியங்கள் | 7.78 | 8.43 | 8.84 | 8.83 | 9.15 | 9.38 | 9.89 | 10.33 | 10.36 | 10.48 | 10.75 | 10.89 | 11.16 |
| மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |


*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

1.28 இதனிடையே, இரண்டாம் நிலைத் துறையின் பங்களிப்பு 33% ஆகவும், மூன்றாம் நிலைத் துறையின் பங்களிப்பு 46% ஆகவும் தொடர்கிறது. இந்தப் போக்கு அடுத்துவரும் ஆண்டுகளிலும் தொடரலாம்[11]. மேலும், வரிகள் மற்றும் மானியங்களின் பங்களிப்பு 2011-12இல் 7.78% ஆக இருந்து, 2023-24இல் 11.6% ஆக அதிகரித்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும் (இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இதன் பங்களிப்பு 8.68%). இது மற்றவற்றைக் காட்டிலும் மிக வேகமாக வளர்ந்துவருகிறது.

## 1.6. தனிநபர் வருமானம் – மாநிலங்களிடையே ஒப்பீடு

1.29 தனிநபர் வருமானத்தைப் பொறுத்தவரையில் (நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி) நடப்பு விலைகளின்படி, 2022-23இல் நாட்டின் பெரிய மாநிலங்களில் தமிழ்நாடு நான்காம் இடத்தில் உள்ளது (விளக்கப்படம் 1.7). மாநிலத்தின் தனிநபர் வருமானம் ரூ.2.78 லட்சமாக உள்ள நிலையில், இந்தியாவின் தனிநபர் வருமானம் ரூ.1.69 லட்சமாகவே உள்ளது (இந்திய அளவைக் காட்டிலும் 1.64 மடங்கு அதிகம்). தெலங்கானா ரூ.3.13 லட்சத்துடன் முதலிடத்திலும், கர்நாடகம் ரூ.3.04 லட்சத்துடன் இரண்டாமிடத்திலும் ஹரியானா ரூ.2.97 லட்சத்துடன் மூன்றாமிடத்திலும் உள்ளன.

**விளக்கப்படம் 1.7: இந்தியாவின் முன்னணி மாநிலங்களில் தனிநபர் வருமானம் – ரூபாயில் (2022-23)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*


---


[11] *வளர்ச்சியடைந்த நாடுகளைப் போல, மாநிலத்தின் இரண்டாம் நிலைத் துறையின் (தொழில் துறை) பங்களிப்பு மேலும் 5 அல்லது 6 சதவீதம் அதிகரித்தால் மாநிலத்தின் வேலைவாய்ப்பு பெருகுவதற்கு உதவியாக அமையும்.*

1.30 தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் (வாங்கும் திறன் அடிப்படையில்) நடப்பு விலைகளின்படி, 2022-23இல் அர்ஜென்டினாவுக்கு இணையானதாகவும் துருக்கி, மலேசியா நாடுகளைவிட அதிகமாகவும் இருந்தது[12]. 2022-23இல், உண்மை மதிப்பில், ரூ.1.66 லட்சம் தனிநபர் வருமானத்துடன் தமிழ்நாடு மற்ற முக்கிய மாநிலங்களிடையே ஏழாவது இடத்தில் இருந்தது. தெலங்கானாவின் தனிநபர் வருமானம் ரூ.1.69 லட்சமாகவும், ஹரியானாவின் தனிநபர் வருமானம் ரூ.1.73 லட்சமாகவும்[13] இருந்தது. வேறுபட்ட விலை மதிப்புகள் வாங்கும் திறனில் ஏற்படுத்திய தாக்கத்தின் காரணமாக, தர வரிசையில் சற்றே இறக்கத்தைச் சந்தித்ததால், மற்ற மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் வருவாயின் உண்மை மதிப்பு குறைந்தது. அதிக அளவிலான பணவீக்கம் பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தாலும், தமிழ்நாட்டில் காணப்படுவது போன்ற மிதமான பணவீக்கம், வளரும் பொருளாதாரத்தின் இயல்பான விளைவாகும்.

1.31 மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியைப் பொறுத்த அளவில், 2005-06 முதல் 2011-12 வரையிலான காலகட்டத்தில் (2004-05 அடிப்படை வரிசைத் தொடரின்படி) தமிழ்நாடு 10.3% சராசரி வளர்ச்சி விகிதத்துடன் முதன்மை இந்திய மாநிலங்களில் மூன்றாம் இடம் வகித்தது (விளக்கப்படம் 1.8). இருப்பினும், 2012-13 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் (2011-12 அடிப்படை வரிசைத் தொடரின்படி), 6.2% சராசரி வளர்ச்சி விகிதத்துடன் தரவரிசையில் எட்டாம் இடத்துக்குக் கீழிறங்கியது. 2005-06 முதல் 2011-12 வரையிலான காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் 2012-13 முதல் 2022-23 வரையிலான காலகட்டத்தில் அனைத்து முதன்மை மாநிலங்களின் சராசரி வளர்ச்சி விகிதமும் குறைந்தே காணப்படுகிறது.

**விளக்கப்படம் 1.8: முதன்மை இந்திய மாநிலங்களின் சராசரி உண்மைப் பொருளாதார வளர்ச்சி (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

---


[12] *உலக வங்கித் தரவுகளின்படி, வாங்கும் திறன் மதிப்பு மாற்றுக் காரணியை 20.20 எனக் கொண்டால்.*

[13] *மேலதிக விவரங்களுக்கு, நிதி ஆயோக்கின் இந்திய காலநிலை மற்றும் எரிசக்தி தகவல்பலகையைப் பார்க்கவும்.*

1.32 ஒரு மாநிலம் பொருளாதாரரீதியாக முதிர்ச்சி அடையும்போது அதீத வளர்ச்சி விகிதங்களைப் பராமரிப்பதில் உள்ளார்ந்து ஏற்படும் சவால்கள், தமிழ்நாட்டின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இந்த மந்தநிலைக்கு ஓரளவு காரணமாக இருக்கக்கூடும். ஆக, ஒரு மாநிலத்தின் பொருளாதார நலன் குறித்த முழுமையான புரிதலை வெறும் வளர்ச்சி விகிதங்களால் மட்டும் வழங்கிவிட முடியாது. தனிநபர் வருமான ஒப்பீடு, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மாநிலத்தின் பங்களிப்பு ஆகியவை மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடுகளுக்கு மிகவும் நம்பகமான குறியீடுகளாகும். மேலே குறிப்பிட்டுள்ளபடி, பிற இந்திய மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க வளர்ச்சி கண்டுள்ளது.

1.33 முக்கியமாக, தமிழ்நாட்டின் தனிநபர் வருமான வளர்ச்சியானது பல்வேறு ஆண்டுகளாகத் தேசிய சராசரியைவிடத் தொடர்ந்து முன்னேறிவருகிறது. தேசிய சராசரி ஆண்டுக்கு 100 புள்ளிகள் எனத் தரப்படுத்தப்பட்ட நிலையில், 1983-84இல் 76.8 ஆக இருந்த தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் (நடப்பு விலையில்), 2023-24இல் 171.1 ஆக அதிகரித்துள்ளது. இது தேசிய சராசரியைவிட 71% அதிக வருமான அளவைக் கொண்டிருப்பதைப் பிரதிபலிக்கிறது (விளக்கப்படம் 1.9). தென் மாநிலங்களில் தெலங்கானா (193.6), கர்நாடகம் (180.7) ஆகியவை தனிநபர் வருமானத்தில் முன்னணியில் இருந்தபோதும், தமிழ்நாடு தொடர்ந்து தீவிரமாகச் செயல்பட்டு, கேரளம் (152.5), ஆந்திரப் பிரதேசம் (131.6) ஆகியவற்றைவிட முன்னணியில் உள்ளது.

**விளக்கப்படம் 1.9: தென் மாநிலங்களில் தனிநபர் வருமான ஒப்பீடு (1983-84 முதல் 2023-24 வரை)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

1.34 ஒட்டுமொத்த வளர்ச்சி மெதுவாக இருந்தபோதும், தமிழ்நாடு தொடர்ச்சியாக உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைப் பேணி, தொடர்ந்து பல்வேறு மாநிலங்களைவிடச் சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாடு அளித்துவரும் நிலையான பங்களிப்பானது மாநிலத்தின் பொருளாதார மீள்தன்மையை மெய்ப்பித்துக் காட்டுகிறது. இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 1980-81இல் 6.9% ஆக இருந்தது, 2023-24இல் 9.21% ஆக அதிகரித்துள்ளது. இது பல பதிற்றாண்டுகளாகத் தமிழ்நாடு கொண்டிருக்கும் நிலையான பொருளாதார வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது. இதற்கு நேர்மாறாக, 1980-81இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் மிகப் பெரும் பங்குவகித்த மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாநிலங்களின் பங்களிப்புகள் கணிசமாகக் குறைந்துள்ளன. இது தமிழ்நாட்டின் தொடர்ச்சியான பொருளாதார முக்கியத்துவத்தையும் ஏறுமுகப் பயணத்தையும் எடுத்துக்காட்டுகிறது.

## 1.7 பிராந்திய வளர்ச்சி


1.35 பிராந்தியப் பொருளாதார ஏற்ற இறக்கங்களைத் தமிழ்நாடு கொண்டிருந்தாலும், இந்தியாவின் பல்வேறு மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்க வகையில் குறைவான அளவிலேயே உள்ளது. மகாராஷ்டிரம், கர்நாடகம், மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களின் பொருளாதாரச் செயல்பாடுகள் முறையே மும்பை, பெங்களூரு, கொல்கத்தா என ஒற்றைப் பெருநகர மையத்தில் அதிக அளவில் குவிந்துள்ளன. இந்த மாநிலங்களைப் போலன்றி, தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி பல்வேறு நகர்ப்புரங்களுக்கும் சீராகப் பரவியுள்ளது. கோயம்புத்தூர், மதுரை, திருச்சிராப்பள்ளி, திருப்பூர், சேலம் போன்ற நகரங்கள், மாநிலத்தின் பொருளாதாரத்துக்குக் குறிப்பிடத்தக்க அளவில் பங்களித்து, நகர்ப்புர-கிராமப்புற இடைவெளியைக் குறைக்க உதவுகின்றன. கல்வி, சுகாதாரம் போன்ற பொதுச் சேவைகளை அனைவருக்கும் கிடைக்கச் செய்வதற்காக மாநிலம் மேற்கொண்டுவரும் ஒருங்கிணைந்த முயற்சிகளால், இந்தப் பரவலாக்கப்பட்ட வளர்ச்சி மேலும் விரிவாக்கப்படுகிறது.

1.36 மாநிலத்தின் பொருளாதார மண்டலங்கள் இந்தச் சமநிலை வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன. மாநிலத்தின் மக்கள்தொகையில் 31.8% கொண்டுள்ள வடக்கு மண்டலமானது மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் 36.6% பங்களிக்கும் நிலையில், 22.8% மக்கள்தொகை கொண்டுள்ள மேற்கு மண்டலமானது 29.6% பங்களிக்கிறது. மேற்கு மண்டலத்தின் தனிநபர் வருமானம் மாநில சராசரியில் 118% ஆகும். இது வடக்கு மண்டலத்தின் 115% ஐவிடச் சற்று அதிகம். தெற்கு, கிழக்கு மண்டலங்கள் பொருளாதாரரீதியில் சில சவால்களை எதிர்கொண்டாலும், பல்வேறு மாநிலங்களைவிட ஒப்பீட்டளவில் சிறந்த சமநிலையை வெளிப்படுத்துகின்றன. 20.5% மக்கள்தொகை கொண்டுள்ள தெற்கு மண்டலமானது 18.8% பங்களிக்கும் நிலையில், 25.5% மக்கள்தொகை கொண்டுள்ள கிழக்கு மண்டலம் 15.1% பங்களிக்கிறது. பொருளாதாரத்திலு ம் தனிநபர் வருமானத்திலும் இவை இரண்டின் பங்கு சிறியது (விளக்கப்படம் 1.10)[14].

---


[14] *பார்க்க: 'தமிழ்நாட்டில் பிராந்திய வளர்ச்சிப் போக்குகள்', மாநில திட்டக் குழு ஆய்வு.*

விளக்கப்படம் 1.10: வளர்ச்சி மண்டலங்களும் மாவட்டங்களும



1.37 எனினும், மண்டலரீதியிலான சமநிலையின்மையைக் குறைப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டபோதிலும், மாவட்டவாரியான தனிநபர் வருமானத்தில் சில மாறுபாடுகள் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, 2022-23இல், செங்கல்பட்டு மாவட்டத்தில் உச்சபட்ச தனிநபர் வருமானம் ரூ.6.48 லட்சம் பதிவாகியுள்ளது. இதற்கடுத்த நிலைகளில் காஞ்சிபுரம், சென்னை மாவட்டங்கள் உள்ளன (விளக்கப்படம் 1.11). தமிழ்நாட்டின் 8 மாவட்டங்களில் தனிநபர் வருமானம் மாநில சராசரியான ரூ.2.78 லட்சத்துக்கும் அதிகமாக உள்ளது. இத்தகைய உயர் செயல்திறம் கொண்ட மாவட்டங்களின் தனிநபர் வருமானம் தெலங்கானா, ஹரியானா, கர்நாடகம் உள்ளிட்ட முதன்மையான சில மாநிலங்களை விஞ்சியுள்ளது.

**விளக்கப்படம் 1.11: தமிழ்நாட்டில் மாவட்டவாரியான தனிநபர் வருமானம் (ரூ. நடப்பு விலையில்) (2022-23)**




*ஆதாரம்: மாவட்ட வருமான மதிப்பீடுகள், பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை, தமிழ்நாடு.*


1.38 எஞ்சியுள்ள 30 மாவட்டங்களின் தனிநபர் வருமானம் தமிழ்நாட்டின் சராசரி தனிநபர் வருமானத்தைவிடக் குறைவாகவே உள்ளது. திருவாரூர் மாவட்டம் ரூ.1.48 லட்சத்துடன் தமிழ்நாட்டில் மிகக் குறைவான தனிநபர் வருமானத்தைக் கொண்டுள்ளது. அதையடுத்து விழுப்புரம், பெரம்பலூர் உள்ளன. என்றபோதும், இந்த மாவட்டங்களின் தனிநபர் வருமானம் இதே ஆண்டில், பீகார், சத்தீஸ்கர், மத்தியப் பிரதேசம், ஒடிசா, மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்களின் சராசரியைவிட அதிகமாகவே உள்ளன.

## 1.8 தமிழ்நாட்டின் பொருளாதாரக் கண்ணோட்டம் – 2024-25

1.39 வலுவான தொழில்துறை, உட்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவை காரணமாக, 2024-25இல், தமிழ்நாடு வலுவான பொருளாதார வளர்ச்சியைப் பெற்று, இந்தியாவின் முன்கணிக்கப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தியான 6.5%ஐ விஞ்சிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024இல் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிக்கும் பொருட்டு, குறைகடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024, பொது-தனியார் கூட்டாண்மைக் கொள்கை உள்ளிட்ட பல்வேறு கொள்கைகளைத் தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

1.40 தமிழ்நாட்டின் மாதாந்திர மின் தேவைத் தரவு, 2024-25இன் பல மாதங்களில் தமிழ்நாட்டின் மின்னாற்றல் தேவையானது (மில்லியன் கிலோவாட் மணிநேர அலகில்) 2023-24ஐவிட அதிகமாக உள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது (விளக்கப்படம் 1.12).

**விளக்கப்படம் 1.12: மின்னாற்றல் தேவை (மில்லியன் கிலோவாட் மணிநேர அலகில்)**




*ஆதாரம்: இந்தியப் பொருளாதாரக் கண்காணிப்பு மையம் மற்றும் மத்திய எரிசக்தி ஆணையம்.*

## 1.9 முடிவுரை

1.41 நடப்புப் போக்குகள் மற்றும் பொருளாதாரக் கணிப்புகள் அடிப்படையில், தமிழ்நாடு எதிர்வரும் ஆண்டுகளில் வலுவான வளர்ச்சியைக் காணும் நிலையில் உள்ளதை அறிய முடிகிறது. மேற்கொள்ளப்படவிருக்கும் ரூ.47,681 கோடி மூலதனச் செலவினம், குறிப்பிடத்தக்க உறுதிசெய்யப்பட்டுள்ள முதலீடுகள், ஆதரவான கொள்கைச் சூழல் ஆகியவற்றால் தமிழ்நாட்டின் பொருளாதாரம் தேசிய வளர்ச்சி வீதத்தை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது. மூலதனச் செலவினமும் தொழில்துறை முதலீடுகளும் முடுக்கிவிடப்படும்போது, 2024-25இல் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியின் வளர்ச்சி 8%க்கும் அதிகமாக இருக்கும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் பொருளாதாரம் முந்தைய

வளர்ச்சி விகிதங்களைவிட 1% அதிகரிக்கும்போது, 2024-24இல் வளர்ச்சியானது 9% ஐவிட அதிகமாக இருக்கும். இந்த முன்கணிப்புக்கு, 2022-23 மற்றும் 2023-24இல் தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி தேசிய சராசரியைவிட அதிகமாக இருப்பது வலுசேர்க்கிறது. இது பொருளாதாரம் வலுவான வளர்ச்சிப் பாதையில் செல்வதைக் காட்டுகிறது.

1.42 பெருமளவிலான உட்கட்டமைப்புத் திட்டங்கள், தொழில்துறை வளர்ச்சி, அந்நிய முதலீடுகள் ஆகியவை பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்ந்து முடுக்கிவிடும் என்பதால், தமிழ்நாடு ஏறத்தாழ 9% உண்மை பொருளாதார வளர்ச்சி வீதத்தையும் 5% பணவீக்க வீதத்தையும் குறுகிய கால அளவில் தக்கவைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நடுத்தரக் கால அளவில் 4% பணவீக்க வீதத்துடன் 8% வரை, பொருளாதார வளர்ச்சி வீதம் இருக்குமெனில், அது தொழில்துறை, வேளாண்மை, சேவைத் துறை சீர்திருத்தங்கள் மூலம் முடுக்கிவிடப்பட்ட நீண்டகால நீடித்த வளர்ச்சியைக் குறிக்கும். முதலீடுகள் முதிர்வு, நிலைத்த பொருளாதார நிலை ஆகியவற்றால் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதை வலுவாக இருந்து, தேசியப் பொருளாதாரத்துக்குக் கணிசமான பங்களிப்பைத் தரும்.

அத்தியாயம் 2

# விலைகள் மற்றும் பணவீக்கம்

## 2.1 அறிமுகம்

2.1 விலைக் குறியீடு என்பது பொருளாதாரத்தில் பொருள்கள் மற்றும் சேவைகளின் ஒட்டுமொத்த விலையை அளவிடப் பயன்படும் ஒரு கருவியாகும். இந்தப் பொருள்கள் மற்றும் சேவைகளின் விலைகள் காலப்போக்கில் அதிகரித்து, மக்களின் வாங்கும் சக்தியைக் குறைக்கும் வீதமே பணவீக்கம் என்பதாகும். பொருள்களின் தேவை அதிகரிப்பு, பணப்புழக்கம் அதிகரிப்பு, பன்னாட்டு அளவில் வர்த்தகம் செய்யப்படும் கச்சா எண்ணெய் போன்ற பொருள்களின் விலை உயர்வு, இறக்குமதிச் செலவு அதிகரிப்பு, அந்நியச் செலாவணிச் சந்தையில் தேசிய நாணயத்தின் மதிப்பு (ரூபாய்) சரிவு, இயற்கைப் பேரிடர்கள் மற்றும் போர்கள் போன்ற புவிசார் அரசியல் நிகழ்வுகள் பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்யும் காரணிகளாகும்.

2.2 பொதுவாக, பணவீக்கம் (அதாவது, சில்லறைப் பணவீக்கம்) நுகர்வோர் விலைக் குறியீட்டால் (CPI) அளவிடப்படுகிறது. விலைகள் அதிகரிப்பு மக்களின் வாங்கும் சக்தியைக் கணிசமாகக் குறைக்கும். இதனால் சேமிப்புகளின் அளவு குறைந்து, சேமிப்புகள் மீதான வட்டி வருவாயும் குறையும். அதேசமயம், ஊக முதலீடுகளை இது கவர்ச்சிகரமானதாக மாற்றும். இதனால், நிதிப் பாதுகாப்பு குறைவாக உள்ள குறைந்த வருவாய்ப் பிரிவினர் தங்கள் வாழ்க்கைத்தரத்தைப் பேணுவதில் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும். மிதமான பணவீக்கம் பொருளாதார வளர்ச்சியின் ஒரு வழமையான அம்சமாக இருந்தாலும் தொடர் உயர் பணவீக்கம் பெயரளவு வட்டிவிகிதங்களில் அதிகத் தாக்கத்தை ஏற்படுத்தி ஒட்டுமொத்தப் பொருளாதார நிலைத்தன்மைக்குச் சவாலாக அமையும்.

2.3 பணவியல் கொள்கையின் முதன்மை இலக்கே விலைகளை நிலையாக வைப்பதுதான். விலைகள் நிலைத்தன்மையை எட்டுவதற்கான தெளிவான மற்றும் அளவிடக்கூடிய தன்மையை வழங்குவதே இலக்குப் பணவீக்கமாகும். இது பொருளாதார வளர்ச்சியின் நிலை, பொருளாதாரக் கட்டமைப்பு மற்றும் நாட்டின் நிதிநிலைமை போன்ற காரணிகளால் தாக்கத்துக்கு உள்ளாகிறது. ஒன்றிய அரசானது இந்திய ரிசர்வ் வங்கியுடன் ஆலோசித்து, ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நுகர்வோர் விலைக் குறியீட்டெண் அடிப்படையில் பணவீக்க இலக்கை நிர்ணயிக்கிறது. தற்போது, பணவீக்க இலக்கு 4% ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்பளவு வரம்பு ±2 ஆகும்.

2.4 பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் மாநில அரசுகளைக் காட்டிலும் ஒன்றிய அரசுக்கு பெரும் பங்கு இருக்கிறது. ஒட்டுமொத்தப் பொருள் அளிப்பைக் காட்டிலும் ஒட்டுமொத்தத் தேவை அதிகரிக்கும்போது தேவை அடிப்படையிலான பணவீக்கம் அதிகரிக்கும். இது பெரும்பாலும் அரசின் அதிகப்படியான செலவினம் மற்றும் வீட்டுச் செலவின அதிகரிப்பால் ஏற்படுவதாகும். இத்தகைய பணவீக்கத்தைக் கட்டுப்படுத்த, அரசாங்கங்கள் (குறிப்பாக, ஒன்றிய அரசு) வரிகளை உயர்த்தித் தேவைகளைக் குறைக்க முடியும். கூடுதலாக, பொதுச் செலவினங்களைக் குறைப்பது பொருள்கள் மற்றும் சேவைகளுக்கான தேவையைக் குறைக்க உதவுகிறது. இது தனிப்பட்ட வருமானத்தையும் நுகர்வையும் குறைக்கிறது. பணவீக்க அழுத்தங்களைச் சமாளிக்க அரசுகள் பணப் பரிமாற்றக் கொடுப்பனவுகளைக் குறைக்க முடியும். பொருள் அளிப்புக் கட்டுப்பாடுகளால் பொருள்களுக்கான தட்டுப்பாடு ஏற்படும் சமயங்களில் மாநில அரசுகள் பொது விநியோக அமைப்புகள் மூலம் தட்டுப்பாடுகளைக் குறைத்து, பணவீக்கம் கட்டுப்பாட்டில் இருக்க இடையீடு செய்ய முடியும். நடுத்தரக் கால மற்றும் நீண்ட கால நோக்கில் மாநில அரசுகள் அளிப்பு முறைகளை ஒழுங்குபடுத்துவதன் மூலமும், உள்கட்டமைப்பு மற்றும் சரக்குப் போக்குவரத்துகளை மேம்படுத்துவதன் மூலமும் பணவீக்கத்தைச் சமாளிக்க முடியும்.


2.5 சில சமயங்களில், பன்னாட்டுக் காரணிகளால் பணவீக்கம் ஏற்பட்டு ஒன்றிய, மாநில அரசுகளின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. பன்னாட்டு அளவில் நடைபெறும் நிகழ்வுகள் பரந்த அளவில் சீர்குலைவுகளை ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருக்கின்றன. இது தற்போதைய சூழலில் பொருத்தமாக இருக்கிறது. கோவிட்-19 பெருந்தொற்றால் உலகளாவிய அளிப்புச் சங்கிலியில் ஏற்பட்ட சீர்குலைவுகள், ரஷ்யா – உக்ரைன் போரால் உலக அளவில் ஏற்பட்ட தாக்கங்கள் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும். இருப்பினும், 2023இன் இரண்டாம் பகுதியிலும், 2024இன் முற்பகுதியிலும் கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி (இஸ்ரேலின் பதிலடி நடவடிக்கை மற்றும் சீனாவின் குறைவான தேவை) மற்றும் கடுமையான பணவியல் கொள்கைகள் காரணமாகப் பணவீக்கம் குறைந்தது. இத்தகைய பின்னணியில் தமிழ்நாட்டின் பணவீக்கப் போக்குகளை இந்த அத்தியாயம் ஆராய்கிறது.

## 2.2 தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம்

2.6 சில்லறைப் பணவீக்க அதிகரிப்பு எப்போதுமே கொள்கை வகுப்பாளர்களுக்குக் கவலை அளிக்கும் விஷயமாகும். இது சமூகத்தில் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு மிகப் பெருமளவிலான நெருக்கடியை ஏற்படுத்துகிறது. ஆண்டு நுகர்வோர் விலைக் குறியீட்டெண் (சில்லறை) பணவீக்கம் தமிழ்நாடு மற்றும் இந்திய அளவில் 2019-20 முதல் 2024-25 வரை உள்ளதை விளக்கப்படம் 2.1 காட்டுகிறது[15]. இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாட்டின் சராசரி வளர்ச்சி விகிதம் (5.8%) இந்திய சராசரியைவிட (5.6%) அதிகமாக இருந்தது. குறிப்பாக, 2024-25இல் மாநிலத்தின் பணவீக்கம் 4.8% ஆகக் குறைந்தது. இதே காலகட்டத்தில், இந்திய சராசரி 4.9% ஆக இருந்தது.

*[15] இதே காலகட்டத்தில், தமிழ்நாட்டின் GSDP பணமதிப்பிறக்கி அடிப்படையிலான பணவீக்கமானது இந்தியப் பணவீக்க (பணமதிப்பிறக்கி அடிப்படையிலான GDP) அளவைவிடச் சற்று அதிகமாக இருந்தது. மாநிலத்தின் மொத்த விலைக் குறியீட்டெண் (WPI) பணவீக்கமும் அதிகமாக இருந்தது.*


**விளக்கப்படம் 2.1: தமிழ்நாடு Vs இந்தியா நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம் (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

2.7 சில்லறைப் பணவீக்க மேலாண்மையில் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்பட்டதால், 20 முதன்மை மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் 2023-24இல் மிகக் குறைவான அளவில் சில்லறைப் பணவீக்கம் நிலவிய மாநிலங்களுள் 8ஆவது இடத்தைப் பிடித்துள்ளது (அட்டவணை 2.2). இதே காலகட்டத்தில் இந்திய சராசரியான 5.36%ஐவிட அதிகமான பணவீக்கம் ஹரியானாவில் 6.60% என்ற அளவில் இருந்தது. இதற்கு அடுத்தபடியாக, ஒடிசா மாநிலத்தில் 6.54% ஆக இருந்தது. ராஜஸ்தானில் பணவீக்கம் 6.39% ஆக இருந்தது. இதற்கு நேர்மாறாக, சத்தீஸ்கர் மாநிலத்தில் மிகக் குறைவான அளவாக 3.43% பணவீக்கம் நிலவியது. இந்த ஒரு மாநிலம்தான் ரிசர்வ் வங்கி நிர்ணயித்த 4% பணவீக்க அளவைவிடக் குறைவான விகிதத்தைப் பராமரித்துள்ளது.


**விளக்கப்படம் 2.2: இந்தியாவின் முதன்மை மாநிலங்களில் சில்லறைப் பணவீக்கம் 2023-24 (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*


2.8 விளக்கப்படங்கள் 2.3 மற்றும் 2.4இல் காட்டப்பட்டுள்ளபடி, 2019-20 முதல் 2024-25 வரையான காலத்தில் தமிழ்நாடு மற்றும் இந்திய சராசரிக்கு இடையிலான வேறுபாடு கிராமப்புறப் பணவீக்கத்தால் உந்தப்பட்டதாகத் தெரிகிறது. அதே வேளையில், நகர்ப்புரப் பணவீக்கமானது தேசியப் போக்குடன் ஒத்துப்போகிறது (சில ஆண்டுகள் தவிர). கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டின் கிராமப்புற மற்றும் நகர்ப்புர சராசரிப் பணவீக்கமானது இந்திய அளவைவிடக் குறைவாகவே இருந்தது குறிப்பிடத்தக்கது.

**விளக்கப்படம் 2.3: நகர்ப்புர நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம் (%) தமிழ்நாடு Vs இந்தியா**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்v*


**விளக்கப்படம் 2.4: கிராமப்புற நுகர்வோர் விலைக் குறியீட்டெண் பணவீக்கம் (%) தமிழ்நாடு Vs இந்தியா**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

2.9 பணவீக்கப் புள்ளிவிவரங்கள் சார்ந்த எந்த ஒரு பகுப்பாய்வும் பொருள்களின் தொகுப்பு விலைகளைப் புரிந்துகொண்டு கணக்கிடாமல் முழுமை அடையாது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண்களானது மாநிலம்சார் பொருள்களின் தொகுப்பை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படுகிறது. விளக்கப்படம் 2.5இல் குறிக்கப்பட்டுள்ளபடி, ஒவ்வொரு மாநிலமும் ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறு அளவிலான மதிப்பீட்டு அளவை வழங்குகின்றன. எடுத்துக்காட்டாக, மகாராஷ்டிரத்தின் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தொகுப்பில் உணவு, பானங்கள் 40.6%, குஜராத்தின் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தொகுப்பில் 47% பங்களிக்கின்றன. இந்திய அளவில் நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தொகுப்புடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டில் உணவு, பானங்கள், மது, எரிபொருள்களுக்கான மதிப்பீட்டுடெண் குறைவாக உள்ளது. அதே நேரத்தில், இந்திய அளவில் வளம் மிக்க மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்கிறது (தனிநபர் வருமான அடிப்படையில்) வீட்டு வசதி மற்றும் இதர சேவைகளான சுகாதாரம், கல்வி, பொழுதுபோக்கு ஆகியவற்றுக்கு இங்கு அதிக மதிப்பீட்டெண் அளிக்கப்பட்டுள்ளது.


**விளக்கப்படம் 2.5: நுகர்வோர் விலைக் குறியீட்டெண் தொகுப்பில் இடம்பெறும் பொருள்கள் (இந்தியா மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில்)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (2015), நுகர்வோர் விலைக் குறியீட்டெண்: திருத்திய மதிப்பீட்டின்படியான மாற்றங்கள் (அடிப்படை ஆண்டு 2012-100)*

2.10 விளக்கப்படம் 2.6ஐப் பார்க்கும்போது தமிழ்நாட்டின் ஊரகத் தொகுப்பில் உணவு பானங்களுக்கான மதிப்பீட்டெண் 52.7% ஆக, அதாவது இந்திய சராசரியான 54.2%ஐவிடக் குறைவாக இருப்பது தெரியவருகிறது. அதேசமயம், இதர அம்சங்களுக்கான (சேவைகள் துறை) மதிப்பீட்டு அளவு தமிழ்நாட்டில் 31.75 ஆகவும், இந்திய அளவில் 27.3% ஆகவும் இருப்பதைக் காணலாம். உண்மையில், தமிழ்நாட்டின் ஊரக நுகர்வுப் போக்குகள் இதர துறைகள் பிரிவுக்கு அதிக மதிப்பீட்டெண்ணை வழங்கி, சம அளவில் இருக்கும் மாநிலங்களான மகாராஷ்டிரம், கர்நாடகம், தெலங்கானா மற்றும் குஜராத்தைவிட அதிகமாக இருப்பதைக் காணலாம்.


**விளக்கப்படம் 2.6: நுகர்வோர் விலைக் குறியீட்டெண் ஊரகத் தொகுப்பு *(இந்தியா மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநிலங்களில்)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (2015), நுகர்வோர் விலைக் குறியீட்டெண்: திருத்திய மதிப்பீட்டின்படியான மாற்றங்கள் (அடிப்படை ஆண்டு 2012-100). *ஊரகத் தொகுப்பில் வீட்டு வசதிக்கு அளிக்கப்பட்ட மதிப்பீடு பூஜ்ஜியமாகும்.*

2.11 மேலே தரப்பட்டிருக்கும் விவரங்களிலிருந்து, தமிழ்நாட்டு நுகர்வோர் விலைக் குறியீட்டுத் தொகுப்பில், இந்திய அளவிலும், தமிழ்நாட்டுக்கு இணையான பிற மாநிலங்களை ஒப்பிடும்போதும் தொழிலாளர் சேவைக்கான மதிப்பீட்டெண் அதிகமாக உள்ளதை அறிந்துகொள்ளலாம். எனவே, மாநிலப் பணவீக்கத்தின் போக்கில் தொழிலாளர் ஊதியம் மிக வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. தமிழ்நாட்டின் தொழிலாளர் ஊதியங்கள் ஒப்பீட்டளவில் அதிகம் என்பதை விளக்கப்படம் 2.7 காட்டுகிறது. ஆகவே, பணவீக்கத்தின் போக்கை ஆராயும் எந்தப் பகுப்பாய்வும், மாநிலத்தின் நுகர்வுக் கலாச்சாரம் கட்டமைக்கப்பட்ட விதத்தையும், அதே வேளையில் அதை இயக்கும் உள்ளீட்டுச் செலவுகளையும் கணக்கில்கொள்ள வேண்டியது அவசியம்.

**விளக்கப்படம் 2.7: மாநிலவாரியான அன்றாட சராசரி ஊதியம்**




*ஆதாரம்: தொழிலாளர் செயலகம், ஆகஸ்ட் 2024இல் ஊரக – வேளாண்சாராத தொழிலாளர்களுக்கான (ஆண்) ஊதியம், மத்தியத் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம், இந்திய அரசு.*

2.12 இந்தச் சூழலில், மின்சாரம், போக்குவரத்து மானியங்கள் போன்ற தமிழ்நாடு அரசின் கொள்கைசார் நடவடிக்கைகள் உள்ளீட்டுச் செலவுகளைக் குறைக்க உதவுகின்றன. பணவீக்க அழுத்தங்களைக் குறைப்பதில் இந்நடவடிக்கைகள் திறம்பட உதவுவதால், சிறப்புக் கவனம் தரப்படுவதற்குத் தகுதியானவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக, மாநிலத்தின் தனித்துவமான, அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் 2.25 கோடி குடும்பங்களுக்கு, தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்ட அளவைவிட அதிகளவு விலையில்லா அரிசி மானிய விலையில் சமையல் எண்ணெய், பருப்பு போன்ற அத்தியாவசிய பொருள்களை வழங்குகிறது. பணவீக்கத்தைக் கையாள்வதில் இந்த நடவடிக்கை மிகவும் முக்கியமானதாகும். மாநில அரசு ஒவ்வொரு வீட்டுக்கும் 100 யூனிட் கட்டணமில்லா மின்சாரத்தை வழங்குகிறது. இவற்றில் சில நடவடிக்கைகள் பொருள்களின் விலைவாசியில் தாக்கத்தை ஏற்படுத்திப் பணவீக்கத்தைக் கட்டுக்குள் வைத்திட உதவும் அதே வேளையில், பிற நடவடிக்கைகள் வெகுமக்களின் வாங்கும் திறனை அதிகரிப்பதில் உதவுகின்றன.

## 2.3 குழுவாரியான பணவீக்கம்

2.13 அட்டவணை 2.1இல் காட்டியுள்ளபடி, பெருந்தொற்றைத் தொடர்ந்து தமிழ்நாட்டில் எரிபொருள் மற்றும் மின்சாரம் சார்ந்த பணவீக்கம் 2021-22இல் 17%, 2022-23இல் 16.6% ஆக அதிகரித்தது. தேசிய அளவில் இது முறையே 11.3%, 10.4% ஆக இருந்தது. எனினும், உலக எரிபொருள் விலையில் 2023-24இல் ஏற்பட்ட சரிவால் சில்லறை எரிபொருள் மற்றும் மின்சாரம் சார்ந்த பணவீக்கம் இந்தியாவில் 1.2% ஆக வீழ்ந்தது. இந்த விலை மாற்றங்களுக்கு எதிர்வினையாற்றும் வகையில், ஒன்றிய அரசு விலைக் குறைப்புகளை அறிவித்தது. 2023 செப்டம்பரில், வீடுகளில் பயன்படுத்தப்படும் சமையல் எரிவாயு உருளை ஒன்றின் விலையில் ரூ.200 குறைக்கப்பட்டது, 2024 மார்ச்சில் மானியமற்ற உருளை ஒன்றின் விலையில் ரூ.100 குறைக்கப்பட்டது.

**அட்டவணை 2.1 குழுவாரியான y-o-y பணவீக்கம்: தமிழ்நாடு & இந்தியா**

| ஆண்டு | உணவு & பானங்கள் | பான், புகையிலை | ஆடைகள் & காலணிகள் | வீட்டுவசதி* | எரிபொருள் & மின்சாரம் | இதர |
|---|---|---|---|---|---|---|
| **தமிழ்நாடு** | | | | | | |
| **மதிப்பீட்டெண்** | **43.62** | **2.2** | **5.4** | **12.87** | **5.15** | **30.75** |
| 2019-20 | 7.7 | 3.1 | 2.0 | 4.6 | -0.6 | 4.7 |
| 2020-21 | 9.9 | 12.6 | 3.9 | 4.3 | 7.4 | 8.5 |
| 2021-22 | 2.6 | 2.6 | 8.4 | 4.5 | 17.0 | 5.4 |
| 2022-23 | 4.8 | 7.4 | 10.0 | 3.7 | 16.6 | 6.0 |
| 2023-24 | 7.4 | 2.0 | 4.1 | 2.7 | 3.3 | 4.6 |
| **சராசரி** | **6.3** | **5.5** | **5.7** | **4** | **8.7** | **5.8** |
| **இந்தியா** | | | | | | |
| **மதிப்பீட்டெண்** | **45.86** | **2.38** | **6.53** | **10.07** | **6.84** | **28.32** |
| 2019-20 | 6.0 | 4.2 | 1.6 | 4.5 | 1.3 | 4.4 |
| 2020-21 | 7.3 | 9.9 | 3.4 | 3.3 | 2.7 | 6.6 |
| 2021-22 | 4.2 | 4.6 | 7.2 | 3.7 | 11.3 | 6.7 |
| 2022-23 | 6.7 | 2.2 | 9.2 | 4.3 | 10.4 | 6.3 |
| 2023-24 | 7.0 | 3.6 | 4.7 | 3.9 | 1.2 | 4.4 |
| **சராசரி** | **6.2** | **4.9** | **5.2** | **3.9** | **5.4** | **5.7** |

*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம். * நகர்ப்புர வீட்டுவசதிப் பணவீக்கம்*

2.14 பெருந்தொற்றுக்குப் பிறகு, இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் ஆடைகள் மற்றும் காலணிகள் சார்ந்த பணவீக்கம் 2021-22, 2022-23 ஆகிய ஆண்டுகளில் அதிகரித்தது, ஆனால் 2023-24இல் சற்றுக் குறைந்தது. 2021-22க்குப் பிறகு தமிழ்நாட்டில் பணவீக்க அழுத்தம் குறைந்தது. குறிப்பாக, 2020-21இல் 9.9% ஆக இருந்த உணவு மற்றும் பானம்சார் பணவீக்கம் 2021-22இல் 2.6% ஆகக் குறைந்தது. என்றாலும், இந்தியா முழுவதுமான போக்கைப் பிரதிபலிக்கும் வகையில் இது 2022-23இல் 4.8% ஆகவும், 2023-24இல் 7.4% ஆகவும் அதிகரித்தது. இதற்கிடையே, 2023-24இல் தமிழ்நாட்டில் வீட்டு வாடகைப் பணவீக்கம் 2.7% ஆகக் குறைந்தது. இந்தியாவில் இது 3.9% ஆக இருந்தது.

## 2.4 அடிப்படைப் பணவீக்கம்


2.15 உணவு மற்றும் எரிசக்தி போன்ற நிலையற்ற துறைகளைத் தவிர்த்து சரக்குகள் மற்றும் சேவைகளின் விலைகளில் ஏற்படும் மாற்றங்களை அடிப்படைப் பணவீக்கம் அளவிடுகிறது[16]. இந்த ஏற்ற இறக்கமான விலைகளை நீக்குவதன் மூலம், அடிப்படைப் பணவீக்கம் நீண்ட காலப் பணவீக்கப் போக்குகளின் நிலையான தன்மையை வழங்குகிறது[17]. 2019-20இலிருந்து தமிழ்நாடு மற்றும் இந்தியாவுக்கான அடிப்படைப் பணவீக்கப் போக்குகளை விளக்கப்படம் 2.8 விளக்குகிறது. 2019-20இல் அடிப்படைப் பணவீக்கமானது தமிழ்நாட்டில் 4.31% ஆகவும் இந்தியாவில் 4% ஆகவும் இருந்தது. இருப்பினும், 2021-22இல் தமிழ்நாட்டில் இது 5.33% ஆக அதிகரித்தது, இந்தியாவில் இது 6.0% ஆனது. தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட விலைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளால் 2023-24இல் அடிப்படைப் பணவீக்கம் ஓரளவு குறைந்து 3.93% ஆனது, இந்தியாவில் இது 4.3% என்ற அளவில் இருந்தது[18]. தமிழ்நாட்டில் அடிப்படைப் பணவீக்கம் குறைந்தது என்றாலும், முதன்மைப் பணவீக்கம் 5.4% என்ற அளவிலேயே இருந்தது. இதற்குக் காரணம் உணவு, பானத்தின் பணவீக்கம் 7.4% ஆக அதிகரித்ததாகும்.

*[16] விலை உயர்ந்தாலும் இந்தப் பொருள்களுக்கான தேவையில் பெரிய மாற்றம் ஏற்படாது. மேலும் எண்ணெய், எரிவாயு, கோதுமை, சோளம் போன்றவை செலாவணியில் வர்த்தகம் செய்யப்படுகின்றன. எரிசக்தி மற்றும் உணவுப் பொருள்கள் மீதான ஊக வணிகம் இவற்றின் விலையில் நிலையற்ற தன்மையை ஏற்படுத்துவதால் பணவீக்கம் அதிகரிக்கிறது. அடிப்படைப் பணவீக்கமானது உணவு மற்றும் பானங்கள் தவிர்த்த அனைத்துப் பொருள்கள் மீதான மதிப்பீட்டுப் புள்ளிகளுக்கேற்பக் கணக்கிடப்படுகிறது. நுகர்வோர் விலைக் குறியீட்டெண் கணக்கீட்டில் எரிபொருள் மற்றும் மின்சாரம் உள்ளிட்ட பொருள்களின் மதிப்பீடு பயன்படுத்தப்படுகிறது.*

*[17] இந்தியா உள்பட உலகெங்கிலும் உள்ள மத்திய வங்கிகள், பணவியல் கொள்கை தொடர்பான முடிவெடுப்பதில் அடிப்படைப் பணவீக்கத்தைச் சார்ந்துள்ளன. ஏனெனில், இது குறுகியகால அளிப்பு அதிர்வுகளை நீக்கிய அடிப்படை விலைப் போக்குகளைப் பிரதிபலிக்கிறது.*

*[18] பணவீக்க அழுத்தங்களைக் கட்டுப்படுத்த இந்திய ரிசர்வ் வங்கி பிப்ரவரி 2022 மற்றும் பிப்ரவரி 2023 இடையிலான காலகட்டத்தில் 250 அடிப்படைப் புள்ளிகளைச் சிறிதுசிறிதாக உயர்த்தி, ரெப்போ விகிதத்தை 4%இலிருந்து 6.5% ஆக அதிகரித்தது. இதுவரை ரெப்போ விகிதம் 6.5% என்ற அளவிலேயே இருந்தது. பிப்ரவரி 7, 2025இல் ரிசர்வ் வங்கி ரெப்போ விகிதத்தை 25 அடிப்படைப் புள்ளிகள் குறைத்ததால் வட்டி விகிதம் 6.25% ஆகியுள்ளது.*

**விளக்கப்படம் 2.8: தமிழ்நாடு & இந்தியாவில் அடிப்படைப் பணவீக்கம் (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

## 2.5 தமிழ்நாட்டில் உணவு & இதர பணவீக்கம் (%)

2.16 தமிழ்நாட்டின் பணவீக்கப் போக்கைத் தீர்மானிப்பதில் 75% பங்கு வகிக்கும் இரண்டு முக்கியப் பிரிவுகளான உணவு, பானங்கள், இதர பொருள்கள் ஆகியவற்றில் இந்தப் பகுதி கவனம்செலுத்துகிறது. வெப்ப அலைகள், கணிக்க இயலாத மழைப்பொழிவு உள்ளிட்ட காலநிலை மாற்றத்தால் உணவுப் பொருள்களின் விலையில் மாற்றம் ஏற்படுகிறது. தமிழ்நாட்டில் 2023-24இல் உணவு, பானங்கள் பணவீக்கம் மற்ற பிரிவுகளை மிஞ்சி 7.4% என்னும் அளவுக்கு உயர்ந்தது. இந்த உயர்வுக்குக் காரணம் அசாதாரணத் தட்பவெப்பச் சூழலால் வேளாண் உற்பத்தி குறைந்ததே ஆகும். இந்தக் காலகட்டத்தில், அட்டவணை 2.2இல் குறிப்பிட்டுள்ளதுபோல் தானியங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருள்களின் பணவீக்கம் ஊரகப் பகுதியிலும் நகர்ப்புரத்திலும் இரட்டை இலக்கத்தில் இருந்தது. முட்டை விலை 6.4% உயர்ந்தது. பணவீக்கம் உயரும் போக்கு 2024-25இலும் தொடர்ந்தது. தானியங்கள், காய்கறிகள், பருப்பு வகைகளின் பணவீக்கம் 2025இலும் இரட்டை இலக்கத்தில் உள்ளது.


**அட்டவணை 2.2: தமிழ்நாட்டில் உணவு பணவீக்கத்தின் கூறுகள்**

| ஆண்டு | ஊரகம் | நகர்ப்புரம் | இணைந்தது | ஊரகம் | நகர்ப்புரம் | இணைந்தது |
|---|---|---|---|---|---|---|
| | தானியங்கள் மற்றும் பொருள்கள் | | | இறைச்சி மற்றும் மீன் | | |
| 2021-22 | 0.8 | 0.9 | 0.8 | 5.5 | 5.4 | 5.5 |
| 2022-23 | 5.1 | 4.6 | 4.9 | 1.6 | 0.5 | 1.1 |
| 2023-24 | 11.4 | 9.2 | 10.3 | 3.5 | 3.4 | 3.4 |
| 2024-25 ஜனவரி வரை | 10.6 | 10.9 | 10.8 | 5.0 | 5.3 | 5.2 |
| **ஆண்டு** | **முட்டை** | | | **பால் மற்றும் பொருள்கள்** | | |
| 2021-22 | 4.0 | 3.8 | 4.0 | 1.9 | -2.2 | -0.4 |
| 2022-23 | 2.6 | 3.7 | 3.1 | 4.2 | 4.0 | 4.1 |
| 2023-24 | 9.0 | 8.4 | 8.7 | 6.0 | 4.7 | 5.3 |
| ஜனவரி வரை | 5.7 | 6.7 | 6.2 | 2.1 | 1.6 | 1.8 |
| **ஆண்டு** | **எண்ணெய்வித்துகள் மற்றும் கொழுப்புகள்** | | | **பழங்கள்** | | |
| 2021-22 | 23.9 | 18.7 | 21.2 | 1.4 | -0.2 | 0.5 |
| 2022-23 | 7.7 | 7.5 | 7.6 | -0.8 | -2.1 | -1.6 |
| 2023-24 | -17.7 | -20.4 | -19.0 | 3.7 | 6.2 | 5.1 |
| 2024-25 ஜனவரி வரை | 0.7 | 4.2 | 2.4 | 13.0 | 12.2 | 12.5 |
| **ஆண்டு** | **காய்கறிகள்** | | | **பருப்பு வகைகள்** | | |
| 2021-22 | -6.8 | -1.9 | -4.4 | 3.0 | 1.1 | 2.1 |
| 2022-23 | 2.2 | -0.1 | 1.1 | 2.7 | 3.0 | 2.8 |
| 2023-24 | 18.2 | 20.0 | 19.1 | 19.5 | 21.2 | 20.3 |
| 2024-25 ஜனவரி வரை | 16.4 | 17.4 | 16.9 | 10.6 | 10.0 | 10.3 |
| **ஆண்டு** | **சர்க்கரை** | | | **நறுமணப் பொருள்கள்** | | |
| 2021-22 | 0.3 | 0.6 | 0.5 | 3.7 | 2.8 | 3.3 |
| 2022-23 | 0.9 | 1.4 | 1.1 | 16.3 | 15.1 | 15.7 |
| 2023-24 | 1.7 | 2.6 | 2.2 | 9.5 | 9.6 | 9.5 |
| 2024-25 ஜனவரி வரை | 2.0 | 2.7 | 2.3 | -4.1 | -3.0 | -3.6 |

*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

2.17 இந்த இதர பிரிவானது, நீடித்து உழைக்கும் பொருள்கள், சேவைகளான கல்வி, சுகாதாரம், போக்குவரத்து & தகவல்தொடர்பு, பொழுதுபோக்கு & கேளிக்கை, தனிநபர் பராமரிப்பு மற்றும் வீட்டு உபயோகப் பொருள்கள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது. இந்த இதர பிரிவின் தனிநபர் பராமரிப்பு, கல்வி ஆகியவை தவிர்த்துப் பெரும்பாலான இனங்களின் பணவீக்கம் 2021-22 முதல் 2024-25 வரையில் தொடர்ந்து சரிவடைந்திருக்கிறது (விளக்கப்படம் 2.9). குறிப்பாக, பொழுதுபோக்கு & கேளிக்கைப் பணவீக்கம் 9.3%இலிருந்து 4.5% ஆகக் குறைந்துள்ளது, போக்குவரத்து & தகவல்தொடர்புப் பணவீக்கம் 6.6%இலிருந்து 2.3% ஆகக் குறைந்துள்ளது. சுகாதாரப் பணவீக்கம் 7.0%இலிருந்து 4.2% ஆகக் குறைந்துள்ளது. இதற்கு நேர்மாறாக, தனிநபர் பராமரிப்புப் பணவீக்கம் 2021-22இல் 2.6% இலிருந்து, 2024-25இல் 10.5% எனத் தொடர்ந்து அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில், கல்விப் பணவீக்கம் 4.2%இலிருந்து 5.8% ஆக உயர்ந்துள்ளது.

**விளக்கப்படம் 2.9: தமிழ்நாட்டில் இதர இனங்களின் பணவீக்கம் (%)**




*ஆதாரம் (அடிப்படைத் தரவு): மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

2.18 நாட்டின் பிற பகுதிகளைப் போலவே தமிழ்நாட்டிலும் பணவீக்கம் மக்களுக்குச் சமூகப் பொருளாதார சவால்களை ஏற்படுத்துகிறது. அண்மை ஆண்டுகளில் மாநிலத்தின் நகர்ப்புறப் பணவீக்கம் பெரும்பாலும் தேசிய சராசரிக்கு இணையாகவே உள்ளது. இருப்பினும், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதியில் இந்த நிலை இல்லை. அங்கே பணவீக்கத்தின் சராசரி விகிதம் தேசிய சராசரியைவிட அதிகமாகவே உள்ளது.

2.19 வானிலைச் சிதைவுகள், பன்னாட்டுச் சரக்கு விலைகள் ஆகியவற்றால் மாற்றத்துக்கு உள்ளாகும் குறிப்பிட்ட சில பணவீக்க அழுத்தங்கள் சுழற்சித்தன்மையை/ பருவகாலத்தன்மையைக் கொண்டவை. அதேவேளையில், பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாடு அதிக அளவிலான சமூக பொருளாதார மேம்பாடு அடைந்திருப்பதால் அமைப்புரீதியிலான சவால்களை எதிர்கொள்கிறது. எடுத்துக்காட்டாக, பிற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த நுகர்வில் சேவைகளின் பங்கு அதிகமாக உள்ளது. இதற்கு ஊதியம் உள்ளிட்ட உள்ளீட்டுச் செலவுகளால் இவை மாறுபடுவது காரணமாகும். உண்மையில் இது ஊரக நுகர்வுக்கும் பொருந்துகிறது. இதனால், பணவீக்கத்தைப் பேணுவதில் சில தனித்துவமான சவால்களை தமிழ்நாடு எதிர்கொள்கிறது.

## 2.6 முடிவுரை

2.20 பல மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் பணவீக்க அழுத்தம் அதிகமாக உள்ளது. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்துவதில் பெரும்பங்கு ஒன்றிய அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் கைகளில் இருந்தாலும், மாநில அரசு பணவீக்கத்தின் தாக்கத்தால் ஏழை எளியோர் பாதிக்கப்படாமல் இருக்கப் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. அனைவருக்குமான பொது விநியோக முறை மூலம் உணவு தானியங்களை மானிய விலையில் மக்களுக்கு வழங்குவதன் மூலம் உணவுப் பணவீக்கத்தின் தாக்கத்திலிருந்து ஏழைகள் பாதுகாக்கப்படுகிறார்கள். வலுவான பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பு, மகளிர் விடியல் பயணத் திட்டம் போன்ற புத்தாக்கத் திட்டங்கள் உயரும் பணவீக்கத்தைத் தணித்து நலிவடைந்தவர்களைப் பாதுகாக்கின்றன. ஒன்றிய அரசின் நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டபோதும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம் மூலம் கிராமப்புறப் பணவீக்க அழுத்தங்களைக் குறைப்பதில் அக்கறை காட்டப்படுகிறது. அன்றாடப் பணவீக்கம் தவிர, குடும்பங்களின் நிதிநிலைமையில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தும் உடல்நலம் சார்ந்த செலவுகளைச் சமாளிப்பதற்கு, முதலமைச்சரின் விரிவான சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் போன்ற மிகத் திறம்படச் செயல்படும் பொதுச் சுகாதார அமைப்பு உதவுகிறது. கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் ஒரு முக்கியமான முன்னெடுப்பு, இத்திட்டம் சமூகப் பாதுகாப்பு, அடிப்படை வருமானம் ஆகியவற்றை வழங்குகிறது. இத்திட்டம் வழங்கும் தொகையானது குடும்பத் தலைவிகளுக்கு வீட்டுத் தேவைகளைப் பார்த்துக்கொள்வதற்கு உறுதிசெய்யப்பட்ட வருமானமாகப் பயன்படுகிறது.

அத்தியாயம் 3

# வேளாண்மை

## 3.1 அறிமுகம்

3.1 தமிழ்நாட்டில் வேளாண்மை பெரிதும் பருவமழையையே நம்பியிருப்பதோடு மாநிலத்தில் மிக அதிக அளவில் தண்ணீரைப் பயன்படுத்துவதாகவும் — நீர்வள ஆதாரங்களில் 75% — இருக்கிறது. மாநிலம் சராசரியாக 965.6 மிமீ ஆண்டு மழைப்பொழிவைப் பெற்றாலும் உண்மையான மழைப்பொழிவு ஆண்டுக்காண்டு மாறுபடுவது சில ஆண்டுகளில் வறட்சிக்கும் சில ஆண்டுகளில் வெள்ளப்பெருக்குக்கும் இட்டுச்செல்கிறது. மாநிலத்தின் மேற்பரப்பு நீர் அளவு 24,864 மில்லியன் கன மீட்டராக (MCM) இருப்பினும் பயன்படுத்தக்கூடிய நிலத்தடி நீர் செறிவுத் திறன் 22,423 மில்லியன் கன மீட்டராகவே உள்ளது. மாநிலத்தில் தனிநபருக்குக் கிடைக்கும் நீரின் அளவு 900 கன மீட்டராக உள்ளது. இது தேசிய சராசரியான 2,200 கன மீட்டரைவிட மிகவும் குறைவு.

3.2 2023-24ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் வேளாண்மை மொத்த மாநில மதிப்புக் கூட்டல் நடப்பு விலையில் ரூ.1.5 லட்சம் கோடியாக இருந்தது. உற்பத்தி, மனைவணிகம், கட்டுமானம், வர்த்தகம் மற்றும் பழுதுபார்ப்புச் சேவைகளை அடுத்து, மாநிலத்தின் மொத்த மாநில மதிப்புக் கூட்டலில் வேளாண்மை 6% பங்களிப்புடன் ஐந்தாவது பெரிய துணைத் துறையாக உள்ளது. வேளாண்மையும் அது தொடர்பான செயல்பாடுகளும் 41.1% ஊரக மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்குகின்றன. 2021-22 நிலவரப்படி, மாநிலத்தில் 92.3 லட்சம் விவசாயிகள் 64.6 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடுகின்றனர். அவர்களில் பெரும்பாலானோர், 93.5% (86.3 லட்சம்) குறு சிறு விவசாயிகள் ஆவர். மொத்தச் சாகுபடிப் பரப்பில் 62.7% அவர்கள் வசம் உள்ளது. அவர்கள் வைத்திருக்கும் நிலத்தின் சராசரி அளவு வெறும் 0.7 ஹெக்டேர் ஆகும்[19].

3.3 பாசன நீர் தொடர்பான சவால்கள் இருந்தாலும், தமிழ்நாட்டின் வேளாண் துறை கவனிக்கத்தக்க அளவில் விளைச்சல்களை எட்டியுள்ளது. 2022-23 ஆம் ஆண்டில் எண்ணெய் வித்துகள், நிலக்கடலை, கரும்பு உற்பத்தித் திறனில் நாட்டிலேயே தமிழ்நாடு முதலிடத்தைப் பெற்றுள்ளது. மக்காச்சோள உற்பத்தித் திறனில் இரண்டாமிடத்தையும் நெல் உற்பத்தித் திறனில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது. தொழில்நுட்பப் புதுமைகள், விரிவான பாசனக் கட்டமைப்புகள், சிறந்த சந்தை வாய்ப்புகள் ஆகியவை பயிர்களின் விளைச்சலைப் பெருக்குவதற்குக் குறிப்பிடத்தக்க அளவில் உதவியுள்ளன.


---

[19] *தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு-77ஆவது சுற்றின்போது மேற்கொள்ளப்பட்ட வேளாண் உடைமைகள் பற்றிய காலமுறை அணுகல் ஆய்வு, இந்தியாவில் குறு சிறு விவசாயிகளிடம் உள்ள வேளாண் நிலங்கள் 89.4% என்று குறிப்பிடுகிறது.*

## 3.2 நிலப் பயன்பாட்டு முறை

3.4 தமிழ்நாட்டின் மொத்தப் புவியியல் பரப்பளவு 130.3 லட்சம் ஹெக்டேர். இதில் நிகரப் பயிர்ப்பரப்பு 47.6 லட்சம் ஹெக்டேர் ஆகும். இது மாநிலத்தின் மொத்தப் புவியியல் பரப்பளவில் 36.5%. (விளக்கப்படம் 3.1)

**விளக்கப்படம் 3.1: தமிழ்நாட்டில் நிலப் பயன்பாட்டு முறை (2023-24)**





*ஆதாரம்: பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், தமிழ்நாடு அரசு.*

3.5 மாநிலத்தின் பாசன உட்கட்டமைப்பானது 2,241 கால்வாய்கள், 41,123 ஏரிகள், 4,15,842 குழாய் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள், 14,51,894 திறந்தநிலைக் கிணறுகளை உள்ளடக்கியது. நிகரப் பயிர்ப்பரப்பில் 60% பாசன வசதியைப் பெற்றுள்ளது. மொத்தப் பாசனப் பரப்பில், 20.91% கால்வாய்கள் மூலமாகவும், 13.90% ஏரிகள் மூலமாகவும், மீதமுள்ள 65.19% ஆழ்துளைக் கிணறுகள், திறந்தநிலைக் கிணறுகள் மூலமாகவும் பாசன வசதியைப் பெறுகின்றன.

## 3.3 நீர் இருப்பு

3.6 தமிழ்நாட்டில், 2019-20ஐத் தவிர, ஆண்டு சராசரி மழைப்பொழிவு இயல்பைவிட அதிகமாக உள்ளது (விளக்கப்படம் 3.2). இருப்பினும், காலநிலை மாற்றம் கவலையளிக்கக்கூடிய ஒன்றாகத் தொடர்கிறது. இது சில ஆண்டுகளில் வேளாண் உற்பத்தியையும் விளைச்சலையும் பாதித்துள்ளது. குறிப்பாக, 2024ஆம் ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் 67 நாள்கள் தீவிர வானிலை நிகழ்வுகளைத் தமிழ்நாடு எதிர்கொண்டதால், ஆயிரக்கணக்கான ஹெக்டேர் சாகுபடி நிலங்கள் பாதிப்புக்குள்ளாயின.

**விளக்கப்படம் 3.2: ஆண்டு மழைப்பொழிவு (மிமீ)***




*ஆதாரம்: பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், தமிழ்நாடு அரசு (*ஜூன் தொடங்கி மே வரை)*

3.7 தமிழ்நாட்டின் முக்கிய நீர்த்தேக்கங்களிலிருந்து திறந்துவிடப்பட்ட நீர் விவரங்களை அட்டவணை 3.1 காட்டுகிறது. கடந்த ஆண்டுகளில், மாநிலத்தின் 16

**அட்டவணை 3.1: பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்து திறந்துவிடப்பட்ட நீர் - டிஎம்சியில்***

| நீர்த்தேக்கம் (ஆழம் அடிக்கணக்கில்) | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| மேட்டூர் (120) | 205.1 | 195.7 | 237.3 | 710.7 | 111.3 |
| பவானிசாகர் (105) | 68.9 | 54.9 | 73.7 | 84.7 | 57.3 |
| அமராவதி (90) | 9.8 | 17.3 | 19.3 | 23.1 | 12.2 |
| பெரியாறு (152) | 22.0 | 23.9 | 36.7 | 27.5 | 18.5 |
| வைகை (71) | 16.9 | 16.7 | 32.2 | 30.4 | 22.6 |
| பாபநாசம் (143) | 20.7 | 90.8 | 34.0 | 23.5 | 23.6 |
| மணிமுத்தாறு (118) | 6.5 | 8.2 | 6.6 | 4.4 | 2.8 |
| பேச்சிப்பாறை (48) | 18.8 | 13.9 | 9.4 | 4.7 | 12.6 |
| பெருஞ்சாணி (77) | 11.7 | 7.8 | 11.3 | 7.5 | 6.7 |
| கிருஷ்ணகிரி (52) | 7.0 | 6.1 | 13.9 | 44.8 | 1.3 |
| சாத்தனூர் (119) | 2.2 | 4.5 | 30.0 | 46.8 | 12.9 |
| பூண்டி (35) | 7.5 | 10.3 | 37.3 | 16.9 | 16.6 |
| சோலையாறு (160) | 36.6 | 20.1 | 22.7 | 25.5 | 14.7 |
| பரம்பிக்குளம் (72) | 22.9 | 29.0 | 17.8 | 40.7 | இல்லை |
| ஆழியாறு (120) | 11.5 | 12.0 | 15.4 | 13.9 | இல்லை |
| திருமூர்த்தி அணை (60) | 16.3 | 19.7 | 22.1 | 17.8 | 9.9 |


*ஆதாரம்: நீர்வளத்துறை, தமிழ்நாடு அரசு. * டிஎம்சி = 1 ஆயிரம் மில்லியன் கன அடி.*

பெரிய நீர்த்தேக்கங்களிலிருந்து வெளியேற்றப்பட்ட மொத்த நீரில் மேட்டூர், பவானிசாகர், வைகை, பாபநாசம் ஆகியவற்றின் பங்கு 58-76% ஆகும். 2019-20க்கும் 2023-24க்கும் இடைப்பட்ட காலத்தில், இந்த நீர்த்தேக்கங்களிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் ஆண்டு சராசரி 616 டிஎம்சி ஆகும். திறந்துவிடப்பட்ட மொத்த நீரில் மேட்டூரின் பங்களிப்பு மட்டுமே 47.4%. எனினும், 2023-24இல் மேட்டூர், பவானிசாகர், அமராவதி, வைகை, கிருஷ்ணகிரி, சாத்தனூர் உள்ளிட்ட முக்கிய நீர்த்தேக்கங்களிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் அளவு முந்தைய இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவில் குறைவானதாகும்.

## 3.4 வேதி உரங்கள் மற்றும் மின் நுகர்வு

3.8 தமிழ்நாட்டில் வணிகரீதியிலான வேளாண்மையை விரிவுபடுத்துவதும், முக்கியப் பயிர்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதும் பெருமளவில் வேதி உரங்களையும் நிலத்தடி நீரையும் பயன்படுத்துவதாலேயே சாத்தியமாகின்றன. நீர் இறவை இயந்திரங்களை (Pumpset) மின்மயமாக்குவதும் பாசனத்திற்கு விலையில்லா மின்சாரம் வழங்குவதும் நிலத்தடி நீரைப் பயன்படுத்துவதில் உதவியாக உள்ளன. மாநிலத்தில், 2019-20இல் 9,65,016 மெட்ரிக் டன்னாக இருந்த வேதி உரங்களின் (NPK) நுகர்வு, 2023-24இல் 10,68,934 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. (விளக்கப்படம் 3.3.) உச்சநிலை நுகர்வுடன் ஒப்பிடும்போது 2022-23இல் இது சற்றுக் குறைவானதே ஆகும். நிகரச் சாகுபடிப் பரப்பு குறைந்ததாலும் — குறிப்பாக நெல், பருப்புவகைகள், பருத்திச் சாகுபடி — அங்கக வேளாண்மையை நோக்கிய மாற்றத்தாலும் வேதி உரங்களின் நுகர்வு குறைந்துள்ளது.

**விளக்கப்படம் 3.3: வேதி உரங்கள் மற்றும் மின்நுகர்வு**




*ஆதாரம்: வேளாண்மை-உழவர் நலத் துறை*

3.9 இவ்வாறே, 2019-20இல் 13,811 மில்லியன் யூனிட்களாக இருந்த வேளாண் துறையின் மின் நுகர்வு 2021-22இல் 15,430 மில்லியன் யூனிட்களாக அதிகரித்தது. 2022-23இல் 13,926 மில்லியன் யூனிட் என்ற அளவுக்குக் குறைந்து, 2023-24இல் 17,957 மில்லியன் யூனிட் என்ற அளவை எட்டியது. வேளாண் துறையைத் தொடர்ந்து ஆதரிக்கும் பொருட்டு விலையில்லா மும்முனை மின்சார மானியத்திற்காக 2024-25 ஆம் ஆண்டில் ரூ.7,216 கோடியை மாநில அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

## 3.5 சாகுபடி முறை

3.10 நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, தினைவகைகள் உள்ளிட்ட உணவு தானியங்கள், நிகரச் சாகுபடிப் பரப்பில் 62% வகிக்கும் நிலையில், எண்ணெய் வித்துகள், கரும்பு, பருத்தி போன்ற உணவு தானியமல்லாத பயிர்களும் எஞ்சிய 38% பரப்பில் சாகுபடி செய்யப்படுகின்றன. மொத்தச் சாகுபடிப் பரப்பில் பருப்புவகைகள் மட்டுமே 11.72% வகிக்கின்றன.

3.11 மக்களின் முதன்மை உணவாக அரிசி இருப்பதால் பல ஆண்டுகளாகவே சாகுபடி முறையில் ஆதிக்கம் செலுத்திவருகிறது. 2019-20இல் மொத்தச் சாகுபடிப் பரப்பில் 32.1% ஆக இருந்த நெல் சாகுபடி, 2023-24இல் 34.4% ஆக அதிகரித்துள்ளது. ஒன்றிய அரசால் நிர்ணயிக்கப்படும் குறைந்தபட்ச ஆதரவு விலையோடு, கூடுதலாக மாநில அரசால் அளிக்கப்பட்டுவரும் நெல் கொள்முதல் ஊக்கத் தொகையானது, நெல் பயிரிடுவதை மேலும் ஊக்கப்படுத்தியுள்ளது.

3.12 நெல் சாகுபடி தொடர்ந்து முதன்மை நிலையில் இருந்துவருவதால், பருப்புவகைகள் மற்றும் தினைவகைகளின் சாகுபடிப் பரப்பளவு குறிப்பிடத்தக்க அளவில் குறைந்துள்ளது. 2019-20இல் 4.5 லட்சம் ஹெக்டேராக இருந்த சோளச் சாகுபடிப் பரப்பு, 2023-24இல் 3.54 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது.[20] இதே காலகட்டத்தில், பருப்புவகைகளின் சாகுபடிப் பரப்பளவு 8.24 லட்சம் ஹெக்டேரிலிருந்து 7.17 லட்சம் ஹெக்டேராகக் குறைந்துள்ளது. விதிவிலக்காக, மக்காச்சோளச் சாகுபடிப் பரப்பு 2019-20க்கும் 2023-24க்கும் இடைப்பட்ட காலகட்டத்தில் மேலதிகமாக 1.21 லட்சம் ஹெக்டேர் உயர்ந்துள்ளது.

## 3.6. முக்கியப் பயிர்களின் உற்பத்தியும் உற்பத்தித் திறனும்


3.13 2019-20ஆம் ஆண்டுக்குப் பிறகு, பெருந்தொற்றின் காரணமாகத் தொழிலாளர்கள் கிடைப்பதிலும் சந்தை இணைப்புகள், வேளாண் இடுபொருள் விநியோகம் ஆகியவற்றிலும் ஏற்பட்ட தடங்கலால் நெல் உற்பத்தி 68.81 லட்சம் டன்னாகக் குறைந்தது. எனினும், 2023-24இல் நெல் உற்பத்தி 70.48 லட்சம் டன்னாக அதிகரித்து, மீண்டும் இயல்புநிலையை எட்டியது. அதைப் போலவே, 2019-20இல் 24.76 லட்சம் டன்னாக இருந்த மக்காச்சோள உற்பத்தி, 2023-24இல் 28.36 லட்சம் டன்னாக அதிகரித்தது. அதே காலகட்டத்தில், கரும்பு உற்பத்தி, 141.19 லட்சம் டன்னிலிருந்து 159.27 லட்சம் டன்னாக உயர்ந்தது.

[20] *1970களில், 7 லட்சம் ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பில் சோளம் சாகுபடி செய்யப்பட்டுவந்தது.*

3.14 வேளாண் புள்ளிவிவரங்களின்படி (2024) எண்ணெய் வித்துகள், நிலக்கடலை மற்றும் கரும்பு உற்பத்தித்திறனில் முதலிடத்திலும், மக்காச்சோள உற்பத்தித்திறனில் இரண்டாவது இடத்திலும், நெல் உற்பத்தித்திறனில் மூன்றாவது இடத்திலும் தமிழ்நாடு உள்ளது. 2023-24 உடன் ஒப்பிடுகையில், 2024-25இல் பருத்தி, நிலக்கடலை மற்றும் தினைவகைகளின் உற்பத்தித்திறன் அதிகரித்துள்ளது. எனினும், தென்மேற்குப் பருவமழைக் குறைவாலும், மிக்சாங் புயல் பாதிப்பாலும், டிசம்பர் 2023இல் தென் மாவட்டங்களில் பெய்த மிக அதிக அளவிலான மழைப்பொழிவாலும் நெல், மக்காச்சோளம், பருப்புவகைகள், எண்ணெய் வித்துகள், கரும்பு ஆகியவற்றின் உற்பத்தித்திறன் சற்றே குறைந்துள்ளது.


3.15 தமிழ்நாட்டின் நெல் உற்பத்தித்திறன் 2023-24இல் 3,235 கிகி/ஹெக்டேர் ஆக இருந்தது, இது தேசிய சராசரியான 2,882 கிகி/ஹெக்டேர் என்ற அளவைவிடவும் அதிகமாகும். தமிழ்நாட்டின் எண்ணெய் வித்துகள் உற்பத்தித்திறன் 2,287 கிகி/ஹெக்டேர் ஆக இருந்தது, இது தேசிய சராசரியான 1,314 கிகி/ஹெக்டேர் என்ற அளவைவிடவும் மிகவும் அதிகமாகும் (விளக்கப்படம் 3.4). தமிழ்நாட்டின் கரும்பு உற்பத்தித்திறன் 1,05,000 கிகி/ஹெக்டேர், இதுவும் தேசிய சராசரியான 78,953 கிகி/ஹெக்டேர் என்ற அளவைக்காட்டிலும் அதிகமாகவே உள்ளது (விளக்கப்படம் 3.5).

**விளக்கப்படம் 3.4: தமிழ்நாட்டில் முக்கியப் பயிர்களின் உற்பத்தித்திறன் (கிகி/ஹெக்டேர்)**




*ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், தமிழ்நாடு அரசு*

**விளக்கப்படம் 3.5: தமிழ்நாட்டில் கரும்பு உற்பத்தித்திறன் (கிகி/ஹெக்டேர்)**




*ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், தமிழ்நாடு அரசு*


## 3.7. உழவர்களுக்கு நிதியுதவி: கடன் வசதி, சந்தை ஆதரவு, பயிர்க் காப்பீடு

3.16 **கடன் வசதிகள்:** தமிழ்நாட்டில் 4,454 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 151 கிளைகள், 12,525 ஊராட்சிகளில் வேளாண் மற்றும் வேளாண் அல்லாத நடவடிக்கைகளுக்காகக் கடனுதவி அளித்துவருகின்றன. தமிழ்நாட்டின் கூட்டுறவுத் துறை வரலாற்றிலேயே முதன்முறையாக 2023-24இல், பயிர்க்கடன் வழங்கல் ரூ.15,000 கோடியை எட்டி சாதனை புரிந்துள்ளது; 18,36,345 உழவர்களுக்கு ரூ.15,542.84 கோடி பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது. புதிய உழவர்களுக்குக் கடனுதவி வழங்கியது, பயிர்க்கடன் வழங்கல் அதிகரிப்பதற்குக் காரணமாயிற்று. காவிரிப் படுகை மாவட்டங்களில், பயிர்க்கடன் பெறும் உழவர்களின் எண்ணிக்கை 2023-24இல் 14% அதிகரித்துள்ளது; 2022-23இல் 4,88,866 உழவர்கள் ரூ.3,288.98 கோடி கடன் பெற்றதோடு ஒப்பிடுகையில், 2023-24இல் 5,00,380 உழவர்கள் ரூ.3,744.59 கோடி கடனுதவியைப் பெற்றுள்ளனர்.

3.17 விளக்கப்படம் 3.6.இல் எடுத்துக்காட்டியுள்ளபடி, அட்டவணைப்படுத்த வணிக வங்கிகளால் தமிழ்நாட்டு உழவர்களுக்கு அளிக்கப்பட்ட கடன் படிப்படியாக அதிகரித்துள்ளது. 2019-20இல் ரூ.1,82,990 கோடியாக இருந்த கடன் வழங்கல் 2023-24இல் ரூ.3,57,805 கோடியாக அதிகரித்துள்ளது. அதே ஆண்டில், வணிக வங்கிகளால் வழங்கப்பட்ட வேளாண் கடன்களில் ஆந்திரப் பிரதேசம் (ரூ.2.64 லட்சம் கோடி), உத்தரப் பிரதேசம் (ரூ.2.1 லட்சம் கோடி), கர்நாடகம் (ரூ.1.84 லட்சம் கோடி) ஆகிய மாநிலங்களைத் தாண்டி தமிழ்நாடு முதலாவது இடம்வகிக்கிறது.

3.18 ‘வேளாண் புள்ளிவிவரங்கள்: ஒரு பார்வை’யின்படி (2024), தமிழ்நாட்டின் வேளாண் துறைக்கு வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள் ஆகியவற்றின் வழியாக வழங்கப்பட்டுள்ள மொத்த நிறுவனக் கடனுதவி ரூ.4.39 லட்சம் கோடியை எட்டியுள்ளது. இத்தொகையில், ரூ.2.42 லட்சம் கோடி பயிர்க்கடன்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், ரூ.1.97 லட்சம் கோடி நீண்ட கால வேளாண் முதலீடுகளுக்கு உதவும் வகையில் தவணைக் கடன்களாக வழங்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 3.6: தமிழ்நாடு வேளாண்மைக்கு வணிக வங்கிகள் அளித்த கடன்**




*ஆதாரம்: இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளிவிவரக் கையேடு, இந்திய ரிசர்வ் வங்கி.*


3.19 **சந்தை ஆதரவும் விலை ஊக்கத் தொகை:** குறைந்தபட்ச ஆதரவு விலையோடு, கூடுதலாக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.105, கரும்புக்கு டன் ஒன்றுக்கு ரூ.215 ஊக்கத் தொகையாகத் தமிழ்நாடு அரசு வழங்கிவருகிறது. ஜூன் 2024 வரையில், 3.72 லட்சம் உழவர்களிடமிருந்து 29.91 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது; ரூ.6,442.8 கோடி ஊக்கத் தொகையாக அளிக்கப்பட்டுள்ளது.

3.20 வேளாண் வணிகம் மற்றும் சேமிப்புக் கிட்டங்கி வசதிகளை ஆதரிப்பதற்காக, தமிழ்நாடு முழுவதும் 525 சேமிப்புக் கிட்டங்கிகள், 395 பரிவர்த்தனைக் கொட்டகைகள், 412 உலர்த்தும் களங்கள், 863 வணிகர் கடைகள், 275 குளிர்பதனக் கிட்டங்கி அலகுகளுடன் ஒட்டுமொத்தமாக 40,365 மெட்ரின் டன் சேமிப்புத் திறன் கொண்ட 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களை அரசு நிறுவியுள்ளது. இணைய வர்த்தக வசதியை அளிப்பதற்காக, 213 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் இ-தேசிய வேளாண் சந்தைத் திட்டம் (eNAM) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும், மாநிலம் முழுவதும் உழவர்களுக்கு நேரடி சந்தை வாய்ப்புகளை வழங்கும் வகையில் 193 உழவர் சந்தைகள் செயல்பட்டுவருகின்றன.

3.21 **பயிர்க் காப்பீடு:** பயிர்க் காப்பீட்டுத் திட்டமானது, எதிர்பாராத இயற்கைப் பேரிடர்களால் ஏற்படும் பயிர் இழப்புகளின்போது உழவர்களுக்கு நிதிப் பாதுகாப்பை அளிக்கிறது. காப்பீட்டுக் கட்டணத்தில் 49% தொகையைக் காப்பீட்டு நிறுவனங்களுக்கு அளிப்பதன் வாயிலாக, மாநில அரசு உழவர்களின் வாழ்வாதாரங்களைப் பாதுகாக்க உதவுவதோடு, நவீன வேளாண் நடைமுறைகளையும் தொழில்நுட்பங்களையும் பயன்படுத்தவும் அவர்களை ஊக்குவித்துவருகிறது. பிரதம மந்திரி பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் (PMF-

BY) கீழ் அளிக்கப்பட்டுவரும் காப்பீட்டு விவரங்களை விளக்கப்படம் 3.7 அளிக்கிறது. பெருந்தொற்றின் காரணமாக 2020-21இல் இத்திட்டத்தில் அதிக அளவிலான உழவர்கள் பதிவுசெய்து, ரூ.2,865 கோடியை இழப்பீடாகப் பெற்றனர். எனினும், காப்பீட்டுத் திட்டத்தில் பதிவுசெய்துகொள்ளும் உழவர்களின் எண்ணிக்கையும் காப்பீடு செய்யப்பட்ட மொத்த வேளாண் பரப்பளவும் கடந்த ஆண்டுகளில் வேறுபட்டுள்ளன; மாறிவரும் காலநிலை இடர்ப்பாடுகள், கூடுதல் இலக்கு நிர்ணயங்கள் போன்றவை இதற்குக் காரணங்கள்.

**விளக்கப்படம் 3.7: பயிர்க் காப்பீட்டுப் பரவல்**




*ஆதாரம்: வேளாண்மை- உழவர் நலத் துறை*

## 3.8 வேளாண்மை இயந்திரமயமாக்கல்


3.22 மானிய விலையில் வேளாண் இயந்திரங்களை வழங்கி, சிறு குறு விவசாயிகளுக்கு உதவுவதில் அரசு தீவிர முனைப்பு காட்டிவருகிறது. இந்த முன்னெடுப்புகள் இழுவை வண்டி (Tractor), விசைக் கலப்பைகள் (Power Tillers), சுழல் கலப்பைகள் (Rotavators), நாற்று நடும் இயந்திரங்கள், பல்வகைப் பயிர்களைக் கதிரடிக்கும் கருவிகள் ஆகியவற்றையும் விதைப்பு இயந்திரங்கள், தெளிப்பான்கள் போன்ற சிறிய அளவிலான அத்தியாவசியமான கருவிகளையும் உள்ளடக்கியதாகும். மேலும், ஆளில்லா வான்கலங்கள் போன்ற அதிநவீன இயந்திரங்களும் அறுவடையான வெங்காயங்களைச் சுத்தம் செய்யும் இயந்திரங்கள், தேங்காய் உரிக்கும் இயந்திரங்கள், எண்ணெய் பிழியும் இயந்திரங்கள், மாவு அரைக்கும் இயந்திரங்கள் போன்ற மதிப்புக்கூட்டு இயந்திரங்களும் விநியோகிக்கப்பட்டுவருகின்றன. பின்தங்கிய நிலையிலுள்ள விவசாயிகளுக்கு மேலும் ஆதரவளிக்கும் வகையில், பட்டியலின, பழங்குடியின விவசாயிகளுக்குக் கூடுதலாக 20% மானியத்தை மாநில அரசு வழங்கிவருகிறது. 2023-24இல் 5,654 விசைக் கலப்பைகள், 2,437 இழுவை வண்டிகள், 2,428 சுழல் கலப்பைகள் உள்ளிட்ட வேளாண் இயந்திரங்கள் 28,230 உழவர்களுக்கு மொத்தமாக ரூ.188 கோடி மானியத்தில் வழங்கப்பட்டுள்ளன. 2024-25இல் மானிய ஒதுக்கீடு மிக அதிக அளவில் ரூ.242 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

3.23 நிலவுடைமையின் அளவு குறைந்துவரும் சவாலை எதிர்கொள்ளும் வகையிலும், சிறிய அளவிலான இயந்திரங்களின் பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையிலும், 2024-25இல் மாநில அரசு, கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மொத்தமாக ரூ.21 கோடி மானியத்தில் 4,332 விசைக் கலப்பைகளை விநியோகித்துள்ளது. இந்த முன்னெடுப்பானது வேளாண் உற்பத்தித்திறனை ஊக்குவிப்பதுடன் உழவர்களுக்கு — குறிப்பாக, பின்தங்கிய பின்னணியில் உள்ளவர்களுக்கு — ஆதரவளிப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும், வேளாண் பொறியியல் துறையால் உருவாக்கப்பட்டுள்ள 'இ-வாடகை' கைப்பேசிச் செயலியானது உழவர்கள் தங்களுக்குத் தேவையான வேளாண் இயந்திரங்களையும் கருவிகளையும் வாடகையில் பெறுவதற்கு இணையவழியில் முன்பதிவுசெய்துகொள்ளவும் மின்னணுப் பரிவர்த்தனை முறையில் கட்டணம் செலுத்தவும் வாய்ப்பளிப்பதோடு, வேளாண்-பொறியியல் துறை அலுவலகங்களுக்கு (AED) நேரடியாகச் செல்ல வேண்டிய தேவையையும் தவிர்க்கிறது.

## 3.9 அங்கக வேளாண்மை

3.24 அங்கக மற்றும் இயற்கை வேளாண்மையானது வேதி உரங்களையும் பூச்சிக்கொல்லிகளையும் பயன்படுத்தாமல் உணவு தானியங்களை விளைவிப்பதை நோக்கமாகக் கொண்டிருப்பதோடு மண்வளத்தை மேம்படுத்திச் சூழல் மாசுபாட்டையும் குறைக்கிறது. தமிழ்நாட்டில், அங்கக வேளாண் முறையைப் பின்பற்றுவது தொடர்ந்து அதிகரித்துவரும் நிலையானது, நீடித்த வேளாண் நடைமுறைகளை நோக்கிய மாற்றத்தை எடுத்துக்காட்டுகிறது. தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையில் (TNOCD) பதிவுசெய்துள்ள உழவர்களின் எண்ணிக்கை ஏறத்தாழ இருமடங்காக அதிகரித்துள்ளது; 2019-20இல் 5,255 ஆக இருந்த உழவர்களின் எண்ணிக்கை 2023-24இல் 11,280 ஆக உயர்ந்துள்ளது. இதைப் போலவே, அங்கக வேளாண்மைப் பரப்பளவும் 9,639 ஹெக்டேரிலிருந்து 34,000 ஹெக்டேராகக் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது (விளக்கப்படம் 3.8). குறிப்பாக, தமிழ்நாடு அங்ககச் சான்றளிப்புத் துறையானது பதிவுசெய்துகொண்ட அங்கக உழவர்களின் எண்ணிக்கையில் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது. இது அங்கக வேளாண்மையை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதை எடுத்துக்காட்டுகிறது.

**விளக்கப்படம் 3.8: தமிழ்நாட்டில் அங்கக வேளாண்மை**




*ஆதாரம்: வேளாண்மை-உழவர்நலத் துறை, தமிழ்நாடு அரசு.*

## 3.10 தோட்டக்கலை

3.25 பழங்கள், காய்கறிகள், மலைத்தோட்டப் பயிர்கள், அலங்காரச் செடிகள், மருத்துவப் பயிர்கள் ஆகியவற்றின் தேவை அதிகரித்துவருவதால் தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சியில் தோட்டக்கலைத் துறை முக்கிய உந்துதலாக மாறியுள்ளது. 2023-24இல், தோட்டக்கலைப் பயிர்களின் மொத்தப் பரப்பளவு 16.3 லட்சம் ஹெக்டேராக இருந்தது. இதில், 7.59 லட்சம் ஹெக்டேர் தோட்டப் பயிர்களுக்கும், 3.63 லட்சம் ஹெக்டேர் காய்கறிகளுக்கும், 3.34 லட்சம் ஹெக்டேர் பழங்களுக்கும் மீதமுள்ள பரப்பு நறுமணப் பொருள்கள், சுவையூட்டிகள், மருத்துவ மற்றும் வாசனைப் பயிர்கள், மலர்கள் சாகுபடிக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (அட்டவணை 3.2). மாநிலத்தின் மொத்தத் தோட்டக்கலைப் பயிர்களின் உற்பத்தி 235.22 லட்சம் மெட்ரிக் டன்னாக உள்ளது.

**அட்டவணை 3.2: தோட்டக்கலைப் பயிர்களின் பரப்பளவு, உற்பத்தி மற்றும் விளைச்சல் (2023-24)**

| தோட்டக்கலைப் பயிர் | பரப்பளவு (லட்சம் ஹெக்டேர்) | உற்பத்தி (லட்சம் மெட்ரிக் டன்) | உற்பத்தித்திறன் (மெட்ரிக் டன் / ஹெக்டேர்) |
|---|---|---|---|
| பழங்கள் | 3.34 | 75.29 | 22.52 |
| காய்கறிகள் | 3.63 | 92.36 | 25.46 |
| மலைத்தோட்டப் பயிர்கள் | 7.59 | 56.28 | 7.41 |
| நறுமணப் பொருள்கள், சுவையூட்டிகள் | 1.11 | 3.3 | 2.97 |
| மருத்துவ மற்றும் நறுமணப் பயிர்கள் | 0.16 | 1.68 | 10.52 |
| மலர் வகைகள் | 0.47 | 6.31 | 13.55 |
| **மொத்தம்** | **16.**3 | **235.22** | |


*ஆதாரம்: கொள்கை விளக்கக் குறிப்பு – வேளாண்மை-உழவர்நலத் துறை 2024-25.*

## 3.11 வேளாண்சார் செயல்பாடுகள்

3.26 தமிழ்நாடு ஏராளமான கால்நடை மற்றும் கோழி வளங்களைக் கொண்டுள்ளது. சிறு, குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற தொழிலாளர்களின் நிலையான வாழ்வாதார வாய்ப்புகளாக இவை அமைந்துள்ளன. 2023-24 ஆம் ஆண்டில், கால்நடைத் துறையிலிருந்து கிடைத்த மாநிலத்தின் மொத்த மதிப்புக்கூட்டல் ரூ.1.35 லட்சம் கோடி; மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டலில் இதன் பங்களிப்பு 5.41%. பால், முட்டை, இறைச்சி ஆகியவை தனிநபருக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைக் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரிக்கச்செய்வதோடு, மாநிலத்தின் வேளாண் பொருளாதாரத்தை வலுவூட்டுவதிலும் இத்துறை முக்கியப் பங்குவகிக்கிறது.

3.27 தமிழ்நாட்டில் இறைச்சி, முட்டை, பால் உற்பத்தியின் போக்குகளை விளக்கப்படம் 3.9 காட்டுகிறது. 2019-20 முதல் 2022-23 வரை இறைச்சி உற்பத்தி 6.63 லட்சம் டன்னிலிருந்து 7.04 லட்சம் டன்னாகவும், முட்டை உற்பத்தி 2,022 கோடியிலிருந்து 2,156 கோடியாகவும், பால் உற்பத்தி 87.59 லட்சம் டன்னிலிருந்து 103.17 லட்சம் டன்னாகவும் உயர்ந்துள்ளது. இந்தியாவிலேயே முட்டை உற்பத்தியில் ஆந்திரப் பிரதேசத்தையடுத்து தமிழ்நாடு இரண்டாவது இடத்திலும், இறைச்சி உற்பத்தியில் ஆறாவது இடத்திலும் உள்ளது. மேலும், பால் உற்பத்தியில், 11ஆவது இடத்தையும் பிடித்துள்ளது.

**விளக்கப்படம் 3.9: தமிழ்நாட்டில் இறைச்சி, முட்டை, பால் உற்பத்தி**





*ஆதாரம்: இந்திய மாநிலங்கள் பற்றிய புள்ளிவிவரக் கையேடு, இந்திய ரிசர்வ் வங்கி.*

3.28 தமிழ்நாடு 1,076 கிலோமீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. 3.83 லட்சம் ஹெக்டேர் உள்நாட்டு நீர் ஆதாரங்களைக் கொண்டுள்ளது. இதில் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறு பாசன ஏரிகள், குறுகிய பருவகால ஏரிகள், குளங்கள், ஆறுகள், உப்பங்கழிகள் மற்றும் பிற நீர்நிலைகள் உள்ளன. மேலும், மீன்வளத்துக்கேற்ற 56,000 ஹெக்டேர் உவர்நீர்ப் பகுதியும் உள்ளது. தமிழ்நாட்டில் உள்நாட்டு மீன்பிடிப்பைச் சார்ந்துள்ளவர்களின் எண்ணிக்கை 2.36 லட்சம் ஆகும்; கடலோர மீன்வளர்ப்புக்கு ஏற்ற வகையில் 4,536.46 ஹெக்டேர் அமைந்துள்ளது. அதில், முதன்மையாக இறால் வளர்ப்பில் கவனம் செலுத்தப்படுகிறது. மீன்வளத் துறை 10.48 லட்சம் கடல் மீனவர்களுக்கு வாழ்வாதாரத்தை வழங்குவதோடு, அதன் பொருளியல் மற்றும் சமூக முக்கியத்துவத்தையும் உணர்த்துகிறது.

3.29. 2023-24 ஆம் ஆண்டில், மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பிலிருந்து கிடைத்த மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டல் நடப்பு விலையில் ரூ.24,000 கோடியை எட்டியதோடு, தமிழ்நாட்டின் மொத்த மதிப்புக் கூட்டலில் 0.95% பங்களித்துள்ளது. தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி தொடர்ச்சியாக உயர்ந்துவருகிறது; 2019-20இல் 7.574 லட்சம் டன்னாக இருந்த மீன் உற்பத்தி 2023-24இல் 8.84 லட்சம் டன்னாக அதிகரித்துள்ளது (விளக்கப்படம் 3.10). கடல்சார் பொருள்கள் உற்பத்தியில் இவற்றின் பங்களிப்பு, மிகச் சிறிய அளவிலான வருடாந்திர ஏற்ற இறக்கத்துடன், 75% ஆக உள்ளது. தமிழ்நாடு 2023-24இல் 1.34 லட்சம் டன் மீன் பொருள்களை ஏற்றுமதி செய்து, ரூ.6,854 கோடி அந்நியச் செலாவணியை ஈட்டியது.

**விளக்கப்படம் 3.10: தமிழ்நாட்டில் மீன் உற்பத்தி மற்றும் ஏற்றுமதி**




*ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், தமிழ்நாடு அரசு*

## 3.12 முடிவுரை

3.30 தமிழ்நாட்டில் வேளாண்மை பெரிதும் பருவமழையையே நம்பியுள்ளது. மேலும், காலநிலை மாற்றம், வேளாண்மையில் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருவது, நிலவுடைமை அளவு குறைந்துவருவது, உற்பத்தித்திறனில் தேக்கநிலை ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்படுகிறது. இந்தச் சவால்களை எதிர்கொள்ள, வறட்சியாலும் பூச்சிகளின் தாக்குதலாலும் பாதிக்கப்படாத விதைகளை அறிமுகப்படுத்துவது, நீர்த் தேவையைக் குறைக்கும் வகையிலான வேளாண் செயல்முறைகளை ஊக்கப்படுத்துவது, மாற்று வாழ்வாதாரத் திட்டங்களைப் பின்பற்றுவதற்கான பயிற்சிகளை அளிப்பது — குறிப்பாக, கடலோரப் பகுதியிலுள்ள உழவர்களுக்கு இப்பயிற்சிகளை அளிப்பது — எனக் காலநிலை மாற்றங்களுக்கு ஈடுகொடுக்கும் வேளாண் முறைகளைத் தமிழ்நாடு அரசு ஊக்குவித்துவருகிறது. மேலும், பெண்களும் முதியவர்களும் கையாளும் வகையில் வடிவமைக்கப்பட்ட வேளாண் கருவிகளை விநியோகிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டு, குறைந்த அளவிலான நிலப்பரப்புகளில் தீவிரமாக வேளாண்மையை மேற்கொள்ளலாம். வேளாண் விளைபொருள்களின் மதிப்புக் கூட்டலை அதிகப்படுத்துவதற்கு, நீண்ட காலமாகத் திருத்தியமைப்படாமலிருக்கும், உணவுப் பதப்படுத்துதல் கொள்கையைத் திருத்தியமைக்க வேண்டியது அவசியமானது. வேளாண்மைத் துறையின் மேம்பாட்டுக்குத் தொகுப்பு (cluster) அணுகுமுறையை அரசு முன்னெடுத்துள்ளது என்றபோதும், அம்முயற்சிகள் முருங்கை போன்ற சில குறிப்பிட்ட பயிர்வகைகளுக்கு மட்டுமே செயல்படுத்தப்பட்டுவரும் நிலையில், முக்கியமான வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கு அதை விரிவுபடுத்த வேண்டிய தேவையும் உள்ளது.

3.31 உழவர்களுக்குக் கால்நடை வளர்ப்பு கூடுதல் வருமான வாய்ப்பை வழங்கி வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதோடு, எதிர்பாராத வானிலைப் பாதிப்புகளை எதிர்கொள்ளவும் உதவுகிறது. மாநிலத்தின் மக்கள்தொகை, சமூக-பொருளாதாரக் காரணிகளோடு உருவாகிவரும் நுகர்வு முறைகளையும் கணக்கிலெடுத்துக்கொண்டால், உள்நாட்டுத் தேவைகள், ஏற்றுமதி என இரண்டு நோக்கிலும் பால், இறைச்சிப் பொருள்களுக்கு மதிப்புக் கூட்ட அரசு முன்னுரிமை கொடுத்தாக வேண்டும். பாலின் தரத்தை உடனுக்குடன் சோதித்து உரிய கால அளவுக்குள் பணத்தை உழவர்களுக்கு வழங்குவதை உறுதிசெய்வது, அவர்களது வாழ்வாதாரப் பாதுகாப்புக்கும் பால்வளத் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கும் அவசியமானதாகும். உள்நாட்டு மீன்பிடிப்பு, கடற்பாசி வளர்ப்பு, நீர்நிலைகளில் கூண்டு வளர்ப்புகள், இறால் வளர்ப்பு ஆகியவற்றில் விரிவான வளங்கள் இருந்தபோதும் தமிழ்நாடு இன்னும் அவற்றை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. மேலும், வணிகரீதியிலான பண்ணை வளர்ப்புக்குத் தரமான மாடுகளும் ஆடுகளும் கிடைப்பதை அரசு உறுதிப்படுத்துவதோடு தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொள்ளவும் விலங்குகளிடமிருந்து மனிதர்களுக்குப் பரவ வாய்ப்புள்ள நோய்களை கண்காணிக்கவும் வேண்டும். இறைச்சியில் ஆன்டிபயாடிக், பூச்சிக்கொல்லிகள் குறித்த தீவிரக் கண்காணிப்பும் அதே அளவுக்கு முக்கியமானதாகும். கால்நடை வளர்ப்புத் துறையில் தொழில்முனைவை வளர்த்தெடுக்க, கால்நடை வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (AHDF), பால் பதப்படுத்துதல் உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (DIDF), மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) போன்ற பல்வேறு கடன் இணைப்புத் திட்டங்கள் வாயிலாகப் 'பண்ணைத் தொழில்முனைவோர்கள்' (farmpreneurs) ஊக்குவிக்கப்பட வேண்டும்.

அத்தியாயம் 4

# தொழில் துறை

## 4.1 அறிமுகம்


4.1 நாட்டிலேயே மிகவும் வளர்ந்த மற்றும் பன்முகப்பட்ட தொழில் தளங்களைக் கொண்டமாநிலங்களில்ஒன்றாகத்தமிழ்நாடுவிளங்குகிறது.2024-25நிலவரப்படி, மாநிலத்தில் மொத்தம் 39,666 தொழிற்சாலைகள் உள்ளன. இந்தியாவிலேயே அதிகத் தொழிற்சாலைகளைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான். மேலும், தொழிற்துறையில் பணிபுரிபவர்களின் எண்ணிக்கையிலும் (27.75 லட்சம்) முதலிடம் வகிக்கிறது; முதலீடு செய்யப்பட்ட மூலதனத்தில் (ரூ.5.35 லட்சம் கோடி) குஜராத்துக்கு அடுத்தபடியாக இரண்டாவது இடத்திலும், மொத்த உற்பத்தியில் (ரூ.14.44 லட்சம் கோடி) மூன்றாவது இடத்திலும், மொத்த மதிப்புக் கூட்டலில் (ரூ.2.27 லட்சம் கோடி) மூன்றாவது இடத்திலும் தமிழ்நாடு உள்ளது.

4.2 தமிழ்நாட்டின் முக்கியத் தொழில்களில் வாகனங்கள், ஆடை அணிகலன், தோல் மற்றும் தோல் பொருள்கள், ஜவுளி, கணினி, மின்னணு மற்றும் ஒளியியல் பொருள்கள், இயந்திரங்கள் மற்றும் கருவிகள் ஆகியவை அடங்கும். இயக்கூர்திகள் (Motor Vehicles), ஆடை அணிகலன், தோல் மற்றும் தோல் பொருள்கள் ஆகியவற்றின் மொத்த உற்பத்தியில் நாட்டிலேயே முதலிடத்தில் தமிழ்நாடு உள்ளது. ஜவுளி, இயந்திரங்கள் & கருவிகள், கணினி, மின்னணு மற்றும் ஒளியியல் பொருள்களில் இரண்டாவது இடத்தில் உள்ளது. பொறியியல் பொருள்கள், மின்னணுப் பொருள்கள், ஆயத்த ஆடைகள், பருத்தி நூல், கைத்தறிப் பொருள்கள், தோல் பொருள்கள் ஏற்றுமதியிலும் மாநிலம் முன்னணியில் உள்ளது.

4.3 உற்பத்தி, கட்டுமானம், கனிமச் சுரங்கம் மற்றும் திறந்தவெளி அகழ்வு (Quarry), மின்சாரம் மற்றும் நீர் வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கியது தொழில் துறை. 2023-24 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் தொழில் துறை மொத்த மதிப்புக் கூட்டல் ரூ.8.39 லட்சம் கோடியாக இருந்தது. இது தமிழ்நாட்டின் மொத்த மதிப்புக் கூட்டலில் 33.68% ஆகும். இந்தியாவின் தொழில் துறை மொத்த மதிப்புக் கூட்டலில் தமிழ்நாட்டின் பங்கு 11.43% ஆகும். தொழில் துறை மொத்த மதிப்புக் கூட்டலில் உற்பத்தித் துறையின் பங்களிப்பு ரூ.4.63 லட்சம் கோடி, கட்டுமானத் துறையின் பங்களிப்பு ரூ.3.12 லட்சம் கோடி ஆகும். 2021-22 மற்றும் 2023-24க்கு இடையில், உற்பத்தித் துறை 8.33% ஆகவும், கட்டுமானத் துறை 9.03% ஆகவும் வளர்ந்தது.

4.4 தொழிலாளர் கணக்கெடுப்பின்படி (2023-24), தமிழ்நாட்டின் பணிபுரியும் வயதுள்ள தொழிலாளர்களில் 33.31% தொழில் துறையில் வேலைவாய்ப்புப் பெற்றுள்ளனர். இதில், 15.97% உற்பத்தியிலும், 17.2% கட்டுமானத்திலும், 0.28% மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல், கழிவுநீர் அகற்றல் போன்றவற்றிலும், 0.18% கனிமச் சுரங்கம் மற்றும் திறந்தவெளி அகழ்வுகளிலும் பணிபுரிகின்றனர்.

**விளக்கப்படம் 4.1: தொழில் துறை மொத்த மாநில மதிப்புக் கூட்டல் பங்களிப்பு (2023-24)**





*ஆதாரம்:புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

4.5 உத்யம் தளத்தில் பதிவுசெய்யப்பட்ட 35.56 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுடன் (MSME) 2023-24இல் நாட்டிலேயே இரண்டாவது இடத்தில் தமிழ்நாடு உள்ளது. முதலீடு, புத்தாக்கம், உற்பத்திப் பொருள்கள் & அவை சார்ந்த சேவைகள் ஆகியவற்றில் முன்னணி மையமாக மாநிலத்தை மாற்றுவதே தமிழ்நாடு தொழில் கொள்கை 2021இன் நோக்கமாகும். தொழில் தொடங்குவதை எளிதாக்குவது, பொருளாதார வளர்ச்சிக்காக மாநிலத்தின் மனித வளத்தைத் திறம்படப் பயன்படுத்துவது, அனைத்து மண்டலங்களிலும் சமச்சீர் வளர்ச்சியை உறுதிசெய்வது ஆகியவை இதன் செயல்திட்டங்களாகும். பல்வேறு துறைகளில் உள்நாட்டு மற்றும் உலகளாவிய நிறுவனங்களின் முதலீடுகளைத் தமிழ்நாடு வெற்றிகரமாக ஈர்த்துவருகிறது. தமிழ்நாடு உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024இல் மட்டுமே மொத்தம் ரூ.6.64 லட்சம் கோடி முதலீடுகளுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் மூலம் 14.55 லட்சம் பேருக்கு நேரடி வேலைவாய்ப்புகள் உருவாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பின்னணியில், இந்த அத்தியாயம் தமிழ்நாட்டின் தொழில் துறையின் செயல்திறன் மற்றும் சாதனைகளை எடுத்துக்காட்டுகிறது.

## 4.2 தொழில் வளர்ச்சியும் அதன் கூறுகளும்

4.6 2019-20 முதல் 2023-24 வரை, (நிலையான விலைகளின் அடிப்படையில்) தமிழ்நாட்டில் தொழில் துறை சராசரியாக 6.01% வளர்ச்சியடைந்துள்ள நிலையில், தேசிய வளர்ச்சி விகிதம் 4.74% (விளக்கப்படம் 4.2) ஆக உள்ளது. தொழில் துறையின் நான்கு துணைத் துறைகளான, உற்பத்தி 6.05%, கட்டுமானம் 5.92%, கனிமச் சுரங்கம் & திறந்தவெளி அகழ்வு 7%, மின்சாரம், நீர் வழங்கல் முதலியவை 7.62% ஆக வளர்ந்துள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளில், இந்தியத் தொழில் துறை வளர்ச்சி விகிதமான 7.95% ஆக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டின் தொழில் துறையின் வளர்ச்சி சராசரியாக 8.78% ஆக உள்ளது. இந்தக் காலகட்டத்தில், உற்பத்தித் துறை சராசரியாக 8.33% ஆகவும், கட்டுமானத் துறை 9.03% ஆகவும் வளர்ந்தது.

**விளக்கப்படம் 4.2: தொழில் துறையின் ஆண்டு வளர்ச்சியும் அதன் கூறுகளும் (தமிழ்நாடு, இந்தியா)**





*ஆதாரம்: புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்*

## 4.3 உற்பத்தித் துறையின் செயல்திறன்

4.7 பொருளாதார வளர்ச்சியை முடுக்குவிப்பதில் உற்பத்தித் துறை முதன்மையாக விளங்குகிறது. 2019-20 முதல் 2023-24 வரையிலான மத்தியப் புள்ளியியல் நிறுவனத் (CSO) தரவுகளின் அடிப்படையில், தமிழ்நாடு உற்பத்தித் துறையின் மொத்த மதிப்புக் கூட்டல் வளர்ச்சிப் போக்குகளை விளக்கப்படம் 4.3 காட்டுகிறது. தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையின் பெயரளவிலான மொத்த மதிப்புக் கூட்டல் வளர்ச்சி CSO தரவுகளின் அடிப்படையில் சராசரியாக 8.51% ஆக இருந்தது.

**விளக்கப்படம் 4.3: தமிழ்நாட்டின் உற்பத்தித் துறை வளர்ச்சி**





**மொத்த மதிப்புக் கூட்டல்- மத்தியப் புள்ளியல் நிறுவனம்**

*ஆதாரம் (அடிப்படைத் தரவுகள்) - CSO (புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்)*


4.8 தமிழ்நாடு, அதிக எண்ணிக்கையிலான செயல்படும் தொழிற்சாலைகளுடன், தொழில் துறையில் நாட்டிலேயே முன்னணி வகிக்கும் பகுதிகளில் ஒன்றாக விளங்குகிறது. கோவிட் பெருந்தொற்றுக்குப் பிறகு, குறிப்பாக 2020-21இல், நிலையான மூலதனம், மொத்த நிலையான மூலதனமாக்கம் (GFCF), மொத்த உற்பத்தி, உற்பத்திக் காரணிகள் என முக்கியமான தொழில் துறை வளர்ச்சிக் குறியீடுகளில் தமிழ்நாடு சரிவைக் கண்டது. செயல்படும் தொழிற்சாலைகளின் எண்ணிக்கை தொடர்ந்து நிலையாகவே இருந்துவருவதும், எண்ணிக்கையிலுள்ள ஏற்ற இறக்கங்கள் மிகவும் குறைவாக இருப்பதும் தொழில் துறைக் கட்டமைப்பிலுள்ள மீளும் தன்மையைக் குறிக்கின்றன. எனினும், இத்துறை அப்போதைய சுணக்க நிலையிலிருந்து மிகப் பெரும் அளவில் மீண்டுவிட்டது. 2022-23இல் நிலையான மூலதனம் ரூ.3,26,949 கோடியாக மீண்டெழுந்ததும் மொத்த நிலையான மூலதனமாக்கம், குறிப்பிடத்தக்க வகையிலான சரிவுக்குப் பிறகு ரூ.60,637 கோடியாக வெகுவிரைவில் மீண்டதும் முதலீடுகள் புத்துயிர் பெற்றிருப்பதைக் காட்டுகின்றன. 2022-23இல் மொத்த உற்பத்தியும் உற்பத்திக் காரணிகளும் பெருந்தொற்றுக்கு முந்தைய அளவைக் காட்டிலும் உயர்ந்து, மிகவும் வலுவான வளர்ச்சியைக் கண்டுள்ளன (பார்க்க விளக்கப்படம் 4.4). தற்காலிகப் பின்னடைவுகள் இருந்தபோதிலும் தொழில் துறை நடவடிக்கைகள் மீளும் தன்மை கொண்டிருப்பதையும், பெருந்தொற்றுக்குப் பிறகு அவை மீண்டும் வலுவாகப் புத்துயிர் பெற்றிருப்பதையும் காட்டுகின்றன.

**விளக்கப்படம் 4.4.: தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையின் முதன்மைக் கூறுகள்**

(அ)



(ஆ)





*ஆதாரம்: தொழில் துறை வருடாந்திரக் கணக்கெடுப்பு*

4.9 பெருந்தொற்றின் காரணமாக இடையூறுகள் இருந்தபோதும், உற்பத்தித் துறை மீளும் தன்மை கொண்டிருப்பதையும் வளர்ச்சி கண்டிருப்பதையும் இந்தியத் தொழில்துறை வருடாந்திரக் கணக்கெடுப்புத் தரவுகளின் அடிப்படையிலான தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டமைப்பு விகிதங்கள் காட்டுகின்றன. மாநிலத்தில் மூலதன முதலீடுகள் தொடர்ந்து அதிகரித்துவருகின்றன; 2022-23இல் தொழிற்சாலை ஒன்றுக்கான நிலையான மூலதனம் 10.37 கோடியை எட்டியுள்ளது; இது நவீனமயமாக்கம் அதிகரித்திருப்பதையும் உற்பத்தித்திறன் விரிவடைந்திருப்பதையும் பிரதிபலிக்கிறது. 2020-21இல் பெருந்தொற்றுக் காலத்தின்போது தொழிற்சாலைகளின் மொத்த மற்றும் நிகர மதிப்புக் கூட்டல் சராசரி சற்றே சரிவைக் கண்டபோதும், 2022-23இல் நிகர மதிப்புக் கூட்டல் சராசரி ரூ.612 லட்சத்தை எட்டி, வலுவான வகையில் மீண்டெழுந்திருப்பது செயல்திறனும் உற்பத்தியும் அதிகரித்திருப்பதைக் காட்டுகிறது.


4.10 நிலையாக இருந்த தொழிற்சாலை ஒன்றுக்கான சராசரி வேலைவாய்ப்பு 2022-23இல் 88 நபர்கள் என்ற குறிப்பிடத்தக்க வகையில் உயர்ந்திருப்பது, தொழிலாளர்களை அதிக எண்ணிக்கையில் ஈர்த்துள்ளதைக் காட்டுகிறது. நபர் ஒருவருக்கான நிகர மதிப்புக் கூட்டல் உற்பத்தித்திறன் 2020-21இல் ரூ.5.2 லட்சம் என்ற அளவிலிருந்து 2022-23இல் ரூ.6.95 லட்சம் என்ற அளவுக்குக் கணிசமாக

**விளக்கப்படம் 4.5: தமிழ்நாட்டில் உற்பத்தித் துறையின் கட்டமைப்பு விகிதங்கள்**

(அ)



(ஆ)





*ஆதாரம் (அடிப்படைத் தரவு): தொழில் துறை வருடாந்திரக் கணக்கெடுப்பு*

உயர்ந்துள்ளது. மேலும், பணியாளர் ஒருவருக்கான சராசரி ஊதியம் நிலையாக உயர்ந்து 2022-23இல் ரூ.2.99 லட்சத்தை எட்டியது. இது ஊதியம் உயர்ந்திருப்பதையும் பணியாளரின் திறன் மேம்பட்டிருப்பதையும் வெளிப்படுத்துகிறது. அதிகரித்துள்ள முதலீடுகள், அதிக உற்பத்தித்திறன், மேம்பட்ட தொழிலாளர் ஊதியங்கள் ஆகியவை பெருந்தொற்றுக் காலத்துக்குப் பிறகு பொருளாதாரம் வலுவாக மீண்டெழுந்திருப்பதைக் குறிக்கின்றன.

4.11 ஒன்றுபடுத்தப்படாத துறைகளைச் சேர்ந்த தொழில்கள் பற்றிய வருடாந்திரக் கணக்கெடுப்புத் தரவுகளின்படி (ASUSE), தமிழ்நாட்டில் 2021-22 முதல் 2023-24 வரையில் தனிநபருக்கான ஊதிய விவரம் & மொத்த மதிப்புக் கூட்டல், தொழில் நிறுவனம் ஒன்றின் நில சந்தைமதிப்பு, நிலையான சொத்துகளின் சந்தைமதிப்பு ஆகிய அனைத்தும் இந்திய அளவைவிட அதிகமாக உள்ளன (விளக்கப்படம் 4.6). தொழிலாளர் ஒருவருக்கான மொத்த மதிப்புக் கூட்டல் உயர்ந்திருப்பது உற்பத்தித்திறன் அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. தொழிலாளர்களின் ஊதியங்கள் உயர்ந்திருப்பது சிறந்த ஊதிய வாய்ப்புகளைக் குறிக்கிறது. இந்தப் போக்கு, தமிழ்நாட்டின் வலுவான தொழில் துறை அடித்தளத்தையும், திறன்மிக்கத் தொழிலாளர்களையும், விரிவாக்கப்பட்ட உற்பத்தித்திறனையும் எடுத்துக்காட்டுவதோடு, முதன்மையான தொழில் துறைக் குறியீடுகளில் தேசிய சராசரியைக் காட்டிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளதைச் சுட்டுகிறது.

**விளக்கப்படம் 4.6: ஒன்றுபடுத்தப்படாத உற்பத்தித் துறைத் தொழில்களின் விகிதங்கள் (2021-22 முதல் 2023-24 வரை)**




*ஆதாரம்: ஒன்றுபடுத்தப்படாத துறைகளைச் சேர்ந்த தொழில்கள் பற்றிய வருடாந்திரக் கணக்கெடுப்புத் தரவுகளிலிருந்து (வெவ்வேறு ஆண்டுகள்), புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

4.12 அட்டவணை 4.1இல் காட்டப்பட்டுள்ள தொழில் துறை துணைக்குழுக்களைப் பற்றிய பிரிவுவாரியான தரவுகள், 2019-20 முதல் 2022-23 வரையிலான தமிழ்நாட்டின் உற்பத்தித் துறையின் மொத்த மதிப்புக் கூட்டலில் சராசரிப் பங்களிப்பின் அடிப்படையில் முதன்மை வகிக்கும் ஐந்து துணைக்குழுக்களை எடுத்துக்காட்டுகின்றன: (i) இயக்கூர்திகள், இணைப்பு வண்டி (Trailer), இணைப்புச் சிறுவண்டிகள் (Semi Trailer) (17.95%), (ii) இயந்திரங்கள் & கருவிகளின் உற்பத்தி (10.03%), (iii) ஜவுளி உற்பத்தி (10.05%), (iv) ஆடைகள் (6.92%) (v) உணவுப் பொருள் உற்பத்தி (5.95%). இந்த ஐந்து துணைக்குழுக்களும் சேர்ந்து மாநில உற்பத்தித் துறையின் மொத்த மதிப்புக் கூட்டலில் 51% பங்களிக்கின்றன. முக்கியமான மற்ற தொழில் துறைகள்: வேதி & வேதிப் பொருள்கள் உற்பத்தி (4.74%), ரப்பர் & ஞெகிழிப் பொருள் உற்பத்தி (5.01%), இதர போக்குவரத்துக் கருவிகளின் உற்பத்தி (4.94%).

**அட்டவணை 4.1: தமிழ்நாட்டில் தொழில் துறைத் துணைக்குழுக்களின் மொத்த மதிப்புக் கூட்டல்: 2019-20 முதல் 2022-23 வரையிலான வளர்ச்சி மற்றும் சராசரிப் பங்கு**

| தொழில் | வளர்ச்சி (%) | சராசரிப் பங்கு (%) |
|---|---|---|
| இயக்கூர்திகள், இணைப்பு வண்டிகள், இணைப்புச் சிறுவண்டிகள் | 12.99 | 17.95 |
| இயந்திரங்கள் & கருவிகள் | 8.69 | 10.03 |
| ஜவுளி | 6.03 | 10.05 |
| ஆடைகள் | 8.30 | 6.92 |
| உணவுப் பொருள்கள் | 8.61 | 5.95 |
| வேதி & வேதிப் பொருள்கள் | 10.53 | 4.74 |
| ரப்பர் & ஞெகிழிப் பொருள்கள் | 11.41 | 5.01 |
| பிற போக்குவரத்துக் கருவிகள் | 13.21 | 4.94 |
| மற்றவை | 7.15 | 34.41 |
| **மொத்தம்** | **8.31** | **100** |


*ஆதாரம் (அடிப்படைத் தரவு): தொழில் துறை வருடாந்திரக் கணக்கெடுப்பு*

4.13 2019-20 முதல் 2022-23 வரை, இதர போக்குவரத்துக் கருவிகளின் உற்பத்தி (13.21%), ரப்பர் & ஞெகிழித் தயாரிப்பு (11.41%), இயக்கூர்திகள், இணைப்பு வண்டி, இணைப்புச் சிறுவண்டிகள் (12.99%), வேதி & வேதிப் பொருள்கள் (10.53%) உள்ளிட்ட சில துறைகள் தமிழ்நாட்டில் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளன.

## 4.4 விற்பனைப் பொருள்கள் ஏற்றுமதி

4.14 2030க்குள் 1 டிரில்லியன் டாலர் பொருளாதாரம் என்ற லட்சிய இலக்கை அடைவதற்கான முக்கிய உத்திகளில் ஒன்று, அந்த ஆண்டுக்குள் இவற்றின் ஏற்றுமதியை 100 பில்லியன் டாலராக உயர்த்துவதாகும். 2019-20இல் 30.01 பில்லியன் டாலராக இருந்த தமிழ்நாட்டின் விற்பனைப் பொருள்கள் ஏற்றுமதி மதிப்பு 2024-25இல் 51.89 பில்லியன் டாலராக அதிகரித்துள்ளது (மதிப்பிடப்பட்டது) (விளக்கப்படம் 4.7). விற்பனைப் பொருள்கள் ஏற்றுமதியில் குஜராத் ($134.4 பில்லியன்), மகாராஷ்டிரம் ($67.21 பில்லியன்) மாநிலங்களைத் தொடர்ந்து தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.


**விளக்கப்படம் 4.7: தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகளின் மதிப்பு**




*ஆதாரம்: வருடாந்திர வர்த்தகப் பகுப்பாய்வுக்கான தேசிய இறக்குமதி-ஏற்றுமதி பதிவு (NIRYAT)[21]*

4.15 தமிழ்நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் முக்கியப் பொருள்களில் பொறியியல் பொருள்கள் ($16,845 மில்லியன்), மின்னணுப் பொருள்கள் ($9,563 மில்லியன்), ஆயத்த ஆடைகள் ($4,690 மில்லியன்), பருத்தி நூல் மற்றும் கைத்தறிப் பொருள்கள் ($2,062 மில்லியன்), தோல் ($1,660 மில்லியன்) ஆகியவை அடங்கும். பெட்ரோலியப் பொருள்கள், கரிம மற்றும் கனிம வேதிப் பொருள்கள் ஆகியவையும் தமிழ்நாட்டிலிருந்து குறிப்பிடத்தக்க அளவில் ஏற்றுமதி செய்யப்படும் இதர பொருள்களாகும். (விளக்கப்படம் 4.8)

**விளக்கப்படம் 4.8: தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனைப் பொருள்களின் ஏற்றுமதி மில்லியன் டாலரில் (2023-24)**





*ஆதாரம்: வருடாந்திர வர்த்தகப் பகுப்பாய்வுக்கான தேசிய இறக்குமதி-ஏற்றுமதி பதிவு (NIRYAT)*

## 4.5 தொழில் துறைக்கான கடன் வசதிகள்

4.16 அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகள் நாடு முழுவதும் உள்ள தொழில் நிறுவனங்களுக்குக் கடன் வசதிகளை வழங்கிவருகின்றன. தமிழ்நாட்டின் தொழில் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் 2019-20இல் ரூ.2.5 லட்சம் கோடியிலிருந்து 2023-24ல் ரூ.3.01 லட்சம் கோடியாக அதிகரித்தது (விளக்கப்படம் 4.8). 2023-24இல், வங்கிகளிலிருந்து அதிகபட்சமாக மகாராஷ்டிரத்தின் தொழில் துறை ரூ.9.67 லட்சம் கோடி கடன் வசதி பெற்றது. அதையடுத்து, குஜராத் தொழில் துறை ரூ.3.34 லட்சம் கோடியும், தமிழ்நாடு தொழில் துறை ரூ.3.01 லட்சம் கோடியும் பெற்றன.

*[21] பிப்ரவரி, மார்ச் 2025 மாதங்களுக்கான தரவுகள் வருடாந்திர வளர்ச்சி விகிதங்களின் சராசரியைக் கொண்டு மதிப்பிடப்பட்டுள்ளன.*

**விளக்கப்படம் 4.9: தொழில் துறை நிறுவனங்களுக்கு வணிக வங்கிகள் வழங்கிய கடன்**





*ஆதாரம்: இந்தியாவில் உள்ள வணிக வங்கிகளின் அடிப்படைப் புள்ளிவிவரத் தரவுகள், ரிசர்வ் வங்கியின் வெவ்வேறு வெளியீடுகள்*

## 4.6 அந்நிய நேரடி முதலீடும் தனியார் நிறுவன முதலீடும்

4.17 கோவிட் பெருந்தொற்று ஆண்டில் (2019-20), தமிழ்நாட்டில் ரூ.5,909 கோடியாக இருந்த அந்நிய நேரடி முதலீடு (FDI), 2024-25இல் ரூ.28,324 கோடியாக (மதிப்பிடப்பட்டது) அதிகரித்துள்ளது (விளக்கப்படம் 4.10). 2023-24இல், மகாராஷ்டிரம் (ரூ.1,25,101 கோடி), குஜராத் (ரூ.60,600 கோடி), கர்நாடகம் (ரூ.54,427கோடி), டெல்லி (ரூ.53,980 கோடி), தெலங்கானா (ரூ.25,094 கோடி) ஆகியவற்றைத் தொடர்ந்து அந்நிய நேரடி முதலீட்டில் இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு ஆறாவது இடத்தைப் பிடித்தது.

**விளக்கப்படம் 4.10: தமிழ்நாட்டுக்கு அந்நிய நேரடி முதலீடு**




*ஆதாரம்: மத்திய தொழிற்கொள்கை & ஊக்குவிப்புத் துறை, இந்திய அரசு. 2019-20 வரை, புதுச்சேரித் தரவும் உள்ளடக்கம்.*[22]

*[22] எதிர்பார்க்கப்படும் வருடாந்திர அந்நிய நேரடி முதலீடு = டிசம்பர் 2024 வரையிலான அந்நிய நேரடி முதலீடு (அண்மைத் தரவு) + கடந்த இரண்டாண்டுகளின் சராசரி அந்நிய நேரடி முதலீடு (ஜனவரி-மார்ச்)*

4.18 வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களால் ரூ.10 கோடிக்கும் அதிகமாக, தனியார் மூலதனச் செலவினத் திட்டங்களுக்கு வழங்கப்படும் கடன் உதவிகளை ரிசர்வ் வங்கி கண்காணிக்கிறது. இவற்றில் ஏறத்தாழ சரிபாதித் திட்டங்கள் சாலைகள், பாலங்கள், மின்சாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்புத் துறையைச் சேர்ந்தவை. மற்ற குறிப்பிடத்தக்கத் துறைகளில் உலோகம் மற்றும் உலோகப் பொருள்கள் தொழில், கட்டுமானம், மின் உபகரணங்கள், உணவுப் பொருள்கள் ஆகியவை அடங்கும். 2019-20 முதல் 2023-24 வரை தமிழ்நாட்டில் நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கையை அட்டவணை 4.2 காட்டுகிறது. 2020-21 (பெருந்தொற்று ஆண்டு)க்குப் பிறகு, நிதியளிக்கப்பட்ட திட்டங்களின் எண்ணிக்கை படிப்படியாக உயர்ந்து 2023-24இல் 83 ஆக உள்ளது.


**அட்டவணை 4.2: தமிழ்நாட்டில் வங்கிகள்/நிதி நிறுவனங்களால் நிதி வழங்கப்பட்ட திட்டங்கள்**

| ஆண்டு | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| திட்டங்களின் எண்ணிக்கை | 28 | 7 | 40 | 44 | 83 |

*ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி செய்திமடல், ஆகஸ்ட் 2024.*

4.19 2023-24இல், இந்தியாவில் மொத்தம் 944 திட்டங்களுக்கு வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் உதவிகள் கிடைத்தன; அந்த ஆண்டில் அதிகபட்ச மொத்தத் திட்ட மதிப்பு ரூ.3.91 லட்சம் கோடி. 2023-24இல், நிதி கிடைக்கப்பெற்ற திட்டங்களின் எண்ணிக்கையில் குஜராத் (154), மகாராஷ்டிரம் (93) ஆகியவற்றைத் தொடர்ந்து, தமிழ்நாடு மூன்றாவது இடத்தில் உள்ளது.

**விளக்கப்படம் 4.11: 2023-24இல் வங்கிகள்/நிதி நிறுவனங்களால் நிதியளிக்கப்பட்ட திட்டங்கள் (ரூ.10 கோடிக்கும் அதிகமாக) – மாநிலவாரியாக**




*ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி செய்திமடல், ஆகஸ்ட் 2024*

## 4.7 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்கள்

4.20 குறு,சிறுமற்றும்நடுத்தரத்தொழில்கள்துறையானதுதமிழ்நாட்டின்பொருளாதாரத்தில் முக்கியப் பங்குவகிக்கிறது; தொழில்முனைவை ஊக்குவிப்பதன் மூலமும், ஒப்பீட்டளவில் குறைந்த மூலதன முதலீட்டில் வேலைவாய்ப்பை உருவாக்குவதன் மூலமும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியில் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை இத்துறை வழங்குகிறது. உத்யம் பதிவுத் தரவுகளின்படி, 2023-24இல் தமிழ்நாட்டில் 35.56 லட்சம் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் உள்ளன (பிப்ரவரி 2025 வரை). இவற்றில், 10.69 லட்சம் நிறுவனங்கள் உற்பத்தித் துறை சார்ந்தவை. 24.87 லட்சம் நிறுவனங்கள் சேவைகள் சார்ந்தவை (அட்டவணை 4.3). குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் மாநிலத்தில் 2.56 கோடி தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்குகின்றன.

**அட்டவணை 4.3: தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்டுள்ள குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை, வேலைவாய்ப்பு உருவாக்கம்**

| ஆண்டு | உற்பத்தி | சேவை | மொத்தம் | வேலைவாய்ப்பு உருவாக்கம் |
|---|---|---|---|---|
| 2019-20 | 1,10,437 | 1,45,349 | 2,55,786 | 16,15,447 |
| 2020-21* | 1,55,781 | 2,31, 265 | 3,87,046 | 38,96,694 |
| 2021-22 | 1,56,051 | 3,23,562 | 4,79,613 | 36,63,938 |
| 2022-23 | 1,92,950 | 5,40,680 | 7,33,630 | 47,15,652 |
| 2023-24 | 2,37,327 | 6,43,366 | 8,80,693 | 63,12,163 |
| 2024-25** | 2,16,847 | 6,03,362 | 8,20,209 | 54,23,137 |
| **மொத்தம்** | **10,69,393** | **24,87,584** | **35,56,977** | **2,56,27,031** |

*ஆதாரம்: தொழில் வணிக இயக்குநரகம், தமிழ்நாடு அரசு*

** உத்யோக் ஆதார் எண், உத்யம் பதிவுச் சான்று உள்ளடங்கியவை*

*** பிப்ரவரி 2025 வரை*

## 4.8 சுரங்கத் தொழில்

4.21 நாட்டின் கனிம வளம் கொண்ட மாநிலங்களில் ஒன்றாக விளங்கும் தமிழ்நாடு, சுண்ணாம்பு, லிக்னைட், மேக்னசைட், வெர்மிகுலைட், பாக்சைட், இரும்பு போன்ற முக்கியக் கனிம வளங்களைக் கொண்ட பல்வேறு வகையான நிலவியல் பாறை அமைப்புகளைப் பெற்றுள்ளது. கிராஃபைட், மாலிப்டினம், பிளாட்டினம் தாதுக்கள், அரிய நிலவியல் தனிமங்கள் மற்றும் அணுமின் தாதுக்களான இலிமினைட், ரூட்டைல், கார்னெட், லிக்கோக்சின், மோனசைட், சிர்கான், சிலிமினைட் ஆகியவற்றுடன் பெட்ரோலியமும் இயற்கை எரிவாயுவும் இங்கு நிறைந்துள்ளன. கறுப்பு கிரானைட், கரட்டுக்கல், களிமண், ஜிப்சம், குவார்ட்ஸ், ஃபெல்ஸ்பார், சரளை, செங்கல் மண் போன்ற பல்வேறு கனிமங்களையும் தமிழ்நாடு உற்பத்தி செய்கிறது.

4.22 2019-20 முதல் 2023-24 வரை, தமிழ்நாட்டில் சுண்ணாம்புக் கல் உற்பத்தி 149.28 லட்சம் டன்னிலிருந்து 254.5 லட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. அதேவேளையில், லிக்னைட் உற்பத்தி 186.28 லட்சம் டன்னிலிருந்து 182.83 லட்சம் டன்னாகக் குறைந்துள்ளது (அட்டவணை 4.4). கச்சா எண்ணெய் உற்பத்தியும் 3,04,756 மெட்ரின் டன்னிலிருந்து 2,86,501 மெட்ரிக் டன்னாகக் குறைந்துள்ளது. மறுபுறம், கரட்டுக்கல் உற்பத்தி 228.35 லட்சம் கனமீட்டரிலிருந்து 496.45 லட்சம் கனமீட்டராக அதிகரித்துள்ளது.


**அட்டவணை 4.4 தமிழ்நாட்டில் கனிம உற்பத்தி**

| கனிமங்கள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| முக்கியக் கனிமங்கள் (1000' மெட்ரிக் டன்) | | | | | |
| லிக்னைட் | 18,645 | 17,867 | 23,626 | 21,566 | 18,283 |
| சுண்ணாம்புக்கல் | 14,928 | 18,774 | 20,457 | 23,388 | 25,450 |
| மார்ல் | - | - | 630 | 2,363 | 552 |
| அணு கனிமங்கள் | - | - | - | - | 977 |
| கடற்கரை மணல் கனிமங்கள் | - | 763 | - | 642 | - |
| மற்றவை | 89 | 54 | 171 | 87 | 90 |
| **முக்கியக் கனிமங்கள்: மொத்தம்** | **33,662** | **37,459** | **44,884** | **48,047** | **45,352** |
| கச்சா எண்ணெய் (MT) | 3,04,756 | 4,06,939 | 3,66,319 | 3,13,795 | 2,86,501 |
| இயற்கை எரிவாயு (மில்லியன் கனமீட்டர்) | 791 | 866 | 1,019 | 1,065 | 1,008 |
| கரட்டுக்கல் | 22,835 | 25,566 | 39,982 | 43,743 | 49,645 |
| மண் / சரளை | 4,242 | 7,255 | 8,369 | 13,179 | 14,273 |
| மற்றவை | 121 | 131 | 140 | 126 | 119 |
| **சிறு கனிமங்கள்-1:மொத்தம்** | **27,198** | **32,952** | **48,491** | **57,048** | **64,037** |
| **சிறு கனிமங்கள்-2 மொத்தம் (1000' மெட்ரிக் டன்)*** | **360** | **1,014** | **639** | **906** | **1,742** |

*ஆதாரம்: கொள்கை விளக்கக் குறிப்பு, புவியியல் மற்றும் சுரங்கத் துறை, தமிழ்நாடு அரசு.*

4.23 தமிழ்நாட்டில் கனிம வளங்களிலிருந்து கிடைத்த வருவாய் 2019-20இல் ரூ.1,303 கோடியிலிருந்து 2013-24இல் ரூ.1,836 கோடியாக அதிகரித்துள்ளது (அட்டவணை 4.10).

**விளக்கப்படம் 4.12: தமிழ்நாட்டில் கனிம வளங்களிலிருந்து ஈட்டப்பட்ட வருவாய்**




*ஆதாரம்: புவியியல் மற்றும் சுரங்கத் துறை, தமிழ்நாடு அரசு.*

## 4.9 முடிவுரை

4.24 நாட்டின் பொருளாதார வளர்ச்சியில், தமிழ்நாடு ஏற்கெனவே முன்னணி வகித்துவருகிறது. இதன் பலன்கள் ஒருங்கிணைக்கப்பட்டு, நீண்ட கால நோக்கில் இந்த வளர்ச்சியை நீடித்து நிலைத்திருக்கச் செய்ய வேண்டும். தமிழ்நாட்டில் அதிகரித்துவரும் வயதானவர்களின் எண்ணிக்கையில் உரிய கவனம் செலுத்துவதோடு அடுத்துவரும் 20 ஆண்டுகளில் அதிகரிக்கவிருக்கும் உழைக்கும் வயதினரையும் திறம்படக் கையாள வேண்டியது உடனடித் தேவையாகும். மாநிலத்தில், ஒவ்வொரு துறையிலும் நிலவிவரும் சிக்கல்களைக் களைவதற்கான துறைவாரியான வியூகங்களை வளர்த்தெடுக்கவும் எளிதாகத் தொழில்புரிவதற்கான சூழலை மேம்படுத்தவும் வேண்டும். குறைவான வளர்ச்சி வீதமுள்ள துறைகளைப் புத்துயிர் பெறச் செய்ய சிறப்புச் செயல்திட்ட முன்னெடுப்புகள் தேவைப்படுகின்றன. புத்தாக்கத்துடன் கூடிய மதிப்புக் கூட்டல் நடவடிக்கைகளைப் பல்வகைப்படுத்துவதோடு, பெருமளவிலான வேலைவாய்ப்பை உருவாக்கும் துறைகளை விரிவுபடுத்துவதற்கும் முக்கியத்துவம் அளிக்க வேண்டும். திறன் மேம்பாட்டுத் துறையில் மாநில அரசின் முயற்சிகள் நம்பிக்கைக்குரிய பலன்களைத் தந்துள்ளன. இருப்பினும், தொழிலாளர் பங்களிப்பையும் தொழிலாளர் உற்பத்தித்திறனையும் அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட வேண்டும். பின்தங்கிய பகுதிகளில், குறிப்பாகத் தென் மாவட்டங்களில், தொழில்மயமாக்கம் அதிகப்படுத்தப்பட வேண்டும். இந்தப் பகுதிகளில் முதலீட்டாளர்களை ஈர்க்கும் பொருட்டு, பெரிய அளவிலான நிலவங்கிகளை உருவாக்குவதற்குக் கணிசமான அளவில் அரசு முதலீடு செய்ய வேண்டும். மாநிலத்தின் தொழில்மயமாக்கலை விரைவுபடுத்தும் பொருட்டு, ஆயத்தநிலை அலுவலகங்கள் (Plug & Play) போன்ற புதுமையான தொழில் மாதிரிகள் ஊக்குவிக்கப்பட வேண்டும். உலக முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், மாநிலம் முழுவதும் தகுந்த பகுதிகளில் தொழில் நகரியங்களும் நிறுவப்பட வேண்டும்.

அத்தியாயம் 5

# சேவைகள்

## 5.1 அறிமுகம்

5.1 தமிழ்நாட்டின் சேவைகள் துறை (அல்லது மூன்றாம் நிலைத் துறை) பன்முகத்தன்மை கொண்டது. வணிகம், பழுதுபார்ப்பு, தங்குமிடம், உணவகம், போக்குவரத்து, சேமிப்புக் கிடங்கு, தகவல்தொடர்பு, ஒளிபரப்புச் சேவைகள், நிதிச் சேவைகள், மனை வணிகம் மற்றும் தனிநபர் சேவைகள், பொது நிர்வாகம் உள்ளிட்ட பல்வேறு துணைத் துறைகளை உள்ளடக்கியது அது.[23] கல்வி, சுகாதாரம், நிதி, சுற்றுலா, விருந்தோம்பல், பொழுதுபோக்கு போன்ற சேவைகளுக்கு மாநிலத்துக்கு வலுவான தேவை உள்ளது.

5.2 இந்தியாவின் மிகவும் நகர்மயமான மாநிலங்களுள் ஒன்றாகத் தமிழ்நாடு இருந்துவரும் நிலையில், இந்த விரைவான நகர்மயமானது போக்குவரத்து, வீட்டுவசதி, சுகாதாரம் உள்ளிட்ட உட்கட்டமைப்பு தொடர்பான சேவைகளை முடுக்கிவிடுகிறது. தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள் ஆகிய துறைகளிலும் மாநிலம் வலுவான நிலையில் உள்ளது. மென்பொருள் ஏற்றுமதியிலும் முக்கியப் பங்களிப்பாளராகத் திகழ்கிறது. மற்ற மாநிலங்களைப் போலவே தமிழ்நாட்டின் மொத்த மாநில மதிப்புக் கூட்டலில், சேவைகள் துறை முக்கியமான பங்களிப்பை நல்குகிறது. 2023-24இல், நடப்பு விலையில் ரூ.13.4 லட்சம் கோடியாகச் சேவைகள் துறை இருந்தது. இது, தமிழ்நாட்டின் மொத்த மாநில மதிப்புக் கூட்டலில் 53.63% ஆகும்.

5.3 வேலைவாய்ப்பு உருவாக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ள சேவைகள் சார்ந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தமிழ்நாட்டில் ஏறத்தாழ 24.87 லட்சம் உள்ளன. தொழிலாளர் கணக்கெடுப்பின்படி (2023-24), நகர்ப்புரத் தமிழ்நாட்டின் மொத்தப் பணியாளர்களில் 54.63% பேர் சேவைகள் துறையில் பணிபுரிகின்றனர். இது, தேசிய சராசரியான 28.42%ஐவிட ஏறத்தாழ இரு மடங்கு அதிகம். இந்தத் தொழிலாளர்களில், 16.28% இயக்கூர்திகளின் வர்த்தகம் மற்றும் பழுதுபார்ப்பிலும், 7.53% போக்குவரத்து மற்றும் கிட்டங்கி சார்ந்த பணிகளிலும், 6.28% தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல்தொடர்புகளிலும், 5% கல்விச் சேவைகளிலும், 4.86% தங்குமிடம் மற்றும் உணவுச் சேவைகளிலும், 2.84% நிதி மற்றும் காப்பீட்டுச் சேவைகளிலும், மீதமுள்ள 11.84% இதர சேவைகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

[23] *மற்ற சேவைகளில் சிறப்புப் பயிற்சி மற்றும் தனிப்பயிற்சி, கால்நடைப் பராமரிப்புச் சேவைகள், கழிவகற்றுதல், சுகாதார நடவடிக்கைகள், பண்பாடு மற்றும் விளையாட்டு தொடர்பான பொழுதுபோக்குச் செயல்பாடுகள், சிகை அலங்காரம் மற்றும் அழகு சிகிச்சை தொடர்பான செயல்பாடுகள் உள்ளிட்ட மனிதச் சுகாதார நடவடிக்கைகளும் அடங்கும்.*

5.4 சேவைகள் ஏற்றுமதியில் தமிழ்நாடு வலுவான இடத்தைப் பிடித்துள்ளது. சேவைகள் ஏற்றுமதியில் மூன்றாம் இடத்திலும், மென்பொருள் ஏற்றுமதியில் நான்காம் இடத்திலும் உள்ளது. கடன்-வைப்பு விகிதத்தில் மூன்றாம் இடத்தில் உள்ளது. இது மற்ற பகுதிகளுடன் ஒப்பிடும்போது தமிழ்நாட்டின் உயர் பொருளாதாரச் செயல்பாட்டைப் பிரதிபலிக்கிறது. தமிழ்நாட்டிலுள்ள சேவைகள் மற்றும் அதன் துணைத் துறைகளின் செயல்திறனையும் சாதனைகளையும் பற்றி இந்த அத்தியாயம் பேசுகிறது.

## 5.2 சேவைகள் மற்றும் அதன் துணைத் துறைகளின் வளர்ச்சி

5.5 தமிழ்நாட்டில் சேவைகள் துறை 2020-21 முதல் 2023-24 வரை 7.97% உண்மை ஆண்டு வளர்ச்சி வீதத்தைக் கண்டுள்ளது. அதே காலகட்டத்தில், அதன் துணைத் துறைகளான மனை வணிகம் 9.41%, வர்த்தகம், பழுதுபார்ப்பு, தங்குமிடங்கள், உணவகங்கள் 7.98%, போக்குவரத்து, கிட்டங்கி போன்றவை 7.67%, பொது நிர்வாகம் 5.74%, நிதிச் சேவைகள் 4.69% என அதிகரித்துள்ளன.

## 5.3 போக்குவரத்து

**(i) சாலைகள்**

5.6 தமிழ்நாட்டில் (இந்தியா முழுவதும்) சரக்கு மற்றும் பயணிகள் போக்குவரத்தில் சாலைவழிச் சேவைகளே முக்கியப் பங்குவகிக்கின்றன. 8.3 கோடி மக்கள்தொகை கொண்ட தமிழ்நாட்டில் லட்சக்கணக்கானவர்கள் பொதுப்போக்குவரத்தைப் பயன்படுத்துகின்றனர். மாநில அரசுப் போக்குவரத்து நிறுவனங்களுடன், தனியார் போக்குவரத்து நிறுவனங்களும் சேர்ந்து, பொதுமக்களுக்கு அத்தியாவசியச் சாலைப் போக்குவரத்துச் சேவைகளை வழங்குகின்றன. 2023-24 நிலவரப்படி, மாநிலத்தில் 20,260 அரசுப் பேருந்துகள் உள்ளன.

5.7 அதிவேக நெடுஞ்சாலைகள், பொருளாதார வழித்தடங்கள் ஆகியவற்றின் வளர்ச்சி காரணமாகப் பயண நேரம் கணிசமாகக் குறைந்துள்ளது. சுங்கச்சாவடிகளை டிஜிட்டல்மயமாக்கியது காத்திருக்கும் நேரத்தைக் குறைக்க உதவியுள்ளது. அதிகரித்துவரும் தேவையைப் பூர்த்திசெய்ய, கூடுதல் பேருந்துகளை வாங்கிப் போக்குவரத்தின் எண்ணிக்கையை விரிவுபடுத்தும் திட்டங்களை அரசு தொடங்கியுள்ளது. அந்த விரிவாக்கம் பின்வருமாறு:

- 8,682 புதிய பேருந்துகளை வாங்குவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது. மறுகட்டமைப்புக்கான கடன் வழங்கும் நிறுவனம் (KfW), உலக வங்கி, சிறப்புப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் (SADP) மற்றும் மாநில அரசின் நிதி உதவியுடன் 8,182 பேருந்துகளை வாங்குவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. இவற்றில் 1,088 புதிய பேருந்துகள் செயல்பாட்டுக்கு வந்துள்ளன.

- உலக வங்கித் திட்டத்தின் ஒரு பகுதியாக, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழகம் கூடுதலாக 625 மின் பேருந்துகளை இயக்கவிருக்கிறது.


- KfWவின் நிதியுதவியுடன் 3, 4, 5ஆம் கட்டங்களில் கூடுதலாக 9,161 புதிய பேருந்துகள் வாங்கப்படவிருக்கின்றன. இவற்றில் டீசல் பேருந்துகள் 7,661; மின் பேருந்துகள் 1,500.

- 2022-23இல் 1,000 பேருந்துகள், 2023-24இல் 500 பேருந்துகள் என இரண்டு நிதியாண்டுகளில் 1,500 பேருந்துகளை முழுமையாகப் புதுப்பிப்பதற்காக அரசு

நிதி ஒதுக்கியுள்ளது. இந்த நடவடிக்கைகள் மாநிலப் போக்குவரத்து நிறுவனங்களின் பேருந்துகள் அனைத்தையும் முழுமையாக மாற்றியமைப்பதை உறுதிப்படுத்தி, வாகனங்களை நேர்த்தியாகவும் நவீனமாகவும் மாற்றும்.

5.8 2023-24இல், தமிழ்நாடு அரசுப் பேருந்துகளில் அன்றாடம் பயணிப்பவர்களின் எண்ணிக்கை சீராக உயர்ந்து உச்சபட்சமாக 176 லட்சத்தைத் தொட்டது. 2020-21 பெருந்தொற்றுக் காலகட்டத்தில் அது 74 லட்சமாக இருந்தது (விளக்கப்படம் 5.1).


**விளக்கப்படம் 5.1: தமிழ்நாடு அரசுப் பேருந்துகளில் அன்றாடம் பயணிப்பவர்களின் எண்ணிக்கை**




*ஆதாரம்: கொள்கை விளக்கக் குறிப்பு, போக்குவரத்துத் துறை, 2024-25, தமிழ்நாடு அரசு.*

5.9 தமிழ்நாட்டில் போக்குவரத்தின் வாயிலாக ஏற்றிச்செல்லப்படும் சரக்குகளின் மொத்த மதிப்பீட்டை விளக்கப்படம் 5.2 வழங்குகிறது. 2019-20இல் ரூ.21,65,597 கோடியாக இருந்த இந்தச் சரக்குகளின் மொத்த மதிப்பு 2023-24இல் ரூ.41,40,789 கோடியாக அதிகரித்து, 1.9 மடங்கு வளர்ச்சியை இந்தக் காலகட்டத்தில் பதிவுசெய்துள்ளது.

**விளக்கப்படம் 5.2: போக்குவரத்து மூலம் ஏற்றிச்செல்லப்பட்ட சரக்குகளின் மதிப்பு**




*ஆதாரம்: https://www.gst.gov.in/download/gststatistics*

### (ii) மெட்ரோ ரயில்


5.10 சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் (CMRL) கடந்த சில ஆண்டுகளாக நிலையான விரிவாக்கத்துடன் நகர்ப்புரப் போக்குவரத்தையும் இணைப்பு வசதிகளையும் மேம்படுத்திவருகிறது. 2019, 2020ஆம் ஆண்டுகளில் 45 கி.மீ. நீளமாக இருந்த மெட்ரோ ரயில் சேவை, 2023-24இல் கூடுதல் வழித்தடங்களுடன் 54.6 கி.மீ. நீளமாக விரிவடைந்தது. தற்போதைய இரண்டாம் கட்டப் (118.9 கி.மீ.) பணிகள், மெட்ரோ ரயில் சேவைகளை விரிவுபடுத்தி சென்னையின் பொதுப் போக்குவரத்துக் கட்டமைப்பை வலுப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

5.11 கோயம்பேடு முதல் ஆவடி வரையிலான 21.76 கி.மீ. நீளம் கொண்ட வழித்தடம்-V நீட்டிப்புக்கான விரிவான திட்ட அறிக்கையை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் தயாரித்துள்ளது. விமான நிலையத்திலிருந்து கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் வரை நீட்டிப்பதற்கான மற்றொரு விரிவான திட்ட அறிக்கையும் தயாரிக்கப்பட்டு அரசிடம் அளிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையில், கோயம்புத்தூரிலும் மதுரையிலும் மெட்ரோ ரயில் திட்டத்தைத் தொடங்குவதற்காக ஒன்றிய அரசின் ஒப்புதல் கேட்டு மாநில அரசு கருத்துருக்களை அனுப்பியுள்ளது. இத்திட்டங்கள் நகர்ப்புரப் பயணிகளுக்குப் பாதுகாப்பான, வசதியான பொதுப் போக்குவரத்துச் சேவையை வழங்கும்.

### (iii) விமானப் போக்குவரத்து

5.12 உள்நாட்டு விமானப் போக்குவரத்தில் உலகளவில் இந்தியா மூன்றாவது இடம் வகிக்கிறது. 2023-24இல், இந்திய விமான நிலையங்கள் மொத்தம் 37.6 கோடி பயணிகளைக் கையாண்டன. தமிழ்நாட்டில் 4 பன்னாட்டு விமான நிலையங்களும், 2 உள்நாட்டு விமான நிலையங்களும் உள்ளன. கோவிட்-19 பெருந்தொற்றுக்கு முன்னர் 2.8 கோடிக்கும் அதிகமான உள்நாட்டு வெளிநாட்டுப் பயணிகளைத் (புறப்பாடு, வருகை, விமானம் மாறுதல்) தமிழ்நாட்டு விமான நிலையங்கள் கையாண்டன. 2020-21இலிருந்து, பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, 2023-24இல் 2.74 கோடியை எட்டியது (விளக்கப்படம் 5.3).

**விளக்கப்படம் 5.3: தமிழ்நாட்டில் விமானப் பயணிகளும் சரக்குப் போக்குவரத்தும்**





*ஆதாரம்: இந்திய விமான நிலைய ஆணையம், தெற்கு மண்டலம்.*

5.13 தமிழ்நாட்டு விமான நிலையங்களில் கையாளப்பட்ட சரக்குகளிலும் இதே வளர்ச்சிப் போக்கு காணப்படுகிறது. பெருந்தொற்றுக்கு முன்னர், தமிழ்நாட்டு விமான நிலையங்கள் 3.8 லட்சம் மெட்ரிக் டன்னுக்கும் அதிகமான சரக்குகளைக் கையாண்டன. 2020-21இல், இது 3 லட்சம் மெட்ரிக் டன்னாகக் குறைந்தாலும், சரக்குகளின் அளவு படிப்படியாக அதிகரித்து, 2023-24இல் 3.6 லட்சம் மெட்ரிக் டன்னை எட்டியது (விளக்கப்படம் 5.3).

5.14 போக்குவரத்து, சரக்கு, வணிக நடவடிக்கைகள், இதர ஆதாரங்களின் வாயிலாகத் தமிழ்நாட்டு விமான நிலையங்கள் ஈட்டிய வருவாயிலும் இதே மாதிரியான போக்கு காணப்படுகிறது. 2019-20இல் ரூ.1,127 கோடியாக இருந்த வருவாய் 2020-21இல் ரூ.516 கோடியாகக் குறைந்துள்ளது (விளக்கப்படம் 5.4). கோவிட் ஆண்டுக்குப் பிறகு, விமான நிலைய வருவாய் நிலையான வளர்ச்சியடைந்து, 2023-24இல் ரூ.1,582 கோடியை எட்டியுள்ளது.

**விளக்கப்படம் 5.4: தமிழ்நாட்டு விமான நிலையங்கள் வாயிலாகக் கிடைத்த வருவாய்**





*ஆதாரம்: இந்திய விமான நிலைய ஆணையம், தெற்கு மண்டலம்.*

5.15 பெருந்தொற்று காரணமாகத் தமிழ்நாட்டின் நான்கு பன்னாட்டு விமான நிலையங்களில் மொத்தப் பன்னாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை (புறப்பாடு, வருகை, விமானம் மாறுதல்) 2019-20இல் 77 லட்சத்திலிருந்து 2020-21இல் 8.7 லட்சமாகக் குறைந்தது. இருப்பினும், அதன் பின்னர் பயணிகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, 2023-24இல் 76.2 லட்சத்தை எட்டியுள்ளது. தமிழ்நாட்டு விமான நிலையங்களில் உள்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கையிலும் இதேபோன்ற போக்கு காணப்படுகிறது. பெருந்தொற்று காரணமாக, 2019-20இல் 207.1 லட்சமாக இருந்த மொத்த உள்நாட்டுப் பயணிகளின் எண்ணிக்கை 2020-21இல் 65.4 லட்சமாகக் குறைந்தது. 2023-24இல் இது படிப்படியாக உயர்ந்து 197.8 லட்சத்தை எட்டியது.

### (iv) துறைமுகங்கள், நீர்வழி மற்றும் கப்பல் போக்குவரத்து

5.16 காமராஜர் துறைமுகம், வ.உ.சி. துறைமுகம், சென்னை துறைமுகம் ஆகிய மூன்று பெரிய துறைமுகங்களைத் தமிழ்நாடு கொண்டுள்ளது (சில சிறிய துறைமுகங்களும் உள்ளன). பெட்ரோலியம், எண்ணெய், உயவு எண்ணெய், சமையல் எரிவாயு போன்ற திரவநிலைப் பொருள்கள், நிலக்கரி, உரம் போன்ற உலர்பொருள்கள், கிரானைட், எஃகு, வாகனங்கள் போன்ற அதிகனமான பொருள்கள் எனப் பல்வேறு சரக்குகளை இந்தத் துறைமுகங்கள் கையாள்கின்றன. இந்தத் துறைமுகங்கள் கையாளும் சரக்குகளின் அளவு 2020-21இல் 101 மில்லியன் டன் என்றிருந்த நிலையில், 2023-24இல் 138 மில்லியன் டன்னாக உயர்ந்துள்ளது (விளக்கப்படம் 5.5). 2020-21 முதல் 2023-24 வரை, கையாளப்பட்ட சரக்குகள் ஒவ்வொரு ஆண்டும் ஏறத்தாழ 9.15% அளவில் வளர்ச்சியடைந்தன.

**விளக்கப்படம் 5.5: தமிழ்நாட்டுத் துறைமுகங்களில் கையாளப்பட்ட சரக்குகள்**




*ஆதாரம்: காமராஜர், சென்னை, வ.உ.சி. துறைமுக ஆணையங்கள்*

5.17 தமிழ்நாட்டின் முக்கியத் துறைமுகங்களில் கையாளப்படும் சரக்குகள் கணிசமாக அதிகரித்தன. இதற்கு, காமராஜர் துறைமுகத்தில் கையாளப்படும் சரக்குகள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்தது முக்கியக் காரணமாகும் (அட்டவணை 5.1). இந்தப் பெரிய துறைமுகங்களுக்குள் நுழையும் கப்பல்களின் எண்ணிக்கையும் 2019-20இல் 4,569 என்ற நிலையிலிருந்து 2023-24இல் 5,174 ஆக அதிகரித்தது.

**அட்டவணை 5.1: கையாளப்பட்ட சரக்குகளும் தமிழ்நாட்டுத் துறைமுகங்களுக்குள் நுழைந்த கப்பல்களும்**


| ஆண்டு | காமராஜர் துறைமுகம் | | சென்னை துறைமுகம் | | வ.உ.சி. துறைமுகம் | | அனைத்தும் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சரக்குகள் (மெட்ரிக் டன்) | கப்பல்கள் | சரக்குகள் (மெட்ரிக் டன்) | கப்பல்கள் | சரக்குகள் (மெட்ரிக் டன்) | கப்பல்கள் | சரக்குகள் (மெட்ரிக் டன்) | கப்பல்கள் |
| 2019-20 | 32 | 827 | 47 | 2,295 | 36 | 1,447 | 115 | 4,569 |
| 2020-21 | 26 | 707 | 44 | 1,936 | 32 | 1,203 | 101 | 3,846 |
| 2021-22 | 39 | 863 | 49 | 2,217 | 34 | 1,238 | 121 | 4,318 |
| 2022-23 | 44 | 927 | 49 | 2,729 | 38 | 1,524 | 131 | 5,180 |
| 2023-24 | 45 | 967 | 52 | 2,667 | 41 | 1,540 | 138 | 5,174 |

*ஆதாரம்: காமராஜர், சென்னை, வ.உ.சி. துறைமுக ஆணையங்கள்*

## 5.4 வாகனங்கள் பதிவு

5.18 வாகனங்களின் விற்பனை, பராமரிப்பு, பழுதுபார்ப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய துறை இது. தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் ஏறத்தாழ 3.6 கோடி உள்ளன. அவற்றில் போக்குவரத்து வாகனங்கள் 0.14 கோடி, போக்குவரத்து அல்லாத வாகனங்கள் 3.45 கோடி. இவற்றில், இருசக்கர வாகனங்கள் 3.03 கோடி. தமிழ்நாட்டில் வாகனங்களின் பதிவுப் போக்கை விளக்கப்படம் 5.6 முன்வைக்கிறது. இது தானியங்கி வாகன விற்பனையைப் பிரதிபலிப்பதாக உள்ளது. 2020-21இல் பதிவுசெய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 14.7 லட்சம். 2022-23 முதல், கோவிட் தாக்கம் காரணமாகக் குறைந்துள்ள இந்தப் போக்கு, 2023-24இல் 18.9 லட்சமாக மீண்டும் உயர்ந்துள்ளது. 2024-25இல் இது மேலும் உயர்ந்து 19.41 லட்சமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.


**விளக்கப்படம் 5.6: தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள்**




*ஆதாரம்: https://vahan.parivahan.gov.in/vahan4dashboard/ . 2024-25க்கான தரவுகள் ஜனவரி 2025 வரை கிடைக்கப்பெற்றதைக் கொண்டு மார்ச் 2025 வரையிலும் கணிக்கப்பட்டவை.*

5.19 2019-20இல் 67,476 ஆக இருந்த சரக்குப் போக்குவரத்து வாகனப் பதிவு, 2023-24இல் 68,063 ஆக அதிகரித்துள்ளது (விளக்கப்படம் 5.7). இந்தக் காலகட்டத்தில், மூன்று சக்கர வாகனங்கள், பொதுச் சேவை வாகனங்கள் ஆகியவற்றின் பதிவும் அதிகரித்துள்ளது.


**விளக்கப்படம் 5.7: போக்குவரத்து வாகனங்களின் பதிவு**




*ஆதாரம்: https://vahan.parivahan.gov.in/vahan4dashboard/*

5.20 போக்குவரத்து அல்லாத வாகனங்களைப் பொறுத்தவரை, இருசக்கர வாகனங்களின் பதிவு 2019-20இல் 15.75 லட்சத்திலிருந்து 14.54 லட்சமாகக் குறைந்தது (விளக்கப்படம் 5.8). அதே காலகட்டத்தில், நான்கு சக்கர வாகனங்கள், உழவுக்கான இழுவை வண்டி ஆகியவற்றின் பதிவு அதிகரித்துள்ளது.

**விளக்கப்படம் 5.8: போக்குவரத்து அல்லாத வாகனங்களின் பதிவு**





*ஆதாரம்: https://vahan.parivahan.gov.in/vahan4dashboard/*

## 5.5 மென்பொருள் ஏற்றுமதி

5.21 இந்தியாவின் வர்த்தகச் சமநிலையைப் பேணுவதில் தகவல் தொழில்நுட்பம், தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளின் ஏற்றுமதி வருவாய் முக்கியப் பங்குவகிக்கிறது. மென்பொருள் ஏற்றுமதியில் கர்நாடகம், மகாராஷ்டிரம், தெலங்கானாவுக்கு அடுத்தபடியாக நான்காம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது. மாநிலத்தின் மென்பொருள் சேவைகள் ஏற்றுமதி 2019-20இல் ரூ.46,704 கோடியிலிருந்து 2022-23இல் ரூ.73,969 கோடியாக உயர்ந்துள்ளது (விளக்கப்படம் 5.9).

**விளக்கப்படம் 5.9: தமிழ்நாட்டின் மென்பொருள் ஏற்றுமதி**





*ஆதாரம்: https://stpi.in/en/stpi-annual-reports*

## 5.6 ஆற்றல்

### (i) மின்சாரம்

5.22 தமிழ்நாட்டின் மின்சக்தித் துறை பல்வேறு ஆண்டுகளாகத் தொடர்ந்து குறிப்பிடத்தக்க வளர்ச்சியைக் கண்டுள்ளது. 2023-24இல் அனைத்து மூலங்களிலிருந்தும் பெறப்பட்ட மொத்த நிறுவுதிறன் 36,563 மெகாவாட்டாக அதிகரித்தது. நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி நிறுவுதிறன் (மாநில, ஒன்றிய மற்றும் சொந்தப் பயன்பாட்டுத் (Captive) திட்டங்கள்) சிறிதளவு குறைந்துள்ள நிலையில், புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் மூலங்களின் (சூரிய ஒளி, காற்று, உயிர்த்திரள், நீர் மற்றும் இணை உற்பத்தி) நிறுவுதிறன் 20,724 மெகாவாட்டாக அதிகரித்துள்ளது. எரிவாயு, அணுசக்தி உள்ளிட்ட இதர மின்னாற்றல் மூலங்களுடன் திறந்தவெளிச் சந்தையிலிருந்தும் தனித் திட்டங்களிலிருந்தும் மின்சாரம் கொள்முதல் செய்யப்படுகிறது. புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் ஆதாரங்களான காற்றாலைகளிலிருந்து 9,015 மெகாவாட், சூரிய ஒளியிலிருந்து 8,496 மெகாவாட், கரும்புச்சக்கையிலிருந்து 684 மெகாவாட், உயிர்த்திரள்களிலிருந்து 207 மெகாவாட், புனல் மின் நிலையங்களிலிருந்து 2,322 மெகாவாட் திறன் ஆகியவற்றுடன், 2023-24இல் மொத்தப் புதுப்பிக்கத்தக்க மின் நிறுவுதிறனில் நாட்டிலேயே மூன்றாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது (விளக்கப்படம் 5.10).


**விளக்கப்படம் 5.10: புதுப்பிக்கத்தக்க மின்னாற்றல் மூலங்களின் மின் நிறுவுதிறன் (மெகாவாட்)**




*ஆதாரம்: கொள்கை விளக்கக் குறிப்பு, எரிசக்தித் துறை, 2024-25, தமிழ்நாடு அரசு.*

5.23 தமிழ்நாட்டில் தனிநபருக்குக் கிடைக்கும் மின்சாரம் 2019-20இல் 1,507 கிலோவாட் மணிநேரமாக இருந்தது. இது 2023-24இல் 1,749 கிலோவாட் மணிநேரமாக அதிகரித்தது. இது, பெருந்தொற்றுக்கு முந்தைய அளவைவிடக் கணிசமான அளவில் அதிகமாக உள்ளது (விளக்கப்படம் 5.11).


**விளக்கப்படம் 5.11: தமிழ்நாட்டில் தனிநபருக்குக் கிடைக்கும் மின்சாரம்**




*ஆதாரம்: இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளிவிவரக் கையேடு.*

5.24 தனிநபருக்குக் கிடைக்கும் மின்சாரத்தைப் பொறுத்தவரை, 2023-24இல் முதன்மை இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு (1,749 கிலோவாட் மணிநேரம்) 7ஆவது இடத்தில் உள்ளது (விளக்கப்படம் 5.12). முதல் இடத்தில் உள்ள ஹரியானாவில் தனிநபருக்கான மின்சார அளவு 2,510 கிலோவாட் மணிநேரமாக உள்ளது.

**விளக்கப்படம் 5.12: 2023-24இல் இந்தியாவின் முதன்மை மாநிலங்களில் தனிநபருக்கான மின்சாரம்**





*ஆதாரம்: இந்திய மாநிலங்கள் குறித்த புள்ளிவிவரக் கையேடு.*

### (ii) பெட்ரோல், டீசல் நுகர்வு

5.25 பெருகிவரும் வாகன எண்ணிக்கைக்கு ஏற்ப, தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் நுகர்வு ஆண்டுதோறும் அதிகரித்துள்ளது. 2019-20இல் 61,91,000 மெட்ரிக் டன்னாக இருந்த டீசல் நுகர்வு 2023-24இல் 62,87,000 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது (விளக்கப்படம் 5.13). அதே நேரத்தில், பெட்ரோல் நுகர்வு 27,35,000 மெட்ரிக் டன்னிலிருந்து 33,52,000 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது.


**விளக்கப்படம் 5.13: தமிழ்நாட்டில் பெட்ரோல், டீசல் நுகர்வு**




*ஆதாரம்: பெட்ரோலியம் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு, இந்திய அரசு.*

5.26 தமிழ்நாட்டில் சமையல் எரிவாயு (LPG) நுகர்வோர் எண்ணிக்கை 2019-20இல் 2.12 கோடியிலிருந்து 2023-24இல் 2.28 கோடியாகப் படிப்படியாக அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது (விளக்கப்படம் 5.14).

**விளக்கப்படம் 5.14: தமிழ்நாட்டில் சமையல் எரிவாயு நுகர்வோர்**





*ஆதாரம்: பெட்ரோலியம் திட்டமிடல் மற்றும் பகுப்பாய்வுப் பிரிவு, இந்திய அரசு.*

## 5.7 சுற்றுலா

5.27 தமிழ்நாட்டில் மலைத் தலங்கள் (ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு), யுனெஸ்கோ உலகப் பாரம்பரியத் தலங்கள் (மாமல்லபுரம் போன்றவை), காட்டுயிர் சுற்றுலாத் தலங்கள், சமயத் தலங்கள் (மதுரை, ராமேஸ்வரம் போன்றவை), கடற்கரைகள் (மாமல்லபுரம், மெரினா போன்றவை) உள்பட பல்வேறு புகழ்பெற்ற சுற்றுலாத் தலங்கள் உள்ளன. 2019இல் 49.5 கோடி உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகைபுரிந்துள்ளனர். ஆனால், பெருந்தொற்று காரணமாக இந்த எண்ணிக்கை 2020, 2021இல் கணிசமான அளவில் குறைந்தது. அதற்குப் பிறகு, உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியது (விளக்கப்படம் 5.15). வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகையிலும் இதே போக்கு காணப்படுகிறது. தமிழ்நாட்டுக்கு வரும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2019இல் 0.69 கோடி என்றிருந்தது. கோவிட்-19 ஆண்டுகளில் வெளிநாட்டுப் பயணிகளின் வருகை குறைந்தாலும், பின்னர் மீண்டும் படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இதர மாநிலங்களிலும் இதே போக்கு காணப்படுகிறது.

**விளக்கப்படம் 5.15: தமிழ்நாட்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை**




*ஆதாரம்: சுற்றுலாத் துறை, தமிழ்நாடு அரசு.*

5.28 பொருளாதாரத்தில் சுற்றுலா முக்கியப் பங்குவகிக்கிறது. தேசிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6.23%, மொத்த வேலைவாய்ப்பில் 8.78% பங்களிக்கிறது. இது பயணம், விருந்தோம்பல், உணவுச் சேவைகள் போன்ற பல்வேறு துறைகளுக்கு ஊக்கமளிக்கும் அதே வேளையில், உள்ளூர் வணிகத்தையும் ஆதரிக்கிறது. கூடுதலாக, அந்நியச் செலாவணி வருவாயின் குறிப்பிடத்தக்க ஆதாரமாக சுற்றுலா திகழ்கிறது. கோவிட்-19 காரணமாக 2020இல் எதிர்பாராத சரிவு ஏற்பட்டாலும், உள்நாட்டுச் சுற்றுலா மீண்டும் எழுச்சி பெற்றுள்ளது. அதே நேரத்தில், வெளிநாட்டுச் சுற்றுலா இன்னும் பெருந்தொற்றுக்கு முந்தைய நிலைக்குத் திரும்பவில்லை. 2023, 2024களில் திடமான வளர்ச்சிப் போக்கு காணப்படுவதால், மாநிலத்தின் வளம்மிக்க பண்பாட்டு மரபு, கோயில்கள், கடற்கரைகள், மலைத் தலங்கள் ஆகியவை தொடர்ந்து லட்சக்கணக்கானவர்களை ஈர்க்கின்றன.

## 5.8 வங்கிச் சேவைகள்

5.29 வங்கி வளர்ச்சியில் மாநிலங்களுக்கு இடையேயான வேறுபாடுகளையும், பொருளாதார நடவடிக்கைகளில் வங்கியின் பங்கையும் அளவிடுவதற்குக் கடன்-வைப்பு விகிதம் ஒரு பயனுள்ள குறியீடாகும். முதன்மை மாநிலங்களைப் பொறுத்தவரை, நாட்டிலேயே உயர்ந்த பொருளாதாரச் செயல்பாட்டைப் பிரதிபலிக்கும் விதமாக, கடன்-வைப்பு விகிதத்தில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னிலை வகிக்கிறது. தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் 2019-20 முதல் 2023-24 வரையிலான கடன்-வைப்பு விகித விவரங்களை அட்டவணை 5.2 காட்டுகிறது. இந்தக் காலகட்டத்தில், இந்தியாவின் கடன்-வைப்பு விகிதம் 76.5% இலிருந்து 79.6% ஆகவும், தமிழ்நாட்டின் கடன்-வைப்பு விகிதம் 109.2% இலிருந்து 117.7% ஆகவும் அதிகரித்தது. மாநில அளவிலும் தேசிய அளவிலும் பொருளாதாரச் செயல்பாடுகள் படிப்படியாக உயர்ந்துவருவதை இது குறிக்கிறது. மற்ற பகுதிகளிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் சேமிப்பே அதிக அளவிலான கடன்-வைப்பு விகிதம் இருப்பதற்குக் காரணம்.

**அட்டவணை 5.2: அட்டவணைப்படுத்தப்பட்ட வணிக வங்கிகளின் வைப்பு மற்றும் கடன் (ரூ.கோடியில்)**

| ஆண்டு | தமிழ்நாடு | | | இந்தியா | | |
|---|---|---|---|---|---|---|
| | வைப்புத்தொகை | கடன்கள் | கடன்-வைப்பு விகிதம் (%) | வைப்புத்தொகை | கடன்கள் | கடன்-வைப்பு விகிதம் (%) |
| 2019-20 | 8,99,038 | 9,81,665 | 109.2 | 1,37,48,655 | 1,05,18,812 | 76.5 |
| 2020-21 | 10,08,731 | 10,46,952 | 103.8 | 1,54,43,510 | 1,10,78,050 | 71.7 |
| 2021-22 | 11,17,412 | 11,58,606 | 103.7 | 1,70,08,795 | 1,22,58,748 | 72.1 |
| 2022-23 | 12,11,394 | 13,25,333 | 109.4 | 1,87,42,311 | 14,1,98,006 | 75.8 |
| 2023-24 | 13,44,553 | 15,82,851 | 117.7 | 2,12,53,358 | 1,69,13,694 | 79.6 |

*ஆதாரம்: இந்தியப் பொருளாதாரம் குறித்த ரிசர்வ் வங்கித் தரவுகள்.*

5.30 2017-18 முதல் 2023-24 வரையிலான, முதல் ஆறு மாநிலங்களின் கடன்-வைப்பு விகித விவரங்களை அட்டவணை 5.3 வழங்குகிறது. கடன்-வைப்பு விகிதத்தில் தமிழ்நாடு முதல் 3 இடங்களில் ஒன்றாகவும், சில ஆண்டுகளில் ஆந்திரப் பிரதேசம், தெலங்கானாவை அடுத்து இருந்தாலும், கடன் மற்றும் வைப்புத் தொகைகளின் அடிப்படையில் இம்மாநிலங்களைவிடத் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. எடுத்துக்காட்டாக, 2022-23இல், தமிழ்நாடு ரூ.15,82,851 கோடி கடன் வழங்கியது. ஆனால், அந்த ஆண்டில் ஆந்திரம் ரூ.7,63,501 கோடியும், தெலங்கானா ரூ.9,40,895 கோடியும் கடன் வழங்கியது. தமிழ்நாட்டின் வைப்புத் தொகை ரூ.13,44,553 கோடி என்ற நிலையில், ஆந்திரம் ரூ.4,80,580 கோடியும், தெலங்கானா ரூ.7,88,091 கோடியும் வைப்புத் தொகையாக வைத்துள்ளன.


**அட்டவணை 5.3: முதல் 6 மாநிலங்களில் கடன்-வைப்பு விகிதம்**

| ஆண்டு | தமிழ்நாடு | ஆந்திரம் | தெலங்கானா | மகாராஷ்டிரம் | ராஜஸ்தான் | குஜராத் |
|---|---|---|---|---|---|---|
| 2019-20 | 109.2 (3) | 128.9 (1) | 110.5 (2) | 89.4 (4) | 83.9 (5) | 82.8 (6) |
| 2020-21 | 103.8 (2) | 135.2 (1) | 99.3 (3) | 79.2 (6) | 81.9 (4) | 79.5 (5) |
| 2021-22 | 103.7 (2) | 142.7 (1) | 103.4 (3) | 77.8 (6) | 83.4 (4) | 81.7 (5) |
| 2022-23 | 109.4 (3) | 149.2 (1) | 111.9 (2) | 85.0 (5) | 86.6 (4) | 80.6 (6) |
| 2023-24 | 117.7 (3) | 158.9 (1) | 119.4 (2) | 86.3 (5) | 91.8 (4) | 83.2 (6) |

*ஆதாரம்: இந்தியப் பொருளாதாரம் குறித்த ரிசர்வ் வங்கித் தரவுகள்.*

5.31 வங்கிக் கிளைகளும், தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்களும் (ATM) வங்கிச் சேவைகளுக்கு முக்கியமானவை. அவை பொதுமக்களுக்குப் பரந்த அளவில் நிதிச் சேவைகளை வழங்குகின்றன. 2023-24இல், தமிழ்நாட்டிலுள்ள வணிக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (அதாவது, செயல்படும் அலுவலகங்கள்) 13,189 ஆகும். நாடு முழுவதும் உள்ள கிளைகளின் எண்ணிக்கை 1,67,772. 2019-20 முதல் 2023-24 வரை, வங்கிகளின் எண்ணிக்கை தமிழ்நாட்டில் 1 லட்சம் பேருக்கு 17இலிருந்து 18ஆகவும், இந்திய அளவில் 13இலிருந்து 14ஆகவும் அதிகரித்துள்ளது (விளக்கப்படம் 5.16).


**விளக்கப்படம் 5.16: 1 லட்சம் மக்கள்தொகைக்கான வணிக வங்கிகளின் எண்ணிக்கை**




*ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி இணையதளம்*

5.32 24,390 தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்களுடன் தமிழ்நாடு, நாட்டின் மிகப் பெரிய வங்கிக் கட்டமைப்பில் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கதாகும் (விளக்கப்படம் 5.17).

**விளக்கப்படம் 5.17: வணிக வங்கிகளின் தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்கள் – 2024இல் மாநிலவாரியாக**




*ஆதாரம்: https://rbi.org.in/Scripts/StateRegionATMView.aspx*

5.33 வங்கிகள் டிஜிட்டல்மயமாக்கப்பட்டதும், ஒருங்கிணைந்த செலுத்துகை இடைமுக (UPI) வசதிகளை ஏற்றுக்கொண்டதும் மாநிலத்தின் வங்கிச் சேவைகளைக் கணிசமாக மாற்றியுள்ளன. இத்தகைய தொழில்நுட்பங்கள் விரைவான, தடையற்ற பரிவர்த்தனைகளைச் சாத்தியமாக்கியுள்ளன; ஊரக, நகர்ப்புரப் பகுதிகள் இரண்டுக்கும் பயனளிப்பதோடு, அதிக எண்ணிக்கையிலானவர்கள் வங்கிச் சேவைகளைப் பெறவும் ஊக்குவிக்கின்றன. வங்கிக் கட்டமைப்பு குறைவாக இருக்கும் பகுதிகளில் UPI மிகவும் மதிப்பு வாய்ந்ததாகத் திகழ்கிறது. வங்கிக் கிளைகளை நேரடியாக அணுகுவது சவாலாக இருக்கும் ஊரகப்பகுதிகளில், திறன்பேசிகளும் டிஜிட்டல் கட்டண முறைகளும் இடைவெளியைக் குறைத்து, நிதிச் சேவைகளை முன்பைவிட எளிதாக அணுகக்கூடியவையாக மாற்றுகின்றன. சிறுவணிகங்களைப் பொறுத்த அளவில், டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைக்கு நகர்வது உண்மையிலேயே மாற்றத்தை ஏற்படுத்தும். இது பணத்தைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, வணிக நிறுவனங்கள் தங்கள் நிதிகளை மிகத் திறமையாகக் கண்காணிக்க அனுமதிக்கிறது. அத்துடன், பொருளாதாரத்தில் பெருமளவிலான வெளிப்படைத் தன்மையையும் ஊக்குவிக்கிறது.

## 5.9 மனை வணிகம்

5.34 தமிழ்நாட்டில் பதிவுசெய்யப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கையானது பல்வேறு ஆண்டுகளாகத் தொடர்ந்து நிலவிவரும் சீரான வளர்ச்சியைக் காட்டுகிறது. இது, 2019-20இல் 25.88 லட்சத்தில் இருந்தது, 2023-24இல் 33.23 லட்சமாக அதிகரித்தது (அட்டவணை 5.4). இதே காலகட்டத்தில், இந்தச் சேவையின் வாயிலாகக் கிடைத்த வருவாயும் ரூ.11,028 கோடியிலிருந்து ரூ.18,825 கோடியாக அதிகரித்தது. கட்டடங்களுக்கு வழங்கப்படும் அனுமதியைப் பொறுத்தவரை பல்வேறு ஆண்டுகளாக நிலையான வளர்ச்சி காணப்படுகிறது. ஜூலை 2024இல்

அறிமுகப்படுத்தப்பட்டசுய-சான்றிதழ்திட்டம்என்னும்மிகப்பெரும்சீர்திருத்தத்துக்குப்பிறகு, கட்டடத் திட்டங்களுக்கான அனுமதியின் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்துள்ளது. நடப்பு ஆண்டில் இதுவரை வழங்கப்பட்டுள்ள அனுமதிகளின் எண்ணிக்கை 59,910. இது, முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த அனுமதிகளின் எண்ணிக்கையைவிட அதிகம்.

**அட்டவணை 5.4: பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள்**


| ஆண்டு | பதிவுசெய்யப்பட்ட ஆவணங்கள் | |
|---|---|---|
| | எண்ணிக்கை | வருவாய் (ரூ.கோடி) |
| 2019-20 | 25,87,816 | 11,028.23 |
| 2020-21 | 26,95,650 | 10,643.08 |
| 2021-22 | 29,98,048 | 13,913.65 |
| 2022-23 | 34,41,248 | 17,296.84 |
| 2023-24 | 33,22,857 | 18,825.32 |
| 2024-25 | 33,34,997* | 22,814.79* |

*ஆதாரம்: கொள்கை விளக்கக் குறிப்பு, பத்திரப் பதிவுத் துறை, தமிழ்நாடு அரசு.* 2024-25க்கான விவரங்கள் கணிக்கப்பட்டவை.*

## 5.10 சேவை சார்ந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்

5.35 தமிழ்நாட்டில் சேவைத்துறை பெற்றிருக்கும் எழுச்சியை மேலே கொடுக்கப்பட்டுள்ள சான்றுகள் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. இந்த எழுச்சி, 2021-22 முதல் உத்யம் பதிவுச் சான்றிதழுடன் பதிவுசெய்யப்பட்ட சேவைகள் சார்ந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரிப்பிலும் பிரதிபலிக்கிறது. 2019-20க்கும் 2024-25க்கும் இடையில், இவ்வகை நிறுவனங்களின் எண்ணிக்கை 1.45 லட்சத்திலிருந்து 24.88 லட்சமாக வளர்ச்சிபெற்றது (விளக்கப்படம் 5.18). மொத்த நிறுவனங்களில், 99.18% குறு நிறுவனங்கள், 0.78% சிறு நிறுவனங்கள், 0.004% நடுத்தர நிறுவனங்கள் ஆகும்.

**விளக்கப்படம் 5.18: தமிழ்நாட்டிலுள்ள சேவைகள் சார்ந்த குறு, சிறு, நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் எண்ணிக்கை**





*ஆதாரம்: தொழில் வணிக இயக்குநரகம், தமிழ்நாடு அரசு.*

## 5.11 சேவைகள் துறைக்கான கடன்

5.36 நாடு முழுவதும் போக்குவரத்து, தொழில்முறைச் சேவைகள், வர்த்தகம், தங்குமிடங்கள், உணவகங்கள், பொழுதுபோக்கு, தகவல் தொழில்நுட்பம், தொலைத்தொடர்பு, நிதிச் சேவைகள் உள்ளிட்ட சேவைகள் சார்ந்த பல்வேறு துணைத் துறைகளுக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட வங்கிகள் கடன் வசதிகளை வழங்குகின்றன. தமிழ்நாட்டில், சேவைத் துறை நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன் 2019-20இல் ரூ.2.86 லட்சம் கோடியிலிருந்து 2023-24இல் ரூ.4.46 லட்சம் கோடியாக அதிகரித்தது (விளக்கப்படம் 5.19).


**விளக்கப்படம் 5.19: தமிழ்நாட்டில் சேவைத் துறை நிறுவனங்களுக்கு வங்கிகள் வழங்கியுள்ள கடன்**




*ஆதாரம்: இந்தியப் பொருளாதாரம் குறித்த ரிசர்வ் வங்கித் தரவுகள்.*

5.37 2023-24இல், நிதிச் சேவைகளுக்காக வழங்கப்பட்ட கடன் தோராயமாக 47% ஆகவும், வர்த்தகத்துக்கான கடன் ஏறக்குறைய 30% ஆகவும், போக்குவரத்துக்கான கடன் கிட்டத்தட்ட 5.6% ஆகவும் இருந்தது (விளக்கப்படம் 5.20). தமிழ்நாட்டின் சேவைத் துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கடன்களில், இம்மூன்று துணைத் துறைகளுக்கு மட்டும் 80% வழங்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 5.20: 2023-24இல் தமிழ்நாட்டில் சேவைசார்ந்த துணைத் துறைகளுக்கு வழங்கப்பட்ட கடன் (ரூ. கோடியில்)**




*ஆதாரம்: இந்தியப் பொருளாதாரம் குறித்த ரிசர்வ் வங்கித் தரவுகள்.*

## 5.12 முடிவுரை

5.38 தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையைத் தக்கவைக்க சேவைகள் துறை மிகவும் முக்கியமானது. குறைந்த அளவிலான திறன் கொண்ட சேவைகளையும், அதிகத் திறன் கொண்ட சேவைகளையும் உள்ளடக்கிய துறையாக இது இருந்தாலும்கூட, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், சுகாதாரம், கல்விச் சேவைகள், சுற்றுலா, நிதி உள்ளிட்டவற்றில் மாநிலம் வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ளது. தகவல் செயலாக்கத்தில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்ப வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு உயர்கல்வியில் இம்மாநிலம் தனக்குள்ள வளத்தைப் பயன்படுத்தி, செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான சேவைகள், வடிவமைப்பு, கலப்புத் தொழில்நுட்பங்களை அடிப்படையாகக் கொண்ட சேவைகள் போன்ற தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளுக்கு மாறுவதற்கான தேவை வலுவாக உள்ளது. உற்பத்தித் துறையில் அதிகரித்துவரும் சேவைமயமாக்கல், டிஜிட்டல்மயமாக்கலைப் பயன்படுத்திக்கொள்ளவும் மாநிலம் தயாராக உள்ளது. டிஜிட்டல் தொடர்பு, மின்சாரம், போக்குவரத்து போன்ற முக்கியமான உட்கட்டமைப்புச் சேவைகளில் அரசு பெரிய அளவில் முதலீடு செய்ய வேண்டும். நகர்மயமாதல், தொழில்மயமாதல், வருமான உயர்வு ஆகியவற்றால் அதிகரிக்கும் தேவைகளைப் பூர்த்திசெய்ய, குறிப்பாக அடுத்த 10 ஆண்டுகளில் மின் உற்பத்தியை கணிசமான அளவில் உயர்த்த வேண்டியிருக்கும். மாநிலம் முழுவதும் பயண நேரத்தைக் குறைக்கும் முயற்சிகள், குறிப்பாக நகர்ப்புரங்களில் பயண நேரத்தைக் குறைக்கும்போது, அது அனைத்துப் பகுதிகளிலும் வளர்ச்சியைத் தூண்டுவதில் பெருமளவில் பங்களிக்கும். சாலைகள் விரிவாக்கம், உயர்மட்டச் சாலைகள், மெட்ரோ போக்குவரத்து, ரயில் போக்குவரத்து, புறநகர் போக்குவரத்து போன்றவை இதில் அடங்கும். மாநிலப் பொருளாதாரம் வளர்ந்து உலகப் பொருளாதாரத்துடன் இணைக்கப்பட்டுவரும் சூழ்நிலையில், எதிர்கால விமானப் போக்குவரத்தை முன்னுணர்ந்து, மாநிலத்தில் உள்ள விமான நிலையங்களின் திறன்களையும் துறைமுகங்களின் திறன்களையும் கணிசமாக மேம்படுத்த வேண்டும். இதில், பரந்தூரில் அமையவுள்ள பசுமை விமான நிலையமும் அடங்கும். வளர்ச்சிக்கான வாய்ப்புகளைப் பெருமளவு கொண்டிருக்கும் சுற்றுலா போன்ற துறைகளில் கணிசமான முதலீடு தேவைப்படுகிறது. சுற்றுலாத் துறையில் செய்யப்படும் முதலீட்டால் பல்கிப்பெருகும் விளைவானது இதர துணைத் துறைகளில் செய்யப்படும் முதலீட்டு விளைவைவிட அதிகம். பல்வேறு ஆண்டுகளாக, இந்தத் துறையில் குறைவாகவே முதலீடு செய்யப்படுகிறது. இது சரிசெய்யப்பட வேண்டும்.

அத்தியாயம் 6

# வேலைவாய்ப்பு

## 6.1 அறிமுகம்

6.1 பொருளாதார வளர்ச்சி, சமூக நிலைத்தன்மை இரண்டுக்கும் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவது இன்றியமையாததாகும். இது, வளர்ச்சியை ஒட்டுமொத்த முன்னேற்றமாக மாற்றுவதில் முக்கியப் பங்காற்றுகிறது. தனிநபர்கள் தங்களையும் தங்கள் குடும்பங்களையும் கவனித்துக்கொள்ள வழிவகுத்துத் தருவதன் மூலம், அவர்களது செலவழிக்கும் திறனையும் உள்ளூர்ப் பொருளாதாரங்களையும் ஊக்குவிக்கிறது. உலக வங்கியின் கூற்றுப்படி, வேலைவாய்ப்பில் ஒவ்வொரு 1% அதிகரிப்பும் (அல்லது குறைவும்) மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியில் 0.6% உயர்வை (அல்லது சரிவை) ஏற்படுத்துகிறது. அதிக அளவிலான மக்கள் வேலைவாய்ப்பைப் பெறும்போது, பொருள்கள், சேவைகளுக்கான தேவை அதிகரித்து, வணிகமானது விரிவாக்கம் பெறும். மேலும் அது, கூடுதல் வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்.

6.2 புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதில் மந்தநிலை நிலவினால் அது வேலைவாய்ப்பின்மையை அதிகரித்து, சமூகப் பதற்றங்களுக்கும் குற்றங்களுக்கும் வழிவகுக்கும். ஆகவே, வேலைவாய்ப்புகளை — குறிப்பாக, இளைஞர்களுக்கு — உருவாக்குவதில் அரசுத் துறைகளும் தனியார் துறைகளும் முனைப்புடன் செயல்படுவது அவசியம். தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவதில் சில சவால்கள் இருக்கின்றன. தொழிலாளர்களில் பெண்களின் பங்களிப்பு விகிதம் (LFPR) தொடர்ந்து அதிகரித்துவந்தாலும், இந்த விகிதத்தை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்பும் உள்ளது. உயர்கல்வியில் பெண்களின் மொத்தச் சேர்க்கை விகிதம் நாட்டிலேயே அதிகம் உள்ள மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. ஆனால், அத்தகைய திறன் கொண்ட பெண்களின் பங்கேற்பு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது. இரண்டாவதாக, மாறிவரும் பொருளாதாரச் சூழலில், உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்புஅடிப்படையில்பார்த்தால்வேளாண்மையின்பங்குபெரும்பாலான மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில் கடுமையாகக் குறைந்துள்ள அதே நேரத்தில், பல குடும்பங்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக இன்னும் கணிசமான அளவில் வேளாண்மையையே சார்ந்துள்ளன. மூன்றாவதாக, வேலைவாய்ப்பு உருவாக்கம் இந்தப் பிரிவு மக்கள்தொகையில் 50% க்கும் அதிகமாக உள்ள திறன் குறைந்த இளைஞர்களுக்கும், மூன்றாம்நிலைக் கல்வித் தகுதிகள் உள்ளவர்களுக்கும் ஏற்படுத்தப்பட வேண்டும். இறுதியாக, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழில்நுட்ப மேம்பாடுகளைக் கருத்தில்கொண்டால், தொழிலாளர்களின் எதிர்காலப் பங்களிப்பானது, அவர்களது திறன்களைப் பொறுத்தே அமையும். தற்போது, தொழிலாளர்களில் பெரும்பாலானோர் அமைப்புசாராத் துறையில்தான் உள்ளனர். அதேபோல, தற்போதைய வேலைவாய்ப்புக்கேற்ற திறன்கள் போதுமானதாக இல்லை என்பதற்கும் சான்றுகள் உள்ளன.


6.3 தமிழ்நாடு இந்தியாவின் முன்னணித் தொழில் மையமாகத் திகழ்கிறது. இயக்கூர்திகள், ஜவுளி, தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி போன்ற துறைகளில் வலுவான நிலையில் உள்ளது. தொழில்துறையில் இந்த முன்னேற்றமானது மாநிலத்தில் ஏராளமான வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. பல்வேறு திறன் நிலைகளில் எண்ணிலடங்காத வேலைவாய்ப்புகளை அளிக்கிறது. தமிழ்நாட்டின் தற்போதைய வேலைவாய்ப்புச் சூழலை இந்த அத்தியாயம் ஆராய்கிறது. பெண்கள், இளைஞர்களின் வேலைவாய்ப்பு நிலை, தொழிற்சாலை சார்ந்த வேலைவாய்ப்புப் போக்குகள், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் வேலைவாய்ப்புக்கான திறன்களை மேம்படுத்துவதுவதிலும் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் முன்னெடுப்புகள் ஆகியவற்றில் இந்த அத்தியாயம் கவனம்செலுத்துகிறது.

## 6.2 தற்போதைய வேலைவாய்ப்புச் சூழல்

6.4 தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனம் (NSSO) மேற்கொண்ட தொழிலாளர் கணக்கெடுப்பின்படி (PLFS), வழக்கமான நிலையில் தொழிலாளர்களைக் கணக்கிடுதலானது (முதன்மை நிலை, துணை நிலை இரண்டையும் உள்ளடக்கியது) கணக்கெடுப்பு நாளுக்கு முந்தைய 365 நாள்களில் பணிபுரிந்த அல்லது வேலைக்குத் தயாராக இருந்தவர்களையும் உள்ளடக்கியது. கூடுதலாக அந்தக் குறிப்பிட்ட காலத்தில் குறைந்தபட்சம் 30 நாள்கள் பணிபுரிந்தவர்களையும் உள்ளடக்கியது. கணக்கெடுப்புக்கு முந்தைய 7 நாள்களின் அடிப்படையில் மதிப்பிடப்பட்ட செயல்பாடானது தனிநபரின் நடப்பு வாராந்திர நிலை (CWS) எனக் குறிப்பிடப்படுகிறது.

6.5 தமிழ்நாட்டில் 15-59 வயதுக்கு உட்பட்ட மாநிலத்தின்தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (LFPR) தேசிய அளவைவிட அதிகமாக இருந்துவருகிறது. தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2020-21இல் 64.7% என்ற நிலையில் இருந்தபோது, தேசிய சராசரி 58.4% என்ற அளவில் இருந்தது (விளக்கப்படம் 6.1). ஊரகத் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காரணமாக, மாநிலத்தின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2023-24இல் 64.6% என உயர்ந்தது. தமிழ்நாடு, இந்தியா இரண்டிலும் ஊரகத் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் நகர்ப்புரத்தைவிடத் தொடர்ந்து அதிகமாக உள்ளது குறிப்பிடத்தக்கது.

**விளக்கப்படம் 6.1: தமிழ்நாடு மற்றும் இந்தியாவில் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (%)***





*ஆதாரம்: ஆண்டறிக்கை, தொழிலாளர் கணக்கெடுப்பு (பல்வேறு ஆண்டுகள்) *15 – 59 வயதுடையோர்*

6.6 2019-20 முதல் 2023-24 வரையிலான காலகட்டத்தில் தமிழ்நாட்டின் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்துக்கும், இந்தியாவின் தொழிலாளர் பங்கேற்பு விகிதத்துக்குமான இடைவெளி மிகக் குறைந்தது. இதற்கு இரண்டு காரணங்களைச் சொல்லலாம்: (i) பணிக்குச் செல்வதை ஒத்திவைத்துவிட்டுச் சிறந்த கல்வித் தகுதிகளைப் பெறுவதற்காக உயர்கல்வி பயிலும் இளைஞர்கள் தமிழ்நாட்டில் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். (ii) குறைந்த அளவிலான பொருளாதார வாய்ப்புகளும் சமூகப் பாதுகாப்பும் உள்ள மாநிலங்களில், தொழிலாளர்கள் சுயதொழில் செய்து சொற்ப வருமானமீட்டி வாழ்க்கை நடத்த வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகின்றனர்.

6.7 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட தனிநபர்களுக்கான வழக்கமான நிலையை அடிப்படையாகக் கொண்ட தொழிலாளர் பங்கேற்பு விகிதமானது (LFPR) தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் தொடர்ச்சியாக பெண்களைவிட ஆண்களுக்கு அதிகமாக உள்ளது. (விளக்கப்படம் 6.2). தமிழ்நாட்டில் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2019-20இல் 40.2% ஆக இருந்து 2023-24இல் 43.2% ஆக உயர்ந்துள்ளது. அதேபோல, ஆண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் 2023-24இல் 75.7% என்ற வலுவான நிலையில் தொடர்கிறது. இது, நீடித்த தொழிலாளர் பங்கேற்பைப் பிரதிபலிக்கிறது.

**விளக்கப்படம் 6.2: ஆண்கள் மற்றும் பெண்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம் (%)**




*ஆதாரம்: ஆண்டறிக்கை, தொழிலாளர் கணக்கெடுப்பு (பல்வேறு ஆண்டுகள்), தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனம், *15 வயது & அதற்கு மேற்பட்டோர்*

6.8 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட தனிநபர்களின் வேலைவாய்ப்பு நிலையைப் பொறுத்தவரை, தமிழ்நாட்டில் உள்ள மொத்தப் பணியாளர்களில் 34.2% பேர் சுயதொழில் செய்பவர்கள் (அட்டவணை 6.1). இதற்கு நேர்மாறாக, இந்தியாவில் உள்ள மொத்தப் பணியாளர்களில் 58.4% பேர் சுயதொழில் செய்பவர்கள்.

**அட்டவணை 6.1: தமிழ்நாடு,இந்தியாவில் வகை வாரியான வேலைவாய்ப்பு நிலை (2023-24)**

<table>
<tr><th rowspan="2">ஊரகம்/ நகர்ப்புரம்</th><th rowspan="2">ஆண்/ பெண்</th><th colspan="3">தமிழ்நாடு</th><th colspan="3">இந்தியா</th></tr>
<tr><th>சுயதொழில் செய்வோர்</th><th>ஒழுங்கான ஊதியம் / சம்பளம்</th><th>தற்காலிகத் தொழிலாளி</th><th>சுயதொழில் செய்வோர்</th><th>ஒழுங்கான ஊதியம் / சம்பளம்</th><th>தற்காலிகத் தொழிலாளி</th></tr>
<tr><td rowspan="3">ஊரகம்*</td><td>ஆண்</td><td>36.9</td><td>28.2</td><td>34.9</td><td>59.4</td><td>15.8</td><td>24.9</td></tr>
<tr><td>பெண்</td><td>38.3</td><td>14.5</td><td>47.2</td><td>73.5</td><td>7.8</td><td>18.7</td></tr>
<tr><td>நபர்</td><td>37.5</td><td>22.3</td><td>40.2</td><td>64.7</td><td>12.7</td><td>22.5</td></tr>
<tr><td rowspan="3">நகர்ப்புரம்</td><td>ஆண்</td><td>28.4</td><td>51.8</td><td>19.8</td><td>39.8</td><td>46.8</td><td>13.4</td></tr>
<tr><td>பெண்</td><td>31.3</td><td>55.4</td><td>13.3</td><td>42.3</td><td>49.4</td><td>8.3</td></tr>
<tr><td>நபர்</td><td>29.3</td><td>52.9</td><td>17.8</td><td>40.4</td><td>47.5</td><td>12.1</td></tr>
<tr><td rowspan="3">மொத்தம்</td><td>ஆண்</td><td>33.1</td><td>38.8</td><td>28.1</td><td>53.6</td><td>24.9</td><td>21.5</td></tr>
<tr><td>பெண்</td><td>36.1</td><td>27.3</td><td>36.6</td><td>67.4</td><td>15.9</td><td>16.7</td></tr>
<tr><td>நபர்</td><td>34.2</td><td>34.4</td><td>31.3</td><td>58.4</td><td>21.7</td><td>19.8</td></tr>
</table>

*ஆதாரம்: ஆண்டறிக்கை, தொழிலாளர் கணக்கெடுப்பு (பல்வேறு ஆண்டுகள்), தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனம் *15 வயது & அதற்கு மேற்பட்டோர் (வழக்கமான நிலை), *(ps+ss) முதன்மை மற்றும் துணை நிலை*

6.9 ஒழுங்கான ஊதியம்/சம்பளம் பெறும் தொழிலாளர்களைப் பொறுத்த அளவில், தமிழ்நாட்டில் பல்வேறு வேலைவாய்ப்புப் பிரிவுகளிலும் தொழிலாளர்கள் சரிசமமாக நிறைந்துள்ளனர். இத்தகு தொழிலாளர்களின் இந்திய சராசரி 21.7% என்றுள்ள நிலையில் தமிழ்நாட்டின் சராசரி 34.4% என்றிருக்கிறது. தமிழ்நாட்டில், ஊரகங்களில் ஒழுங்கான ஊதியம்/சம்பளம் பெறும் பணிகளில் 14.5% பெண் தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். நகர்ப்புரங்களில் இந்த எண்ணிக்கை 55.4% ஆகும். ஒட்டுமொத்தமாக, பெண் தொழிலாளர்கள் உள்பட மாநிலத்தின் பணியாளர்களில் பெரும்பாலானோர் ஒழுங்கான ஊதியம் பெறும் பணிகளிலேயே ஈடுபட்டுள்ளனர். இது, ஒப்பீட்டளவில் உயர் தரமான வேலைவாய்ப்பு வழங்கப்படுவதைக் குறிக்கிறது.

6.10 தமிழ்நாட்டின் ஊரகத் தொழிலாளர்களில் 41.1% பேர் வேளாண்மை, அது சார்ந்த பணிகளில் ஈடுபட்டுள்ளனர் (அட்டவணை 6.2). இந்தியாவில், ஊரகத் தொழிலாளர்களில் கிட்டத்தட்ட 60% பேர் இந்தத் துறையில் உள்ளனர். தமிழ்நாட்டில் 21.5% ஊரகத் தொழிலாளர்கள் கட்டுமானத் துறையில் பணியாற்றும் நிலையில், இந்தியாவில் 12.48% பேர் இத்துறையில் பணிபுரிகின்றனர். தமிழ்நாட்டில் 21.7% நகர்ப்புரத் தொழிலாளர்கள் உற்பத்தித் துறையில் பணிபுரிகின்றனர்; இந்தியாவில் 20.53% பேர் இத்துறை சார்ந்த பணிகளில் உள்ளனர். தமிழ்நாட்டில் 16.28% நகர்ப்புரத் தொழிலாளர்கள் வர்த்தகம், இயக்கூர்திகள் மற்றும் இருசக்கர வாகனங்கள் பழுதுநீக்கப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

**அட்டவணை 6.2: தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் தொழில்துறைப் பணிகளில் பணியாற்றுபவர்கள்- துறைகள் வாரியாக (2023-24)**


| தொழில் | தமிழ்நாடு (%) | | | இந்தியா (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | ஊரகம் | நகர்ப்புரம் | மொத்தம் | ஊரகம் | நகர்ப்புரம் | மொத்தம் |
| வேளாண்மை & அது சார்ந்தவை | 41.17 | 7.98 | 27.98 | 59.84 | 6.73 | 46.07 |
| கட்டுமானம் | 21.5 | 10.7 | 17.21 | 12.48 | 10.54 | 11.98 |
| தயாரிப்பு | 12.17 | 21.73 | 15.97 | 8.26 | 20.53 | 11.44 |
| வர்த்தகம், வாகனப் பழுதுநீக்கம் | 7.92 | 16.28 | 11.24 | 7 | 19.47 | 10.23 |
| போக்குவரத்து மற்றும் கிட்டங்கி | 5.3 | 7.53 | 6.19 | 3.45 | 6.65 | 4.28 |
| கல்வி | 2.71 | 5 | 3.62 | 2.15 | 5.61 | 3.04 |
| விடுதி & உணவு சேவைகள் | 2.11 | 4.86 | 3.21 | 1.25 | 4.14 | 2 |
| தகவல்தொடர்பு | 1.06 | 6.28 | 3.14 | 0.29 | 4.39 | 1.35 |
| இதர சேவைகள் | 6.07 | 19.64 | 11.44 | 5.29 | 21.95 | 9.6 |
| மொத்தம் | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

*ஆதாரம்: ஆண்டறிக்கை, தொழிலாளர் கணக்கெடுப்பு (பல்வேறு ஆண்டுகள்), தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனம்*
**15 வயது & அதற்கு மேற்பட்டோர் (வழக்கமான நிலை)*

## 6.3 வேலையின்மை

6.11 தமிழ்நாடு, இந்தியா இரண்டிலும் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருக்கான வேலையின்மை விகிதம் (UR) குறைந்துவருவதை விளக்கப்படம் 6.3 காட்டுகிறது.[24] 2023-24இல், வேலையின்மை விகிதம் தமிழ்நாட்டில் 3.5% ஆகவும், இந்தியாவில் 3.2% ஆகவும் இருந்தது. குறிப்பாக, ஊரகப்பகுதிகளைவிட நகர்ப்புரங்களில் வேலையின்மை விகிதம் தொடர்ந்து அதிகமாக உள்ளது.

**விளக்கப்படம் 6.3: தமிழ்நாடு, இந்தியாவில் வேலையின்மை விகிதம் (%)**




*ஆதாரம்: ஆண்டறிக்கை, தொழிலாளர் கணக்கெடுப்பு (பல்வேறு ஆண்டுகள்), தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனம்*
**15 வயது& அதற்கு மேற்பட்டோர் (வழக்கமான நிலை)*

[24] *வேலையின்மை விகிதம் என்பது வேலையற்ற தொழிலாளர்களின் சதவீதமாகும்.*

6.12 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரின் வேலையின்மை விகிதத்தை அவர்கள் பெற்றிருக்கும் கல்வி நிலையின் அடிப்படையில் அட்டவணை 6.3 காட்டுகிறது. பட்டம், முதுகலைப் பட்டம், பட்டயம் அல்லது சான்றிதழ்ப் படிப்பு பெற்றவர்களிடையே வேலையின்மை விகிதம் குறிப்பிடத்தக்க வகையில் அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டின் தொழிலாளர் கட்டமைப்பில் 24.3% பெண் பட்டதாரிகள் வேலையில்லாமல் உள்ளனர். முதுகலைப் பட்டம் பெற்ற பெண்களில் 11.6% பேர் வேலையில்லாமல் உள்ளனர். இது இந்தியாவில் முறையே 20.4% மற்றும் 22.5% ஆகும். தமிழ்நாட்டில் பட்டயம் அல்லது சான்றிதழ்த் தகுதி பெற்ற 7.4% பெண்கள் வேலையில்லாமல் உள்ளனர். இது இந்தியாவில் 12.5% ஆகும்.

**அட்டவணை 6.3: கல்விநிலை அடிப்படையிலான வேலையின்மை விகிதம் தமிழ்நாடு & இந்தியா (2023-24)**

| கல்விநிலை | தமிழ்நாடு (%) | | | இந்தியா (%) | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| எழுத்தறிவு | 0.5 | 0 | 0.2 | 0.4 | 0.1 | 0.2 |
| தொடக்கக் கல்வி | 0 | 0.1 | 0 | 0.8 | 0.2 | 0.6 |
| நடுநிலை | 1.3 | 0.5 | 1.1 | 1.8 | 0.9 | 1.6 |
| உயர்நிலை | 2.7 | 1.8 | 2.4 | 2 | 1.7 | 1.9 |
| மேல்நிலை | 3.4 | 2.1 | 2.9 | 4.3 | 4.5 | 4.4 |
| பட்டயம்/ சான்றிதழ் பயிற்சிகள் | 7.1 | 7.4 | 7.1 | 7.8 | 12.5 | 8.6 |
| பட்டதாரி | 9.9 | 24.3 | 14.1 | 10.6 | 20.4 | 13 |
| முதுநிலைப் பட்டதாரி & அதற்கு மேல் | 3 | 11.6 | 6.4 | 7 | 22.5 | 12.4 |
| மொத்தம் | **3.4** | **3.8** | **3.5** | **3.2** | **3.2** | **3.2** |

*ஆதாரம்: ஆண்டறிக்கை, தொழிலாளர் கணக்கெடுப்பு (பல்வேறு ஆண்டுகள்), தேசிய மாதிரி ஆய்வு அலுவலகம் *15 & 15 வயதுக்கு மேற்பட்டோர் (வழக்கமான நிலை)*

## 6.4 இளைஞர்களின் வேலைவாய்ப்பு நிலவரம்

6.13 நீடித்த உயர்நிலைப் பொருளாதார வளர்ச்சிக்கு பணிபுரியும் வயதினரின் எண்ணிக்கை மிக முக்கியக் காரணியாகும். இந்தியாவில் இளவயது (15-29 வயது) ஆண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் 2019-20இல் 60% என்பதிலிருந்து 2023-24இல் 63.5% ஆக உயர்ந்துள்ள அதேசமயம், இளவயது பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் 20.6% என்பதிலிருந்து 28.8% ஆக அதிகரித்துள்ளது (விளக்கப்படம் 6.4). நேர்மாறாக, தமிழ்நாட்டில் இளவயது ஆண் தொழிலாளர்களின் பங்களிப்பு விகிதம் 63.6% இலிருந்து 59% ஆகவும், பெண்களின் விகிதம் 26.8% இலிருந்து 23.8% ஆகவும் குறைந்துள்ளது. தமிழ்நாட்டில் தொழிலாளர் பங்களிப்பு விகிதம் குறைந்ததற்கு, உயர்கல்வியில் அதிகரித்திருக்கும் மாணவர் சேர்க்கையை ஒரு காரணமாகச் சொல்லலாம். வலுவான சமூகப் பாதுகாப்பு அமைப்பு, தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் போன்றவற்றின் காரணமாக மாநிலத்தின் ஊதிய அளவு உயர்ந்திருப்பதால், இளைஞர்கள் அதிகப்படியாகக் கல்வி பயின்று, தங்கள் தகுதிகளுக்கும் எதிர்பார்ப்புகளுக்கும் ஏற்ப வேலைவாய்ப்புகளைத் தேடுகிறார்கள்.

### பெட்டிச்செய்தி 6.1 தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம்

தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் (TNUES), தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்ப்புர உள்ளாட்சிகளில் (ULBs), திறன்குறைந்த தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி, நகர்ப்புரங்களில் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு, இத்திட்டம் நகர்ப்புர உள்ளாட்சிகளில் தேவையின் அடிப்படையில், நூறு நாள்கள் வேலைவாய்ப்பை வழங்குகிறது. இத்திட்டம் வேலைவாய்ப்பு வழங்குவதில் ஏற்படுத்திய தாக்கத்தை மதிப்பிட, ஒரு மதிப்பீட்டு ஆய்வு நடத்தப்பட்டது.

#### ஆய்வு முடிவுகள்:

- தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் வேலைபெறுபவர்களில் 83% பேர் பெண்கள். இவர்கள் இதற்கு முன்னர் வேலையில்லாதவர்கள் அல்லது குறைந்த வருமானம் தந்த வேலையில் இருந்தவர்கள்.
- 22% பேர் வேளாண்மைப் பணிகளில் இருந்தவர்கள், 25% பேர் குடும்பத்தின் முதன்மை வருமானம் ஈட்டும் தொழிலாளிகள், 18% பேர் மகளிரைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள்.
- இத்திட்டத்தின் பங்கேற்பாளர்களில் ஏறத்தாழ 99% பேர் இத்திட்டத்தின் விரிவாக்கத்தை ஆதரிக்கிறார்கள் என்பது, பெண்கள் மேம்பாட்டிலும் அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தியதிலும் இத்திட்டம் நேர்மறையாகச் செயல்பட்டதைச் சுட்டிக்காட்டுகிறது.

#### பரிந்துரைகள்:


உரிய பணிகளை அடையாளம் கண்டு, சிறப்பாகச் செயல்படுவதன் மூலம் இத்திட்டமானது தமிழ்நாட்டின் நகர்ப்புரங்களில் குறிப்பாக, பேரூராட்சிகளில் சமூகரீதியாகவும் பொருளாதாரரீதியாகவும் பின்தங்கிய குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பை அளிப்பதுடன், சமூகப் பாதுகாப்பையும் வழங்க முடியும்.

*ஆதாரம்: தமிழ்நாடு நகர்ப்புர வேலைவாய்ப்புத் திட்டம் குறித்த மதிப்பீடு, மாநில திட்டக் குழு, 2023.*

6.14 தொழிலாளர் பங்கேற்பு விகிதம் சரிவடைந்தபோதிலும், தமிழ்நாட்டில் 2019-20இல் 50.4 % ஆக இருந்த ஆண்களுக்கான தொழிலாளர் மக்கள்தொகை விகிதம் (WPR) 2023-24இல் 51.5% ஆக அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில், இந்தியாவில், ஆண்களுக்கான இந்த விகிதமானது 51% இலிருந்து 57.3% ஆக அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டில் பெண்களுக்கான விகிதம் 21.1% இலிருந்து 18.6% ஆகச் சற்றே சரிவடைந்துள்ளது. இந்தியாவின் பெண்களின் விகிதம் 17.6%இலிருந்து 25.6% ஆக அதிகரித்துள்ளது.

6.15 தமிழ்நாட்டிலும், இந்தியாவிலும் 2019-20 இலிருந்து 2023-24இல் வேலைவாய்ப்பின்மை விகிதம் குறைந்துள்ளது கவனிக்கத்தக்கது. ஆனாலும், 2023-24இல் ஆண்களுக்கான வேலைவாய்ப்பின்மை விகித தேசிய சராசரி 9.8% என்ற நிலையில் இருந்தபோது, தமிழ்நாட்டில் அது 12.7% ஆக இருந்தது. பெண்களின் வேலைவாய்ப்பின்மை விகிதத்தைப் பொறுத்தவகையில், தமிழ்நாட்டில் 21.9%, இந்திய அளவில் 11%. மேலும், தமிழ்நாடு இந்தியா இரண்டிலும், ஆண் பெண் இருபாலரது வேலைவாய்ப்பின்மை விகிதமும் 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்டோருடன் ஒப்பிடுகையில் குறைவாகவே உள்ளது. இதனால் கூடுதல் திறன், மதிப்புக்கூட்டப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றைப் பன்முகப்படுத்த முயலும் மாநிலத்தின் முயற்சிகளுக்கு திறன்மிக்க பெண் தொழிலாளர் தொகுப்பு அதிக அளவில் இருப்பது சாதகமான அம்சமாகும்.

**விளக்கப்படம் 6.4: தமிழ்நாடு, இந்திய இளைஞர்களின் தொழிலாளர் பங்கேற்பு விகிதம், வேலைவாய்ப்பின்மை விகிதம், தொழிலாளர் மக்கள்தொகை விகிதம்**






*ஆதாரம்: ஆண்டறிக்கை, தொழிலாளர் கணக்கெடுப்பு (பல்வேறு ஆண்டுகள்), தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு நிறுவனம்*
**15 - 29 வயதுடையோர்*

## 6.5 தொழிற்சாலை வேலைவாய்ப்பு

6.16 இந்தியா, தமிழ்நாட்டின் அமைப்புசார் உற்பத்தித் துறையிலுள்ள வேலைவாய்ப்புகளின் போக்குகளை, வருடாந்திரத் தொழில்துறை ஆய்வு (ASI) வழங்கும் தரவுகளின் அடிப்படையில் வரைபடம் 6.5 வழங்குகிறது.[25] 2022-23இல் தமிழ்நாட்டின் தொழிற்சாலைத் தொழிலாளர்கள் 22.83 லட்சம். மேலும், தமிழ்நாட்டில் மொத்தமாகப் பணியாற்றுபவர்கள் எண்ணிக்கை 27.75 லட்சம். குறிப்பிடத்தக்க வகையில், தமிழ்நாட்டில் 2019-20இல் 22.1 லட்சமாக இருந்த தொழிற்சாலைத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2022-23இல் 22.8 லட்சமாக உயர்ந்தது. இது 3.1% வளர்ச்சியாகும். இது இந்திய அளவில் 3.96% ஆக இருந்தது. இருப்பினும், கோவிட் பெருந்தொற்றுக் காரணமாக, மாநிலத்தில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2020-21இல் 20.5 லட்சமாகக் குறைந்தது. இந்தியாவிலும் இதே போக்கு காணப்பட்டது.

**விளக்கப்படம் 6.5: அமைப்புசார் உற்பத்தித் துறையில் வேலைவாய்ப்புப் போக்குகள்**





*ஆதாரம்: தொழில்துறைகள் குறித்த வருடாந்திர ஆய்வறிக்கை, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

6.17 விளக்கப்படம் 6.6 சுட்டிக்காட்டுவதைப் போல், ஒரு தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு 2019-20இல் 56.8இலிருந்து 2022-23இல் 57.56 ஆக நிலையான வளர்ச்சியைப் பெற்றுள்ளது. 2020-21இல் கோவிட் பெருந்தொற்றுக் காலத்தின்போது ஏற்பட்ட சரிவுக்குப் பிறகு, ஒரு தொழிற்சாலையில் வேலைவாய்ப்பு, பெருந்தொற்றுக்கு முந்தைய நிலைக்கு மீண்டு, 2022-23இல் 58 ஆக உயர்ந்தது. இது இந்தியாவில் காணப்பட்ட ஒட்டுமொத்தப் போக்குடன் ஒத்துப்போகிறது.

---

*[25] தொழில்துறை ஆய்வு ஒட்டுமொத்த தொழில்துறையையும் உள்ளடக்கியுள்ளது. தொழிற்சாலைகள் சட்டம் 1948இன் கீழ் பதிவுசெய்துகொண்ட 10 அல்லது பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்களையும் மின்வசதியையும் அல்லது 20 அல்லது அதற்கும் மேற்பட்ட தொழிலாளர்களையும் மின்வசதியில்லாத தொழிற்சாலைகள் அனைத்தையும் உள்ளடக்கியது.*


**விளக்கப்படம் 6.6: ஒரு தொழிற்சாலையில் வேலைவாய்ப்புப் போக்குகள்**




*ஆதாரம்: தொழில்துறைகள் குறித்த வருடாந்திர ஆய்வறிக்கை, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

6.18 2023-24இல் தமிழ்நாட்டின் அன்றாட சராசரி ஊதியங்களில், ஊரகப் பகுதிகளில் வேளாண்சாராத துறைகளிலும் கட்டுமானத் துறைகளிலும் அளிக்கப்பட்ட ஊதியம் இரண்டாவது இடத்தில் இருந்தது (விளக்கப்படம் 6.7). இரண்டுமே இந்திய சராசரியைவிட அதிகம்.


**விளக்கப்படம் 6.7: ஊரகங்களில் 2023-24 ஆம் ஆண்டுக்கான மாநில வாரியான சராசரி அன்றாட ஊதியம்**




*ஆதாரம்: இந்திய மாநிலப் புள்ளிவிவரக் கையேடு, இந்திய ரிசர்வ் வங்கி.*

6.19 தொழிற்சாலைகளின் எண்ணிக்கையிலும் (15.7%), மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கையிலும் (15%) 2022-23இல் தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடித்துள்ளதை மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடு காட்டுகிறது (விளக்கப்படம் 6.8).

**விளக்கப்படம் 6.8: தொழிற்சாலைகள், வேலைவாய்ப்புகளில் முதன்மை மாநிலங்களின் பங்கு (2022-23)**





*ஆதாரம்: தொழில்துறைகள் குறித்த வருடாந்திர ஆய்வறிக்கை, புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

## 6.6 ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவனத்தில் (EPFO) பதிவுசெய்தல்

6.20 2019-20 முதல் 2022-23 வரையில் ஐந்து தென் மாநிலங்களுக்கு — தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், தெலங்கானா, கேரளம் — இடையேயான ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவன உறுப்பினர்களின் ஒப்பீட்டை விளக்கப்படம் 6.9 வழங்குகிறது. ஐந்து மாநிலங்களை ஒப்பிடத் தமிழ்நாட்டில் ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவன உறுப்பினர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துவருவதை இந்த விளக்கப்படம் காட்டுகிறது. 2019-20இல் 2.9 கோடியாக இருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 2022-23இல் 3.5 கோடியாக அதிகரித்தது. இது, முறையான வேலைவாய்ப்பிலும் சமூகப் பாதுகாப்பிலும் நிலையான வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.

6.21 தமிழ்நாடு, கர்நாடகம் ஆகிய மாநிலங்கள் ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவன உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளனர். இது, முறையான வேலைவாய்ப்பையும் தொழில்துறை வளர்ச்சியையும் குறிக்கிறது. ஆந்திரப் பிரதேசமும் தெலங்கானாவும் நிலையான, அதேநேரத்தில் மெதுவான வளர்ச்சியைக் காட்டுகின்றன. இது, வேலைவாய்ப்பு அங்கே படிப்படியாக முறைப்படுத்தப்படுவதைக் குறிக்கிறது. அதே காலகட்டத்தில், இந்தியாவுக்கான உறுப்பினர் எண்ணிக்கை 15.8 கோடியிலிருந்து 29.9 கோடியாக அதிகரித்து, 8.27% வளர்ச்சியைப் பதிவுசெய்துள்ளது.

**விளக்கப்படம் 6.9: மாநிலங்களுக்கு இடையேயான ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவன உறுப்பினர் ஒப்பீடு**




*ஆதாரம்: ஆண்டறிக்கை, ஊழியர்களுக்கான வருங்கால வைப்புநிதி நிறுவனம், https://www.epfindia.gov.in/site_en/Annual_Report.php*


## 6.7 மக்கள்தொகை சாளரம்

6.22 தமிழ்நாட்டில் பணிபுரியும் வயதுள்ளோர் எண்ணிக்கை உச்சத்தில் உள்ளதால், தற்போது அது மக்கள்தொகை சாதகத்தால் பயனடைந்துவருகிறது. தொழிலாளர்களின் உற்பத்தித்திறனை அதிகரித்தல், திறன் மேம்பாட்டுக்கு முன்னுரிமை அளித்தல், புதுமைகளை வளர்த்தெடுத்தல் ஆகியவற்றின் வாயிலாகப் பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதற்கான முக்கியமான வாய்ப்பை இது வழங்குகிறது. 2021இல் 66.4% ஆக இருந்த பணிபுரியும் வயதுள்ளோர் எண்ணிக்கை 2036இல் 63.6% ஆகச் சற்றே குறையும் எனக் கணிக்கப்பட்டாலும், இந்த மாற்றமானது மிகவும் திறமையான, தொழில்நுட்பம் சார்ந்த பணியாளர்களுக்கான பாதையமைத்து நிலையான, உயர் மதிப்புள்ள பொருளாதார முன்னேற்றம் எனும் இடத்தில் மாநிலத்தை நிலைநிறுத்தும் (விளக்கப்படம் 6.10).

6.23 மக்கள்தொகையில் வயதானவர்களின் பங்கு அதிகரித்துவருவதால் மாநிலத்தில் மாறுபட்ட மக்கள்தொகை நகர்வு ஏற்பட்டுள்ளது. 2011க்கும் 2031க்கும் இடையில், மாநிலத்தின் முதியோர் எண்ணிக்கை 71.7% என்ற அளவு அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. முதியோர் சார்பு விகிதம் 2021இல் 20.5இலிருந்து 2036இல் 32.7 ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. வலுவான சுகாதாரம், நிதித் திட்டமிடல், முதியோருக்கு உகந்த உட்கட்டமைப்பு ஆகியவற்றின் அவசியத்தை இது வலியுறுத்துகிறது.

6.24 பணிபுரியும் வயதுள்ளோர் எண்ணிக்கை விரைவாக அதிகரித்துவரும் பீகார், உத்தரப் பிரதேசம் போன்ற மாநிலங்களைப் போலன்றி, தமிழ்நாடு உயர் மதிப்புள்ள தொழில்கள், தானியங்கிமயம், அறிவுசார் துறைகள் ஆகியவற்றில் முன்னணியில் உள்ளது. கல்வி, வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழிலாளர் திறன் மேம்பாடு ஆகியவற்றில் திட்டமிட்டு முதலீடு செய்வதன் வாயிலாக, மாநிலம் நிலையான பொருளாதார வளம், நிதி நிலைப்புத்தன்மை ஆகியவற்றுடன் வயதானவர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும் அதேநேரத்தில் துடிப்பான பொருளாதார மாற்றத்தையும் உறுதிசெய்ய முடியும்.

**விளக்கப்படம் 6.10: பணிபுரியும் வயதுள்ள மக்கள்தொகை வீதம்**




*ஆதாரம்: தேசிய மக்கள்தொகை ஆணையம் வெளியிட்டுள்ள மக்கள்தொகைக் கணிப்பு, மத்திய சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம்*

## 6.8 முடிவுரை

6.25 திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு உருவாக்கம், தொழில்துறை விரிவாக்கம் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு முழுமையான அணுகுமுறையின் வாயிலாக, பொருளாதார வளர்ச்சியிலும் சமூக மேம்பாட்டிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தொழிலாளர் சக்தியும் பொருளாதாரக் களமும் துரிதமாக வளர்ந்துவருவதை உணர்ந்து, அரசு பல்வேறு முற்போக்கான முயற்சிகளைச் செயல்படுத்தியுள்ளது. தொழில்துறை சார்ந்த திறன்களுடன் இளைஞர்களை ஆயத்தப்படுத்துவதையும், நிலையான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதையும், முதன்மையான தொழில்துறைகளில் முதலீடுகளை ஈர்ப்பதையும் இந்தத் திட்டங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. புதுமைகளை ஊக்குவித்தல், குறு,சிறு,நடுத்தரத் தொழில் நிறுவனங்களை ஆதரித்தல், வலுவான உட்கட்டமைப்பை உருவாக்குவதல் ஆகியவற்றின் வாயிலாகப் பொருளாதாரச் செயல்பாடு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கான மையமாகத் தமிழ்நாடு தனது நிலையை வலுப்படுத்தியுள்ளது.

6.26 வளர்ந்த பொருளாதாரங்களில்கூட நியாயமான ஊதியத்தையும் கண்ணியமான வேலையையும் உறுதிசெய்வது சவாலாகவே உள்ளது. செயற்கை நுண்ணறிவு, எந்திரனியல், தரவுப் பகுப்பாய்வு போன்ற அதிநவீனத் தொழில்நுட்ப வளர்ச்சிகள் சந்தையில் உருவாகக்கூடிய வேலைகளின் தன்மையையும், புதிதாக நுழைபவர்களுக்கும் ஏற்கெனவே பணியிலுள்ள ஊழியர்களுக்குமான திறன்களின் தன்மையையும் மாற்றியுள்ளன. மாநில அரசு இந்த மாற்றத்துக்கு வினையாற்றும் விதமாக, புதிய படிப்புகளைத் தொடங்குதல், ஆய்வக உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், ஆசிரியர்களின் நிபுணத்துவத்தை மேம்படுத்துதல், புத்தொழில் ஆர்வலர்களுக்கான மையங்களை நிறுவுதல், திறன் மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர மாணவர்களுக்கு நிதி உதவி வழங்குதல் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும். தொழிற்கல்வி

நிலையங்களிலும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் தொழில்துறை 4.0 தரநிலை ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. புதிய படிப்புகளை அறிமுகப்படுத்தவும், குறு,சிறு,நடுத்தரத் தொழில் நிறுவன ஊழியர்களுக்குப் பயிற்சி அளிக்கவும், உள்ளூர்த் தொழில்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சரிசெய்ய ஆராய்ச்சி மேற்கொள்ளவும் இந்த ஆய்வகங்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

6.27 தோல்சாராக் காலணிகள், மின்னணு பாகங்களைக் கோத்தல் போன்ற சில தொழில்களில் அதிக எண்ணிக்கையில் பெண்கள் பணியமர்த்தப்படுகின்றனர். இதனால், பணிபுரியும் பெண்களுக்கான விடுதிகள், தொழில்துறைக் குடியிருப்புகள், பணியிடங்களுக்குச் செல்வதற்கான மேம்பட்ட போக்குவரத்து போன்ற, அவர்களுக்குத் துணைநிற்கக்கூடிய பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளில் முதலீட்டை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. பல்வேறு தொழில்முனவுத் திட்டங்கள் வாயிலாக, தொழில்முனைவோர்களிடையே அதிகரித்துவரும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் கருத்தில் கொண்டு, மாநில அரசு தற்போதைய திட்டங்களை மாற்றி, பெண்களுக்கு ஏற்றவாறு புதிய திட்டங்களைத் தொடங்குவது பற்றியும், சமூகங்களில் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகக்கூடிய பிரிவுகளை ஊக்குவிப்பது பற்றியும் பரிசீலிக்கலாம்.

6.28 மாநிலத்தில் தொழில்துறைக்கு உகந்த சூழல் கட்டமைப்பை வலுப்படுத்தும் விதமாக, தொழில்துறைப் பூங்காக்கள், ஆயத்தநிலை அலுவலக (plug-and-play) வசதிகள் உள்ளிட்ட உலகத்தரம் வாய்ந்த தொழில்துறைக் கட்டமைப்பை உருவாக்குவதென்பது மிகுந்த முக்கியத்துவம் கொண்டதாகும். மேலும், தொழில்மயமாக்கப்படாத பகுதிகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, நிலவள வங்கி அல்லது தொழில்துறை ஒதுக்கீட்டுக்குத் தேவையான நிலங்கள் கணிசமான அளவில் அதிகரிக்கப்பட வேண்டும்.

6.29 மாணவர்களுக்கான திறன்களை மேம்படுத்தும் விதமாக, மாணவர்கள் தங்கள் திறன்களை சுயமதிப்பீடு செய்துகொள்ளுதல், தொழில்துறைத் தேவைகளுடன் பொருந்திப்போகும் வகையில் திறன்களை மேம்படுத்திக்கொள்ளுதல், நான் முதல்வன் போன்ற முயற்சிகள் மூலம் திறன் இடைவெளிகளைச் சரிசெய்தல் ஆகியவற்றில் தீவிர கவனம் செலுத்த வேண்டும். முன் கற்றலை அங்கீகரித்தல், பள்ளிப்படிப்பை நிறைவுசெய்வதற்கான முன்முயற்சிகள் போன்ற திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். புதுமைப்பெண் போன்ற திட்டங்களுடன், பல்தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் தொழில் பயிற்சி நிலையங்களிலும் பெண்களை மையமாகக் கொண்ட படிப்புகளுக்கு முதலீடு செய்ய அரசு முன்வரவேண்டும். இதனால், தொழிலாளர் சக்தியில் பெண்களின் பங்கேற்பை அதிகரிக்க முடியும். மேலும், பெண்கள் தங்கள் பணியிடங்களிலும் நிறுவனங்களிலும் பாதுகாப்பாக உணர்வதை மாநில அரசு உறுதிப்படுத்த வேண்டும். பெண்களின் பொருளாதாரப் பங்கேற்புக்கு ஆதரவான சூழலை உருவாக்கும் விதமாக, பணியிடங்களுக்கு அருகே அதிக அளவில் குழந்தைகள் காப்பகங்களையும், மகளிருக்கு ஆதரவளிக்கும் விதமான வசதிகளையும் உருவாக்க வேண்டும்.

அத்தியாயம் 7

# சமூகத்துறை

## 7.1 அறிமுகம்

7.1 எந்தவொரு பொருளாதாரத்துக்கும் அவசியமான கூறாகத் திகழும் சமூகத் துறையானது, மனிதவள மேம்பாட்டுக்கு அடிப்படைப் பங்களிக்கும் கல்வி, சுகாதாரம், குடிநீர்வசதி, வீட்டுவசதி போன்ற முக்கியத் துறைகளில் நேரடித் தாக்கத்தைச் செலுத்துவதால், அதன் மேம்பாடு இன்றியமையாதது. மக்களின் பொருளாதாரப் பங்களிப்புக்கான செயல்திறனை மனிதவள மேம்பாடு அதிகரிப்பதால், அனைவருக்குமான கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, உணவு ஆகியவற்றை மாநில அரசு வழங்குவதுடன் பொருளாதார உதவி தேவைப்படுவோருக்கு வருமானாதியிலும் உதவுகிறது. சமத்துவச் சமூகத்தை உருவாக்குதல், அனைவருக்கும் சம வாய்ப்புகளை உறுதிசெய்தல், வாழ்க்கைத் தரத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல் ஆகியவையே சமூகத் துறை மேம்பாட்டின் முதன்மை நோக்கங்களாகும்.

7.2 அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியிலும், சமூக நலன், குறிப்பாகக் கல்வி, சுகாதாரம் ஆகியவற்றிலும் குறிப்பிடத்தக்க கவனம் செலுத்துவதால் தமிழ்நாடு தனித்துவமிக்க மாநிலமாகத் திகழ்கிறது. பல்வேறு சமூகக் குறியீடுகளிலும் இந்திய அளவில் தமிழ்நாடு தொடர்ந்து முதல் மூன்று இடங்களைத் தக்கவைத்துக்கொள்கிறது. சமூக முன்னேற்றக் குறியீட்டிலும் (SPI), உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதத்திலும் (GER) தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. குறைந்த சிசு இறப்பு விகிதம், குறைந்த பிறப்பு விகிதம், குறைந்த வறுமை நிலை விகிதம் ஆகியவற்றில் இரண்டாம் இடத்தில் உள்ளது. மேலும், நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) குறியீட்டிலும், சுகாதாரக் குறியீட்டிலும் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரையிலான குழந்தைகளின் வருகைப் பதிவு, கற்றல் திறன், ஊட்டச்சத்து ஆகியவற்றை அதிகரிக்கும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இம்மாநிலம் செயல்படுத்திவருகிறது. பெண்களுக்கு உரியமையளிக்கும் வகையில், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், மகளிர் விடியல் பயணத் திட்டம், புதுமைப்பெண் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களையும் அரசு முன்னெடுத்துள்ளது.

7.3 இந்த அத்தியாயம் சமூகத் துறைச் செலவினங்கள், வறுமை நிலைகள், குடும்பங்களின் நுகர்வு, அடிப்படைக் கல்வி, சுகாதாரக் குறியீடு ஆகியவற்றில் தமிழ்நாட்டின்போக்கைஆராய்ந்து,இந்தமுக்கியமானதளங்களில்மாநிலத்தின் முன்னேற்றம் குறித்த தெளிவான கண்ணோட்டத்தை வழங்குகிறது.

## 7.2 சமூக சேவைகளில் செலவினப் போக்குகள்

7.4 சமூகத் துறைக்கான தமிழ்நாடு அரசின் செலவு (வருவாய் மற்றும் மூலதனம் இரண்டையும் உள்ளடக்கியது) தொடர்ச்சியாக அதிகரித்துவருகிறது. இது 2019-20இல் ரூ.79,859 கோடியிலிருந்து 2023-24இல் ரூ.1,15,644 கோடியாக, 1.46 மடங்கு அதிகரித்துள்ளது (அட்டவணை 7.1). 2019-20 மற்றும் 2023-24 ஆண்டுகளுக்கிடையே சமூக சேவையின் ஒட்டுமொத்தச் செலவினமானது 8.81% வளர்ச்சி கண்டுள்ளது. இதே காலகட்டத்தில், கல்வி, விளையாட்டு, கலை, பண்பாடு ஆகியவற்றுக்கான செலவு 7.22% அதிகரித்துள்ள அதே வேளையில், மருத்துவம், பொது சுகாதாரத்துக்கான செலவு 10.26% அதிகரித்துள்ளது. குடும்ப நலனுக்கான செலவு 3.11% அதிகரித்துள்ளது. குடிநீர், சுகாதாரத்துக்கான ஒதுக்கீடு 24.55% ஆக அதிகபட்ச வளர்ச்சியைக் கண்டுள்ளது.

**அட்டவணை 7.1: தமிழ்நாட்டில் சமூகச் சேவை செலவினங்களின் போக்குகள் (ரூ.கோடி)**

| துறைகள் | 2019-20 | 2020-21 | 2021-22 | 2022-23 | 2023-24 |
|---|---|---|---|---|---|
| சமூகத் துறை (மொத்தம்) | 79859 | 100636 | 103734 | 103291 | 115644 |
| கல்வி, விளையாட்டு, கலை மற்றும் பண்பாடு | 38747 | 38578 | 38678 | 45147 | 47223 |
| மருத்துவம் மற்றும் பொது சுகாதாரம் | 9340 | 13479 | 14911 | 14220 | 14217 |
| குடும்ப நலம் | 2981 | 3916 | 4102 | 3401 | 3556 |
| குடிநீர் வழங்கல் மற்றும் சுத்திகரிப்பு | 2061 | 3410 | 3560 | 2951 | 4993 |


*ஆதாரம்: நிதிநிலை அறிக்கை ஆவணங்கள், தமிழ்நாடு அரசு.*

## 7.3 வறுமை

7.5 இந்தியாவுக்கும் அதன் மாநிலங்களுக்கான தேசிய பல்பரிமாண வறுமைக் குறியீடு (MPI) 2015-16 முதல் நிதி ஆயோக்கால் மதிப்பிடப்பட்டுள்ளது. இது ஐக்கிய நாடுகள் முன்னேற்றத் திட்டத்தால் (UNDP) வெளியிடப்படும் பல்பரிமாண வறுமைக் குறியீட்டுடன் ஒத்துப்போகிறது, சுகாதாரம், கல்வி, வாழ்க்கைத் தரம் ஆகிய முக்கியத் தளங்களில் பத்து குறியீடுகளைப் பயன்படுத்தி UNDP இக்குறியீட்டினை வெளியிட்டுள்ளது. இந்தக் குறியீடுகள் ஊட்டச்சத்து, குழந்தைகள் மற்றும் வளரிளம்பருவ இறப்பு, பள்ளிப் படிப்பு, பள்ளி வருகைப் பதிவு, வீட்டு வசதி, குடும்ப சொத்துகள், சமையல் எரிபொருள் வகை, சுகாதார வசதி, குடிநீர், மின்சாரம் ஆகியவற்றை உள்ளடக்கியவை. தாய் இறப்பு, வங்கிக் கணக்குகள் ஆகிய இரண்டு குறியீடுகளைத் தேசிய பல்பரிமாண வறுமைக் குறியீடு கூடுதலாகக் கொண்டுள்ளது.

7.6 தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் 2005-06 முதல் 2022-23 வரையான காலகட்டத்தில் பல்பரிமாண வறுமை நிலையில் உள்ளோர் விகிதத்தைக் காட்டும் வறுமை நிலைப் போக்குகளை விளக்கப்படம் 7.1 காட்டுகிறது.


**விளக்கப்படம் 7.1: வறுமை நிலை விகிதம் (பல்பரிமாண வறுமை நிலையிலுள்ள மக்கள்தொகை விகிதம்)**




*ஆதாரம்: 2005-06 முதல் இந்தியாவில் பல்பரிமாண வறுமை நிலை: நிதி ஆயோக் ஆய்வேடு.*

7.7 2022-23க்கான மாநில அளவிலான வறுமை நிலை விகிதத் தரவானது, கேரளத்துக்கு அடுத்தபடியாக நாட்டிலேயே குறைவான வறுமை நிலை கொண்ட இரண்டாவது மாநிலமாகத் தமிழ்நாடு உள்ளதைக் காட்டுகிறது. கேரளத்தின் வறுமை நிலை விகிதம் 0.48% ஆகும் (விளக்கப்படம் 7.2).

**விளக்கப்படம் 7.2: 2022-23இல் மாநில அளவிலான வறுமை நிலை விகிதம்**





*ஆதாரம்: 2005-06 முதல் இந்தியாவில் பல்பரிமாண வறுமை நிலை: நிதி ஆயோக் ஆய்வேடு.*

## 7.4 குடும்ப நுகர்வுச் செலவினம்

7.8 பொருளாதார ஆரோக்கிய நிலையை அறிந்துகொள்ள நுகர்வுச் செலவினம் மிக முக்கியமான குறியீடாகும். மக்கள் அதிகமாகச் செலவுசெய்தால் பொருளாதாரம் செழுமையாக உள்ளது என்பதையும், மக்கள் குறைவான அளவில் செலவுசெய்தால் பொருளாதார நெருக்கடி உள்ளது என்பதையும் குறிக்கும். வட்டி விகிதங்களைத் தக்கவாறு அமைத்துக்கொள்ள நுகர்வு செலவினத் தரவுகளை அரசுகள் பயன்படுத்திக்கொள்கின்றன. வணிகங்கள் தங்களுடைய சந்தைப்படுத்துதல் உத்திகளுக்கும் பிற செயல்பாடுகளுக்கும் இதையே சார்ந்திருக்கின்றன. 1999-00 முதல் 2022-23 வரையான காலகட்டத்தில் தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் ஊரக மற்றும் நகர்ப்புரங்கள் இரண்டுக்குமான சராசரி மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினத்தை விளக்கப்படம் 7.3 காட்டுகிறது.

**விளக்கப்படம் 7.3: சராசரி மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினம்**





*ஆதாரம்: Factsheet_HCES_2022–23, மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (NSS அறிக்கைகள்).*

7.9 1999-00இல், தமிழ்நாட்டின் ஊரகப் பகுதிகளில் சராசரி மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினம் ரூ.514 ஆக இருந்தது. இது தொடர்ச்சியாக அதிகரித்து 2023-24இல் ரூ.5,701 ஆனது. இது 11.1 மடங்கு உயர்வாகும். அதே காலகட்டத்தில், இந்தியாவின் ஊரகப் பகுதியில் சராசரி தனிநபர் நுகர்வுச் செலவினம் ரூ.486இலிருந்து ரூ.4,122 ஆக அதிகரித்துள்ளது. இது 8.5 மடங்கு உயர்வாகும். சராசரி நுகர்வுச் செலவினம் தமிழ்நாட்டின் நகர்ப்புரங்களில், ரூ.972இலிருந்து ரூ.8,165 ஆக அதிகரித்துள்ளது, இது 8.4 மடங்கு உயர்வாகும். இந்திய நகர்ப்புரங்களில் ரூ.855இலிருந்து ரூ.6,996 ஆகவும் அதிகரித்துள்ளது; இது 8.2 மடங்கு உயர்வாகும்.

7.10 ஊரகப் பகுதிகளிலும் நகர்ப்புரங்களிலும் சராசரி மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினத்தில் இந்திய முதன்மை மாநிலங்களில் நான்காம் இடத்தைத் தமிழ்நாடு பெற்றுள்ளதை மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடுகள் காட்டுகின்றன (விளக்கப்படம் 7.4). ஆண்டு தனிநபர் வருமானத்தில் தமிழ்நாடு தொடர்ந்து நான்காம் இடத்தைத் தக்கவைத்துள்ளது.

**விளக்கப்படம் 7.4: மாதாந்திரத் தனிநபர் நுகர்வுச் செலவினம் (ரூபாயில்) – ஊரகப் பகுதி & நகர்ப்புரம்**




*ஆதாரம்: Factsheet_HCES_2022-23, மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம் (NSS அறிக்கைகள்).*

## 7.5 கல்வி

7.11 கல்வியானது எழுத்தறிவு, எண்ணறிவு, அறிவியல் தர்க்க அறிவு ஆகியவற்றைக் கற்றுக்கொடுப்பதற்கு அப்பால், தனிநபர்கள் வேலைவாய்ப்பைப் பெறத் தேவையான திறன்களையும் அறிவையும் பெற்றவர்களாக மாற்றி, சிறந்த வேலைவாய்ப்புகளையும் அதிக ஊதியத்தையும் பெறுவதற்கு வழிவகுக்கிறது. சமூக நலன் மேம்படுவதற்கான அடித்தளமாகக் கல்வி உள்ளது. இந்தியாவிலேயே அதிகக் கல்வியறிவு பெற்ற மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று. தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, உயர்கல்வியில் மாணவர் சேர்க்கையின் அடிப்படையில் தமிழ்நாடு தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டுவருகிறது. நாடு விடுதலை பெற்றதிலிருந்து தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கையைத் தொடர்ச்சியாக அதிகரித்து, அனைவருக்கும் கல்வி கிடைக்கச்செய்வதில் அரசு முனைப்புடன் செயல்பட்டுவருகிறது. பள்ளிப் படிப்புக்கான அத்தியாவசியப் பொருள்களை விலையின்றி விநியோகித்தல், மிதிவண்டிகள் வழங்குதல், மதிய உணவுத் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு முன்னெடுப்புகள், மாணவர்களை ஈடுபாட்டுடன் பள்ளிகளுக்கு வரச் செய்வதிலும் ஈடுபாட்டுடன் பயிலச் செய்வதிலும் முக்கியப் பங்காற்றியுள்ளன.

## பள்ளிக்கல்வி

7.12 தற்போது, தமிழ்நாடு முழுவதும் உள்ள 58,722 பள்ளிகளில் 1.29 கோடி மாணவர்கள் சேர்ந்துள்ளனர். இது இந்திய அளவிலான மாணவர் சேர்க்கையில் 5.24% ஆகும் (அட்டவணை 7.2). இதில், 79.7 லட்சம் மாணவர்கள் தொடக்கக் கல்வியிலும், 38.5 லட்சம் மாணவர்கள் உயர்நிலை, மேல்நிலைக் கல்வியிலும் சேர்ந்துள்ளனர். தமிழ்நாட்டில் 33,995 தொடக்கப் பள்ளிகளும், 10,044 நடுநிலைப் பள்ளிகளும், 5,679 உயர்நிலைப் பள்ளிகளும், 9,004 மேல்நிலைப் பள்ளிகளும் உள்ளன. மாநிலத்தில் மொத்தமுள்ள 58,722 பள்ளிகளில் அரசுப் பள்ளிகள் 37,608; தனியார் பள்ளிகள் 12,481; அரசு உதவிபெறும் பள்ளிகள் 8,314.

**அட்டவணை 7.2: 2023-24இல் பள்ளிகளில் மொத்தச் சேர்க்கை**

| கல்வி நிலை | தமிழ்நாடு | இந்தியா |
|---|---|---|
| மொத்தம் | 1,29,93,050 | 24,80,45,828 |
| நர்சரிப் பள்ளிகள் | 11,62,990 | 1,30,82,797 |
| தொடக்கப் பள்ளிகள் | 79,71,425 | 17,09,63,726 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 20,71,528 | 3,68,63,791 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 17,87,107 | 2,71,35,514 |

*ஆதாரம்: UDISE+, 2023-24.*

7.13 2023-24இல், தமிழ்நாட்டில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (GER) தொடக்கப் பள்ளிகளில் 98.4% ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 97.5% ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 82.9% ஆகவும் இருந்தது (அட்டவணை 7.3). தேசிய அளவிலான மாணவர் சேர்க்கை முறையே 91.7%, 77.4% மற்றும் 56.2% ஆகும். உயர்நிலை, மேல்நிலைக் கல்வியில் தமிழ்நாட்டின் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் தேசிய சராசரியைவிடக் கணிசமான அளவில் அதிகமாக உள்ளது என்பதை இந்தப் புள்ளிவிவரம் காட்டுகிறது. தமிழ்நாட்டிலும் இந்தியாவிலும் தொடக்கக் கல்வி, உயர்நிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி ஆகிய மூன்று நிலைகளிலும் பெண்களின் மொத்தச் சேர்க்கை விகிதம் ஆண்களைவிட அதிகமாக உள்ளது.

**அட்டவணை 7.3: 2023-24இல் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (%)**


| பள்ளிக் கல்வி | தமிழ்நாடு | | | இந்தியா | | |
|---|---|---|---|---|---|---|
| | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
| தொடக்கப்பள்ளிகள் (I-VIII) | 97.6 | 99.4 | 98.4 | 90.7 | 92.9 | 91.7 |
| உயர்நிலைப்பள்ளிகள் (IX-X) | 96.9 | 98.1 | 97.5 | 76.8 | 78.0 | 77.4 |
| மேல்நிலைப்பள்ளிகள் (XI-XII | 77.3 | 88.8 | 82.9 | 54.4 | 58.2 | 56.2 |

*ஆதாரம்: UDISE+, 2023-24.*

7.14 பெண்களின் மொத்தச் சேர்க்கை விகிதத்துக்கும் ஆண்களின் மொத்தச் சேர்க்கை விகிதத்துக்குமான விகிதத்தை அளவிடும் பாலின சமத்துவக் குறியீடு (GPI), தமிழ்நாட்டில் தொடக்கப் பள்ளிகளில் 1.02 ஆகவும், உயர்நிலைப் பள்ளிகளில் 1.01 ஆகவும், மேல்நிலைப் பள்ளிகளில் 1.15 ஆகவும் உள்ளது. தேசிய அளவில் இது முறையே 1.02, 1.02, 1.07 ஆக உள்ளது. பாலினச் சமத்துவக் குறியீடானது, கல்வி அமைப்பில் பெண்களின் சமமான பங்களிப்பைப் பிரதிபலிக்கிறது. பாலின சமத்துவக் குறியீடு 1 ஆக இருப்பது பாலின சமத்துவத்தைக் குறிக்கிறது. அதேசமயம் அது 1ஐவிட அதிகமாக இருப்பது, சேர்க்கை விகிதத்தில் ஆண்களைவிடப் பெண்களின் பங்களிப்பு அதிகமாக இருப்பதைக் குறிக்கிறது.

7.15 மாணவர்-ஆசிரியர் விகிதம் (PTR), ஒரு ஆசிரியருக்கான மாணவர்களின் சராசரி எண்ணிக்கையைக் குறிக்கும். தேசிய சராசரியுடன் ஒப்பிடும்போது இந்த விகிதமானது தமிழ்நாட்டில் தொடக்க, உயர்நிலைப் பள்ளிகளில் கணிசமாகக் குறைவு. அதே வேளையில், மேல்நிலைப் பள்ளிகளில் தமிழ்நாட்டின் மாணவர்-ஆசிரியர் விகிதமானது தேசிய சராசரியைவிட அதிகமாக உள்ளது (விளக்கப்படம் 7.5).

**விளக்கப்படம் 7.5: மாணவர்-ஆசிரியர் விகிதம் (2023-24)**




*ஆதாரம்: UDISE+, 2023-24.*

7.16 2019இல் நிதி ஆயோக் வெளியிட்ட பள்ளிக்கல்வித் தரக் குறியீட்டில் (SEQI) கேரளத்துக்கு (82.2%) அடுத்தபடியாகத் தமிழ்நாடு (73.4%) இரண்டாம் இடத்தில் உள்ளது. உயர்நிலைக் கல்வியில் இடைநிற்றல் விகிதமும் தமிழ்நாட்டில் மிகக் குறைவு அகில இந்திய அளவில் அது 12.6% என்ற நிலையில், தமிழ்நாட்டில் 4.5% ஆக உள்ளது. தமிழ்நாடு அரசு செயல்படுத்திய இல்லம் தேடிக் கல்வித் திட்டம், கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் பள்ளிகள் மூடப்பட்டதால் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்புவரையான மாணவர்களின் கற்றலில் ஏற்பட்ட இழப்பை, தன்னார்வ ஆசிரியர்களைக் கொண்டு பாடம் நடத்தி ஈடுசெய்தது.

## பெட்டிச் செய்தி 7.1: தமிழ்நாடு அரசின் இல்லம் தேடிக் கல்வித் திட்டம்: பொதுக் கல்வியில் புத்தாக்கம்

தமிழ்நாடு அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட இல்லம் தேடிக் கல்வித் திட்டம், கோவிட் பெருந்தொற்றுக் காலத்தில் இரண்டு ஆண்டுகள் பள்ளிகள் மூடப்பட்டதால் ஏற்பட்ட கற்றல் இழப்பை ஈடுசெய்யும் நோக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட முக்கியமான முன்னெடுப்பாகும். இத்திட்டம், மாநிலம் முழுவதும் உள்ள ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரையான மாணவர்களுக்குத் தன்னார்வ ஆசிரியர்களால் பாடம் நடத்தி, அவர்களது கற்றல் இழப்பை ஈடுசெய்ய உறுதுணைபுரிந்தது. இத்திட்டத்தின் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக ஒரு விரைவான மதிப்பீட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

### ஆய்வு முடிவுகள்:

- தன்னார்வல ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட பயிற்சி மிகப் பெருமளவில் பலனளிப்பதாக இருந்தது. மாற்றுச் சிந்தனை, படைப்பாக்கத் திறனை வளர்த்தெடுத்துக் கற்றலை உற்சாகமான அனுபவமாக்கியதுடன், மாணவர்களுக்குத் தன்னம்பிக்கை அளித்து இத்திட்டம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.
- ஆடல் பாடல், கதைசொல்லல், செயல்பாடுகளுடன் கற்பித்தல் ஆகிய முறைகளில் பாடங்கள் கற்றுத்தரப்பட்டதே இல்லம் தேடிக் கல்வித் திட்டத்தின் வெற்றிக்குக் காரணம் என்கிறார்கள் ஆசிரியர்கள். இல்லம் தேடிக் கல்வித் திட்ட மையங்களில் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான, உகந்த கற்றல் சூழல் இருந்ததைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் என அனைவரும் கூட்டாக உறுதிப்படுத்தியுள்ளனர்.
- பள்ளிக்கூடம் விட்ட பிறகு குழந்தைகளைப் பாதுகாக்கும் மையங்களாக இல்லம் தேடிக் கல்வித் திட்ட மையங்கள் செயல்பட வேண்டும் என்ற கோரிக்கை பெற்றோர்களிடமிருந்து, குறிப்பாக வேலைக்குச் செல்பவர்களிடமிருந்து எழுந்துள்ளது.


*ஆதாரம்: இல்லம் தேடிக் கல்வித் திட்டம் குறித்து மாநில திட்டக் குழு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை, 2023*


### உயர்கல்வி


7.17 தமிழ்நாட்டிலுள்ள மாநிலப் பல்கலைக்கழகங்களான அண்ணா பல்கலைக்கழகம் (14ஆவது தரவரிசை), பாரதியார் பல்கலைக்கழகம் (21ஆவது தரவரிசை), அழகப்பா பல்கலைக்கழகம் (30ஆவது தரவரிசை) ஆகிய மூன்றும் நாட்டின் சிறந்த 50 கல்வி நிறுவனங்களின் பட்டியலில் இடம்பெற்றுத் தமிழ்நாடு உயர்கல்வியில் சிறந்து விளங்குகிறது. மேலும், தமிழ்நாட்டின் மாநிலப் பல்கலைக்கழகங்கள் ஒன்பது இந்தியாவின் சிறந்த 100 பல்கலைக்கழகங்களின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. நான்கு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் முதல் 100 இடங்களுக்குள் உள்ளன. மாநிலத்திலுள்ள பல பல்கலைக்கழகங்களும் NAAC அங்கீகாரத்தில் அதிகப் புள்ளிகள் (A++/A+/A) பெற்றுள்ளன.

7.18 2021-22இல், உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் தமிழ்நாட்டில் 47% ஆக இருந்தது. இது தேசிய சராசரியான 28.4% ஐவிட மிக அதிகம் (விளக்கப்படம் 7.6).

**விளக்கப்படம் 7.6: உயர்கல்வியில் மாணவர் சேர்க்கை விகிதம்**








*ஆதாரம்: அனைத்து இந்திய உயர்கல்விக் கணக்கெடுப்பு (AISHE) அறிக்கை, 2021-22, இந்தியக் கல்வி அமைச்சகம்.*

7.19 உயர்கல்வியில், மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில், இந்திய முதன்மை மாநிலங்களில், தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது (விளக்கப்படம் 7.7). ஆண்கள் சேர்க்கை விகிதத்திலும் தமிழ்நாடு முதலிடத்தில் உள்ளது. அடுத்த இடங்களில் உத்தராகண்ட் 40.1%, தெலங்கானா 38.5% ஆகிய மாநிலங்கள் உள்ளன. மாணவியரைப் பொறுத்தவரை, மொத்தச் சேர்க்கை விகிதத்தில் தமிழ்நாடு 47.3% பெற்று மூன்றாமிடத்தில் உள்ளது. இமாச்சலப் பிரதேசம் (49.7%) முதலிடத்திலும், கேரளம் (49.0%) பெற்று இரண்டாமிடத்திலும் உள்ளது.

**விளக்கப்படம் 7.7: 2021-22இல் உயர்கல்வியில் மொத்தச் சேர்க்கை விகிதம்**




*ஆதாரம்: அனைத்து இந்திய உயர்கல்விக் கணக்கெடுப்பு (AISHE) அறிக்கை, 2021-22, இந்தியக் கல்வி அமைச்சகம்.*

7.20 தமிழ்நாட்டில் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை, கல்வியியல் கல்லூரிகளின் எண்ணிக்கை, அவற்றின் பிரிவுகள், 2024-25இல் இந்தக் கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவற்றை அட்டவணை 7.4 வழங்குகிறது. மாநிலத்தில் மொத்தம் 1,626 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை (1,293) சுயநிதிக் கல்லூரிகள். மீதமுள்ள 333 அரசு அல்லது அரசு உதவிபெறும் கல்லூரிகள். தமிழ்நாடு முழுவதும் உள்ள கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், கல்வியியல் கல்லூரிகளில் மொத்தம் 4.75 லட்சம் மாணவர்கள் சேர்ந்துள்ளனர்.

**அட்டவணை 7.4: கல்லூரிகள் எண்ணிக்கையும் மாணவர்கள் சேர்க்கையும் (2024-25)**

| கல்லூரிகளின் வகை | கலை & அறிவியல் மற்றும் கல்வியியல் கல்லூரிகள் | | பல்தொழில் நுட்பக்கல்லூரிகள் | |
|---|---|---|---|---|
| | கல்லூரிகளின் எண்ணிக்கை | மாணவர்கள் சேர்க்கை | கல்லூரிகளின் எண்ணிக்கை | மாணவர்கள் சேர்க்கை |
| அரசு | 171 | 1,14,988 | 54 | 12,761 |
| அரசு உதவி | 162 | 75,960 | 32 | 7,782 |
| இணைந்தது | - | - | 4 | 145 |
| சுயநிதி | 1,293 | 2,84,598 | 401* | 37738 |
| மொத்தம் | **1,626** | **4,75,546** | **492** | **58,426** |

*ஆதாரம்: உயர்கல்வித் துறை, கொள்கை விளக்கக் குறிப்பு, 2024-25, தமிழ்நாடு அரசு. *1 ஹோட்டல் மேலாண்மை நிறுவனம் அடங்கும்*

7.21 உயர்கல்வியில் முதலிடத்தில் உள்ள தமிழ்நாட்டில், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில், மொத்தம் 4.75 லட்சம் மாணவர்கள் சேர்ந்துள்ளனர். அவர்களில் 4.12 லட்சம் பேர் இளநிலைப் பட்டப் படிப்பும், 0.64 லட்சம் பேர் முதுநிலை, முனைவர் படிப்பும் பயில்கின்றனர்.

## தொழில் கல்வி

7.22 தமிழ்நாட்டில் மொத்தம் உள்ள 506 பொறியியல் கல்லூரிகளில் 11 அரசுக் கல்லூரிகள், 3 அரசு உதவிபெறும் கல்லூரிகள், 20 அண்ணா பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகள், 472 சுயநிதிக் கல்லூரிகள் ஆகும். அதேபோல், தமிழ்நாட்டிலுள்ள 492 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 54 அரசால் நடத்தப்படுகின்றன, 32 அரசு உதவிபெறுபவை, 4 இணைந்த கல்லூரிகள், 401 சுயநிதியில் இயங்குபவை. இந்தப் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் மொத்தமாக 58,426 மாணவர்கள் பயில்கின்றனர்.

7.23 அரசுப் பள்ளியில் பயின்று தொழிற்கல்வியில் 7.5% இட ஒதுக்கீடு பெற்று சேரும் மாணவர்களுக்கான பயிற்சிக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் உள்ளிட்ட அனைத்துக் கட்டணங்களையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. 2022-23 கல்வியாண்டில், முதலாம் ஆண்டு மாணவர்கள் 9,795 பேருக்கும், இரண்டாம் ஆண்டு மாணவர்கள் 8,375 பேருக்கும், மூன்றாம் ஆண்டு மாணவர்கள் 6,162 பேருக்குமாக ரூ.129.08 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

7.24 பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் உயர்கல்வி கற்பதை ஊக்குவிக்கும் வகையில், முதல் தலைமுறைப் பட்டதாரி கல்வி உதவித் தொகைத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. வருமானம், சாதி போன்ற எந்த அடிப்படையிலுமின்றி, தொழில் கல்வியில் சேர்ந்துள்ள மாணவர் அனைவருக்கும் முழுப் பயிற்சிக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொள்கிறது. 2023-24ஆம் கல்வியாண்டில், பொறியியல் கல்வி பயிலும் முதல் தலைமுறைப் பட்டதாரிகள் 1,57,342 பேருக்கு ரூ.379.31 கோடி நிதி வழங்கப்பட்டுள்ளது.

7.25 மகளிரின் உயர்கல்வி மேம்பட வேண்டும் என்னும் நோக்கத்தில் அரசு செயல்படுத்திவரும் புதுமைப்பெண் திட்டத்தின் விளைவாகப் பெண்கல்வியில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அதேபோல், ஆண்களின் உயர்கல்வி மேம்பாட்டுக்கெனத் தமிழ்ப் புதல்வன் திட்டம் 2024-25 முதல் செயல்பாட்டுக்கு வந்துள்ளது. 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்கள் உயர்கல்வியைத் தொடர இத்திட்டம் உறுதுணைபுரிகிறது. இந்த முன்னெடுப்பால் அரசுப் பள்ளி மாணவர்கள் பெருமளவில் உயர்கல்விச் சேர்க்கை பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

**பெட்டிச்செய்தி 7.2: புதுமைப்பெண் திட்டம்**

புதுமைப்பெண் திட்டத்தில் பெண்களின் உயர்கல்விக்காக மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அரசுப் பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்புவரை பயின்ற பெண்கள் (அண்மையில் அரசு உதவிபெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயின்ற மாணவிகளுக்கும் இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது) பட்டப் படிப்பு, பட்டயப் படிப்பு, தொழில் படிப்பு போன்ற படிப்புகளைப் படித்துமுடிக்கும் வரை இந்த உதவித்தொகை வழங்கப்படுகிறது. இளம்வயதுத் திருமணங்களைத் தவிர்த்து, பெண்கள் உயர்கல்வியில் சேருவதை ஊக்கப்படுத்துவதில் இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

**ஆய்வு முடிவுகள்**

- புதுமைப்பெண் திட்டத்தில் மாநிலத்தின் 38 மாவட்டங்களிலுள்ள 2,30,820 மாணவிகள் பயனடைந்துள்ளனர்.
- மாணவிகள் 7,110 (3.08%) பேர் தேசிய நிறுவனத் தரவரிசைக் கட்டமைப்புப் பட்டியலில் இடம்பெற்ற (NIRF-ranked) கல்வி நிறுவனங்களில் பயின்றுவருகின்றனர். நகர்ப்புரப் பகுதியைவிட அதிகமாக ஊரகப் பகுதியைச் சேர்ந்த பெண்கள் இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர்.
- இத்திட்டத்தின் பயனாளிகளில் 3 சதவீதத்தினர் பெற்றோரை இழந்த அல்லது ஒற்றைப் பெற்றோரைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.
- இத்திட்டத்தின் பயனாளிகளில் 82 சதவீதத்தினர் முறைசாராத் துறையில் ஈடுபடும் பெற்றோரைக் கொண்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.
- 2022-23 கல்வியாண்டில் பெண்களின் கல்லூரிச் சேர்க்கை 6.9 % அதிகரித்துள்ளது.

**பரிந்துரைகள்**

- தொடக்க நிலையிலேயே விழிப்புணர்வை ஊட்டுவதும், பள்ளியளவில் பரப்புரை மேற்கொள்வதும் தகுதியுடைய பெண்கள் அனைவரும் உயர்கல்வியில் சேர்வதற்கு ஊக்கமளிக்கும்.
- முதல் தலைமுறைப் பட்டதாரிகளுக்கும், 7.5% இட ஒதுக்கீட்டில் தொழில் கல்வியில் சேர்பவர்களுக்கும் அரசு உதவித்தொகை அளிக்கிறது என்னும் செய்தியைப் பெற்றோர்கள் அறியச் செய்திடுதல் வேண்டும்.

*ஆதாரம்: புதுமைப்பெண் திட்ட மதிப்பீட்டு அறிக்கை, மாநில திட்டக் குழு, 2024.*

## 7.6 சுகாதாரம்

7.26 வாழ்க்கைத் தரத்தை நிர்ணயிப்பதில் சுகாதாரம் முக்கியப் பங்குவகிக்கிறது. நல்ல சுகாதாரக் கட்டமைப்பு மக்களின் ஆரோக்கியத்தைப் பேணுவதோடு மட்டுமில்லாமல், வலுவான சமூகத்தை உருவாக்கவும், பொருளாதார வளர்ச்சியை வழிநடத்திச்செல்லவும் உதவுகிறது. தமிழ்நாடு பல்வேறு சுகாதாரக் குறியீடுகளில் சிறந்து விளங்குகிறது. தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு 4 & 5இன்படி, 2015-16 முதல் 2019-20 வரை, அட்டவணை 7.5இல் பட்டியலிடப்பட்டுள்ள 14 தேர்ந்தெடுக்கப்பட்ட சுகாதாரக் குறியீடுகளிலும் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. தேசியச் செயல்திறனுடன் ஒப்பிடும்போது, தமிழ்நாடு இந்தக் குறியீடுகள் அனைத்திலும் சிறந்து விளங்குகிறது. சிசு இறப்பு விகிதம், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இறப்பு விகிதம் ஆகிய இரண்டிலும், கேரளத்துக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு இரண்டாம் இடத்தில் உள்ளது என்பதை மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடு தெளிவாகக் காட்டுகிறது.


**அட்டவணை 7.5: சுகாதாரக் குறியீடுகள்: தமிழ்நாடு, இந்தியா (NFHS 4-5)**

| குறியீடுகள் | தமிழ்நாடு | | | இந்தியா | | |
|---|---|---|---|---|---|---|
| | 2015-16 | 2019-21 | SRS 2020 | 2015-16 | 2019-21 | SRS 2020 |
| கருவுறுதல் விகிதம் | 1.7 | 1.8 | 1.4 | 2.2 | 2.0 | 2.0 |
| சிசு இறப்பு விகிதம் | 20 | 18.6 | 13 | 40.7 | 35.2 | 28 |
| பிறந்த குழந்தை இறப்பு விகிதம் (28 நாள்களுக்குள்) | 14.0 | 12.7 | 9 | 29.5 | 24.9 | 20 |
| பிறந்த குழந்தை இறப்பு விகிதம் (28 நாள்கள் முதல் ஒரு வயதுக்குள்) | 6.2 | 6 | 4 | 11.3 | 10.3 | 8 |
| ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம் | 26.8 | 22.3 | 13 | 49.7 | 41.9 | 32 |
| மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகள் (%) | 98.9 | 99.6 | - | 78.9 | 88.6 | - |
| முழுமையாகத் தடுப்பூசி போடப்பட்ட குழந்தைகள் (12-23 மாதங்கள்) (%) | 69.7 | 89.2 | 99.4* | 62 | 76.4 | - |
| வளர்ச்சி குன்றிய குழந்தைகளின் சதவீதம் (வயதுக்கு குறைந்த உயரம்) | 27 | 25 | 28.2** | 38.4 | 35.5 | - |
| நலிந்த 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் (எடைக்கு ஏற்ப உயரம்)% | 19.7 | 14.6 | 4** | 21 | 19.3 | - |
| முழு வளர்ச்சியற்ற குழந்தைப் பிறப்பு விகிதம் | 15.5 | 13.7 | 13.8 | 19 | 17.1 | 19.5 |
| ரத்தசோகை பாதிப்பு கொண்ட குழந்தைகளின் சதவீதம் | 50.7 | 57.4 | - | 58.6 | 67.1 | - |
| ரத்தசோகை பாதிப்பு கொண்ட குழந்தைகளின் சதவீதம் | 66 | 54 | - | 130 | 97 | - |

*ஆதாரம்: தேசிய குடும்ப சுகாதாரக் கணக்கெடுப்பு 4 & 5, *மாநிலத் தரவு, **அங்கன்வாடி தரவு.*

7.27 தமிழ்நாட்டில் மனிதரின் சராசரி ஆயுள்காலம் 73.2 ஆண்டுகள் (2016-2020), அதிகபட்ச ஆயுள்காலம் உடையவர்களைக் கொண்ட மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்று (விளக்கப்படம் 7.8)

**விளக்கப்படம் 7.8: 2016-20இல் ஆயுள்காலம்**




*ஆதாரம்: இந்தியத் தலைமைப் பதிவாளர் அலுவலகம், உள்துறை அமைச்சகம்.*

7.28 சுகாதாரக் குறியீடுகளில் இந்திய அளவில் தமிழ்நாடு சிறப்பாகச் செயல்படும் அதே வேளையில், முதன்மையான பல சுகாதார அளவீடுகளில் சர்வதேசத் தரத்தை எட்ட மேற்கொள்ளும் முயற்சிகளைத் தொடர வேண்டும். எடுத்துக்காட்டாக, சிங்கப்பூரில் மக்களின் சராசரி ஆயுள்காலம் 83.9 ஆண்டுகள், மகப்பேறு இறப்பு விகிதம் நார்வேயில் 2 ஆகவும் சிங்கப்பூரில் 7 ஆகவும் உள்ளது. அதேபோல், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பு விகிதம் சிங்கப்பூரில் 2.15 ஆகும். மேலும், பல முன்னேறிய நாடுகளில் வளர்ச்சிகுன்றிய குழந்தைகள் கிட்டத்தட்ட இல்லை.

7.29 இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு வலுவான சுகாதார உள்கட்டமைப்பைக் கொண்டுள்ளது. 2023-24இல் தமிழ்நாட்டில் 8,713 துணை சுகாதார நிலையங்களும், 2,336 ஆரம்ப சுகாதார நிலையங்களும், 372 அரசு மருத்துவமனைகளும் உள்ளன. கூடுதலாக, பல்வேறு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும் மருத்துவக் கல்வி நிறுவனங்களும் உள்ளன.

7.30 ஒட்டுமொத்தமாக 65,046 படுக்கை வசதிகளை அளிக்கும் 36 மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள், 28 உயர் சிறப்பு மருத்துவம் அளிக்கும் பன்னோக்கு மருத்துவமனைகளுடன் நாட்டிலேயே மிகப் பெரிய அரசு உயர்நிலை மருத்துவ சிகிச்சை அமைப்பு தமிழ்நாட்டில்தான் உள்ளது. இந்த மருத்துவமனைகள் மூலம் நாளொன்றுக்குப் புறநோயாளிகள் 1.09 லட்சம் பேருக்கும், உள்நோயாளிகள் 8,648 பேருக்கும் மருத்துவ சிகிச்சை அளிக்கப்படுகிறது.

7.31 இந்த அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில், எம்.பி.பி.எஸ். படிப்புக்காக நாட்டிலேயே அதிகபட்சமாக 5,050 பேருக்குச் சேர்க்கை அளிக்கப்படுகிறது. மாநிலத்தில் 21 சுயநிதி மருத்துவக் கல்லூரிகள் செயல்படுகின்றன. இவற்றில் 3,400 பேர் எம்.பி.பி.எஸ். பயில்கின்றனர். 3 தனியார் மருத்துவப் பல்கலைக்கழகங்களில் 450 பேருக்கும், 11 நிகர்நிலைப் பல்கலைக்கழகங்களில் 2,450 பேருக்கும் எம்.பி.பி.எஸ். கல்வி பயில வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஒட்டுமொத்தத்தில், தமிழ்நாட்டில் 11,500 பேருக்கு மருத்துவத்தில் இளநிலைப் படிப்பு பயில வாய்ப்பளிக்கப்படுகிறது. மேலும், 24 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 2,273 பேருக்கு மருத்துவத்தில் முதுநிலைப் படிப்பு படிக்க வாய்ப்பளிக்கப்படுகிறது. மகாராஷ்டிரத்துக்கு (3,258 பேர்) அடுத்தபடியாகத் தமிழ்நாட்டில்தான் (2,273 பேர்) அதிகமானோர் மருத்துவத்தில் உயர்கல்வி பயில்கின்றனர். 201 பேர் தேசிய வாரிய பட்ட மேற்படிப்பு(DNB) பயிலவும் மாநிலம் வாய்ப்பளிக்கிறது.

### சுகாதாரக் காப்பீடும் ஊட்டச்சத்தும்

7.32 தமிழ்நாடு அரசு 2009 முதல், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் ஆகியவற்றைச் செயல்படுத்திவருகிறது. இவற்றின் மூலம், தரமான மருத்துவச் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. மாவட்ட மருத்துவமனைகளில் சிகிச்சைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. நோயாளிகளின் இல்லத்துக்கே சென்று சிகிச்சைகள் அளிக்கப்படுகின்றன. 2018இல், இந்திய அரசின் ஆயுஷ்மான் பாரத் பிரதம மந்திரி ஜன் ஆரோக்கிய யோஜனா (PMJAY) திட்டத்துடன், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஒருங்கிணைக்கப்பட்டது. இதன்படி, மொத்தக் காப்பீட்டில் ஒன்றிய அரசு 60% பங்களிக்கிறது (ஒரு குடும்பத்துக்கு ரூ.849), மீதமுள்ள 40% காப்பீட்டுக்கு மாநில அரசு பொறுப்பேற்றுக்கொள்கிறது. கூடுதலாக, PMJAYஇன்கீழ் சேர்க்கப்படாத 60.5 லட்சம் குடும்பங்களுக்கான காப்பீட்டுக்கு மாநிலம் முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொள்கிறது.

### பெட்டிச்செய்தி 7.3: மக்களைத் தேடி மருத்துவம்

மருத்துவவசதியைத்தேடிப்பெறஇயலாதோரின்இல்லத்துக்கேசென்றுமருத்துவப்பரிசோதனைகளையும் சிகிச்சைகளையும் மேற்கொள்வதற்காக 2021இல் மக்களைத் தேடி மருத்துவம் திட்டம் தொடங்கப்பட்டது. புற்றுநோய் உள்ளிட்ட தொற்றா நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிவதே இத்திட்டத்தின் முதன்மை நோக்கம். மேலும், கண்ணொளி காப்போம் திட்டம் மூலம் சிறார்களின் கண்பார்வையைப் பாதுகாப்பதற்கும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது.

### திட்டத்தின் சாதனைகள்

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 2.23 கோடிப் பேருக்கு மருத்துவ சேவைகளும் வருமுன் காக்கும் சிகிச்சைகளும் வழங்கி சுகாதார நடவடிக்கைகள் மேம்படுத்தப்பட்டுள்ளன.

### தீவிர மருத்துவப் பரிசோதனை & தொடக்கநிலையில் நோயைக் கண்டறிதல்

ஒட்டுமொத்தமாக 1.61 கோடிப் பேருக்கு ரத்த அழுத்தப் பரிசோதனையும், நீரழிவு நோய்ப் பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டு நோய்களைத் தொடக்க நிலையிலேயே கண்டறிந்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. மேலும், 4.44 லட்சம் பேருக்குப் புற்றுநோய் உள்ளிட்ட தொற்றா நோய்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுவதுடன் தொடர் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படுகிறது. கண் பாதுகாப்பைப் பொறுத்தவரை, 42.21 லட்சம் குழந்தைகளுக்குக் கண் பரிசோதனை நடத்தப்பட்டு, மூக்குக்கண்ணாடி தேவைப்படும் 2.62 லட்சம் பேருக்குக் கண்ணாடி வழங்கப்பட்டுள்ளது.

### எளிதில் நோய் பாதிப்புக்கு உள்ளாவோருக்குச் சிறப்புக் கவனம்


13.15 லட்சம் பேருக்கு இயன்முறை மருத்துவமும் வலிநிவாரணப் பராமரிப்பும் வழங்கி, அத்தியாவசியமான மறுவாழ்வு நடவடிக்கைகளும் மருத்துவ சேவைகளும் அளிக்கப்பட்டுள்ளன. மாநிலம் முழுவதும் உள்ள 8,713 சுகாதாரத் துணை நிலையங்கள், 460 நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகியவற்றின் மூலம் கடைக்கோடி மனிதருக்கும் மருத்துவ வசதி வழங்கப்படுகிறது.

மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்துக்கு இப்போது பன்னாட்டு அங்கீகாரம் கிடைத்திருக்கிறது. மக்கள் நலத்திலும் தொற்றா நோய் மேலாண்மையிலும் சிறப்பாகச் செயல்படும் தமிழ்நாடு அரசுக்கு இத்திட்டத்துக்காக ஐநா அமைப்பின் 2024க்கான விருது (United Nation's Interagency Task Force Award) வழங்கப்பட்டது. சமுதாயம் சார்ந்து மருத்துவ வசதியினை பரந்த அளவில் இத்திட்டம் அளிப்பதால் அனைவரின் ஆரோக்கியமும் பேணப்படுவதுடன் வளமான எதிர்காலமும் உறுதிப்படுகிறது.

*ஆதாரம்: மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் தொற்றா நோய்களுக்கான தொடர் மருத்துவ சேவை குறித்த ஆய்வறிக்கை, மாநில திட்டக் குழு, 2023-24.*

7.33 முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் 2019 முதல் காப்பீட்டுத் தொகை வழங்கப்பட்ட விவரங்களையும் பயனாளிகளின் எண்ணிக்கையையும் விளக்கப்படம் 7.9 வழங்குகிறது. 2019 மற்றும் 2025 பிப்ரவரி வரையில், ஏறத்தாழ 1.02 கோடி பேர் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்துள்ளனர்; காப்பீட்டுத் தொகையாக ரூ.86,982 கோடி வழங்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 7.9: முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட காப்பீட்டுத் தொகை மற்றும் பயனாளிகளின் எண்ணிக்கை**





*ஆதாரம்: திட்ட இயக்குநர், தமிழ்நாடு சுகாதார அமைப்புத் திட்டம்.*

7.34 குழந்தைகளுக்கும் தாய்மார்களுக்கும் பல்வேறு சேவைகளை வழங்குவதால் அங்கன்வாடி மையங்கள் பொது சுகாதாரக் கட்டமைப்பில் முக்கியப் பங்குவகிக்கின்றன. இவற்றில் நோய்த்தடுப்பு, சுகாதாரப் பரிசோதனைகள், பரிந்துரை சேவைகள், கருத்தடை ஆலோசனை, மருந்து வழங்கல் போன்ற அடிப்படை சுகாதார சேவைகள் அடங்கும். அங்கன்வாடி மையங்கள் மூலம் ஊட்டச்சத்தும் முறைசாரா முன்பருவக் கல்வியும் வழங்கப்படுகின்றன. இந்த மையங்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகள் (ICDS) அமைப்பின் ஒரு பகுதியாகும். தமிழ்நாட்டில் 54,439 அங்கன்வாடி மையங்கள் உள்ளன.

7.35 ஊட்டச்சத்துத் திட்டத்தின்கீழ் உள்ள மகப்பேறுக்கு முந்தைய மற்றும் மகப்பேறுக்குப் பிந்தைய தாய்மார்கள், முன்பருவக் கல்வித் திட்டத்தில் உள்ள குழந்தைகள் எனத் தமிழ்நாட்டிலுள்ள மொத்த ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டுச் சேவைகளின் (ICDS) பயனாளிகள் எண்ணிக்கை, 2019-20இல் 21 லட்சத்திலிருந்து 2020-21இல் 23.34 லட்சமாக அதிகரித்தபோதும், இந்த எண்ணிக்கை 2024-25இல் 16.89 லட்சமாகக் குறைந்துள்ளது. இத்திட்டத்தின் மூலம் பயனடையும், மகப்பேறுக்கு முந்தைய மற்றும் மகப்பேறுக்குப் பிந்தைய தாய்மார்களின் எண்ணிக்கை 2019-20இல் 7.04 லட்சத்திலிருந்து 2024-25இல் 5.97 லட்சமாகக் குறைந்துள்ள நிலையில், முறைசாரா முன்பருவக் கல்வி பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 13.96 லட்சத்திலிருந்து 10.92 லட்சமாகக் குறைந்துள்ளது (விளக்கப்படம் 7.10).

**விளக்கப்படம் 7.10: ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள் திட்டப் பயனாளிகள்**




*ஆதாரம்: இயக்குநர், ஊட்டச்சத்து, தமிழ்நாடு அரசு.*

7.36 குழந்தைகளின் (0-60 மாதங்கள்) ஊட்டச்சத்து நிலையானது 2019-20இல் இருந்ததைவிட 2023-24இல் மேம்பட்டுள்ளது என்பதற்குச் சான்று உள்ளது. 2019-20இல், எடைபார்க்கப்பட்ட 35.38 லட்சம் குழந்தைகளில் 92.9% குழந்தைகள் சரியான எடையில் இருந்தனர். அதேபோல, 2023-24இல் எடைபார்க்கப்பட்ட 32.68 லட்சம் குழந்தைகளில் 94% குழந்தைகள் சரியான எடை கொண்டிருந்தனர். 2019-20இல் 6.3% ஆக இருந்த எடைகுறைந்த குழந்தைகளின் வீதம் 2023-24இல் 4.7% ஆகக் குறைந்திருந்த வேளையில் தீவிரமான எடைக்குறைவு கொண்ட குழந்தைகளின் விகிதம் 0.2%இலிருந்து 1.1% ஆக அதிகரித்திருந்தது. தொடக்கப் பள்ளிக் குழந்தைகளின் பசியைப் போக்கவும், ஊட்டச்சத்துக் குறைபாட்டைக் களையவும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் அவர்களின் வளர்ச்சிக்கு உதவும் வகையில் சத்தான உணவை வழங்குகிறது; அவர்களின் உடல்நலத்தையும் பேணுகிறது.

**அட்டவணை 7.6: தமிழ்நாட்டுக் குழந்தைகளின் (0-60 மாதங்கள்) ஊட்டச்சத்து நிலை**

| ஆண்டு | எடை பார்க்கப்பட்ட குழந்தைகள் | தீவிர எடைகுறைவான குழந்தைகள் | எடைகுறைந்த குழந்தைகள் | அதிக எடையிலான குழந்தைகள் | சரியான எடை கொண்ட குழந்தைகள் |
|---|---|---|---|---|---|
| 2019-20 | 35,38,473 | 21,821 (0.6%) | 2,24,383 (6.3%) | 4,183 (0.1%) | 32,88,086 (92.9%) |
| 2020-21 | 37,06,317 | 15,642 (0.4%) | 2,01,178 (5.4%) | 4,116 (0.1%) | 34,85,381 (94%) |
| 2021-22 | 36,05,499 | 19,136 (0.5%) | 1,82,815 (5.1%) | 5,671 (0.2%) | 33,97,877 (94.2%) |
| 2022-23 | 34,23,297 | 45,264 (1.3%) | 1,79,749 (5.3%) | 10,374 (0.3%) | 31,87,910 (93.1%) |
| 2023-24 | 32,68,932 | 36,356 (1.1%) | 1,52,148 (4.7%) | 8,361 (0.3%) | 30,72,067 (94%) |

*ஆதாரம்: இயக்குநர், ஊட்டச்சத்து, தமிழ்நாடு அரசு*

### பெட்டிச்செய்தி 7.4: முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தின் வெற்றி: குழந்தைகளைப் பேணிக்காத்தல்

அரசுத் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைபாட்டையும் பசியையும் களையும் நோக்கத்தில் முன்னெடுக்கப்பட்ட புரட்சிகரமான திட்டம் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம். ஊட்டச்சத்தான காலை உணவை வழங்குவதன் மூலம், குழந்தைகளின் உடல்நலத்தை மட்டுமன்றி, அவர்களின் அறிவாற்றலையும் நினைவாற்றலையும் ஒட்டுமொத்தப் பயில்திறனையும் இத்திட்டம் மேம்படுத்துகிறது.

இத்திட்டத்தின் நீண்ட காலத் தாக்கத்தை மதிப்பீடு செய்வதற்காக 100 பள்ளி மாணவர்களிடம் ஓர் ஆய்வு நடத்தப்பட்டது. குழந்தைகளின் வருகைப்பதிவு, வகுப்பறை ஈடுபாடு, கல்விசார் முன்னேற்றம், ஒட்டுமொத்த நலம் ஆகிய கூறுகளில் கவனம்செலுத்திய இந்த ஆய்வானது குழந்தைகளின் கல்வியில் இத்திட்டம் ஏற்படுத்தியுள்ள அர்த்தமுள்ள முன்னேற்றத்தை வெளிப்படுத்தியது.

#### திட்டத்தின் சாதனைகள்

- மாணவர்களின் வருகைப்பதிவு 93% ஆக அதிகரித்திருந்தது, கல்வியில் குழந்தைகள் ஆர்வத்துடன் ஈடுபடுவதைப் பிரதிபலிக்கிறது.
- இத்திட்டத்தின் பயனாளிகளில் 85% குழந்தைகளின் கல்வி மேம்பட்டுள்ளதைத் தெளிவாகக் காண முடிகிறது. குழந்தைகளின் கல்வி மேம்பாட்டுக்கு இத்திட்டம் பேரளவில் பங்களிக்கிறது.
- குடும்பங்களின் பொருளாதாரச் சுமை குறைகிறது, பொருளாதார நிலைத்தன்மை வலுப்படுத்தப்படுகிறது, சமூக நலம் பேணப்படுகிறது. பணிக்குச் செல்லும் தாய்மார்களுக்கும் பேராதரவாகவும் திகழ்கிறது.
- தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்படும் இந்த முன்னோடித் திட்டத்தைப் போன்றதொரு திட்டம் இங்கிலாந்து, கனடாவிலும் முன்னெடுக்கப்படுகிறது.


குழந்தைகளிடமும் குடும்பங்களிடமும் நேர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள இத்திட்டம், ஒவ்வொரு குழந்தையும் தங்களின் நாளை ஊட்டச்சத்துடன் தொடங்குவதை உறுதிசெய்து முழுமையான கல்வி வளர்ச்சிக்கான முன்மாதிரியாக விளங்குகிறது.

*ஆதாரம்: முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட மதிப்பீட்டு அறிக்கை, மாநில திட்டக் குழு, 2024-25.*

#### சுகாதாரக் குறியீடு

7.37 நிதி ஆயோக்கின் சுகாதாரக் குறியீடு (HI) இந்திய மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சுகாதாரத் துறையின் செயல்திறனை மதிப்பிடும் ஒரு கூட்டுக் குறியீடாகும். இது சுகாதார விளைவுகள், நிர்வாகங்கள், சுகாதாரத் தகவல் ஆகிய மூன்று பிரிவுகளை உள்ளடக்கியது. 2019-20இல், சுகாதாரக் குறியீட்டில் கேரளத்தையடுத்து தமிழ்நாடு இரண்டாம் இடத்தைப் பிடித்தது. (விளக்கப்படம் 7.11).

**விளக்கப்படம் 7.11: நிதி ஆயோக்கின் சுகாதாரக் குறியீடு (2019-20)**




*ஆதாரம்: நிதி ஆயோக் சுகாதாரக் குறியீடு, கட்டம் IV 2019-20.*


## 7.7 மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடுகள்

7.38 சமூக முன்னேற்றக் குறியீடு (SPI), மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI), நீடித்த வளர்ச்சி இலக்குகள் (SDG) ஆகிய குறியீடுகளைப் பயன்படுத்தி, தமிழ்நாட்டின் சமூகத் துறைச் செயல்திறனை இந்தியாவின் பிற முதன்மை மாநிலங்களுடன் ஒப்பிடுகிறது இந்தப் பகுதி.

### சமூக முன்னேற்றக் குறியீடு

7.39 நிதி ஆயோக்கின் சமூக முன்னேற்றக் குறியீடு (SPI) சமூக முன்னேற்றத்தை 12 கூறுகளைப் பயன்படுத்தி, மனிதரின் அடிப்படைத் தேவைகள் (ஊட்டச்சத்து, அடிப்படை மருத்துவ வசதி, குடிநீர், சுகாதார வசதி, தனிப்பட்ட பாதுகாப்பு, இருப்பிட வசதி உள்ளிட்டவை), நல்வாழ்வின் அடித்தளங்கள் (அடிப்படைக் கல்வியறிவு, தகவல், தகவல்தொடர்பு, ஆரோக்கியம், நல்வாழ்வு, தரமான சுற்றுச்சூழல் ஆகியவற்றை உள்ளடக்கியது), வாய்ப்பு (தனிமனித உரிமைகள், சுதந்திரமும் தேர்வும், அனைவரையும் உள்ளடக்கிய தன்மை, நவீனக் கல்வி வசதி) ஆகிய மூன்று கோணங்களில் மதிப்பிடுகிறது. தேசிய, மாநில அளவிலான சமூக முன்னேற்றத்தை SPI மதிப்பிடுகிறது. 2022இல், சமூக முன்னேற்றக் குறியீட்டில் நாட்டின் முதன்மை மாநிலங்களில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பிடித்தது. வாய்ப்புப் பரிமாணத்தில் தமிழ்நாடு 63.3 என்னும் அதிகபட்சப் புள்ளியைப் பெற்றது இதற்கு ஒரு முக்கியக் காரணமாக இருந்தது (விளக்கப்படம் 7.12).

**விளக்கப்படம் 7.12: சமூக முன்னேற்றக் குறியீடு (2022)**





*ஆதாரம்: நிதி ஆயோக்)*

## மனித மேம்பாட்டுக் குறியீடு

7.40 ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) துணை தேசிய மனித வளர்ச்சித் தரவின்படி, தமிழ்நாட்டின் மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI) மதிப்பு கணிசமாக மேம்பட்டிருக்கிறது. 2019இல் 0.685 ஆக இருந்த தமிழ்நாட்டின் மனித மேம்பாட்டுக் குறியீடு, 2022இல் 0.692 ஆக அதிகரித்தது. கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில் தமிழ்நாட்டின், இந்தியாவின் மனித மேம்பாட்டுக் குறியீடு சிறிதளவு சரிவைச் சந்தித்தபோதும், 2022இல் அது பெருந்தொற்றுக் காலத்துக்கு முந்தைய நிலைமைக்கு மீண்டுள்ளது. (விளக்கப்படம் 7.13)


**விளக்கப்படம் 7.13: தமிழ்நாடு மற்றும் இந்தியா – மனித மேம்பாட்டுக் குறியீடு (2019 முதல்)**




*ஆதாரம்: ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உலகத் தரவு மையம் https://globaldatalab.org/shdi/*

7.41 மனித மேம்பாட்டுக் குறியீட்டில் (2022), கேரளம், இமாச்சலப் பிரதேசம், பஞ்சாப், ஹரியானா, மகாராஷ்டிரம் ஆகிய முதன்மை மாநிலங்களுக்கு அடுத்தபடியாக ஆறாம் இடத்தில் தமிழ்நாடு உள்ளது. (விளக்கப்படம் 7.14).

**விளக்கப்படம் 7.14: முதன்மை மாநிலங்களின் மனித மேம்பாட்டுக் குறியீடு (HDI) (2022)**





*ஆதாரம்: ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்ட உலகத் தரவு மையம் https://globaldatalab.org/shdi/*

## நீடித்த வளர்ச்சிக் குறியீடு

7.42 நிதி ஆயோக்கின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீடானது (SDG) சமூகம், சுற்றுச்சூழல், பொருளாதாரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய 16 பிரிவுகளில் 70 இலக்குகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 113 குறியீடுகளைப் பயன்படுத்தி, மாநில மற்றும் யூனியன் பிரதேசங்களின் முன்னேற்றத்தை மதிப்பிடுகிறது. 2019 முதல் 2023-24 வரை, தமிழ்நாட்டின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டு மதிப்பு 67இலிருந்து 78 ஆகவும், இந்தியாவின் மதிப்பு 60இலிருந்து 71 ஆகவும் அதிகரித்தது (விளக்கப்படம் 7.15).


7.43 2023-24இல், நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டில் கேரளம், உத்தராகண்ட் ஆகிய மாநிலங்களுக்கு அடுத்தபடியாகத் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது(விளக்கப்படம் 7.16).

**விளக்கப்படம் 7.15: 2019 முதல் தமிழ்நாடு மற்றும் இந்தியாவின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டு மதிப்பு**




*ஆதாரம்: நிதி ஆயோக்*

**விளக்கப்படம் 7.16: முதன்மை இந்திய மாநிலங்களுக்கான நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டு மதிப்பு (2023-24)**




*ஆதாரம்: நிதி ஆயோக்*

## 7.8 முடிவுரை

7.44 மாநிலம் எதிர்கொண்டுவரும் சமூக, பொருளாதார, மக்கள்தொகை மாற்றங்கள் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய சுகாதாரம் மற்றும் சமூகத் துறையிலும் பிரதிபலிக்கின்றன. தொற்றுநோய்களுக்கு அளிக்கப்பட்டிருந்த முன்னுரிமையானது புற்றுநோய், இதய நோய், சிறுநீரக நோய், உயர்ரத்த அழுத்தம், நீரிழிவு, உள நலம், சுயவதைத் தடுப்பு, விபத்து, குறிப்பாக சாலை விபத்துச் சிகிச்சை உள்ளிட்ட தொற்றா நோய்களுக்கும் அளிக்கப்படுகிறது. காசநோய், மலேரியா, டெங்கு காய்ச்சல் போன்ற வழக்கமான தொற்றுநோய்களுக்கும் உரிய கவனம் கொடுக்கப்படுகிறது. தடுப்பூசி தொடர்பான ஐயங்கள் தெளியவைக்கப்பட வேண்டியுள்ளன. கல்வித் துறையில், தரமான உயர்கல்வி அனைவருக்கும் கிடைக்க உந்துதல் தேவைப்படுகிறது. பெண்கள் அதிக அளவில் தொழிற்சாலைகளில் பணிபுரியும் நிலைமை தொடரும்பொருட்டு, குழந்தைப்பருவக் கல்வியும் குழந்தைகளுக்கான மருத்துவ வசதியும் வலுப்படுத்தப்பட வேண்டியுள்ளன. செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தில் உலகளாவிய அளவில் பங்களிக்க ஏதுவாக நம் இளைஞர்கள் ஆயத்தப்படுத்தப்பட வேண்டும். சமூகத்தின் விளிம்புநிலை மக்கள் உள்ளிட்ட அனைவருக்கும் சமத்துவத்தை உறுதிசெய்வதற்கும், சுகாதார வசதி, கல்வி, சமூகச் சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்கும் திராவிட மாடலின் அடித்தளமான அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியானது தொடர்ந்து பரவலாக்கப்பட வேண்டும்.

அத்தியாயம் 8

# காலநிலை மாற்றம்

## 8.1 அறிமுகம்

8.1 புவி வெப்பமடைவதற்கும், காலநிலை மாற்றத்துக்கும் பசுமைக்குடில் வாயு உமிழ்வு முதன்மைக் காரணியாக உள்ளது. மின்சார உற்பத்திக்காகவும் வெப்ப உருவாக்கத்திற்காகவும் புதைபடிவ எரிபொருள்களை எரிப்பது, தொழில்துறை உற்பத்தி, சுரங்கம், காடழிப்பு, போக்குவரத்து, வேளாண்மை மற்றும் கட்டுமானம் ஆகியவையே பசுமைக்குடில் வாயு உமிழ்வுக்கு அடிப்படைக் காரணிகளாக உள்ளன. இந்தியாவில், காலநிலை மாற்றத்தின் தாக்கங்கள் ஏற்கெனவே உணரப்பட்டு வருகின்றன. மழைப்பொழிவுப் போக்குகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் பனிப்பாறைகள் உருகுதல் ஆகியவை நாட்டின் நீர் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன. 2030இல், இந்தியாவின் நீர் தேவையில் பாதி அளவையே பூர்த்திசெய்ய முடியும் என்று நிதி ஆயோக்கின் ஆய்வுகள் கணித்துள்ளன. அதிகரித்துவரும் வெப்பநிலை, வெள்ளம், வறட்சி போன்ற தீவிர வானிலை நிகழ்வுகள் வேளாண்மையைச் சீர்குலைத்து, பயிர் விளைச்சலைக் குறைத்து, உணவுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளன.[26] குறிப்பாக, தமிழ்நாடு உள்ளிட்ட கடலோரப் பகுதிகளில் கடல் மட்டம் உயரும் அபாயம் உள்ளது.[27]

8.2 இந்தியாவில் அதிகமாகத் தொழில்மயமான, நகரமயமான மாநிலங்களில் ஒன்று தமிழ்நாடு. விரைவான நகரமயமாக்கம் காரணமாக, வாகனங்கள் பெருகியுள்ளன; பெட்ரோலியப் பொருள்கள் பயன்பாடு அதிகரித்துள்ளது. மாநிலத்தில் ஐந்து அனல் மின் நிலையங்கள் உள்ளன. இவை மின்சார உற்பத்திக்குக் குறிப்பிடத்தக்க வகையில் பங்களித்தபோதும், பசுமைக் குடில் வாயு உமிழ்வுக்கும் காரணமாகின்றன. கட்டுமானத் துறையும் ஆண்டுக்கு ஐந்து சதவீதத்துக்கும் மேல் விரிவடைவதால், எரிசக்தி, இயற்கை வளம் ஆகியவற்றின் தேவை அதிகரிக்கிறது.

8.3 இந்த அத்தியாயம் தமிழ்நாடு எதிர்கொள்ளும் காலநிலை மாற்றப் பாதிப்புகளையும் அவற்றைத் தணிக்கத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளையும், பசுமைக் குடில் வாயு உமிழ்வை இயன்றவரை குறைக்கும் பொருளாதாரத்தை நோக்கி நகர்வதையும் விவாதிக்கிறது.

---


*[26] உலகக் காலநிலை மாற்ற அபாயக் குறியீடு 2021இல் தீவிர வானிலை நிகழ்வுகளால் பாதிக்கப்படும் நாடுகள் பட்டியலில் இந்தியா ஏழாம் இடத்தில் உள்ளது.*

*[27] கடல் மட்ட உயர்வு காரணமாக 2050இல் இந்தியா 1,500 சதுர கிமீ நிலத்தை இழந்துவிடும் அபாயம் உள்ளது என்கிறது ஒரு மதிப்பீடு.*

## 8.2 வனம் மற்றும் மரப் பரப்பு

8.4 நிலத்தில் 10% க்கு மேல் மரங்கள் அடர்ந்திருந்தால் அது வனப் பரப்பு எனப்படுகிறது. 2013இல் தமிழ்நாட்டில் வனப் பரப்பு 23,844 சதுர கிமீ, அது மாநிலத்தின் புவியியல் பரப்பில் 18.33%. வனப் பரப்பு தொடர்ந்து அதிகரித்துவந்ததால், 2023இல் 26,450 சதுர கி.மீட்டராக அதிகரித்தது, அது மாநிலத்தின் புவியியல் பரப்பில் 20.34% ஆகும் (விளக்கப்படம் 8.1). இந்திய வனக் கொள்கைப்படி, சூழலியல் சமநிலை பேணப்பட, வனப்பரப்பானது புவியியல் பரப்பில் குறைந்தபட்சம் 33% என்னும் அளவில் இருக்க வேண்டும்.


**விளக்கப்படம் 8.1: தமிழ்நாட்டின் வனப் பரப்பு**




*ஆதாரம்: இந்திய வன நிலை அறிக்கை*

8.5 வரையறுக்கப்பட்ட வனப் பகுதி தவிர்த்த இடங்களில், குறிப்பாக ஒரு ஹெக்டேருக்குக் குறைந்த அளவிலான மரங்களின் தொகுதி மரப் பரப்பு எனப்படுகிறது. தமிழ்நாட்டில், 2013இல் மரப் பரப்பு 4,866 சதுர கி.மீ. ஆக இருந்தது. இது 2021இல் 4,424 சதுர கி.மீ. ஆகக் குறைந்துவிட்டது, மாநிலத்தின் புவியியல் பரப்பில் இது 3.4% ஆகும். பின்னர், இது 2023இல் 5,370 சதுர கி.மீ. ஆக அதிகரிக்கப்பட்டது. (விளக்கப்படம் 8.2)

**விளக்கப்படம் 8.2: தமிழ்நாட்டில் மரப் பரப்பு**




*ஆதாரம்: இந்திய வன நிலை அறிக்கை*


## 8.3 காலநிலை மாற்றத்தின் தாக்கம்

8.6 தமிழ்நாடு அதிக வெப்பநிலை, ஈரப்பதம் என வெப்பமண்டலத் தட்பவெப்பத்தைக் கொண்டது, வெப்பநிலையைப் பொறுத்தவரை கடலுக்கு அருகில் இருப்பதால் கோடைக்காலத்துக்கும் குளிர்காலத்துக்கும் இடையே சிறிய அளவிலான வேறுபாடே காணப்படும். தமிழ்நாட்டின் சராசரி மழைப்பொழிவில் பெரும்பகுதி ஆண்டின் கடைசி மூன்று மாதங்களில்தான் பொழியும். பருவத்துக்குப் பிந்தைய மழை காரணமாக மாநிலம் வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்படுகிறது. இது வேளாண்மையிலும் கால்நடைகள் வளர்ப்பிலும் குறிப்பிடத்தக்கப் பாதிப்பை உண்டாக்குகிறது. தமிழ்நாடு அண்மை ஆண்டுகளில், புயல் (2016இல் வர்தா, 2017இல் ஒக்கி, 2018இல் கஜா, 2023இல் மிக்சாங், 2024இல் ஃபெங்கல்), வெள்ளம் (குறிப்பாக 2015இல், 2017இல்) ஆகிய தீவிர வானிலை நிகழ்வுகளால் பாதிக்கப்படுவது அதிகரித்துள்ளது. இத்தகைய நிகழ்வுகளுக்கு மாறிவரும் தட்பவெப்பச் சூழ்நிலையும் ஒரு காரணம்.

### வெப்பநிலை

8.7 1901 முதல் 2023 வரையான காலகட்டத்தில் தமிழ்நாட்டின் வருடாந்திர அதிகபட்ச, குறைந்தபட்ச மற்றும் சராசரி நில மேற்பரப்பு வெப்பநிலையின் மாறுபாட்டை விளக்கப்படம் 8.3 காட்டுகிறது. இயல்பான வெப்பநிலைக்கும் 1981-2010 காலகட்டத்தை அடிப்படையாகக் கொண்ட நீண்ட காலச் சராசரி வெப்பநிலைக்கும் இடையேயான வேறுபாட்டை வெப்பநிலை மாறுபாடு பிரதிபலிக்கிறது. இந்தக் காலகட்டத்தில், சராசரி வெப்பநிலையானது நூற்றாண்டுக்கு +0.68 டிகிரி செல்சியஸ் எனும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. அதிகபட்ச வெப்பநிலை நூற்றாண்டுக்கு +0.84 டிகிரி செல்சியஸ், குறைந்தபட்ச வெப்பநிலை நூற்றாண்டுக்கு +0.51 டிகிரி செல்சியஸ் அதிகரித்துள்ளன.

**விளக்கப்படம் 8.3: தமிழ்நாடு முழுவதும் (1901 முதல் 2023 வரை) வருடாந்திர அதிகபட்ச, குறைந்தபட்ச மற்றும் சராசரி நில மேற்பரப்பு காற்று வெப்பநிலை மாறுபாடுகள்**





*ஆதாரம்: தமிழ்நாடு காலநிலை அறிக்கை:2023, இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD)*

8.8 கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மிக வெப்பமான நான்கு ஆண்டுகள் 2019 (+0.848 டிகிரி செல்சியஸ்), 2016 (+0.837 டிகிரி செல்சியஸ்), 2017 (+0.624 டிகிரி செல்சியஸ்), மற்றும் 2020 (+0.493 டிகிரி செல்சியஸ்) ஆகும். 2023இல், ஆண்டு சராசரி நில மேற்பரப்புக் காற்று வெப்பநிலை 27.4 டிகிரி செல்சியஸாக இருந்தது. அதாவது நீண்ட கால சராசரியைவிட +0.432 டிகிரி செல்சியஸ் அதிகமாகும். இது 1901-க்குப் பிறகு பதிவான மாநிலத்தின் மிக வெப்பமான ஆண்டுகள் வரிசையில் ஐந்தாம் இடத்தில் உள்ளது.

8.9 1981 முதல் 2010 வரையிலான காலகட்டத்தின் நீண்ட கால சராசரி அடிப்படையில் கணக்கிடப்பட்ட 2023ஆம் ஆண்டில் தமிழ்நாட்டின் மாதாந்திர அதிகபட்ச, குறைந்தபட்ச மற்றும் சராசரி வெப்பநிலை மாறுபாடுகளை விளக்கப்படம் 8.4 காட்டுகிறது. அதிகபட்ச வெப்பநிலை அடிப்படையில் அதிக வெப்பம் நிலவிய மாதமாக ஆகஸ்ட், குறைந்தபட்ச வெப்பநிலையில் அதிக வேறுபாடுகள் நிலவிய மாதமாக டிசம்பர் பதிவாகியுள்ளது. ஒட்டுமொத்தமாக, 1901-க்குப் பிறகு தமிழ்நாட்டில் பதிவான மிக வெப்பமான ஆண்டுகள் வரிசையில் 2023 ஐந்தாம் இடத்தில் உள்ளது. மேலும், உலக அளவில் தட்பவெப்பநிலைப் போக்குகளில் தாக்கத்தை ஏற்படுத்தும், 'எல் நினோ'வை (கிழக்கு வெப்பமண்டல பசிபிக் பெருங்கடலில் அதிக மேற்பரப்பு வெப்பநிலை) எதிர்கொண்டது.

**விளக்கப்படம் 8.4: 2023இல் மாதாந்திர வெப்பநிலை மாறுபாடுகள்**





*ஆதாரம்: தமிழ்நாடு மாநில காலநிலை அறிக்கை: 2023, இந்திய வானிலை ஆய்வு மையம்.*

### மழைப்பொழிவு

8.10 1901 முதல் 2023 வரையிலான காலகட்டத்திற்கான, தமிழ்நாட்டின் தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழை மற்றும் வருடாந்திர மழைப்பொழிவின் சதவீத வேறுபாடுகளை விளக்கப்படம் 8.5 காட்டுகிறது. 1971-2020 காலகட்டத்திற்கான நீண்ட கால சராசரியுடன் ஒப்பிட்டு மாறுபாடுகளும் கணக்கிடப்பட்டுள்ளன. மாநிலத்தின் வருடாந்திர மழைப்பொழிவு குறைந்துவந்திருப்பதை இது தெளிவாகக் காட்டுகிறது.


**விளக்கப்படம் 8.5: தமிழ்நாட்டில் தென்மேற்குப் பருவமழை, வடகிழக்குப் பருவமழை மற்றும் வருடாந்திர மழைப்பொழிவின் சதவீதம் (1901 முதல் 2023)**




*ஆதாரம்: இந்திய வானிலை ஆய்வு மையம், புனே (2022)*

8.11 ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2024 வரையிலான மாதாந்திர மழைப்பொழிவைக் காட்டும் விளக்கப்படம் 8.6, 2023 ஆம் ஆண்டில், மே, செப்டம்பர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் இயல்பைவிட அதிக மழைப்பொழிவு இருந்ததையும், அக்டோபரில் மழைப்பொழிவு இயல்பைவிடக் குறைவாக இருந்ததையும் காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டில், ஜனவரி, மே, ஜூன் மற்றும் ஆகஸ்டு மாதங்களில் இயல்பைவிட அதிகமான மழைப்பொழிவும், ஏப்ரல் மற்றும் செப்டம்பர் மாதங்களில் இயல்பைவிடக் குறைவான மழைப்பொழிவும் இருந்தது.

**விளக்கப்படம் 8.6: ஜனவரி 2023 முதல் செப்டம்பர் 2024 வரை மாதாந்திர மழைப்பொழிவு (மிமீ)**




*ஆதாரம்: பொருளியல் மற்றும் புள்ளியியல் இயக்குநரகம், தமிழ்நாடு அரசு*

### காற்று மாசுபாடு


8.12 துகள்கள் (PM10 மற்றும் PM2.5) மற்றும் நைட்ரஜன் டை ஆக்சைடு (NO2), சல்பர் டை ஆக்சைடு (SO2), கார்பன் மோனாக்சைடு (CO), ஓசோன் (O3), அம்மோனியா (NH3) மற்றும் காரீயம் (Pb) போன்ற காற்று மாசுபடுத்திகளின் செறிவை, ஒழுங்குமுறை அமைப்புகளால் நிர்ணயிக்கப்பட்ட தேசிய சுற்றுப்புறக் காற்றுத் தர நிலைகளுடன் (NAAQS) ஒப்பிடுவதன் மூலம் காற்றின் தரம் மதிப்பிடப்படுகிறது. அண்மை ஆண்டுகளில், ஓரிலக்க எண்ணில் வழங்கப்படும் காற்றுத் தரக் குறியீடானது (AQI), காற்றின் தரம் குறித்துப் பொதுமக்களுக்குத் தெரிவிப்பதற்கும், உடல்நலம் மற்றும் சுற்றுச்சூழலுக்குக் காற்று மாசுபாட்டால் விளையும் தீங்குகளைப் பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் ஒரு பயனுள்ள கருவியாக மாறியுள்ளது.[28]

---

*[28] காற்று தரக் குறியீடு ஆறு நிலைகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளது: i) நல்லது (0-50): குறைந்தபட்சத் தாக்கம், ii) திருப்திகரம் (51-100): சிறிய சுவாசக் கோளாறு, iii) மிதமாக மாசுபட்டது (101-200): ஆஸ்துமா, நுரையீரல் மற்றும் இதய நோய்கள் உள்ளவர்களுக்கு மூச்சுத்திணறல், iv) மோசமானது (201-300): நீண்டநேரம் சுவாசிக்கும்போது பெரும்பாலானவர்களுக்கு மூச்சுத்திணறல், v) மிகவும் மோசமானது (301-400): நீண்டநேரம் சுவாசிக்கும்போது சுவாச நோய், vi) கடுமை (401-500): ஆரோக்கியமானவர்களுக்கும் ஏற்கெனவே உடல்நலப் பாதிப்பு உள்ளவர்களுக்கும் கடுமையான விளைவுகள்.*

8.13 2019 முதல் 2024 வரை டெல்லி, மும்பை, கொல்கத்தா மற்றும் சென்னைக்கான ஆண்டு சராசரி காற்றுத் தரக் குறியீட்டை விளக்கப்படம் 8.7 வழங்குகிறது. இந்தக் காலகட்டத்தில், டெல்லியில் காற்றின் தரம் தொடர்ந்து மோசமான நிலையில் இருந்தது. மும்பையில் காற்றின் தரம் 6 ஆண்டுகளில் 4 ஆண்டுகள் மிதமான அளவில் மாசுபட்டிருந்தது. கொல்கத்தாவும் மிதமான அளவில் காற்று மாசுபட்ட நகரமாக இருந்தது. சென்னை 2019 முதல் திருப்திகரமான வகைக்கு முன்னேறியது.


**விளக்கப்படம் 8.7: தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்கான காற்றின் தரக் குறியீடு**




*ஆதாரம்: மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்*

8.14 2023இல், தமிழ்நாட்டின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நகரங்களுக்கான மாதாந்திர சராசரிக்காற்றுத்தரக்குறியீட்டைவிளக்கப்படம்8.8காட்டுகிறது.கும்மிடிப்பூண்டியில் ஜூன் மற்றும் செப்டம்பர் தவிர்த்து அனைத்து மாதங்களிலும் காற்றுத் தரக் குறியீடு 100ஐத் தாண்டியது. ஓசூரில் 2023இன் முதல் காலாண்டில் காற்றுத் தரக் குறியீடு 100க்கு மேல் இருந்தது. ஆனால், அதன் பிறகு கணிசமாகக் குறைந்தது. அந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் சென்னையின் காற்றுத் தரக் குறியீடு 100ஐத் தாண்டி, பிறகு குறைந்தது. இந்தப் போக்குகளின் அடிப்படையில், கும்மிடிப்பூண்டி தமிழ்நாட்டின் மிகவும் மாசுபட்ட நகரமாக உருவெடுத்தது. ஓசூரும் சென்னையும் அதற்கு அடுத்தடுத்த இடங்களில் உள்ளன.

**விளக்கப்படம் 8.8: 2023இல் தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரங்களுக்கான காற்றுத் தரக் குறியீடு**




*ஆதாரம்: மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம்*

## தமிழ்நாட்டில் காலநிலை இடர் மதிப்பீடு

8.15 காலநிலை ஆய்வுநிலையத்தின் (அண்ணா பல்கலைக்கழகத்தில் இயங்கிவருகிறது) “தமிழ்நாட்டுக்கான காலநிலை இடர் மதிப்பீடு மற்றும் தகவமைப்புச் செயல்திட்டம் (2024)” தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களுக்கான சராசரி அதிகபட்ச, குறைந்தபட்ச வெப்பநிலை, வருடாந்திர சராசரி மழைப்பொழிவு ஆகியவை, 1985-2014 காலகட்டத்தில் எப்படி இருந்தன என்பதையும், 2100 வரையான போக்குகள் எப்படி இருக்கும் என்பதையும், பல்வேறு சமூகப் பொருளாதாரச் சூழல்களைக் (SSP2 – 4.5 மற்றும் SSP5 – 8.5) கணக்கில் கொண்டு ஆராய்ந்து, அதன் முக்கியக் கூறுகளை பருவநிலை மாற்றத்துக்கான பன்னாட்டு அரசுக் குழு (IPCC) மதிப்பீட்டு அறிக்கை 6இல் தெரிவித்துள்ளது.

8.16 தமிழ்நாட்டில் வருடாந்திர சராசரி அதிகபட்ச வெப்பநிலையானது SSP2 – 4.5 என்னும் சூழலின் அடிப்படையில், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் 0.4 டிகிரி செல்சியஸ், மத்தியில் 1.3 டிகிரி செல்சியஸ், இறுதியில் 1.7 டிகிரி செல்சியஸ் உயரக்கூடும். வருடாந்திர சராசரி மழைப்பொழிவு நூற்றாண்டின் தொடக்கத்தில் 4%, மத்தியில் 11%, இறுதியில் 16% அதிகரிக்கக்கூடும். வெப்ப அலை வீசும் நாள்கள் ஆண்டுக்கு 22 ஆக நூற்றாண்டில் தொடக்கத்திலும், 40 ஆக மத்தியிலும், 55 நாள்களாக நூற்றாண்டின் இறுதியிலும் அதிகரிக்கக்கூடும்.


8.17 இந்த அறிக்கை தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்குமான காலநிலை இடர் குறியீட்டின் (நூற்றாண்டுத் தொடக்கத்தில் SSP2 – 4.5இன்படி) தொகுப்பையும் வழங்குகிறது. வடகிழக்குக் கடற்கரைப் பகுதிகள் வடகிழக்குப் பருவக் காற்று, மழை வெள்ளம், சூறாவளிக் காற்று, கடல் மட்டம் உயர்தல் போன்ற தீவிர வானிலை நிகழ்வுகளை எதிர்கொள்கின்றன. நீண்ட நாள்களாக மழை நீர் தேங்குவதால் வேளாண்மை இழப்புகள் அதிகரிக்கின்றன. மயிலாடுதுறை, திருவாரூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம் மாவட்டங்கள் அதிகப்படியான இடரை எதிர்கொள்கின்றன (விளக்கப்படம் 8.9). புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம் போன்ற காவிரிப் படுகையின் கீழே உள்ள மாவட்டங்கள் குறைந்த அளவிலான கடற்கரையோர இடரை எதிர்கொள்கின்றன (இவை வறட்சியை மட்டுமே எதிர்கொள்கின்றன).

8.18 அடர்ந்த காடுகள் கார்பன் உமிழ்வினை உட்கொள்வதால் மேற்குத் தொடர்ச்சி மலைகள் குறைந்த அளவிலேயே பாதிக்கப்படுகின்றன. பாலக்காடு கணவாய், செங்கோட்டைக் கணவாய், கன்னியாகுமரி ஆரல்வாய்மொழி கணவாய்ப் பகுதிகள் இரண்டு பருவ மழையாலும் நல்ல மழைப்பொழிவைப் பெறுவதாலேயே மேற்குத் தொடர்ச்சி மலைகளின் மீள் தன்மை மேம்படுகிறது. கிழக்குத் தொடர்ச்சி மலைகள் பாதிப்புக்குள்ளாவதால், அதிகப்படியான வறட்சியை எதிர்கொள்கின்றன, இவை வேளாண்மை உற்பத்தியைப் பாதிக்கின்றன. கன்னியாகுமரி முதல் ராணிப்பேட்டை வரையிலான தமிழ்நாட்டின் மையப்பகுதிகள் மிதமான இடரை எதிர்கொள்கின்றன.


## 8.4 மாநிலங்களுக்கு இடையேயான ஒப்பீடு

8.19 நிதி ஆயோக் (2022) மாநில எரிசக்தி மற்றும் காலநிலைக் குறியீட்டை (SECI) 6 அளவுருக்களில் 27 காரணிகளைப் பயன்படுத்தி உருவாக்கியுள்ளது: அவை மின்விநியோக நிறுவனங்களின் செயல்திறன், அணுகும்தன்மை, மலிவு மற்றும் நம்பகத்தன்மை, தூய எரிசக்தி முன்னெடுப்புகள், எரிசக்தித் திறன், சூழலியல் நிலைத்தன்மை மற்றும் புதிய முயற்சிகள் ஆகும். மாநிலங்கள் சிறந்த குறியீடுகளைப் பின்பற்றவும், தூய எரிசக்தியை நோக்கிச்செல்லவும் இந்தக் குறியீடு ஊக்குவிக்கிறது. குஜராத் 50.1 என்ற அதிகபட்சப் புள்ளிகளுடன் முதலிடத்திலும், கேரளம், பஞ்சாப், ஹரியானா ஆகியவை அடுத்தடுத்த இடங்களிலும் முன்னோடிகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன (விளக்கப்படம் 8.10). தமிழ்நாடு 43.4 மதிப்பெண்களுடன் 9ஆம் இடத்தில், இமாச்சலப் பிரதேசம், கர்நாடகம், அசாம், தெலங்கானா, ஆந்திரப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம், பீகார் ஆகிய மாநிலங்களுடன் சாதனையாளர்கள் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள மாநிலங்கள் முன்னேற விழையும் பிரிவில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 8.9: தமிழ்நாடு மாவட்டங்களின் காலநிலைப் பாதிப்பு**




**விளக்கப்படம் 8.10: மாநில எரிசக்தி மற்றும் காலநிலைக் குறியீடு**




*ஆதாரம்: நிதி ஆயோக், ஏப்ரல் 2022, 2019-20 தரவுகளின் அடிப்படையில்.*

8.20 நீடித்த வளர்ச்சி இலக்குகளை (SDG) அடைவதில் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, நிதி ஆயோக் 113 குறியீடுகளைப் பயன்படுத்தி இந்தியாவின் நீடித்த வளர்ச்சி இலக்குகள் குறியீட்டைக் கணக்கிடுகிறது. மேலும், 0 முதல் 100 வரையிலான புள்ளிகளுடன் 16 நீடித்த வளர்ச்சி இலக்குகளிலும் இலக்குவாரியாகப் புள்ளிகளைக் கணக்கிடுகிறது. அதிகப் புள்ளியானது இலக்கை நோக்கி முன்னேறிக்கொண்டிருப்பதைச் சுட்டிக்காட்டுகிறது. காலநிலைச் செயல்திட்டம் தொடர்பான நீடித்த வளர்ச்சி இலக்கு-13 'காலநிலை மாற்றத்தையும் அதன் தாக்கங்களையும் எதிர்த்துப் போரிடும் அவசர நடவடிக்கை' எடுப்பதற்கானது. நீடித்த வளர்ச்சி இலக்கு-13 குறியீட்டில், தமிழ்நாடு 81 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்தது. இது தேசிய சராசரியான 67 புள்ளிகளைவிடக் கணிசமாக அதிகம் (விளக்கப்படம் 9.14).

**விளக்கப்படம் 8.11: நீடித்த வளர்ச்சி இலக்கு-13 குறியீட்டில் மதிப்பெண்கள் (காலநிலை நடவடிக்கை) 2023-24**




*ஆதாரம்: நிதி ஆயோக், இந்தியாவுக்கான நீடித்த வளர்ச்சி இலக்குக் குறியீடு, 2023-24*

## 8.5 முடிவுரை

8.21 காலநிலை மாற்றச் செயல்திட்டத்திற்காகத் 'தமிழ்நாடு காலநிலை மாற்ற நிர்வாகக் குழுவினை' உருவாக்கி ஒரு முன்னோடி முயற்சியினைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது. துறைசார் வல்லுநர்களுடன் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழுவானது காலநிலை மாற்றத் தகவமைப்பு மற்றும் தணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கொள்கைகளை வடிவமைப்பதற்கு உதவும். மேலும், 2023-30 ஆண்டுகளுக்கான, காலநிலை மாற்றத்தைக் கையாளத் தமிழ்நாடு மாநிலச் செயல்திட்டம் ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. போக்குவரத்து உமிழ்வைக் குறைத்தல், சுற்றுச்சூழலுக்கு இணக்கமான தீர்வுகள் மூலம் கடலோர வாழ்விடங்களை மறுசீரமைத்தல், கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் முயற்சிகள், கார்பன் செறிவூட்டும் திட்டம், நீடித்த வாழ்விடங்கள், காலநிலை குறித்த கல்வி, காலநிலை விழிப்புணர்வுள்ள கிராமங்கள் உள்ளிட்டவை குறித்து ஒருங்கிணைந்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவை குறிப்பிடத்தக்க சாதனைகள். எனினும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியைப் பயன்படுத்தி மின்சார உற்பத்தியை அதிகரித்து, நிலக்கரி போன்ற புதைபடிவ எரிபொருளைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிப்பதைக் குறைப்பதில் மாநில அரசு கவனம்செலுத்த வேண்டும். பொதுப் போக்குவரத்து அமைப்பின் நம்பகத்தன்மை, வேகம், வசதி ஆகியவற்றை மேம்படுத்தி, பொதுப் போக்குவரத்துப் பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும். உழவர்களையும் வீடுகளையும் இலக்காகக் கொண்ட விழிப்புணர்வுப் பரப்புரைகள் மற்றும் ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் வாயிலாக, எரிசக்தித் திறனை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மின் விநியோகக் கட்டமைப்பின் செயல்திறன் மேம்படுத்தப்பட வேண்டியது மிகவும் முக்கியம். இவை எல்லாவற்றுக்கும் மேலாக, மாநிலத்தின் மீள்தன்மையைக் கட்டமைக்கும் பொருட்டு, காலநிலைத் தகவமைப்புக் கொள்கைகளில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

8.22 நிலத்தடி நீரை அளவுடன் பயன்படுத்துதல், நீர்ப்பாசனத் திறனை மேம்படுத்துதல், வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளைத் திறம்பட மேற்கொள்ளுதல், நுண்ணீர்ப் பாசனத்தை ஊக்குவித்தல் போன்ற நீடித்த நீர் மேலாண்மை நடைமுறைகளைச் செயல்படுத்த வேண்டும். வேளாண்மை மற்றும் அது சார்ந்த துறைகளில், ஒருங்கிணைந்த வேளாண்மை, மேய்ச்சல் தொழில், துல்லியப் பண்ணையம், வறட்சியைத் தாங்கும் திறன்கொண்ட விதை உருவாக்குதல், அறுவடைக்குப் பிந்தைய இழப்புகளைக் குறைத்தல், ஊரக நிலமற்ற விவசாயத் தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்பை ஏற்படுத்துதல் போன்ற அம்சங்களில் இடையீடுகள் நிகழ்த்தப்பட வேண்டும். நிலம், கடல் இரண்டிலும் பல்லுயிர்ச் சூழல் பாதுகாப்பு, இயற்கைச் சூழல் மற்றும் கானுயிர் வாழ்விடப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். வனப் பரப்பை அதிகரித்தலுக்கும் முதன்மையான கவனம் கொடுக்கப்பட வேண்டும். மேலும், கடல் மாசுபாட்டைத் தடுத்தல், சதுப்புநிலக் காடுகள் மற்றும் பவளப் பாறைகளைப் பாதுகாத்தல், இயற்கைத் தீர்வுகள் மூலம் கடல் அரிப்பைத் தடுத்தல், கடற்கரைகளை மீட்டெடுத்தல் ஆகியவற்றுக்கு மிகுந்த கவனம் அளிக்கப்பட வேண்டும். நீண்டகாலச் சுற்றுச்சூழல் வளத்துக்கு அனைத்துத் துறைகளிலும், மாற்று முயற்சிகளும் நீடித்த நடவடிக்கைகளும் அவசியம்.

8.23 மாநிலத்தின் காலநிலைத் தகவமைப்புத் திட்டங்களில், இடர் மிகுந்த பகுதிகளில் வசிக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். பயிர்கள், மனிதர்கள், காட்டுயிர்கள் மீது வெப்ப அலையின் தாக்கங்கள், நோய்கள் திடீரெனப் பரவுதல் அதிகரிப்பு, காற்று, மண், நீர் ஆகியவற்றின் மாசுபாடு அதிகரிப்பு முதலியவற்றால் நேரும் உடல்நலக் கேடுகள் குறைக்கப்பட வேண்டும்.

மேம்பட்ட சுகாதார நடவடிக்கைகள், நோய்த்தடுப்பு விரிவாக்க நடவடிக்கைகள், நோயைக் கண்டறியும் வசதிகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் ஒருங்கிணைந்த சுகாதார முன்னேற்றத்தை அடைய முடியும். தமிழ்நாடு அதிக நகர்மயமாக்கப்பட்ட மாநிலங்களுள் ஒன்றாக இருப்பதால், நகர்ப்புர வெள்ளத்தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், நீலம்-பசுமைப் பரப்புகளை அதிகரித்தல், அதிக அளவில் சூழலியல் பூங்காக்களை உருவாக்குதல், பசுமை மரப் பரப்பை அதிகரித்தல், நீருறுஞ்சும் பூங்காக்களை உருவாக்குதல், அனைவரும் சுத்தமான குடிநீர் வழங்குதல், திட மற்றும் திரவக் கழிவு மேலாண்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, முதலீடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், அரசு அலுவலர்கள், அரசுசாரா நிறுவனங்கள், குடிமைச் சமூக அமைப்புகள், மாணவர்கள், பொதுமக்கள் ஆகியோர் அதிகபட்சத் திறனுடன் செயல்படும் வகையில், பல்வேறு காலநிலை மாற்றத் தகவமைப்புச் செயல்பாடுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். காலநிலை மாற்றத்தின் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் ஒவ்வோர் அரசுத் திட்டமும் வடிவமைக்கப்பட வேண்டும். நீடித்த, காலநிலை மீள்தன்மை கொண்ட எதிர்காலத்தை உறுதிப்படுத்திட விரைவான, ஒன்றுபட்ட செயல்பாடுகள் அவசியம்.

அத்தியாயம் 9

# நடுத்தரக்கால வளர்ச்சிக் கண்ணோட்டம்

## 9.1 அறிமுகம்

9.1 தொழில்துறை, சேவைகள் துறை, வேளாண்மை, வேலைவாய்ப்பு, சமூகத் துறைகள் ஆகியவற்றில் தமிழ்நாடு சிறந்து விளங்குவதுடன், சமூகப் பொருளாதார வளர்ச்சியில் மிக முக்கியமான தருணத்தில் நிற்கிறது. தமிழ்நாடு மிகவும் தொழில்மயமான, நகரமயமான இந்திய மாநிலங்களில் ஒன்று என்பதால், அதிக அளவிலான தனிநபர் வருமானம், வலுவான உற்பத்திச் சூழல், பன்முகப்பட்ட சேவைத் துறை ஆகியவற்றுடன் தேசிய பொருளாதாரக் குறியீடுகளில் தொடர்ந்து சிறந்து விளங்குகிறது. 2030இல் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் எனும் லட்சிய இலக்கை அடையும் பொருட்டு, நீடித்த வளர்ச்சி, புத்தாக்கத் தொழிற்சாலைகள், அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகியவற்றில் மாநிலம் உறுதிப்பாட்டுடன் செயல்படுகிறது. எனினும், இந்த இலக்கை எட்டுவதற்கு, வியூகத் திட்டமிடலும், கொள்கைகளில் சீர்திருத்தமும், காலநிலை மாற்றம், மக்கள்தொகையில் ஏற்பட்டுள்ள மாறுதல், தொழில்நுட்பத் தடைகள், மாறிவரும் வேலைவாய்ப்புச் சூழல் உள்ளிட்ட புதிய சவால்களைக் கையாளும் வகையில் உட்கட்டமைப்புகளில் முதலீடுகளும் தேவைப்படுகின்றன. துறைசார் பலம், சாத்தியமுள்ள இடர்கள், நீண்டகால மீள்தன்மை மற்றும் வளமையை உறுதிசெய்யத் தேவைப்படும் கொள்கைப் பாதை ஆகியவற்றை அடிக்கோடிட்டுக்காட்டும் தமிழ்நாட்டின் நடுத்தரக்காலக் கண்ணோட்டத்தை இந்த அத்தியாயம் வழங்குகிறது.

## 9.2 தனிநபர் வருமானம்

9.2 தமிழ்நாடு இந்தியாவிலேயே மிக அதிக அளவிலான தனிநபர் வருமானத்தைத் தொடர்ந்து பராமரித்துவருவதானது அதன் வலுவான பொருளாதார அடித்தளத்தையும், தொழில் மற்றும் சேவைகள் துறைகள் பன்முகப்படுத்தப்பட்டிருப்பதையும் பிரதிபலிக்கிறது. 2023-24இல், தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம் ரூ.3.15 லட்சமாக உயர்ந்து, நாட்டில் தனிநபர் வருமானம் அதிகமுள்ள மாநிலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. தமிழ்நாட்டின் தனிநபர் வருமானமானது தேசிய தனிநபர் வருமானத்தைவிட மிக அதிகம். பிற பெரிய பொருளாதார மாநிலங்களுடன் ஒப்பிடுகையில், வாங்கும் திறன் (PPP) அடிப்படையில் தமிழ்நாட்டின் தனிநபர் வருமானம், அர்ஜென்டினா, துருக்கி போன்ற நாடுகளுக்கு இணையாக உள்ளது. இருந்தாலும், மாவட்டங்களுக்கு இடையேயான ஏற்றத்தாழ்வுகள் தொடர்கின்றன. செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் தனிநபர் வருமானம் அதிகமுள்ள அதே நேரத்தில், சில தெற்கு, கிழக்கு மாவட்டங்களில் தனிநபர் வருமானம் மாநில சராசரியைவிடக் குறைவாகவே உள்ளது. இலக்குசார்ந்த தொழில் முதலீடுகள், டிஜிட்டல் கட்டமைப்பு விரிவாக்கம், ஊரகத் தொழில்முனைவை மேம்படுத்துதல் ஆகியவற்றின் வழியே சமநிலையான பிராந்திய வளர்ச்சியை உறுதிப்படுத்துவதன் மூலம் அனைத்து மாவட்டங்களிலும் தனிநபர் வருமானத்தை உயர்த்த முடியும்.

### 9.3 மக்கள்தொகை ஈவு

9.3 மக்கள்தொகையைப் பொறுத்தவரை தமிழ்நாடு அனுகூலமான நிலையில் இருக்கிறது. இங்கே பணிபுரியும் வயதுள்ளோரின் எண்ணிக்கை உச்சத்தில் உள்ளது. எனினும், பிற மாநிலங்களில் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதைப் போலன்றி, தமிழ்நாட்டில் பணிபுரியும் வயதுள்ளோரின் எண்ணிக்கை 2021இல் 66.4% இலிருந்து 2036இல் 63.6% ஆகச் சரிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. மக்கள்தொகையில் நேரும் இந்த நகர்வானது வேலைவாய்ப்புச் சந்தையின் அழுத்தத்தைக் குறைக்கும் அதே வேளையில், திறன் மேம்பாடு, தொழில்நுட்பத்தைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் வழியே உற்பத்தித் திறனை மேம்படுத்திடும் உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. உயர்கல்வியில் மாநிலத்தின் மாணவர் சேர்க்கை விகிதம் அதிகமாக உள்ளதால், திறன்மிகு வல்லுநர்கள் எண்ணிக்கை அதிகரிக்கும். ஆனால், தொழிலாளர்களின் பங்கேற்பு விகிதம் (LFPR) சரிவடைவதால் கொள்கைசார்ந்த இடையீடுகளை நிகழ்த்தி, பணியாளர் குழு பங்கேற்பை, குறிப்பாகப் பெண்களுடைய பங்கேற்பை அதிகப்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. பணிபுரியும் வயதுள்ள தொழிலாளர்களைச் சரியாகப் பயன்படுத்த, வேலைவாய்ப்புடன் இணைந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்திலும், தற்சார்புப் பணியாளர் பங்கேற்புக்கு வகைசெய்யும் பொருளாதாரத்தையும் டிஜிட்டல் பொருளாதாரத்தையும் வலுப்படுத்துவதிலும், உயர் தொழில்நுட்ப வல்லுநர் குழுக்களுக்கு வேலை வழங்கும் உயர் மதிப்புத் தொழில் நிறுவனங்களை ஊக்குவிப்பதிலும் கவனம்செலுத்த வேண்டும்.

### 9.4 ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்துக்கான பாதை

9.4 2030க்குள் ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தை எட்ட வேண்டும் என்னும் உயரிய இலக்கை நிர்ணயித்துள்ள தமிழ்நாடு, இந்தியாவின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றுகிறது. 2023-24இல், தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி ரூ.27.22 லட்சம் கோடியுடன் 8.23% எனும் சிறப்பான உண்மைப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பதிவுசெய்தது. ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரம் என்னும் உயரிய இலக்கை எட்ட, தொழில்களை விரிவுபடுத்துதல், உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், டிஜிட்டல் தொழில்நுட்பத்துக்கு நகர்தல் போன்ற உத்திகள் மூலம் 12% வருடாந்திரப் பொருளாதார வளர்ச்சி விகிதத்தைப் பேண வேண்டும். உயர் தொழில்நுட்பத் தயாரிப்புகள், புத்தாக்கத் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான முதலீடுகளை ஈர்க்கும் பொருட்டு, தமிழ்நாடு குறைகடத்தி மற்றும் மேம்பட்ட மின்னணுக் கொள்கை 2024 உள்ளிட்ட துறைசார் கொள்கைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், சரக்குக் கையாளுகைக்கு உருவாக்கப்பட்டுள்ள வலுவான கட்டமைப்பு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திறனை அதிகரித்தல், தகவல் தொழில்நுட்பத் துறையிலும் உலகளாவிய திறன் மையங்களிலும் (GCC) தலைமைத்துவம் பெற்றிருத்தல் ஆகியவற்றின் காரணமாகத் தமிழ்நாடு உலகப் பொருளாதாரத்துடன் போட்டியிடத்தக்க அளவில் வலுவான நிலையில் உள்ளது. எனினும், நீடித்த பொது மற்றும் தனியார் முதலீடுகளும், வணிகத்தை எளிதாக்கும் முயற்சிகளும், பொருளாதார விரிவாக்கத்தால் மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளும் பயனடைவதை உறுதிசெய்யும் வகையிலான அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக் கொள்கையும் இந்த இலக்கை அடைவதற்குத் தேவைப்படுகின்றன.

### 9.5 வேளாண்மை

9.5 தமிழ்நாட்டின் சாகுபடியும் நீர்ப்பாசனமும் நீண்ட வரலாற்றைக் கொண்டுள்ளது. நீர்நிலைகளையும் நிலத்தடி நீரையும் திறமையான விதத்தில் நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்திவருகிறது. அரிசி, கரும்பு உற்பத்தித் திறனில் முதன்மையான மாநிலங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு திகழ்கிறது. தோட்டக்கலைப் பயிர்களும் கணிசமான பரப்பில் பயிரிடப்படுகின்றன. மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டலில் வேளாண்மைத் துறைப் பங்களிப்பு குறைந்துவருகிறது என்றபோதும், இந்தத் துறை பெரும்பாலானோருக்கு வேலைவாய்ப்பை அளிப்பதால், இத்துறைக்கு அரசின் ஆதரவு தேவைப்படுகிறது.

9.6 மாநிலத்தின் வேளாண்மை பருவமழைகளையும் நிலத்தடி நீரையும் நம்பியுள்ளது என்றபோதும், காலநிலைக்கேற்ற வகையில் தகவமைத்துக்கொள்ள அதிக முன்னுரிமை அளிக்க வேண்டியுள்ளது. காலநிலைத் திறன் செயல்பாடுகள், இயந்திரமயமாக்கல், 'மறை நீர்' மேலாண்மை ஆகியவற்றை மேற்கொண்டு நிலைத்தன்மையை உறுதிசெய்ய வேண்டும். அங்கக வேளாண்மையில் தமிழ்நாடு கவனம்செலுத்தி, அண்மை ஆண்டுகளில் கணிசமாக விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்றாலும், பரந்த அளவிலான நிலைத்தன்மைக்கு விரிவான திட்டமிடல் அவசியமாகும். மேலும், சந்தைத் தேவைக்காகச் சாகுபடிசெய்யப்படும் பயிர்களின் மதிப்புக் கூட்டல், மேம்பட்ட சந்தைப்படுத்துதல் கொள்கை ஆகியவையும் வேளாண் துறையை வலுப்படுத்தும். தோட்டக் கலைப் பயிர்களின் சந்தைப்படுத்துதலை மேம்படுத்தி, உலக அளவிலான விநியோகத் தொடர்புகளை ஒருங்கிணைப்பது ஏற்றுமதி வாய்ப்பை அதிகரிக்கும். வேளாண் துறையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை நிகழ்த்துவதற்குக் கூட்டுறவு இயக்கங்களையும் உழவர்-உற்பத்தியாளர் நிறுவனங்களையும் (FPOs) மாநிலம் வலுப்படுத்த வேண்டும்.

9.7 வளர்ச்சியைத் தக்கவைத்துக்கொள்வதற்கு, தொழில்நுட்பத் தகவமைப்பு, நீர்ப்பாசன மேம்பாடு, கால்நடை வளர்ப்பு, உள்நாட்டு மீன்பிடிப்பு, உணவு பதப்படுத்துதல் ஆகிய தொடர்புடைய துறைகளைப் பன்முகப்படுத்துதல் உள்ளிட்டவற்றில் தமிழ்நாடு கவனம் செலுத்திவருகிறது. கால்நடை வளர்ப்புத் துறை மாநிலத்தின் மொத்த மதிப்புக் கூட்டலில் 5%க்கு மேல் பங்களித்து, ஊரகப் பகுதி வருவாய்க்கு முக்கியமான தூண்போல் வளர்ந்துவருகிறது. அதிகப்படியான வருவாயைத் திரட்டுவதற்குத் தமிழ்நாடு, கோழிவளர்ப்புத் துறையில் வெற்றிகண்டதைப் போல் பிற கால்நடை வளர்ப்புத் துறைகளையும் ஊக்கப்படுத்த வேண்டும். ஊரக நிதி வசதிக்கு மாநிலம் முன்னுரிமை கொடுத்துவருகிறது. 2023-24இல் ரூ.15,500 கோடிக்கும் மேல் பயிர்க்கடனை வழங்கி, வேளாண்மைக் கடன் வழங்குவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது.

9.8 நீண்ட கால வேளாண் நிலைத்தன்மையை உறுதிசெய்ய, குளிர்பதனக் கிடங்குகள் விரிவாக்கம், பயிர்களின் இழப்புகளைக் குறைத்தல், உழவருக்கும் சந்தைக்குமான நேரடித் தொடர்பை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம்செலுத்தும் வகையில் கொள்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இலக்குசார் சீர்திருத்தங்கள், வளங்களை மேம்பட்ட விதத்தில் கையாள்வதற்கான பயிற்சிகள், நவீன உட்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம் ஊரக வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் அதே வேளையில், காலநிலை மாற்ற மீள்தன்மையிலும் உயர்மதிப்பு வேளாண்மையிலும் தமிழ்நாடு கொண்டிருக்கும் முதன்மை நிலையை வலுப்படுத்திக்கொள்ள முடியும்.

## 9.6 தொழில் துறை

9.9 உலகப் பொருளாதாரத்துடன் தமிழ்நாட்டின் தொழில் மற்றும் சேவைத் துறைகள் மிக நெருக்கமாக ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதால், விரைவாக மாறிவரும் சிக்கல் தன்மை கொண்ட உலகத்துக்கு ஏற்ற வகையில் மீள்தன்மை கொண்டிருக்கின்றன. வாகன உற்பத்தி, இயந்திரம், சிறு மின்னணுக் கருவிகள் உருவாக்கம், நெசவுத் தொழில், பெருந்தொழிற்சாலைகள், சிறு குறு நடுத்தரத் தொழிற்சாலைகள் ஆகியவற்றில் வலுவான அடித்தளத்தைக் கொண்ட மாநிலம் தமிழ்நாடு. ஏற்றுமதிசார் தொழில்கள், நன்கு மேம்பட்ட தயாரிப்புச் சூழல் ஆகியவை காரணமாகத் தொழில்மயமான மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணிவகிக்கிறது. நில ஒதுக்கீடு, பொதுக் கட்டமைப்பு, இணைப்பு வசதி, குறைந்த முதலீட்டுக்கான வசதி போன்ற தொழில் கொள்கைகள் இந்தத் துறையை மேம்படுத்த அவசியமானவை. எனினும், விரைவாக மாறிவரும் உலகச் சூழலானது, தொழிற்சாலைகள் உருவாக்கம், கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் தொழில்முனைவுத் திட்டங்கள், உற்பத்தியில் தொடக்கம் முதல் இறுதிவரை தேவைப்படும் பொது வசதிகள், மாதிரி உருவாக்கம், தயாரிப்பு உள்ளிட்டவற்றில் புத்தாக்க அணுகுமுறைகளைக் கோருகிறது. மேலும், மின்னணு வாகனங்கள் அதிகரிப்பையும்,

பெட்ரோல், டீசல், இயற்கை எரிவாயு பயன்படுத்தும் வாகனங்கள் உற்பத்தியில் ஏற்பட்டுள்ள சரிவையும் தமிழ்நாடு கவனத்துடன் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். ஏனெனில், இந்த மாற்றமானது மாநிலத்தின் வாகன உற்பத்தி மற்றும் அதுசார்ந்த தொழில்களைக் குறிப்பிடத்தக்க வகையில் மாற்றியமைக்கக்கூடும். அதே நேரத்தில், தொழில் விரிவாக்கத்திலும் நீடித்த பொருளாதார வளர்ச்சியிலும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி குறிப்பிடத் தகுந்த வாய்ப்பை வழங்குகிறது.

9.10 இலக்குசார் கொள்கை இடையீடுகள், உட்கட்டமைப்பு மேம்பாடு, முதலீடு ஊக்குவிப்பு ஆகியவை காரணமாகத் தமிழ்நாட்டின் தொழில் துறை வளர்ச்சியானது நடுத்தரக் கால அளவில் நீடித்துநிற்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ்நாடு உலக முதலீட்டாளர் மாநாடு - 2024 ரூ.6.64 லட்சம் கோடி மதிப்புள்ள முதலீட்டை உறுதிசெய்துள்ளது. இதனால், 14.55 லட்சம் வேலைவாய்ப்புகள் புதிதாக உருவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது, உற்பத்திக்கும் வணிகத்துக்குமான விரும்பத்தக்க மையமாகத் தமிழ்நாடு திகழ்வதைப் பிரதிபலிக்கிறது. சென்னை–பெங்களூரு, சென்னை–கன்னியாகுமரி தொழில் வழித்தடங்களும், அவற்றில் அமைந்துள்ள துறைசார் தொழில் பூங்காக்களும் தொழில் விரிவாக்கத்தையும், ஏற்றுமதி வளர்ச்சியையும், மண்டல அளவிலான பொருளாதார ஒருங்கிணைப்பையும் விரைவுபடுத்தும். தகவல் தொழில்நுட்பத் துறை, நிதிச் சேவைகள், சரக்குக் கையாளுகை உள்ளிட்ட தமிழ்நாட்டின் சேவைகள் துறை, டிஜிட்டல் தொழில்நுட்பத்துக்கு மாறியதாலும் உலகளாவிய திறன் மையங்கள் விரிவாக்கம் பெற்றதாலும் விரைவான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. முனைய செயற்கைக்கோள் ஏவூர்தி (PSLV) உதிரிபாகங்கள் இணைப்புப் பணிக்காக இந்துஸ்தான் வானூர்தி அறிவியல் நிறுவனம் (HAL) லார்சன் & ட்யூப்ரோ (L&T) நிறுவனத்துடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தம், ‘டாடா பவர்’ நிறுவனத்தின் ரூ.4,300 கோடி மதிப்பிலான சூரிய சக்தி உபகரணங்கள் தயாரிப்பு மையம், ஆப்பிள் நிறுவனத்தின் ஐபோன் உற்பத்தி விரிவாக்கம் போன்ற அண்மைக்கால முன்னேற்றங்கள் உயர் தொழில்நுட்பத் தொழிலிலும் உலக விநியோகச் சங்கிலியிலும் தமிழ்நாடு வெகுவாக முன்னேறியுள்ளதைக் காட்டுகின்றன. இனிவரும் காலங்களில், வணிகச் செயல்பாடுகளை எளிமையாக்குதல், தொழில் உட்கட்டமைப்பை மேம்படுத்துதல், உயர் மதிப்பு முதலீடுகளை ஈர்க்கும் வகையிலான தொழிலாளர்களின் திறனை மேம்படுத்துதல் ஆகியவற்றில் தமிழ்நாடு கவனம்செலுத்த வேண்டும். வியூகத் திட்டமிடல், புத்தாக்கம், நீடித்த தன்மை ஆகியவை காரணமாகத் தொழிற்துறையிலும், சேவைத் துறை வளர்ச்சியிலும் தேசிய அளவில் தமிழ்நாடு முதன்மையிடத்தில் இருப்பது, நீண்டகாலப் பொருளாதார மாற்றத்துக்கு வழிவகுக்கிறது.

## 9.7 சேவைகள் துறை

9.11 தகவல் தொழில்நுட்பம், அது சார்ந்த சேவைகள், சுற்றுலா, நிதி, சுகாதாரம், கல்விச் சேவைகள் ஆகியவற்றில் தமிழ்நாடு வலுவான அடித்தளத்தைக் கொண்டுள்ளதால் சேவைத் துறையானது பொருளாதார வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக உள்ளது. பன்னாட்டு நிறுவனங்களுக்கு உயர் தொழில்நுட்பச் செயல்பாடுகள், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டுச் சேவைகள் ஆகியவற்றை வழங்கும் உலகளாவிய திறன் மையங்களைத் தமிழ்நாட்டில் தொடங்குவதற்கு உகந்த சூழல் உருவாக்கப்பட்டுள்ளது. உலகளாவிய டிஜிட்டல் பொருளாதாரத்தில் போட்டியிடும் தன்மையைத் தமிழ்நாடு தக்கவைக்க, செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தால் மறுகட்டமைக்கப்பட்டுள்ள தகவல் தொழில்நுட்பத் துறைசார்ந்த தொழிலாளர் சக்தியின் திறன்களை மாற்றி அமைப்பதும் மேம்படுத்துவதும் அவசியம். இதற்கிடையே, சுற்றுலாத் துறையானது வளர்ச்சிக்கான வாய்ப்புகளை அதிக அளவில் வழங்குகிறது. ஆகவே, உட்கட்டமைப்பையும் சுற்றுலாப் பயணிகளின் அனுபவத்தையும் மேம்படுத்தும் பொருட்டு, தமிழ்நாடு சுற்றுலாக் கொள்கை 2023ஐத் தீவிரமாகப் பின்பற்ற வேண்டும். சுற்றுலா அனுபவத்தைக் கணிசமான அளவில் மேம்படுத்தி, பயணிகள் நீண்ட நாள்கள் தங்குவதை ஊக்கப்படுத்தினால், வருவாயையும் அதிக அளவில் திரட்ட முடியும். அதே போல், பகுதியளவு நகரங்கள் மற்றும் ஊரகப் பகுதிகளில் நிதி உள்ளாக்க நடவடிக்கைகளை விரிவாக்குவதற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். 2023-24இல் 117.7% கடன்–வைப்புத் தொகை விகிதமானது மாநிலத்தின் நிதிச் சேவைகள் துறை ஒரு வலுவான சூழலில் இருப்பதைப் பிரதிபலிக்கிறது.

9.12 உயர் மதிப்பு சேவைகளிலும் சரக்குக் கையாளுகையிலும் தமிழ்நாட்டின் முக்கியத்துவம் உயர்ந்திருப்பதை அண்மைக்கால வளர்ச்சிகள் காட்டுகின்றன. சரக்குக் கையாளுகைப் பிரிவும் கிட்டங்கிப் பிரிவும் குறிப்பிடத்தக்க அளவு முதலீடுகளை ஈர்த்துள்ளன. அடுத்த 3 ஆண்டுகளில் இந்தோஸ்பேஸ் நிறுவனம் மேற்குறிப்பிட்ட துறையில் 41% விரிவாக்கத்திற்குத் திட்டமிட்டுள்ளது. இது வேலைவாய்ப்பையும் வர்த்தகத் திறனையும் ஊக்குவிக்கும். போட்டியிடும் திறனைத் தக்கவைத்துக்கொள்ள டிஜிட்டல் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதிலும், நகரப் போக்குவரத்தை வலுப்படுத்துவதிலும், வளர்ந்துவரும் துறைகளான செயற்கை நுண்ணறிவு, நிதித் தொழில்நுட்பம், மேகக் கணினியம் ஆகியவற்றில் திறன் மேம்பாட்டை ஊக்குவிப்பதிலும் தமிழ்நாடு கவனம் செலுத்த வேண்டும். ஒழுங்குமுறைத் திருத்தங்கள், வணிகத்தை எளிமையாக்கும் சீர்திருத்தங்கள் ஆகியவை சேவைத் துறைகளில் புது முதலீடுகளை ஈர்ப்பதற்கு இன்றியமையாதவை. வியூகத் திட்டமிடல், புத்தாக்கம், கொள்கைசார் வளர்ச்சி ஆகியவற்றுடன், தொழில்நுட்பம் சார்ந்த சேவைகள், உலக வணிகச் செயல்பாடுகள், நீடித்த சுற்றுலா ஆகியவற்றில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பது நீண்ட காலப் பொருளாதார மீள்தன்மையையும் விரிவாக்கத்தையும் உறுதிசெய்கிறது.

## 9.8 சமூகத் துறை

9.13 இன்றைய சிறார்கள் 22ஆம் நூற்றாண்டிலும் நல்வாழ்வைப் பெற்றிருக்க வேண்டும். அவர்களை நல்ல ஆரோக்கியத்துடனும், வலுவான திறன்களுடனும், ஜனநாயகம், சமூகநீதி போன்ற விழுமியங்களில் நம்பிக்கையுடையவர்களாகவும் வளர்த்தெடுத்தல் அவசியம். கல்வியில், சுகாதாரத்தில், சமூக நலனில் தனிச்சிறப்புடன் விளங்கும் தமிழ்நாடு அனைவரையும் உள்ளடக்கிய நீடித்த வளர்ச்சியை அதன் மக்களுக்கு உறுதிசெய்துள்ளது. ஊட்டச்சத்து, தடுப்பூசி, வருமுன் காக்கும் மருத்துவ நடவடிக்கைகள் ஆகியவற்றுக்கு உரிய கவனம் கொடுத்து, குழந்தைகளின் இளம்பருவ ஆரோக்கியத்திலும் கல்வியிலும் அக்கறை காட்டப்படுகிறது. கர்ப்பவாய்ப் புற்றுநோயிலிருந்து பாதுகாத்துக்கொள்வதற்கான மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) தடுப்பூசிகள் போன்ற புதுத் தடுப்பூசிகளையும் பொதுமக்களுக்கு வழங்கி அவர்களின் சுகாதாரத்தைப் பேணுகிறது. பள்ளிக்கல்வி, திறன் மேம்பாடு, அனைத்துப் பாலினத்தையும் உள்ளடக்கிய கொள்கைகள் ஆகியவற்றில் மாநிலம் முனைப்புடன் செயல்பட்டு, குறிப்பிடத்தகுந்த முன்னேற்றத்தைக் கண்டுள்ளபோதும், விரைவாக மாறிவரும் உலகத்துக்கு எதிர்வரும் தலைமுறையினரை ஆயத்தப்படுத்தும் பொருட்டு மாணவர் சேர்க்கை அதிகரிப்புடன் கல்வித் தரமும் மேம்படுத்தப்பட வேண்டியது அவசியமாகும்.

9.14 முதியோர் எண்ணிக்கை உயர்வால் மக்கள்தொகையிலும் தொற்றுநோயியலிலும் ஏற்பட்டுள்ள மாற்றம் மற்றும் தொற்றுநோய்களைவிடத் தொற்றாநோய்களின் பாதிப்பு அதிகரிப்பு ஆகியவற்றைத் தமிழ்நாடு எதிர்கொண்டுவருகிறது. உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு, இதய நாள நோய்கள், சிறுநீரக நலிவுகள், புற்றுநோய்கள் நிலவிவரும் சூழலில், சாலை விபத்துகள், உள நலப் பிரச்சினைகள், தற்கொலை ஆகியவற்றைக் கரிசனத்துடன் அணுக, ஒருங்கிணைந்த பன்முக நிலைச் சுகாதாரச் செயல்திட்டம் தேவைப்படுகிறது. வாழ்முறைசார் நோய்களைத் தொடக்கக் கட்டத்திலேயே கண்டறியவும் தடுக்கவும் சமாளிக்கவும் ஓர் இயக்கம் போன்ற அணுகுமுறையை முன்னெடுப்பது பொருளாதாரச் சுமைகளைக் குறைத்து, தவிர்க்கக்கூடிய துன்பங்களை விலக்க அவசியமாகிறது. முதன்மை நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை சுகாதார அமைப்புகளை வலுப்படுத்துவதுடன் ஆராய்ச்சிகள் மூலம் இடையீடுகள் செய்வதும் நீண்ட காலப் பொதுச் சுகாதாரச் சவால்களை எதிர்கொள்வதற்கு அவசியம்.

9.15 உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதத்தில் (GER) தமிழ்நாடு நாட்டிலேயே முதலிடம் பிடித்துள்ளது என்பது கல்வியில் இம்மாநிலம் காட்டும் அக்கறையினை வெளிப்படுத்துகிறது. என்றபோதும், கல்விக்கான வாய்ப்புகள் வழங்கப்படுவதைத் தாண்டி, கல்வித் தரத்தை மேம்படுத்துவதும், மாற்றுச் சிந்தனையை வளர்த்தெடுப்பதும், படைப்புத்திறனை வளர்ப்பதும் அவசியமானவை. செயற்கை நுண்ணறிவின் தாக்கம் அனைத்துத் துறைகளிலும் உணரப்படும் என்பதால், மாணவர்கள் வெறுமனே கற்றுக்கொள்வதோடு மட்டுமின்றி, தொடக்க நிலையிலிருந்தே அத்தகைய தொழில்நுட்பத்துக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக்கொள்வதிலும் புத்தாக்கச் சிந்தனையை வளர்த்துக்கொள்வதிலும் அக்கறைகாட்டுவது அவசியம். திறன் அடிப்படையிலான கல்வி, தொழில் பயிற்சிகள், வாழ்நாள் முழுவதும் கற்பதற்கான முயற்சிகள் போன்றவற்றில் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தமிழ்நாட்டின் தொழிலாளர் சக்தி உலக அளவில் போட்டியிடத்தக்கதாயும் எதிர்காலத்துக்கு ஆயத்தமாக இருப்பதையும் உறுதிப்படுத்தும்.

9.16 அனைவருக்கும், குறிப்பாக அரசுப் பள்ளி மாணவர்கள், முதல் தலைமுறைப் பட்டதாரிகள் ஆகியோருக்குக் கல்வி வாய்ப்புகளை அதிகரித்து, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை மேம்படுத்துவதன் மூலம் உயர்கல்வியில் தமிழ்நாடு முன்னிலை வகிப்பதைத் தக்கவைப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்கிறது. கல்விக்கான உட்கட்டமைப்பு மேம்பாடு, ஆய்வுகள் மேம்பாடு, பாலினச் சமத்துவத்தை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றுக்குத் தமிழ்நாடு முன்னுரிமை அளித்துச் செயல்பட வேண்டும். பல்கலைக்கழகங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள் ஆகியவற்றின் வலுவான கட்டமைப்புடன், புத்தாக்கச் சிந்தனையை வளர்த்தெடுத்து, எதிர்காலச் சவால்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் மாணவர்களுக்குத் திறனளித்து, இந்தியாவின் கல்வி மையங்களில் முதன்மையானது என்ற தன்னுடைய நிலையைத் தமிழ்நாடு வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

9.17 தரவுகள் அடிப்படையிலான, மக்களை மையப்படுத்திய அணுகுமுறையை சமூக மேம்பாட்டுத் திட்டங்களுக்கு மாநிலம் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். இதன் மூலம் குடிமக்கள் அனைவருக்கும் அவர்களுடைய பின்னணி என்னவாக இருந்தாலும் தரமான கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாட்டுக்கான வாய்ப்புகள் உறுதிசெய்யப்படும். சமூக நலக் கொள்கைகளில் வலுவான அடித்தளம், மனிதவளத்தில் வியூகம்சார் முதலீடுகள், தொழில்நுட்ப ஒருங்கிணைப்புக்கு முக்கியத்துவம் அளித்தல் ஆகியவற்றின் மூலம் எதிர்வரும் ஆண்டுகளில் சமூக முன்னேற்றத்தையும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் தமிழ்நாடு தக்கவைத்துக்கொள்ளும்.

## 9.9 காலநிலை மாற்றம்

9.18 இந்தியாவில் அதிகம் நகர்மயமான, தொழில்மயமான மாநிலங்களில் ஒன்றான தமிழ்நாடு, வெப்பநிலை உயர்வு, தீவிர வானிலை நிகழ்வுகள், மழைப்பொழிவுப் போக்குகளில் மாற்றம் உள்ளிட்ட காலநிலை மாற்றச் சவால்களை எதிர்கொள்கிறது. இதை எதிர்கொள்ளும் பொருட்டு, காலநிலை மாற்றத்துக்கான தமிழ்நாடு மாநிலச் செயல்திட்டமானது (2023-2030) மாசுப்பாட்டைக் குறைத்தல், காலநிலைத் தகவமைப்பை ஊக்கப்படுத்துதல், நிலைத்தன்மையை மேம்படுத்துதல் ஆகியவற்றில் கவனம்செலுத்துகிறது. நீடித்த வாழ்விட மேம்பாடு, கழிவிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் திட்டங்கள், கடலோர உயிரினச் சூழலை மீட்டெடுத்தல், காலநிலைத் திறன்சார் வேளாண்மை உள்ளிட்டவை முதன்மையான முன்னெடுப்புகளாகும். 20,724 மெகாவாட் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உருவாக்கும் திறனுடன் இந்தியாவின் புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை உற்பத்திசெய்யும் முன்னணி மையங்களில் ஒன்றாகத் தமிழ்நாடு உள்ளபோதும், மரபுசார் எரிபொருள்களைச் சார்ந்திருக்கும் சூழலைக் குறைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பொதுப் போக்குவரத்து விரிவாக்கம், எரிசக்தித் திறன், காலநிலைசார் அறிவு ஆகியவை எதிர்கால இடர்களைச் சமாளிப்பதில் முக்கியமானவையாக இருக்கும்.

9.19 நீடித்த நீர் மேலாண்மை, பல்லுயிர்ச்சூழல் பாதுகாப்பு ஆகியவை தமிழ்நாட்டின் நீண்டகாலக் காலநிலை மீள்தன்மைக்கான மையப் புள்ளியாக இருக்க வேண்டும். நீர்ப்பாசனத் திறன், வெள்ளத் தடுப்பு, நுண்ணீர்ப்பாசனத் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றை மேம்படுத்துவது பருவமழை மாறுபாடுகளைச் சமாளிக்க உதவும். சதுப்புநிலக் காடுகள், பவளப்பாறைகள் உள்ளிட்ட கடலோர உயிரினச் சூழலானது உயரும் கடல் மட்டம், கடல்சார் மாசுபாடு ஆகிய பாதிப்பிலிருந்து உடனடியாகக் காக்கப்பட வேண்டும். சுற்றுச்சூழலைப் பொதுச் சுகாதாரத்துடன் ஒருங்கிணைக்கும் 'ஒரே சுகாதாரம்' (One Health) இயக்கத்தை விரிவாக்குவது காலநிலை மாற்றம் காரணமான நோய்களையும் சுற்றுச்சூழல் மாசுபாடு காரணமான தீங்குகளையும் கையாள்வதில் உதவும்.

9.20 காலநிலை மாற்றத்தைத் தாங்கிநிற்பதில் வனம் மற்றும் மரப் பரப்பை அதிகரித்தலுக்கு முக்கியமான பங்குள்ளபோதும், காடுகள் அழிப்பு, குறைந்து வரும் பசுமைப் பரப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும். வெப்ப அலைகள், காற்று மாசுபாடு, நகர்ப்புர வெள்ளம் ஆகியவற்றால் ஏற்படும் தீங்குக்கு எதிராக, பசுமைக் கட்டமைப்பை விரிவாக்குதல், நீர் மேலாண்மையை மேம்படுத்துதல், சுகாதாரக் கட்டமைப்பை வலுப்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். நீடித்த நிலைத்தன்மையைப் பொருளாதாரத் திட்டத்துடன் ஒருங்கிணைத்தல், பசுமை முன்னெடுப்புகளுக்கான முதலீடு, நிர்வாக மேம்பாடு ஆகியவற்றின் மூலம், காலநிலைத் தகவமைப்பிலும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையிலும் தமிழ்நாடு தன் முன்னிலையை நிலைநிறுத்திக்கொள்ள முடியும்.

## 9.10 வேலைவாய்ப்பு

9.21 இந்தியாவின் மிகவும் தொழில்மயமான மாநிலங்களுள் ஒன்றான தமிழ்நாடு, வாகனங்கள், ஜவுளி, தகவல் தொழில்நுட்பம், உற்பத்தி ஆகியவற்றால் வழிநடத்தப்படும் வலுவான வேலைவாய்ப்புச் சந்தையைக் கொண்டுள்ளது. இது அமைப்புசாரா வேலைவாய்ப்பு விரிவாக்கத்திலும், தொழில்துறைப் பணியாளர் விரிவாக்கத்திலும் முன்னணியில் உள்ளது. 2023-24இல் 64.6% தொழிலாளர் பங்கேற்பு விகிதத்துடன் மாநிலம் தேசிய சராசரியைவிட அதிகமாக உள்ளது. குறிப்பிடத்தக்க அளவு தொடர்ச்சியாக ஊதியம் வழங்கக்கூடிய வேலைவாய்ப்பு, நிலையான தொழில்துறை வளர்ச்சி ஆகியவற்றை இது பிரதிபலிக்கிறது. இந்தியாவின் தொழிற்சாலைகள், தொழில்துறை வேலைவாய்ப்புகளில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ள தமிழ்நாடு, தொடர்ந்து தன் தொழிலாளர் சக்தியை விரிவுபடுத்துகிறது. சிறப்பாகக் கட்டமைக்கப்பட்ட சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் வாயிலாக முறைசார் வேலைவாய்ப்பை அதிகரித்துவருகிறது.

9.22 மாநிலம் மேற்கொண்ட திட்டமிடப்பட்ட முயற்சிகள் சிஸ்கோ, கூகுள், ஃபோர்டு போன்ற உலகளாவிய நிறுவனங்களை ஈர்த்துள்ளன. இது, பன்னாட்டு விநியோகச் சங்கிலிகளில் மாநிலத்தின் பங்கை வலுப்படுத்திப் புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. பெரிய அளவிலான உற்பத்தித் தொழிற்சாலைகள் மற்றும் சேவைகள் அதிகளவில் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் வேளையில், குறு சிறு நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளிலும், புத்தொழில் வாய்ப்புகளிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தொழிற்சாலைகள், டிஜிட்டல் பொருளாதாரம், பசுமை ஆற்றல் ஆகியவற்றில் வேலைவாய்ப்பை உருவாக்கும் விதமாக உயர் தொழில்நுட்ப உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு சார்ந்த நிறுவனங்கள், தளவாடங்கள் ஆகியவற்றில் அரசு அதிக அளவில் முதலீடு செய்துவருகிறது. ஆயினும், தானியங்கிமயமும் செயற்கை நுண்ணறிவும் சவால்களை உண்டாக்குகின்றன. இவை, திறன் மேம்பாட்டையும் தொழில் பயிற்சியையும் கட்டாயமாக்குகின்றன. அமைப்புசாராத் துறை இன்னும் பெரிய அளவில் தொழிலாளர் சக்தியைப் பயன்படுத்துகிறது. இதற்கு வலுவான பணிப் பாதுகாப்பு, ஊதியப் பாதுகாப்பு, தொழிலாளர் நல நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன. தொழிலாளர் சக்தியில் பெண்களின் பங்களிப்பை மேம்படுத்திட நெகிழ்வான வேலைவாய்ப்புக் கொள்கைகள், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சி, பாலின வேறுபாடற்ற பணிச்சூழல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

9.23 தமிழ்நாடு தனது வேலைவாய்ப்புக் கொள்கைகளை உலகளாவிய தொழில் துறைப் போக்குகளுடன் இணைத்து, புதுமையையும் தொழில்முனைவையும் நிலைத்தன்மையையும் வளர்த்தெடுக்க வேண்டும். டிஜிட்டல் கல்வியறிவு, தொழிற்பயிற்சி, சூழலுக்கேற்ற தொழிலாளர் கொள்கைகள் ஆகியவற்றை வலுப்படுத்துவதன் மூலம் உள்ளடக்கிய, மீள்தன்மை கொண்ட வேலைவாய்ப்புகளை உறுதிசெய்யலாம். தொழில்நுட்ப வளர்ச்சி, ஒழுங்குமுறைக் கட்டமைப்பு, தொழிலாளர் சந்தையின் தகவமைப்புத் தன்மை ஆகியவற்றைப் பயன்படுத்துவதன் மூலம், நீண்டகாலப் பொருளாதார நிலைத்தன்மையுடன் வேலைவாய்ப்பு உருவாக்கத்தைச் சமநிலைப்படுத்தும் அதே வேளையில், ஒரு முன்னணி வேலைவாய்ப்பு மையமாக மாநிலம் தனது நிலையைத் தக்கவைத்துக்கொள்ளவும் முடியும்.

## 9.11 உலகளாவிய/தேசியச் சூழ்நிலையும் தமிழ்நாட்டில் அதன் தாக்கங்களும்

9.24 உலகப் பொருளாதாரக் கண்ணோட்டக் கணக்கெடுப்பின்படி, 2025 மற்றும் 2026ஆம் ஆண்டுகளில் உலகப் பொருளாதாரம் மிதமான ஆனால் நிலையான முன்னேற்றத்தைத் தக்கவைத்துக்கொள்வதுடன், ஆண்டுதோறும் 3.3% வளர்ச்சியடையும் எனக் கணிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், புவிசார் அரசியல் பதற்றங்கள், அதிகக் கடன்கள், காலநிலை மாற்ற நெருக்கடிகள், வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் மந்தமான முதலீடு ஆகியவை காரணமாகப் பொருளாதாரத்தில் நிச்சயமற்ற தன்மை நீடிக்கிறது. பணவீக்கம் 2025இல் 4.2 சதவீதமாகவும், 2026இல் 3.5 சதவீதமாகவும் குறையும் என எதிர்பார்க்கப்பட்டாலும், வர்த்தக இடையூறுகள், நிதிச் சந்தையில் ஏற்ற இறக்கம், தானியங்கிமயம் மற்றும் செயற்கை நுண்ணறிவு காரணமாகத் தேவைப்படும் பணியாளர் மறுசீரமைப்பு உள்ளிட்ட பல்வேறு சவால்கள் நீடிக்கின்றன. வளர்ந்துவரும் பொருளாதாரங்கள் கிட்டத்தட்ட 4% வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், குறைந்த மூலதன முதலீடு, வேலைவாய்ப்பில் நிச்சயமற்ற தன்மை போன்றவை நிலையான வளர்ச்சிக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்றன. இந்தச் சூழலில், தமிழ்நாடு போன்ற மீள்தன்மை கொண்ட பிராந்தியப் பொருளாதாரங்கள், வெளிப்புற அபாயங்களுக்குள் சிக்கிக்கொள்வதைக் குறைக்கும் அதே வேளையில், உலகளாவிய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்வதற்குத் தம்மைத் தகவமைத்துக்கொள்ள வேண்டும்.

9.25 2024இல் 6.2% மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன், வேகமாக வளர்ந்துவரும் முக்கியப் பொருளாதாரங்களுள் ஒன்றாக இந்தியா தொடர்கிறது. இதற்கு, வலுவான நுகர்வோர் தேவை, அரசுச் செலவினம், ஊரகத் துறை விரிவாக்கம் ஆகியவை காரணமாகும். மிதமான பணவீக்கத்துடனும், சிறப்பான வேளாண் உற்பத்தியுடனும் தனியார் நுகர்வு ஆண்டுக்கு ஆண்டு 6.9% ஆகவும், அரசுச் செலவினம் 8.3% ஆகவும் அதிகரித்தது. இந்தியாவின் தொழில்துறையும் சேவைத் துறையும் வேகமாக விரிவடைந்துவருகின்றன. உற்பத்தி, டிஜிட்டல் பொருளாதாரம், பசுமை எரிசக்தி ஆகியவற்றுக்குக் கொள்கையளவில் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. இருப்பினும், தானியங்கிமயம் காரணமாக ஏற்பட்டுள்ள வேலைவாய்ப்பு மாற்றங்கள், நிதித்துறை நிலைத்தன்மை, உட்கட்டமைப்புக் குறைப்பாடுகள், சுற்றுச்சூழல் நிலைத்தன்மை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள சவால்களை நாடு எதிர்கொண்டாக வேண்டும். இந்தத் தேசியப் போக்குகள் தமிழ்நாட்டை நேரடியாகப் பாதித்து, மாநிலத்தின் பொருளாதாரக் கொள்கைகளையும் வளர்ச்சி உத்திகளையும் வடிவமைக்கின்றன.

9.26 தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, இந்த உலகளாவியப் போக்குகளும் தேசியப் போக்குகளும் வாய்ப்புகளையும் சவால்களையும் வழங்குகின்றன. வலுவான உற்பத்தித் தளம், வளர்ந்துவரும் சேவைகள் துறை, நன்கு நிறுவப்பட்ட டிஜிட்டல் பொருளாதாரம் ஆகியவற்றுடன் பன்முகப் பொருளாதாரம் மாநிலம் கொண்டிருக்கிறது. தொழிலாளர் பங்கேற்பு விகிதத்தில் தேசிய சராசரியைவிடத் தமிழ்நாடு அதிகமாக உள்ளது. இது, வலுவான ஊதிய வேலைவாய்ப்பு வளர்ச்சியுடன் முதிர்ச்சியடைந்த வேலைவாய்ப்புச் சந்தையைக் குறிக்கிறது. மேலும், அமைப்புசார் உற்பத்தியிலும் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. இந்தியாவின் தொழில்துறை வேலைவாய்ப்புக்கும் ஏற்றுமதிக்கும் இது குறிப்பிடத்தக்கப் பங்களிப்பை நல்குகிறது. இந்தியாவின் உற்பத்தி விரிவாக்கத்திலிருந்தும், உலகளாவிய விநியோகச் சங்கிலி மறுசீரமைப்புகளிலிருந்தும் தமிழ்நாடு பயனடையும் நிலையில் உள்ளது.

9.27 இருப்பினும், நடுத்தரக் கால அளவில் தமிழ்நாடு பல்வேறு முக்கியமான சவால்களை எதிர்கொள்கிறது. தொழில்நுட்பத் தகர்வுகள், குறிப்பாகச் செயற்கை நுண்ணறிவு மற்றும் தானியங்கிமயத் துறைகளில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் தொழில்துறையிலும் சேவைத் துறைகளிலும் உள்ள வழக்கமான வேலைகளை மாற்றியமைக்கக்கூடும். இதனால், மிக அவசரமான மறுசீரமைப்பு முயற்சிகள் தேவைப்படுகின்றன. வானிலை மாற்ற நிகழ்வுகள் தீவிரமாக அதிகரித்துவருவது வேளாண்மை, நீர்ப் பாதுகாப்பு, நகர்ப்புர உட்கட்டமைப்பு ஆகியவற்றுக்கு இடர்களை ஏற்படுத்துகிறது. இதனால், காலநிலை மீள்தன்மையை ஏற்படுத்துவது சவலான ஒன்றாகும். மாநிலத்தில் உள்ள வயதான மக்கள்தொகைக்குச் சுகாதார முன்னுரிமைகள் தரப்பட வேண்டும். அவர்களுக்கான சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளில் மாற்றங்கள் தேவைப்படும். பொருளாதாரத் திறனின்மையாக இருக்கும் குறைந்த பெண் பணியாளர் பங்கேற்பு கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். கூடுதலாக, பொருளாதார வளர்ச்சியில் பிராந்திய ஏற்றத்தாழ்வு தொடர்கிறது. தனிநபர் வருமானம், உட்கட்டமைப்பு, தொழில்துறை வளர்ச்சி ஆகியவற்றில் சில மாவட்டங்கள் பின்தங்கியுள்ளன. இந்தக் கட்டமைப்புச் சவால்களை எதிர்கொள்வதற்குக் கல்வி, சுகாதாரம், ஊரக வளர்ச்சி ஆகியவற்றில் இலக்குசார் கொள்கைத் தலையீடுகளும் நிலையான முதலீடும் தேவைப்படும்.

9.28 பசுமை எரிசக்தியைப் பயன்படுத்துதல், டிஜிட்டல் உட்கட்டமைப்பு, பணியாளர்களுக்கான திறன் மேம்பாடு, தொழில்துறையில் நிலவும் போட்டித்தன்மை ஆகியவற்றில் கவனம்செலுத்தி, கொள்கைகளை உலகளாவிய, தேசிய அளவிலான முன்னுரிமைகளுடன் இணைத்து, புதிய பொருளாதார சூழ்நிலைகளைத் தமிழ்நாடு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். முதலீடு ஊக்குவிப்பு, புத்தாக்கச் சூழலமைவு, ஏற்றுமதி சார்ந்த தொழில்கள் ஆகியவற்றை வலுப்படுத்துவது நீண்டகாலப் பொருளாதார மீள்தன்மையையும் வளர்ச்சியையும் உறுதிசெய்யும். இந்தியாவின் வளர்ச்சிப் பாதையையும் உலகளாவிய பொருளாதார மறுசீரமைப்புகளையும் திட்டமிட்டுப் பயன்படுத்துவதன் வாயிலாக, ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத் தொலைநோக்குப் பார்வையில் தனது நிலையை உறுதிப்படுத்துவதோடு, நிலையான மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சியையும் அடைய முடியும்.

## 9.12 முடிவுரை

9.29 இலக்குசார் கொள்கை நடவடிக்கைகள், முதலீட்டு உத்திகள், நிர்வாகக் கட்டமைப்புகள் ஆகியவை திறம்படச் செயல்படுத்தப்பட்டால், நடுத்தரக் கால அளவில் தமிழ்நாட்டின் பொருளாதாரப் பாதையும் சமூகப் பாதையும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை அடையும். பணிபுரியும் வயதுள்ளோரின் பங்களிப்பைப் பயன்படுத்திக்கொள்வது, டிஜிட்டல் கட்டமைப்பு மற்றும் உட்கட்டமைப்பை விரிவுபடுத்துவது, பொருளாதாரத் திட்டமிடலில் நீடித்த தன்மையை ஒருங்கிணைப்பது போன்றவை மாநிலத்தின் நீண்டகால வெற்றியைத் தீர்மானிக்கும். காலநிலை நெருக்கடிகள், பணியாளர் மறுசீரமைப்பு, பிராந்திய வருமான ஏற்றத்தாழ்வு போன்ற சவால்கள் நீடித்தாலும், திறன் மேம்பாடு, தொழில்துறையைப் பன்முகப்படுத்தல், தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றில் தமிழ்நாடு மேற்கொண்டுவரும் முன்னோக்கிய அணுகுமுறையானது இந்திய அளவில் தமிழ்நாடு வலுவான நீடித்த பொருளாதாரத்தில் முன்னணியில் இருக்கும். தொழில்முனைவை ஊக்குவித்து, நிறுவனக் கட்டமைப்பை வலுப்படுத்தி, உள்ளடக்கிய வளர்ச்சியை உறுதிசெய்து வேகமாக மாறிவரும் உலகப் பொருளாதாரத் தேவைகளை நிறைவேற்றத் தயாராக இருப்பதோடு தேசிய, பன்னாட்டு அளவில் பெரும் பொருளாதாரச் சக்தியாகத் தன்னை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது தமிழ்நாடு.

# பின்னிணைப்பு

### பெட்டிச்செய்தி 1.1: தமிழ்நாடு மாநிலப் பொருளாதாரத்தின் பரிணாமம்

1962-63 முதல் 2022-23 வரையிலான 60 ஆண்டு காலத்தில், தமிழ்நாட்டின் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி வியக்கத்தக்க வகையில் 1,827 மடங்கு அதிகரித்துள்ளது. 1962-63இல், மாநிலத்தின் தனிநபர் வருமானம் ரூ.335 ஆக இருந்தது, 2022-23இல் ரூ.2.78 லட்சமாக அதிகரித்து, 829 மடங்கு உயர்வைப் பதிவுசெய்துள்ளது.

| ஆண்டு | நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி (ரூ. கோடி) | தனிநபர் வருமானம் (ரூ.) | அடிப்படை வரிசைத் தொடர் |
|---|---|---|---|
| 1962-63 | 1168 | 335 | 1960-61 |
| 1972-73 | 2839 | 669 | 1970-71 |
| 1982-83 | 8821 | 1777 | 1980-81 |
| 1992-93 | 37922 | 6680 | 1980-81 |
| 2002-03 | 137188 | 21740 | 1993-94 |
| 2012-13 | 671728 | 98628 | 2004-05 |
| 2022-23 | 2132546 | 277802 | 2011-12 |

*ஆதாரம்: மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியின் உண்மை வளர்ச்சி 1971-72 மற்றும் 1980-81க்கு இடையில் 2.36% சராசரியுடன் மிதமானதாக இருந்தது. 1981-82 முதல் 1993-94 வரை இது 5.67% ஆகக் கணிசமாக உயர்ந்தது. பின்னர், 2005-06 முதல் 2011-12 வரை 10.45% இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவுசெய்தது. இருப்பினும், இது 2012-13 முதல் 2023-24 வரை 6.21% ஆகப் படிப்படியாகக் குறைந்தது.

| காலகட்டம் | 1961-62 to 1070-71 | 1071-72 to 1980-81 | 1981-82 to 1993-94 | 1994-95 to 2004-05 | 2005-06 to 2011 - 12 | 2012-13 to 2023-24 |
|---|---|---|---|---|---|---|
| வளர்ச்சி (%) | 2.85 | 2.36 | 5.67 | 5.27 | 10.45 | 6.21 |
| விலைகள் | (1960-61 விலையில்) | (1970-71 விலையில்) | (1980-81 விலையில்) | (1993-94 விலையில்) | (2004-05 விலையில்) | (2011-12 விலையில் |

*ஆதாரம்: மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

விடுதலை அடைந்த காலகட்டத்தில், தமிழ்நாட்டின் பொருளாதாரம் வேளாண்மையையே முதன்மையாகக் கொண்டிருந்தது. குறிப்பாக, 1960களில் உற்பத்தித்திறனை அதிகரிக்க வேளாண்மைக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. 1970களில் பல்வேறு பகுதிகளில் மூலப்பொருள்கள் கிடைத்ததன் காரணமாக, தொழில்துறையில் கவனம்செலுத்தப்பட்டது. தொழில்துறை வளர்ச்சிக்குத் தேவையான மனிதவளங்களைப் பயிற்றுவிக்க, ஏராளமான பொறியியல் கல்லூரிகளும் பல்தொழில்நுட்பக் கல்லூரிகளும் நிறுவப்பட்டன. 1960-61இல் நிகர மாநில உள்நாட்டு உற்பத்தியில் முதன்மைத் துறை 52% பங்கைக் கொண்டிருந்தது. ஆனால், 2023-24இல் அதன் பங்கு தொடர்ந்து 12.65% ஆகக் குறைந்து, 39.34% புள்ளிகள் சரிந்தது. அதேநேரத்தில், இரண்டாம் நிலைத் துறையின் பங்கு 11.7% புள்ளிகளும், மூன்றாம் நிலைத் துறையின் பங்கு 18.14% புள்ளிகளும் அதிகரித்தன.

| துறைகள் | 1960-61 | 1070-71 | 1980-81 | 1993-94 | 2004-05 | 2011-12 | 2023-2024 |
|---|---|---|---|---|---|---|---|
| முதன்மைத் துறை | 51.99 | 39.86 | 25.92 | 26.24 | 12.35 | 12.79 | 12.65 |
| இரண்டாம் நிலைத் துறை | 17.59 | 26.12 | 33.49 | 32.16 | 27.98 | 31.89 | 29.29 |
| மூன்றாம் நிலைத் துறை | 30.42 | 34.02 | 40.60 | 41.60 | 59.67 | 46.65 | 48.57 |
| நிகர மாநில உள்நாட்டு உற்பத்தி | 100 | 100 | 100 | 100 | 100 | 100 | 100 |

*ஆதாரம்: மத்தியப் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகம்.*

**பெட்டிச்செய்தி 1.2: பொருளாதாரங்களுக்கு இடையிலான தொடர்பு**

| | தமிழ்நாடு | இந்தியா | உலகம் |
|---|---|---|---|
| உலகம் | 0.76 | 0.52 | 1 |
| இந்தியா | 0.68 | 1 | - |
| தமிழ்நாடு | 1 | - | - |

தமிழ்நாட்டின் பொருளாதாரம் இந்தியப் பொருளாதாரத்தைவிட, உலகப் பொருளாதாரத்துடன் வலுவான நேர்மறைத் தொடர்பைக் கொண்டுள்ளதை இந்தப் பின்னடைவுப் பகுப்பாய்வு மேலும் உறுதிப்படுத்துகிறது:

தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி = 0.285 + 0.908 உலகப் பொருளாதாரம் + 0.368 இந்தியப் பொருளாதாரம்; R2: 0.7; DW: 1.9

(t புள்ளிவிவரங்கள்) (0.246) (3.352) (2.423)

தமிழ்நாடு அரசு

**மாநில திட்டக் குழு**